நவநீதிக் கதைகள்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

ஆங்கிலத்தில் இயற்றியவர்:

A. S. பஞ்சாபகேச ஐயர், அவர்கள் I. C. S.,

மொழி பெயர்ப்பாளர்:

K. S. வேங்கடசுப்பய்யர், அவர்கள் B.A., L.T.,

பிரசுர கர்த்தர்:

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,

12, சகண்டு லைன் பீச்சு, சென்னை.

பதிப்புரிமை] **1946** [விலை ரூ. 1-0-0

முதற் பதிப்பு, 1940
இரண்டாம் பதிப்பு, 1946

Printed at the B. N. Press, Madras.
Q. H. Ms. 82. August, '46. C. 2,000.

முகவுரை

மனிதனுக்கு இன்பம் துன்பம் என்னும் இரு வித அனுபவ நிலை உண்டு. இன்பத்தால் விளைவது மகிழ்ச்சி; துன்பத்தால் உறுவது துயரம். மகிழ்ச்சியைக் காட்டும் அறிகுறி, நகைப்பு. துயரத்தைக் காட்டும் அறிகுறி, அழுகை. அழுகையானது, துன்ப நுகர்ச்சியால், உடல் நிலையில் நிகழும் கேட்டினைத் தணிக்க ஒரு வாயிலாக உதவுவதுடன், பிறரிடத்தில் இரக்க உணர்ச்சியை எழுப்பவும் உதவுகின்றது. எனவே, துன்ப நுகர்ச்சியைப் போக்குதற்கு இயற்கைச் சாதனமாய் அமைந்துள்ள 'அழுகை' மனிதனுக்கு இன்றியமையாது வேண்டற்பாலதாயிற்று. அவ்வாறாகவே, இன்பத்தின் மலர்ச்சியாகிய நகைப்பும், உடலுக்கு உயிர் நிலையாகிய மூச்சுப்பையினை நன்கு இயக்கி, அதன் மூலமாக உடலின் ஆக்கத்துக்கு உதவி செய்வதாலும், பிறரை மகிழ்விப்பதன் மூலமாக அவர்பால் நேய உணர்ச்சியை வளர்க்க உதவுவதனாலும், அழுகையைப் போலவே, நகைப்பும் மனிதனுக்கு இன்றியமையாது வேண்டற்பாலது ஆகும். போதிய அளவு நகைப்பு இல்லாதவிடத்து, அது வெகு விரைவில் மனிதனை முதுமைப் பருவத்திற்குக் கொண்டு சேர்க்கின்றது. அந் நிலையில், மருந்தும், காயகற்பச் சிகிச்சையும், பிறவும் சிறிதும் பயன்படாதொழியும். எனவே, நகைப்பு மனிதனுடைய ஆக்கத்தைக் கருதி இயற்கை அன்னை அருளியுள்ள கருவி என்பதை உணர்ந்து, அதனைப் பேணுதல் வேண்டும்.

வறுமை காரணமாக, நம் நாட்டில், இன்பத்தையும் நகைப்பையும் விளைவிக்கும் சாதனங்கள் இக்

பழக்க வழக்கங்களையும் மாற்றி அமைத்து, அவ்வுலகத்தோர் ஊர்ந்து செல்லும் பாதையை மக்கள் செப்பனிடுதல் வேண்டும். இக்கடமையினின்றும் வழுவிய மக்கள், உலகத்தேரினின்றும் தலைகிழாய் வீழ்ந்து அழிவுறுதல் திண்ணம். உலகியலில் அவ்வப்போது ஏற்படும் பரிணாம நிலைமைகளைப் பொறுத்து, 'இதற்கு மேல் முன்னேற்றம் இல்லை,' என்ற வகையில், தாற்காலிகமான ஒரு 'பூரண நிலை'யைக் '**காலம்**' நிர்ணயிக்கின்றது. "தரும தேவதை, கிருத யுகத்தில் நான்கு கால்களோடும், திரேதா யுகத்தில் மூன்று கால்களோடும், துவாபர யுகத்தில் இரண்டு கால்களோடும், கலி யுகத்திலோ ஒரே காலோடும் இயங்குகின்றது," என்ற மறைமொழியின் கருத்து ஈண்டு ஊன்றி நோக்கற்பாலது. நான்கு கால்களோடு கூடிய கட்டிலில் ஒருவன் எவ்வளவு அனுயாசமாகப் படுத்துத் துயில் கொள்ளலாமோ அவ்வளவு அனுயாசமாக, அக் கட்டிலுக்கு முறையே, மூன்று, இரண்டு, ஒரு காலாகக் குறைந்துவிட்ட நிலைமையில், படுத்துறங்க முடியாதல்லவா ?

கிருத யுகம் நிர்மலமான சத்திய யுகமாய் விளங்கிற்று. அக்காலத்து மக்கள், கயிலை முதலாகிய மலைச் சாரல்களிலும், வைகுந்தம் முதலாகிய திருப்பதிகளிலும், கங்கை, யமுனை முதலாகிய நதி தீரங்களிலும், இயற்கை அழகு பொலியும் சோலைகளிலும் அமர்ந்து, ஊண் உறக்கம் நீத்து, ஆண்டவன் அருள் விலாசத்தில் ஆழ்ந்து, அவனது மெய்ஞ்ஞானப் பேரொளியில் மிதந்து, இடையறாத பேரின்பந் திளைத்து, ஆன்ம ஞானிகளாய் வாழ்ந்தார்கள்.

திரேதா யுகத்தில், மானத சரசின் மருங்கிலும, ஆகாய கங்கையின் அருகிலும் அமர்ந்து, ஒரு கால உணவே உட்கொண்டு, உத்தம மெய்யன்பர்களாய், அல்லும் பகலும் இறைவன் திருவடிச் சேவையில் ஈடுபட்டும், சத்திய சோதனை செய்தும் மக்கள் வாழ முடிந்தது.

துவாபர யுகத்திலோ, மக்கள் வாழ்வு அத்துணை அமைதி வாய்ந்ததாய் இல்லை. அது, கிளர்ச்சி நிறைந்த தாய் மாறிற்று. மக்கள் வீரர்களாய் வாழவேண்டிய நிலை வந்தது. விதித்த கடமைகளை வீரத்தன்மை யோடும் உறுதியோடும் எங்ஙனம் நிறைவேற்றினார் களோ, அங்ஙனமே, விலக்கப்பட்டவற்றையும் ஆண் மையோடும் உறுதியோடும் முனிந்து விலக்கினார்கள். பழி பாவங்களை அழித்து ஒழிப்பதில் அவர்கள் மகா யோகிகளாய் விளங்கினார்கள். உலக இன்பங்களை உய்த்துணர்ந்து, குறைவின்றித் திளைப்பதில் மகா போகிகளாய்த் திகழ்ந்தார்கள். இறுதியில், குரு க்ஷேத்திரத்தில் பெரும்போர் மூண்டது. அறம், மறத் தொடு மலைந்து போரிட்டது. இரு தரப்பினும் வீரர் மாண்டு மடிந்தனர்.

நான்காவதாகிய இக்கலி யுகத்திலோ, கிருத யுகத்தின் மெய்ஞ்ஞான நெறியோ, திரேதா யுகத்தின் அன்பு மார்க்கமோ, துவாபர யுகத்தின் வீர வாழ்க் கையோ ஆதிக்கம் பெற இடமில்லை. செந்நெல் வயல் களிலும், தொழிற்சாலைகளிலும், உத்தியோக மண்ட லங்களிலும், எங்கும், மாந்தர் ஒருவரோடொருவர் மலைந்து போட்டியிட்டு நிற்கின்றனர். கேவலம் உடல் ஓம்புதலின் நிமித்தம் ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒவ்வொரு குருக்ஷேத்திரப் போர் நடத்த வேண்டி

யிருக்கின்றது. அவர்கள் வாழ்க்கைப் போரின் ஆரவாரத்தில், 'அறம் இது; அல்லது இது,' என்று பகுத்தறிவதற்குக்கூடப் போதிய அவகாசமோ ஆற்றலோ இல்லாமற்போய்விட்டது. எங்கு நோக்கினும் போட்டி; எங்குப் பார்த்தாலும் பூசல்; இதுவே கலியுகம் அளிக்கும் காட்சி. 'தகுதி வாய்ந்த ஒன்றே வாழ்தற்கு உரிமையுடையது,' என்னும் சித்தாந்தமே வாழ்க்கைப் போராட்டத்தை நடத்திச் செல்லும் ஏகசக்தியாய் இயங்குகின்றது. ஒவ்வொரு மனிதனும், தான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இத்தகைய வாழ்க்கைப் போரில் கலந்துகொண்டே தீரவேண்டும். வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் புதுப் புதுப் பிரச்சினைகள் ஆயிரம் எழுகின்றன. அவற்றை எல்லாம் அமைதியோடுப் வரவேற்றுத் தக்க முறையில் அவற்றைச் சமாளிக்க வேண்டுவது நம் கடன். அக்கடனைச் செவ்வனே நிறைவேற்றத் தவறுவோமாகில், ஏற்றமும் இறக்கமும் நிறைந்த கடினமான வாழ்க்கைப் பயணத்தை நாம் வெற்றிகரமாக நடத்த இயலாது. தோல்வியும் துக்கமுமே நம் வாழ்வின் முடிவாகும்.

எனவே, இந்நவநீதிக் கதைகளில் இக்கலியுகத்தில் மக்கள் முன்பு நிற்கும் கடமைகள் பலவற்றையும் எடுத்து விளக்கி, அவற்றை நிறைவேற்றுதற்கான முறைகளையும் எடுத்துக் காட்ட இயன்ற அளவில் யான் முயன்றுள்ளேன்.

A. S. பஞ்சாபகேசய்யர்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	பேடித்தனம் நிறைந்த பெண்கள்	—	1
2.	நிலையற்றவை	—	3
3.	வேதாந்தியின் விளக்கம்	—	5
4.	மூன்று விதக் கண்கள்	—	8
5.	சிறந்த வைத்தியம் எது ?	—	10
6.	ஒரு நாள் வாழ்வு போதுமா ?	—	14
7.	பாம்புக்கடி வைத்தியன்	—	16
8.	எதிர் பாராத பதில்	—	16
9.	மரமும் பலகையும்	—	17
10.	மத வெறி கொண்டவனுடைய வேண்டுகோள்	—	18
11.	கோஹினூரும் அழகும்	—	19
12.	பெண் தெய்வங்களின் வெற்றி	—	20
13.	சோம்பேறித்தனத்தால் நேர்ந்த மரணம்		27
14.	கழுதையின் சாமர்த்தியம்	—	28
15.	கழுதைப்பால் குடித்த கழுதை	—	32
16.	குடி வெறியில் கொண்டாட்டம்	—	35
17.	நீதி ஸ்தலத்தில் கழுதை அட்டகாசம்	—	38
18.	ரேக்கப்பனுக்கு வெகுமதி	—	44
19.	ஜானகியின் வெள்ளித் தட்டு	—	47
20.	பணக்காரனுக்கு நேர்ந்த பரிபவம்	—	52
21.	சாதுரியமான பதில்	—	56
22.	கீழ்ப்படியாமையின் காரணம்	—	58
23.	சந்தேகம் நீங்குதல்	—	60

எண்	பொருள்		பக்கம்
24.	பகுத்தறிவுள்ள போக்கிரி	–	69
25.	புது மாதிரி மணியார்டர்	–	72
26.	படிப்படியாக மனமாறுதல்	–	76
27.	பிச்சைக்காரரின் துரதிர்ஷ்டம்	–	82
28.	புத்திசாலிப் பையன்	–	85
29.	பதிலளிக்க முடியாத நிலைமை	–	87
30.	அரசனும் குணதோஷ விசாரகனும்	–	88
31.	புதிய எண்ணங்கள்	–	90
32.	ஐந்து நிமிஷ மௌனம்	–	95
33.	எல்லாம் விதியின்படியே	–	96
34.	துன்மார்க்கியின் சமாதானம்	–	97
35.	திருட்டு ஆஸ்தி	–	99
36.	எல்லாவற்றிலும் சமம்	–	100
37.	சுவர்க்கத்திற்கு வழி	–	101
38.	கிழக்கும் மேற்கும்	–	102
39.	தேச வித்தியாசம்	–	103
40.	பணப் பைத்தியம்	–	104
41.	காட்டலாக்கு வியாபாரம்	–	105
42.	சமதருமம்	–	111
43.	அரசன் படையணி பார்த்தல்	–	113
44.	ஸ்திரீகள் கீழ்ப்பட்டவர்களே.	–	115
45.	பணமே பிரதானம்.	–	116
46.	பொய்ச்சாட்சி அகப்பட்டுக் கொண்டான்.	–	117
47.	சமபாவனையுள்ள முதல் சங்கம்	–	119
48.	நன்றி கெட்ட தனயன்	–	122
49.	சகுனத் தடை	–	127

எண்	பொருள்		பக்கம்
50.	ஒரு மனிதன் எவ்வளவு தூரம் பார்க்கக் கூடும்?	–	129
51.	அற்புதமான விண்ணப்பம்	–	130
52.	கடவுள் சிருஷ்டியில் சிறந்த ஜன்மம்	–	132
53.	இந்தியாவை விரும்பிய பசு	–	133
54.	அழுகிப்போன முலாம்பழம்	–	135
55.	கேவலமானவன் யார்?	–	138
56.	மூளைக் கோளாறு	–	138
57.	படுமோசம்	–	140
58.	சட்டங்கள் மாறுவதேன்?	–	141
59.	இடி முழக்கத்தின் அர்த்தமென்ன?	–	142
60.	தரும சத்திரம் செய்த அநீதி	–	142
61.	கஷ்டமான நிபந்தனை	–	144
62.	திருடர்கள் சபையில் ஒரு தர்க்கம்	–	145
63.	ஜகன்னாத பிராணத் தியாகி	–	146
64.	பாம்பு கடித்து மரணம்	–	157
65.	பனைமரத்தருகில் செல்லாதே!	–	159
66.	தேக பலமே பிரதானம்	–	161
67.	தவத்தின் பயன்	–	161
68.	அதிகம் என்பது எதைப் பொறுத்தது?	–	163
69.	பாலை வனத்தின்மீது விருப்பம்	–	166
70.	இரண்டாம் கலியாணம்	–	167
71.	மிருக பலி	–	172
72.	பிண்டாரியின் வேதாந்தம்	–	173
73.	அமெரிக்காவில் மிகப் பெரிய வியாபாரம்	–	174
74.	நரகப் படுகுழியில் விழத் தயார்	–	174
75.	சிறந்த அன்னை	–	176

எண்	பொருள்		பக்கம்
76.	பாம்பு கீரிகளின் சம்வாதம்	–	176
77.	முக்கிய அம்சம் இல்லை.	–	177
78.	குண்டு விலை ஐம்பது ரூபாய்!	–	178
79.	பாலும் தண்ணீரும்	–	183
80.	கல் கெட்டியாய் இருப்பதேன்?	–	183
81.	கரும பலன்	–	185
82.	நல்ல கோவில்	–	186
83.	கெட்டவன் நல்லவனாக முடியுமா?	–	89
84.	அரசன் அளித்த வெகுமதி	–	190
85.	முடிவு ஒன்றே.	–	193
86	சந்தோஷமும் துக்கமும்	–	194
87.	ஒழுங்கீனமும் இருக்க வேண்டும்.	–	194
88.	கவியரசனாவது எப்படி?	–	195
89.	‘என் உயிருள்ளளவும் மறவேன்.’	–	196

நவநீதிக் கதைகள்

1. பேடித்தனம் வாய்ந்த பெண்கள்

'பெண்கள் பேடிகள்,' என்று சொல்லித் திரிந்து கொண்டிருந்தான் ஒரு மனிதன். ஒரு சமயம் அவன் சர்க்கஸ் பார்க்கச் சென்றிருந்தான். ஸ்திரீகளின் குணாதிசயங்களைப் புகழ்ந்து பேசும் அந்த மனிதனுடைய நண்பனும் அவனுடன் சர்க்கஸ் விளையாட்டுகளைக் காணச் சென்றான். ஒரு சிறு பெண் பெரிய சிங்கத்தின் வாயில் தன் தலையை வைக்கும் காட்சியை அவர்கள் பார்த்தார்கள்.

'ஸ்திரீகளுக்குத் தைரியம் என்பதே இல்லையென்று சொல்லிக்கொண்டு அலையும் உன்னால் இந்தப் பெண் செய்த மாதிரி செய்ய முடியுமா?' என்று தன் சினேகிதனைப் பார்த்துப் பக்கத்திலிருந்த அந்த மனிதன் கேட்டான்.

'அவ்வாறு தலையை வைப்பதற்கு அனுமதி கொடுத்தால், கண்டிப்பாக நான் என் தலையைச் சிங்கத்தின் வாயினுள் வைப்பேன்,' என்றான் ஸ்திரீகளை வெறுப்பவன்.

சர்க்கஸ் அதிகாரிகள் தனக்கு உத்தரவு கொடுக்க மாட்டார்களென்று அவன் நினைத்தான். மேலும், தன் கொள்கையை மாற்றிக்கொள்ளவும் அவனுக்கு இஷ்டமில்லை. ஆனால், அவனுடைய நண்பனுக்குச் சர்க்கஸ்

அதிகாரியை நன்றாகத் தெரிந்திருந்தபடியால், அவன் அதிகாரியின் அனுமதியைப் பெற்றான். சிங்கத்தின் வாயில் தலையை வைக்கும்படி அவன் தன் நண்பனிடம் கூறினான். நண்பன் மனத்தில் பயம் தோன்றிற்று. ஆயினும், தனது பயத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு, அவன் சிங்கம் இருக்குமிடம் சென்றான்.

ஜனங்கள் பலத்த கரகோஷம் செய்தார்கள். சிங்கம் தன்னைப் பார்த்து வாயைத் திறப்பதைக் கண்டு, அவன் பயந்து நடுங்கினான். அவ்விடத்திலிருந்தஅந்தச் சிறுமி, அவன் பயப்படுவதைக் கண்டு சிரித்தாள். அவள் சிரித்ததைக் கண்டு அவன் மனம் சகியாமல், அதிக கோபத்துடன், 'என்னைக் கண்டு கேவலம், ஒரு சிறுமி சிரிப்பதா! நான் கண்டிப்பாக என் தலையைச் சிங்கத்தின் வாயினுள் வைத்தாக வேண்டும்!' என்று தனக்குள் எண்ணிக்கொண்டான்.

'நீர் தலையைச் சிங்கத்தின் வாயினுள் எளிதில் வைத்துவிடலாம். ஆனால், மறுபடியும் தலையை வெளியே எடுக்க முடியுமா?' என்று அந்தச் சிறுமி கேட்டாள்.

'அதில் என்ன சந்தேகம்? உன்னைப் போன்ற சிறுமி ஒருத்தி செய்யும் காரியத்தை என்னைப்போன்ற ஒரு மனிதனால் செய்ய முடியாதா?' என்றான் அந்த மனிதன். உடனே அவன் தன் தலையிலணிந்திருந்த தொப்பியை எடுத்துவிட்டுத் தன் தலையைத் தடவினான். திறந்திருக்கும் சிங்கத்தின் வாயினுள் அவன் மெதுவாகத் தன் தலையை வைத்தான். பயத்தால் அவன் உடம்பு நடுங்கிற்று. அவனது தேகம் மெதுவாய் அசைந்தது. பயத்தினால் நடுங்கிக்கொண்டிருந்த

தலை தன் வாயினுள் புகுந்ததும் சிங்கம் அதைக் கடித்து மென்று பல நாட்களாக மனித இரத்தத்தின் ருசியை அறியக் காத்துக்கொண்டிருந்ததால் திருப்தியடைந்தது.

'ஒரு பெண்ணின் மூலமாக அந்த மனிதன் உலகில் தோன்றினன். அவன் இறப்பதற்கும் ஒரு பெண்ணே காரணமானுள். இதிலிருந்து என்ன தோன்றுகிறது? உலக வழக்கத்திற்குத் தகுந்தபடி ஒருவன் தன் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். கண் மூடித்தனமாகத் தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிக்கக்கூடாது,' என்று இறந்தவனுடைய நண்பன் மிகுந்த வருத்தத்துடன் சொன்னன்.

2. நிலையற்றவை

[தத்துவ சாஸ்திரியின் சங்கடம்]

'இவ்வுலகில் காணப்படும் வஸ்துக்களெல்லாம் நிலையற்றவை. அவை நிமிஷத்திற்கு நிமிஷம் மாறுதல் அடைந்துகொண்டேயிருக்கின்றன,' என்று ஒரு பிரசங்கியார் போதித்துக்கொண்டிருந்தார்.

'பல தினங்கள் மாறுதலே அடையாமலிருக்கும் பல வஸ்துக்களை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோமே! அவைகளைக் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்னவோ?' என்று சபையில் ஒருவன் கேட்டான்.

'நாம் பார்ப்பதற்கு மாறுதல் அடையாமலிருப்பதைப்போலத் தோன்றினலும், உண்மையில் அவை மாறுதல் அடைந்துகொண்டேயிருக்கின்றன என்

பதில் சந்தேகமில்லை,' என்று பிரசங்கியார் பதிலளித்தார்.

அதைக் கேட்டு அந்த மனிதன் ஒன்றும் பேசாமலிருந்தான். பிரசங்கம் முடிந்த பிறகு பிரசங்கியார் வேறு ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த பொழுது அவன் மெதுவாக ஒருவருக்கும் தெரியாமல் மேஜை மேலிருந்த பிரசங்கியாரின் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டான்.

மறு நாள் பிரசங்கியார் தம் புத்தகத்தைக் காணுமல் வருந்தினுர்; தேடித் தேடிப் பார்த்தார்; பிறகு தம்மைக் கேள்வி கேட்ட மனிதனிடம் தம் புத்தகம் இருப்பதைக்கண்டு, 'திருட்டுப்பயலே, நீ ஏன் என் புத்தகத்தைத் திருடினுய்?' என்று கேட்டார்.

'உங்களுடைய புத்தகமா இது? இஃது எப்போது காணுமற் போயிற்று? இது யாருடைய புத்தகம்?' என்று அந்த மனிதன் கேட்டான்.

'இதிலென்ன சந்தேகம்? இஃது என்னுடைய புத்தகமே; இதை நான் நேற்று என் மேஜையில் வைத்திருந்தேன். நீ இதைத் திருடி வைத்துக்கொண்டிருக்கிருய்!' என்று பிரசங்கியார் உரைத்தார்.

'நேற்று உங்கள் புத்தகமாயிருந்தது அழிந்து போயிருக்க வேண்டுமே! நீங்களும் நேற்றே அழிந்து போயிருக்க வேண்டுமே! நீங்களும் இந்தப் புத்தகமும் பார்ப்பதற்கு மாறுதலடையவில்லைபோலத் தோன்றினுலும், உண்மையில் இன்று வேறு வஸ்துக்கள் என்பதில் சந்தேகமில்லை. 'இவை நேற்றிருந்த வஸ்துக்களே; மாறுதலடையவில்லை,' என்று நீங்கள் சொல்

லும் பக்ஷத்தில், தர்க்கத்தில் நான் வெற்றியடை கிறேன். இவை மாறுதலடைந்த வஸ்துக்கள் என்று நீங்கள் உங்கள் கொள்கைப்படி சொல்லும் பக்ஷத் தில், இப்புத்தகம் என்னுடையதாகிவிடும். உங்களிஷ் டம்போல யோசித்துப் பதில் சொல்லுங்கள்,' என்று அந்த மனிதன் சொன்னான்.

'என்னுடைய புத்தகத்தை என்னிடம் கொடுத்து விடு. நீ தர்க்கத்தில் வென்றுவிட்டாய் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இந்தக் கொள்கைக்காக என் னுடைய ஆடை ஆபரணங்களையும் பொருளையும் இழக்க நான் சித்தமாய் இல்லை,' என்று பிரசங்கியார் பதிலுரைத்தார்.

3. வேதாந்தியாரின் விளக்கம்

[தாஜ் மஹால் இந்தியாவைச் சேர்ந்ததா?]

"உண்மையான வஸ்து, பொய்யான வஸ்துவினால் மறைக்கப்பட்டிருக்கின்றது. மெய்ப்பொருளாகிய கடவுள், பொய்யான மாயையினால் மறைக்கப்பட் டிருக்கிறார். ஆகையால், மாயை என்னும் திரையை நீக்கி, உண்மைப் பொருளையும் சத்திய சொரூபியான கடவுளையும் கண்டுகொள்," என்று வேதாந்தியார் ஒருவர் உபதேசம் செய்தார்.

"ஏன் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும்? மறைக் கப்பட்டிருக்கும் வஸ்துவைக்காட்டிலும் அதை மறைத் துக்கொண்டிருக்கும் வஸ்து மேலானதல்லவா? ஆகவே, அசத்தியம் சத்தியத்தைவிட மேலானது. நித்திய மான வஸ்துவைவிட மாயை மேலானது என ஏற்பட வில்லையா?" என்று நாஸ்திகன் சொன்னான்.

"ஆஹா! உனக்கும் கடவுளுக்கும் எவ்வளவு தூரம் என்பது உனக்குத் தெரியவில்லையே! ஓர் இம்மியளவு கூடத் தெய்வ சொரூபத்தைக் குறித்து உனக்குத் தெரியவில்லையே! சத்தியமும் தெய்வமும் அழியாப் பரம்பொருள்கள். ஆகாய வெளியில் பிரகாசிக்கும் சூரியனை மேகம் மறைக்கின்றது. ஆகாயத்தையும் சூரியனையும்விட அவைகளைச் சிறிது நேரம் மறைக்கும் மேகம் மேலானது என்று சொல்லும் அசடர்களை என்னவென்று சொல்லுவது! சமீபத்திலிருக்கும் மேகத்தைச் சூரியனைவிடப் பெரிதெனக் கருதுபவர்கள் மூடர்களென்றே நினைக்க வேண்டும்," என்று வேதாந்தியார் விளக்கிக் காட்டினர்.

"இத்தாலி தேசத்துச் சிற்பியினுல் வகுக்கப்பட்ட தாஜ் மஹால் இந்தியா தேசத்தைச் சேர்ந்ததாகாது," என்று ஓர் ஐரோப்பியன் தன் இந்திய நண்பனிடம் சொன்னுன்.

"இருந்த போதிலும், அதைக் கட்டியவர்கள் இந்தியர்களேயல்லவா?" என்று இந்து தேசத்தவன் கேட்டான்.

"அதெப்படி? கதையை ஆசிரியர் சொல்லுகிருர். அவர் சொல்லிக்கொண்டு போகும்போது எழுதும் எழுத்தாளனுக்கு அந்தக்கதையில் என்ன பங்குண்டு?" என்று ஐரோப்பியன் கேட்டான்.

"அது கிடக்கட்டும். தாஜ்மஹால் கட்டவேண்டும் என்னும் எண்ணத்தைக் கிளப்பிய அந்த மாதர் திலகம், இந்து தேசத்தைச் சேர்ந்தவள் என்பதை யாவது நீர் ஒப்புக்கொள்கிறீரா?" என்று இந்து தேசத்தவன் உரைத்தான்.

"இல்லை; அவள் பாரசீகதேசத்தைச் சேர்ந்தவள்," என்றான் ஐரோப்பியன்.

"அதைக் கட்டியவனாவது ஓர் இந்தியன் என்பதை ஏற்றுக்கொள்வீரா?" என்று இந்தியா தேசத்தவன் கேட்க, "அதுவும் இல்லை. அவன் மங்கோலியாத் தேசத்தைச் சேர்ந்தவன்," என்றான் ஐரோப்பியன்.

"கட்டடத்திற்கு உபயோகித்திருக்கும் பொருள்களாவது இந்து தேசத்தவை என்பதை ஆமோதிக்கிறீரா?" என்று கேட்க, "அதுகூடச்சரியன்று. இத்தாலியிலிருந்தும் பாரசீகத்திலிருந்தும் கொண்டுவரப்பட்ட பளிங்குக் கற்களினால் தாஜ்மஹால் கட்டப்பட்டிருக்கிறது," என்று ஐரோப்பியன் தர்க்கம் செய்தான்.

"போகட்டும்; அதைக் கட்டுவதற்குச் செலவு செய்த திரவியமாவது இந்தியா தேசத்தைச் சேர்ந்ததென்று சொல்ல முடியுமா?" என்று கேட்க, "சொல்ல முடியாது. **தாமர்லேன்** என்பவன் பாரசீகத்திலிருந்து கொள்ளையடித்துக்கொண்டு வந்த பொருளை உபயோகப்படுத்தியிருந்தாலும் இருக்கக்கூடும்," என்று ஐரோப்பியன் சொன்னான்.

"அவையெல்லாம் சரி. தாஜ்மஹால் கட்டடமாவது இந்தியா தேசத்தில் இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்வீரா, மாட்டீரா?" என்று வணக்கத்துடனும் அமைதியுடனும் இந்தியன் கேட்டான்.

"ஆம்; ராஜப் பிரதிநிதி இஷ்டப்பட்டிருந்தால், செங்கல் செங்கல்லாகவாவது பெயர்த்து, அதை அப்படியே அமெரிக்காத் தேசத்திற்குக் கொண்டுபோயிருப்பார். ஆனால், அது முடியாமற் போய்விட்டது," என்றான் ஐரோப்பியன்.

"கிடக்கட்டும். அஃது இந்தியாவைச் சேர்ந்த தென்று சொல்லிக்கொள்ள ஏதேனும் ஓர் அமிசமா வது இருக்கிறது. வேறு தேசத்துப் பொருள்களினால் கட்டப்பட்டிருக்கும் அந்தத் தாஜ்மஹாலைப் பார்ப்ப தற்கு உலகிலுள்ள எல்லாரும் இந்தியாவிற்கு வந்தே தீரவேண்டியிருக்கிறது," என்று இந்தியன் சொல்லிக் காட்டினான்.

4. மூன்று விதக் கண்கள்

இந்துமத சம்பந்தமான ஒரு புத்தகத்தை இந்தி யாவில் வசித்து வந்த ஆங்கிலேயன் ஒருவன் படித்துக் கொண்டிருந்த போது, பின் வரும் வாக்கியத்தின் அர்த்தம் அவனுக்கு நன்ருக விளங்கவில்லை :

ஒரு தரம் ஒருவன் கடவுளைப் பார்த்துவிட்டால், கடவுளைப் பார்க்க முடியாதென்பது உண்மையென் பது அவனுக்கு விளங்கும்.

இதைக் குறித்து ஓர் இந்திய நண்பனிடம் பேசிக் கொண்டிருக்கும்போது ஆங்கிலேயன், "கற்றறிந்த புத்திமான்கள்கூடச் சில சமயம் அசட்டுத்தனமாக ஏதாவது எழுதிவிடுகிருர்கள்," என்று சொன்னான்.

"கற்றறிந்த புத்திமான்கள் அசட்டுத்தனமான விஷயங்களை எழுதமாட்டார்கள்," என்று அந்த இந்திய நண்பன் பதில் சொன்னான்.

"அப்படியானல் அவர் எழுதியிருப்பதிலிருந்து நீர் என்ன உண்மையைத் தெரிந்துகொள்கிறீர்? சொல் லும், பார்க்கலாம்!" என்று ஆங்கிலேயன் கேட்டான்.

"அவர் எழுதியிருப்பது மிகவும் சாதாரணமான விஷயம். நீர் என்னைப் பார்ப்பது போல, ஊனக்

கண்ணினுல் கடவுளைப் பார்க்க வேண்டுமென்று பக்தர் பலர் விரும்புகின்றனர். ஆனுல், அது முடியாத காரியம். ஏனெனில், கடவுள் உருவமற்ற ஒரு ஜோதி. அவருக்கு உருவம் இருக்கிறதென்று வைத்துக்கொண்டாலும், மின்சார சக்தி முதலியவைகளையே பார்த்து அறிந்துகொள்ள முடியாத நம் கண்களால், தெய்வ சொரூபத்தை ஒரு போதும் பார்க்க முடியாதென்பது திண்ணம். ஆகவே, தெய்வத்தைத் தரிசிக்க ஞானக் கண்ணுலேதான் முடியும். அவ்வாறு பக்தன் தன் ஞானக் கண்ணினுல் கடவுளைத் தரிசித்த பிறகு, ஊனக் கண்ணினுல் தெய்வ சொரூபத்தை அறிய முடியாதென்பதை நன்ருகத் தெரிந்துகொள்கிறுன். கற்றறிந்த அந்தப் புத்திமான் மேற்கூறிய விஷயத்தையே தமது புத்தகத்தில் எழுதியிருக்கிறுர்,'' என்று இந்திய நண்பன் விளக்கிக் கூறினுன்.

''ஞானக் கண்ணுல் பார்ப்பதென்பது கனவைப் போன்ற விஷயமல்லவா? உண்மையானதல்லவே !'' என்று ஆங்கிலேயன் சந்தேகத்துடன் கேட்டான்.

''இல்லை ; முழுவதும் பொய் என்று சொல்வதற்கில்லை. நீங்கள் சூரிய வெளிச்சத்தையும், மரங்களையும், மனிதர்களையும், மிருகங்களையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் உங்களுடைய கனவில் தெளிவாகக் காண்பதில்லையா? உங்கள் கண்களை நன்ருகத் திறந்து கொண்டா தூங்குகிறீர்கள்? கண்களை மூடிக்கொண்டு மெய்ம்மறந்து தூங்கும் போது கனவு காண்பதில்லையா? அப்போது நீங்கள் மனக் கண்ணுல் அல்லவா நடப்பவைகளைப் பார்த்திருக்க வேண்டும்? அப்போது உண்மையிலேயே வஸ்துக்களைக் காண்பது

போல உங்களுக்குத் தோன்றவில்லையா?'' என்று இந்தியன் கேட்டான்.

"ஆம்; நீர் கூறுவது உண்மைதான். ஆனால், கற்றறிந்த பெரியவரே இவ்விஷயங்களையெல்லாம் தெளிவாக அப்புத்தகத்தில் எழுதியிருந்தால் மிகவும் நன்றாய் இருந்திருக்குமல்லவா?' என்று ஆங்கிலேயன் கேட்டான்.

'பீஜ கணிதத்தைக் குறித்து எழுதப்படும் பெரிய புத்தகத்தில், **'ஏ'** என்பது என்ன என்பதைக் குறித்துத் தெளிவாக விரித்து எழுதமாட்டார்கள் அல்லவா ? **'ஏ'** என்னும் எழுத்து எதற்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறதென்பது, அப்புத்தகத்தைப் படிப்பவனுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்பது ஆசிரியரின் கருத்து. அதே மாதிரி, நீர் படித்த புத்தகத்தைப் படிப்பவனுக்கு மிகவும் சாதாரண விஷயமாகிய மூன்று விதமான கண்களைக் குறித்துத் தெரிந்திருக்க வேண்டுமென்று ஆசிரியர் நினைத்து, அப்புத்தகத்தில் சாதாரண விஷயங்களைக் குறித்து விரித்து எழுதாமல் விடுத்தார்,'' என்று இந்தியன் சமாதானம் கூறினான்.

"மூன்று விதமான கண்கள் எவை?'' என்று ஆங்கிலேயன் கேட்க, "ஊனக் கண், மனக்கண், ஞானக்கண் என்னும் மூன்று வகையான கண்கள் மனிதனுக்கு இருக்கின்றன,'' என்று இந்தியன் பதிலளித்தான்.

5. சிறந்த வைத்தியம் எது ?

ஆங்கிலேய வைத்தியமுறை, அனுகுண ஔஷதப் பிரயோக முறை, ஆயுர்வேத முறை, யுனானி முறை, சித்த வைத்திய முறை, ஜலப் பிரயோக வைத்திய முறை என்னும் பல வகையான வைத்திய முறைகள்

இருந்து வருவதையறிந்த பட்டணத்தில் வசித்து வந்த கற்றறிவுள்ள ஒரு மனிதன், அவற்றுள் எந்த முறை சிறந்ததென்பதை அறிந்துகொள்ள விரும்பினான். சிறந்த முறையையே கையாள அவன் உத்தேசம் கொண்டான். அவரவர் கையாளும் முறையே சிறந்த தென்று அவரவர் சொல்லிக்கொண்டனர். உண்மை யில் நம்பக்கூடிய சிலாக்கியமான முறையைக் கண்டு கொள்ள அவன் சுமார் இரண்டு வருஷ காலம் பெரிய ஆராய்ச்சி செய்து பார்த்தான். தீவிரமான ஆராய்ச்சி யினால் அவன் அறிந்துகொண்ட விஷயங்களைத் தெரிந்துகொள்ள, ஒரு பத்திரிகை நிருபர் அவனை நேரில் கண்டு பேசினார்:

நிருபர்: ஐயா, நீங்கள் எந்த முறையை மேலான தென்று நிச்சயித்தீர்கள்?

நகரவாசி: எனக்கு நிச்சயமாக ஒன்றும் தெரிய வில்லை. ஒவ்வொரு முறையிலும் ஏதோ ஒரு விஷயம் மேலானதாகத் தோன்றுகிறது. ஆங்கிலேய வைத்திய முறையினால் கெடுதல் ஒன்றும் ஏற்படுவதில்லை. சரி யான வழியில் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. ஊசியின் மூலம் இரத்தத்தில் மருந்துகளைச்செலுத்தும் வழக்கம் அந்த முறையில் வரம்பு கடந்துவிட்ட தென்றே சொல்லவேண்டியிருக்கிறது. குளிர் ஜுரத் திற்காகவும், வாந்தி பேதிக்காகவும், பிளேகு என்னும் கொடிய வியாதிக்காகவும், வைசூரிக்காகவும், இசிவு நோய்க்காகவும், ஊசியினால் மருந்துகளை நமது இரத் தத்தில் செலுத்துவதனால், நமது இரத்தத்தில் எல்லா நோய்களையும் குடிகொள்ளுமாறு நாம் செய்துவிடு கிறோம். குதிரை லத்தியைக் கண்டு மேனாட்டு வைத்

தியர் பயப்படுகின்றனர். மாட்டுச் சாணத்தை ஆயுர் வேத வைத்தியர் விரும்புகின்றனர். ஒருவர் வெறுப்பதற்கும் மற்றொருவர் விரும்புவதற்கும் தகுந்த காரணங்கள் அவர்களுக்கே தெரியா. மேனாட்டு வைத்தியர்கள்கூட ஒரு விதத்தில் வேதாந்திகள் என்றே நான் கருதுகிறேன்.

நிருபர் : நீங்கள் சொல்வது விளங்கவில்லையே !

நகரவாசி : மனிதர்கள் பிறந்துகொண்டேயிருந்தாலும் சரி; இறந்துகொண்டேயிருந்தாலும் சரி. மேனாட்டு வைத்தியர்களின் கட்டணச் சீட்டு மாத்திரம் வாராமலிராது.

நிருபர் : ஆயுர் வேதம், யுனனி, சித்த வைத்திய முறைகளைக் குறித்து உங்களுடைய அபிப்பிராயம் என்னவோ ?

நகரவாசி : இப்போது இருக்கும் நிலைமையில் அம்முறைகள் நன்ருகவே இருக்கின்றன. ஆனல், அவைகள் முன்னேற்றமும் அபிவிருத்தியும் அடைவதற்கு வகையேயில்லை. சூரணங்களும், மாத்திரைகளும், கஷாயங்களும் மனிதனுக்காக ஏற்பட்டவையேயன்றி, மனிதன் அவைகளுக்காக ஏற்பட்டவனல்லன் என்பதை வைத்தியர்கள் நன்ருய் அறிந்துகொள்ள வேண்டும். நம்முடைய வாழ்நாட்களுக்குள்ளேயே நமது வியாதிகள் தீர்ந்து நாம் செளக்கியமாகிவிட வேண்டுமென்பதையும் நம் வைத்தியர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நிருபர் : அனுகுண ஒளஷதப் பிரயோக முறையைக் குறித்து உங்களுடைய அபிப்பிராயம் என்னவோ ?

நகரவாசி : பல நோயாளிகள் அதனுல் குண மடைந்திருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனுல், நான் ஒரு சமயம் மிகச் சிறிய மாத்திரைகளை வாயில் போட்டுக்கொண்டேன். அவைகளை விழுங்கி னேனே இல்லையோ என்று எனக்கே சந்தேகமாயிருந் தது. என்னுடைய பற்களின் இடுக்குகளில் அவைகள் சிக்கிக்கொண்டனவோ என்றுகூட எனக்குச் சந்தேக மாயிருந்தது. ஹோமியோபதி அல்லது அனுகுண ஔஷதப் பிரயோக முறையால் நன்மை ஏற்படுகிற தென்ருவது அல்லது கெடுதல் ஏற்படுகிறதென்ருவது என்னுல் சொல்ல முடியாது.

நிருபர் : வர்ணங்களினுல் செய்யப்படும் சிகிச்சை யைக் குறித்து நீங்கள் என்ன தெரிந்துகொண் டீர்கள் ?

நகரவாசி : சில காலம் அதை ஒருவரும் அனுசரிக் காமலிருந்தனர். ஆனுல், இப்போது மறுபடியும் அந்த முறையைச் சிலர் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந் திருக்கின்றனர். வியாதியின் மூலகாரணத்தைக் கண்டு பிடிப்பதற்குப் பதிலாக, வியாதியின் லக்ஷணங்களை மாத்திரம் அந்த முறை விலகச் செய்யும். ஆரோக் கியத்தினுல் மனிதனுக்குத் தேஜஸ் ஏற்படவேண்டுமே யல்லாமல், தேஜஸினுல் ஒரு போதும் ஆரோக்கியம் உண்டாகாது.

நிருபர் : ஜல சிகிச்சையில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா ?

நகரவாசி : அதை வேறு வைத்திய முறைகளுள் சேர்த்துவிடுவதே மேல். நோயாளிகளுக்குத் தண்ணீர் ஏதோ ஒரு வகையில் சேருவதனுல் தண்ணீர்ச் சிகிச் சையைத் தனியாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

நிருபர்: முடிவான உங்கள் தீர்மானம் என்னவோ?

நகரவாசி: எந்த வைத்திய முறையை வேண்டுமானாலும் அனுசரிக்கலாம். அதனால் கஷ்டமாவது நஷ்டமாவது ஏற்படாது. எந்த முறையையும் அனுசரிக்காமலிருந்தாலும் பாதகமில்லை. அதனாலும் ஒரு நஷ்டமும் ஏற்படாது.

6. ஒரு நாள் வாழ்வு போதுமா?

[ஏழைச் சிசுக்கள் வேண்டுவது]

தென்னிந்தியாவிலுள்ள ஒரு பிரதான நகரத்தில் சிசுக்களை ஆதரிப்பதற்கென்று பிரத்தியேகமாக ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர். குழந்தைகளைக் குளிப்பாட்டி, வாரத்திற்கொரு முறை அவைகளுக்குப் பிஸ்கோத்துகளும் பாலும் கொடுக்க ஏற்ற வசதிகள் செய்யப்பட்டிருந்தன. அந்தச் சிசு சம்ரக்ஷண சாலைக்குத் தலைவராயிருந்த பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவர் அந்த ஸ்தாபனத்தைக் குறித்து அதிகப் பெருமை கொண்டிருந்தார். பரம ஏழைகளாயிருக்கும் சிறு குழந்தைகளின் தாய்மார்கள் தம்மைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள் என்று அவர் நினைத்தார். குழந்தைகளை ஆதரித்துக் காப்பாற்றும் அச்சங்கத்தினரிடம் அந்த ஏழை மக்கள் அதிக விசுவாசத்துடனிருக்கக் கூடுமென்று சங்க அங்கத்தினரும் நினைத்தனர். அவர்கள் நன்றியறிதலை அறிந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன், அச்சங்கத்தின் தலைவர் ஒரு நாள் மாறு வேடத்துடன் சிசு சம்ரக்ஷண சாலைக்குச் சென்றார். பல குழந்தை

கள் குளிக்கும்போது சந்தோஷத்துடனிருப்பதையும், அதிக ஆத்திரத்துடன் பிஸ்கோத்துக்களைத் தின்று கொண்டும் பாலைக் குடித்துக்கொண்டுமிருப்பதையும் அவர் கண்டார்; ஒரு குழந்தையின் தாயிடம் சென்று, 'இந்தச் சிசு சம்ரக்ஷண சாலையினால் உங்களுக்கு ஏதாவது நன்மையுண்டா?' என்று கேட்டார்.

'எனக்கு இந்த ஏற்பாடு சிறிதேனும் பிடிக்கவில்லை,' என்று அந்தக் குழந்தையின் தாய் சொன்னாள்.

'ஏன் பிடிக்கவில்லை!' என்று ஆச்சரியத்துடன் தலைவர் கேட்டார்.

அவள், 'இந்த ஸ்தாபனத்தை நடத்துபவர்களுக்குச் சிறிதேனும் அறிவில்லை. எங்கள் குழந்தைகளைச் சோப்புத் தேய்த்து எங்களால் குளிப்பாட்ட முடியுமா? அவைகளுக்குப் பிஸ்கோத்தும் பாலும் வாங்கிக்கொடுக்கும் சக்தி எங்களுக்கு இருக்கிறதா? இந்த ஸ்தாபனம் வாரத்திற்கு ஒரு முறை குழந்தைகளுக்கு இவைகளைக் கொடுப்பது போதுமா? மற்ற ஆறு தினங்களிலும் பிஸ்கோத்துக்காகவும், பாலுக்காகவும் குழந்தைகள் அழுது எங்கள் பிராணனை வாங்கிவிடுகின்றன. நீங்கள் எங்களுக்குச் சகாயம் செய்யக்கூடிய மார்க்கம் இதுவன்று. எப்போதும் எங்களுடைய குழந்தைகளுக்கு எங்கள் வீடுகளில் கொடுக்கும் சாதாரண உணவையே கொடுப்பதனாலே தான் எங்களுக்கும் எங்கள் குழந்தைகளுக்கும் இந்த ஸ்தாபனம் உண்மையான உதவி செய்ததாகும். அக்காலம் எப்போது வருமோ, அப்போதுதான் இத்தகைய ஸ்தாபனங்களினால் பொது ஜனங்களுக்கு நன்மை ஏற்படும்,' என்று கூறினாள்.

7. பாம்புக்கடி வைத்தியன்

ஒருவனைப் பாம்பு கடித்துவிட்டதென்று சொன்னால் போதும்; அவன் எவ்விடத்திலிருந்தாலும் சரி; அவன் இறந்து போவான் அல்லது பிழைத்துக்கொள்வான் என்று கண்டிப்பாகச் சொல்லக்கூடிய அபார சக்தி, ஒரு பாம்புக்கடி வைத்தியனுக்கு இருந்தது. அந்த வைத்தியனுடைய மகன் அவ்வைத்தியனிருந்த இடத்திலிருந்து சுமார் நூறு மைல் தூரத்திலுள்ள ஓரிடத்தில் இருந்தான். ஒரு நாள் இரவு ஒரு மனிதன் அதிக அவசரமாக வைத்தியனிடம் வந்து, 'நேற்றைய தினம் உம் மகனைப் பாம்பு கடித்துவிட்டது. இந்தச் செய்தியை உம்மிடம் சொல்ல எனக்கு வருத்தமாயிருக்கிறது!' என்று சொன்னான்.

'என்ன! என் மகனையா பாம்பு தீண்டிவிட்டது! ஐயோ மகனே!' என்று அந்த வைத்தியன் கதறினான்.

'நான் உம் மகனைச் சிகிச்சைக்காக இங்கே கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். வெளியே இருக்கும் சில மனிதர்களுடன் அவன் பேசிக்கொண்டிருக்கிறான்,' என்று அந்த மனிதன் வைத்தியனிடம் சொன்னான். 'கவலைப்பட வேண்டுவதில்லை. இந்தப் பாம்புக் கடியால் உயிருக்கு யாதோர் ஆபத்தும் இல்லையென்று நான் திட்டமாகச் சொல்கிறேன்,' என்று வைத்தியன், தன் மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு சொன்னான்.

8. எதிர் பாராத பதில்

பள்ளிக்கூடத்தைத் தணிக்கை பார்க்கும் **இன்ஸ்பெக்டர்** ஒருவர், ஒரு சமயம் ஒரு சிறு பள்ளிக்கூடத்திற்குச் சென்றார். ஏழை எட்டால் பெருக்குவதால்

கிடைக்கும் எண்ணிக்கையைச் சொல்லும்படி அவர் ஒரு சிறு பையனைக் கேட்டார். பையன் விடாது சிரித்தான். இன்ஸ்பெக்டர் கேட்கக் கேட்க, பையனுடைய சிரிப்பு அதிகரித்துக்கொண்டேயிருந்தது. முடிவில் இன்ஸ்பெக்டர் அந்தப் பையனைக் கேட்பதில் பயனில்லையென்று எண்ணி, வேறொரு வகுப்பிற்குச் சென்றார்.

அந்தப் பையன் அவ்வாறு பதில் சொல்லாமல் சிரித்ததற்குக் காரணத்தை உபாத்தியாயர் கேட்டார். 'இன்ஸ்பெக்டர் படித்த கெட்டிக்காரர் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், ஏழெட்டு எத்தனை யென்பது கூட அவருக்குத் தெரியாமல் என்னைக் கேட்கவே, எனக்குச்சிரிப்பு வந்துவிட்டது,' என்று சிரித்துக்கொண்டே பையன் பதில் சொன்னான்.

9. மரமும் பலகையும்

நீந்தத் தெரியாத ஒருவன் வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்த ஓர் ஆற்றில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தான். கால் தவறி அவன் தண்ணீரில் முழுகிவிட்டான். தண்ணீரின் வேகத்தால் அவன் அடித்துக்கொண்டு போகப்பட்டான். தெய்வச் செயலால் அவன் தப்பிப் பிழைத்துக் கரையிலிருந்து நீரின்மீது தொங்கிய ஒரு மரத்தின் கிளைமீதேறிக்கொண்டான். அவ்விடத்தில் ஒருவரும் காணப்படவில்லை. அவன், 'நான் எவ்வளவு நேரம் இந்த மரத்தின்மீது தனியாய் இருப்பது!' என்று தன் மனத்தில் எண்ணிக்கொண்டிருக்கும் போது, கரை யோரத்தில் தண்ணீரில் மரப்பலகையொன்று மிதந்து

செல்வதைக் கண்டான். 'இந்தப் பலகை கரை யோரத்தில் மிதந்து போய்க்கொண்டிருப்பதனால், சீக்கிரத்தில் கரையில் என்னைக் கொண்டு போய் விட்டு விடும். நான் இந்த மரத்திலிருந்து இறங்கி இந்தப் பலகையின்மீது ஏறிக்கொள்வது நல்லது,' என்று அவன் நினைத்தான். மரத்தை விட்டுக் கீழே இறங்கி அவன் பலகையைப் பிடித்தான். அந்தப் பலகை அவன் கையை விட்டு நழுவித் தண்ணீரில் மிதந்து கொண்டே போய்விட்டது. அதிக நேரம் தன் தலையைத் தண்ணீருக்கு மேலே வைத்துக்கொண்டிருக்கச் சக்தியற்றவனாய், அவன் தண்ணீரில் மூழ்கி இறந்து போனான்.

10. மதவெறியன் வேண்டுகோள்

பூர்ணய்யன் என்னும் பிராமணனைத் திப்புச் சுல்தான் தன் பிரதம மந்திரியாக வைத்துக்கொண்டிருந்தான். அதைக் கண்ட மகம்மதிய மதப்பற்று அதிகம் கொண்ட ஒருவனுக்கு அதிக கோபம் வந்தது. அவன் திப்புச்சுல்தானிடம் சென்று, 'பெருமை வாய்ந்த அரசரே, நீர் மதப்பற்றுடைய மகம்மதியரா யிருந்தும், ஒரு பிராமணனை ஏன் பிரதம மந்திரியாக வைத்துக்கொண்டிருக்கிறீர்?' என்று கேட்டான்.

'பூர்ணய்யனுக்கிருக்கும் புத்திசாலித்தனத்திலும், சாமர்த்தியத்திலும் அரை வாசியாவது இருக்கும் வேறொரு மகம்மதியனை நீ காட்டும் பக்ஷத்தில், நான் அதிக சந்தோஷத்துடன் அவனையே என்னுடைய பிரதம மந்திரியாக அமர்த்திக்கொள்கிறேன்,' என்று திப்புச்சுல்தான் சொன்னான்.

'எனக்குத் தெரிந்த வரையில் அப்படிப்பட்டவர் ஒருவரும் நமது தேசத்தில் இல்லை,' என்று அந்த மதப் பித்துப் பிடித்த மகம்மதியன் பதிலளித்தான்.

'அப்படியானால், பூர்ணய்யனை எப்படியாவது மகம்மதிய மதத்தில் சேர்ந்துவிடும்படி செய்துவிட்டால் போதும். நீ அவ்வாறு செய்தால், நான் அதிக சந்தோஷமடைவேன்,' என்று திப்புச்சொல்ல, 'பூர்ணய்யன் மகம்மதிய மதத்தில் சேரவே மாட்டான்,' என்று மகம்மதிய மதப்பற்றுடையவன் சொன்னான்.

'சாமர்த்தியசாலி அல்லாத ஒரு மகம்மதியனைப் பிரதம மந்திரியாக அமர்த்திக்கொண்டு, நான் மைசூரை ஆளுவதென்பது முடியாத காரியம்,' என்று திப்புச்சுல்தான் கண்டிப்பாகச் சொல்லிவிட்டான்.

11. கோஹினூரும் அழகும்

கீர்த்தி வாய்ந்த ரஞ்சித்சிங்கு என்பவனிடம் **கோஹினூர்** என்னும் அதிக விலை மதிப்புள்ள வைரக்கல் ஒன்று இருந்தது. அந்த வைரத்தின்மீது இரஞ்சித்சிங்கு அபார பிரியம் வைத்திருந்தான். இரஞ்சித்சிங்கு இறந்து போகும் சமயத்தில் அந்த வைரத்தைப் பூரி என்னுமிடத்திலிருந்த ஜகந்நாத சுவாமிக்குக் கொடுத்துவிடத் தீர்மானித்தான்.

இரஞ்சித்சிங்கின் அரண்மனையைச் சேர்ந்த அழகுடைய ஒரு தாசி, இரஞ்சித்சிங்கிளிடம் சென்று, 'கீர்த்தி வாய்ந்த அரசரே, இவ்வுலகிலேயே காண்பதற்கரிய விலையுயர்ந்த கோஹினூர் வைரத்தை அழகில்லாத அந்த ஜகந்நாத விக்கிரகத்திற்கா கொடுக்கப் போகிறீர்கள்?' என்று கேட்டாள்.

'அழகில்லாத நான், இது வரையில் அந்த வைரத்தை அணிந்துகொண்டிருக்கவில்லையா? அழகில்லாத ஒரு தெய்வம் இனிமேல் அணிந்துகொள்வதனால் என்ன முழுகிப்போய்விடப் போகின்றது? அதிரூப சௌந்தரியாகிய ஒரு மாதர் திலகம், இவ்வுலகிலேயே சிறந்து விளங்கும் ஒரு மாது சிரோமணியே வந்து என்னைக் கேட்டிருப்பினும் என்னுயிரைவிட அதிகமாக நான் மதித்திருக்கும் இந்த வைரத்தை நான் கொடுத்திருக்கமாட்டேன். அத்தகைய மனப்பான்மையுடைய நான், இதை ஜகந்நாதருடைய அழகில்லாத விக்கிரகத்திற்குக் கொடுத்துவிடத் தீர்மானித்திருப்பதில் ஏதோ இரகசியமிருக்க வேண்டுமென்பதை நீ இன்னும் அறிந்துகொள்ளவில்லையா? அவ்வளவு அபார சக்தி வாய்ந்த ஒரு விக்கிரகத்தை நீ அழகற்றதென்று சொல்வது தவறு,' என்று இரஞ்சித்சிங்கு கூறினான்.

12. பெண் தெய்வங்களின் வெற்றி

திரிமூர்த்திகளாகிய பிரமன், விஷ்ணு, மஹேஸ்வரன் என்னும் மூன்று தேவர்களும் ஒரு முறை சந்தித்துப் பேசினார்கள். தங்களுடைய தொழில்களில் **சரஸ்வதி, இலட்சுமி, பார்வதி** என்னும் தங்களுடைய மனைவிமார்களுக்கு எவ்வளவு பங்கு உண்டு என்பதைக் குறித்துத் தீர்மானிக்கவே அவர்கள் சந்தித்தார்கள். மனைவிகள் தங்கள் பொழுது போக்கிற்காக ஏற்பட்டவர்களல்ல என்னும் முடிவிற்கு அவர்கள் வந்தார்கள். தங்கள் அபிப்பிராயத்தை மனைவிமார்களிடம் அவர்கள் கூறினார்கள்.

மஹாளய அமாவாசையன்றைய தினம் சரஸ்வதி, இலட்சுமி, பார்வதி என்னும் மூன்று தேவதைகளும் ஒன்று கூடி ஆலோசித்துத் தங்களுடைய கணவன் மார்களை விட்டு விலகிவிட வேண்டுமென்றும், தங்களுக்குத் தங்கள் கணவன்மார்கள் தொழிலில் பங்கு அளிக்காவிட்டால் திரும்பி அவர்களை அடைவதில்லை யென்றும் தீர்மானித்தார்கள்.

சத்தியத்தின் கடவுளாகிய பிரமதேவரை விட்டு, கல்வித் தெய்வமாகிய கலைவாணி விலகினாள். அதனால், பிரபஞ்சத்தில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. பிரமதேவர் சத்தியசந்தராய் இருந்தும், அவருடைய மதிப்புக் கல்வித் தெய்வமாகிய கலைவாணியில்லாமையால் மறைந்து போய்விட்டது. சத்தியத்தினின்றும் பிரிக்கப்பட்ட கல்விக்கு மதிப்பில்லாமையால், சரஸ்வதியையும் யாரும் மதிக்கவில்லை. கற்றறிந்தவர் சிலர் மாத்திரம் சரஸ்வதியிடம் பக்தி விசுவாசத்துடன் இருந்து வந்தனர். பிரமதேவர் சரஸ்வதியைப் பிரிந்து ஒன்பது தினங்கள் ஒருவாறு சகித்துக்கொண்டிருந்தார். பத்தாவது தினமாகிய **விஜய தசமி** அன்று, சரஸ்வதிக்கு முன்போலவே தம் அதிகாரத்தில் பங்கு கொடுக்கப் பிரமதேவர் இசைந்தார். சத்தியமும் கல்வியும், பிரமாவும் சரஸ்வதியும் மறுபடியும் ஒன்று சேர்ந்தனர். அதனாலேதான் அந்தத் தினமாகிய விஜயதசமியன்று, அனைவரும் சரஸ்வதியைப் பூஜை செய்து கொண்டாடுகின்றனர்.

செல்வத்திற்குத் தெய்வமாகிய இலட்சுமி தேவி இதே போல மஹாவிஷ்ணுவைத் துன்புறுத்தத் தொடங்கினாள். மஹாவிஷ்ணு பள்ளி கொண்டிருந்த

பாற்கடலில் பால்முழுவதும் வற்றிப்போகும்படி இலட்சுமி தேவி செய்தாள். வறண்டுபோன கடலில் பள்ளி கொள்வது நாராயணருக்குக் கஷ்டமாயிருந்த போதிலும், அதை அவர் பொருட்படுத்தாமலிருந்துவிட்டார். கடலின் அடிப்பாகமான வறண்டுபோன தரையையும் நீங்கும்படி மஹாலட்சுமி செய்துவிட, நாராயணர் காற்றில் ஊசலாடவேண்டியிருந்தது. அப்பொழுதும் நாராயணர் சஹித்துக்கொண்டு சும்மா இருந்தார். காற்றையும் நீங்கும்படி இலட்சுமி தேவி செய்துவிடவே, மஹாவிஷ்ணுவைச் சுற்றிலும் ஒன்றுமில்லாத வெட்டவெளியாய்ப் போய்விட்டது.

'காத்தலாகிய என் தொழிலைச் செய்ய இந்த வெட்டவெளியில் என்ன இருக்கிறது?' என்று மஹாவிஷ்ணு கோபத்துடன் கேட்டார்.

'நீங்கள் செய்யும் தொழிலுக்கு என் சகாயம் வேண்டியிருக்கிறதென்பதை இப்போது அறிந்து கொண்டீர்களா? ஆதலால், உங்கள் தொழிலில் எனக்கும் பங்கு உண்டு என்பதை மறந்துவிடாதீர்கள்,' என்று இலட்சுமி கூறினள். அதே விஜயதசமியன்று தமது தொழிலில் இலட்சுமிக்கும் பங்கு உண்டு என்பதைக் கூறி மஹாவிஷ்ணு முன்போலவே இலட்சுமியுடன் சேர்ந்துகொண்டார். விஜயதசமியன்று இன்றும் இலட்சுமி பூஜையும் நடந்து வருவதை நாம் அறிவோம். சந்தோஷத்திற்கும், ஐசுவரியத்திற்கும் காரணமான விஷ்ணுவும் லட்சுமியும் சேர்ந்துகொண்ட விஜயதசமியைப் பண்டிகையாக அனைவரும் கொண்டாடுகின்றனர்.

அழித்தலாகிய தொழிலைச் செய்யும் தெய்வமாகிய பார்வதியும் தன் கணவரைக் கஷ்டத்திற்குள்ளாக்க

நினைத்தாள். சிவபெருமானுடைய லீலைகளையும் சுபாவத்தையும் நன்றாக அறிந்திருந்த பார்வதி, **மஹிஷாசுரன்** என்னும் அசுரனைத் தூண்டி, சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து, தன்னைத் தேவர்களாலும், மனிதர்களாலும், அசுரர்களாலும் கொல்ல முடியாமலிருக்கும் வரத்தைச் சிவபெருமானிடம் பெறும்படி மஹிஷாசுரனிடம் சொன்னாள். பார்வதி கூறியபடியே தவங்கிடந்து மஹிஷாசுரன், வரங்களைச் சிவபெருமானிடம்பெற்றான். அசுரர்கள் சுபாவத்திற்கிணங்க, வரம் பெற்றவுடனேயே அந்த அசுரன் சிவபெருமானை எதிர்த்தான். சிவபெருமான் ஓடினார். தேவர்கள் மஹிஷாசுரனைக் கண்டு ஓடினர். தினந்தோறும் கோடிக் கணக்கான மனிதர்களை நாசம் செய்துகொண்டிருந்த மஹிஷாசுரனை அடக்குவதற்கு ஏதாவது உபாயம் செய்யும்படி மனிதர்களும் தேவர்களும் தெய்வங்களைப் பிரார்த்தித்தார்கள். தெய்வங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பெண் தெய்வங்களும் சகாயம் செய்ய முன் வரவில்லை. கல்விச் செல்வம் மஹிஷாசுரனை ஒன்றும் செய்ய முடியாதென்று சரஸ்வதி சொன்னாள். செல்வத்தைக் கொடுத்து மஹிஷாசுரனை வேண்டிக்கொண்டாலும், அவன் மனிதர்களையும், தேவர்களையும் துன்பப்படுத்தாமலிருக்கமாட்டான் என்று இலட்சுமி தேவி சொன்னாள். மனிதர்களும் தேவர்களும் பார்வதியிடம் சென்று தங்களுடைய குறையைத் தீர்க்குமாறு வேண்டிக்கொண்டார்கள். ‘சிவபிரான் தம் தவற்றை உணர்ந்து, இனிமேல் எல்லா விஷயங்களிலும் என் சொற்படி நடப்பதாகச் சொன்னால், நான் இந்த மஹிஷாசுரனுடைய கர்வத்தை அடக்கி உங்களுடைய குறையைத் தீர்த்து

வைக்கிறேன்,' என்று பார்வதி சொன்னாள். மஹாவிஷ்ணு, பிரமதேவர், மற்றத் தேவர், மனிதர் முதலானோர், பரமசிவனார் ஒளிந்துகொண்டிருக்குமிடத்திற்கு அவரைத் தேடிச் சென்றனர். பிரபஞ்சத்தைக் காப்பாற்றப் பார்வதி தேவியார் இஷ்டப்படி நடக்குமாறு சிவபிரானை அவர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

சிவபிரான் தனக்கும் பங்கு கொடுக்க இசைந்த பிறகு பார்வதி சிங்கத்தின்மீது ஏறிக்கொண்டு அசுரனுடன் யுத்தம் புரியச் சென்றாள். 'நீயோ, வல்லமை பொருந்திய அசுரன். நானோ, ஒரு ஸ்திரீ. என்னுடன் சரிசமானமாக உன்னால் யுத்தம் செய்ய முடியுமா?' என்று பார்வதி அசுரனைக் கேட்டாள். அவள் கூறியது உண்மையென்பதை அசுரன் அறிந்துகொண்டான். தனக்கு வெற்றி கிடைக்காதென்று அந்த அசுரன் தீர்மானித்துக்கொண்டான். இருந்தபோதிலும், தன் சைனியங்களுடன் வந்து மஹிஷாசுரன் தைரியத்தோடு சண்டை செய்தான். மஹிஷாசுரனும் பார்வதியும் மிகக் கோரமான யுத்தம் புரிந்தனர். உலகம் நடுங்கிற்று. முடிவில் பெண் தெய்வமாகிய பார்வதியே வெற்றியடைந்தாள்.

யுத்த களத்தில் கோடிக் கணக்கான வீரர் மாண்டு கிடந்தனர். மஹிஷாசுரனிடமிருந்து தங்களைக் காப்பாற்றியதற்குத் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள வந்தவர்களையும் பார்வதி தனது ஆவேசத்தால், தலை விரித்தாடிக்கொண்டே கொன்றுவிட்டாள். பார்வதியின் எதிரில் செல்ல அனைவரும் பயப்பட்டனர். 'பார்வதியின் கோபாவேசத்தினால் உலகமே

அழிந்து போய்விடுமோ!' என்று அனைவரும் பயந்து நடுங்கினர்.

'மஹிஷாசுரன் அழியாதிருந்தாற்கூட இப்பிரபஞ்சத்தை அழிக்கச் சில வருஷங்களாயினும் பிடித்திருக்கும். ஆனால், இந்தப் பராசக்தியோ, இன்னும் சில நாழிகைக்குள் பிரபஞ்சத்தையே அழித்துவிடுவாள் போலத் தோன்றுகிறதே!' என்று சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவர் சொல்லி வருத்தப்பட்டார்.

'இப்பொழுதே சென்று பிரபஞ்சத்தை அழிந்து போகாமல் காப்பாற்றுங்கள்,' என்று மஹாவிஷ்ணு சொல்ல, 'அஃது என்னால் முடியாது. நான் மஹிஷாசுரனைக் கண்டு பயந்து ஒளிந்துகொண்டிருக்கிறேன். பராசக்தியோ, அந்த மஹிஷாசுரனையே வென்றுவிட்டாள். அந்தச் சக்தி சொரூபத்தின்முன் நிற்பதற்குக்கூட என்னால் முடியாது. நீர்தான் சென்று சக்தியின் கோபத்தை அடக்கவேண்டும். மேலும், பார்வதி உம் சகோதரியல்லவா?' என்று பிரமா பதிலளித்தார்.

'நான் சொல்வதில் பயனில்லை. கலியாணமான சகோதரிகள் தங்களுடைய சகோதரர்களை அதிகம் கவனிக்கமாட்டார்கள். மேலும், மனைவியின் கோபத்தை அடக்குவதற்குத் தகுதியானவன் கணவன் என்பதில் சந்தேகமில்லை. ஆதலால், நாம் சிவபிரானையே பார்வதியிடம் அனுப்ப வேண்டும்,' என்று மஹாவிஷ்ணு சொன்னார்.

பிரபஞ்சம் அழிக்கப்படாமல் காப்பாற்றும்படி எல்லாரும் பரமசிவனாரைக் கட்டாயப்படுத்திப் பார்வதியிடம் அனுப்பினர்.

ஆவேசத்துடன் கூத்தாடிக்கொண்டிருக்கும் பராசக்தியைப் பரமசிவனார் மெதுவாக அணுகினார். பரமசிவனாரை அடையாளங் கண்டுகொள்ளாத பார்வதி, அவரைக் கீழே தள்ளி, அவர்மீது நடனம் செய்யத் தொடங்கினாள். பிரமர், விஷ்ணு, தேவர்கள் முதலியவர்கள் அக்காட்சியைக் கண்டு கோபத்துடனும் பீதியுடனும் வாய் விட்டுக் கதறினார்கள்.

'இதற்கு முன்பு வேறு இந்து தேசத்து மாது இத்தகைய கொடிய செய்கையைச் செய்ததேயில்லை!' என்று அவர்கள் கூறினார்கள். அப்போது கீழே குனிந்து பார்த்த பார்வதிக்குத் தன் கணவர் தன் காலின்கீழிருப்பது தெரிய வந்தது. வெட்கத்தினால் தலை குனிந்துகொண்டு, பார்வதி தன் நாக்கை வெளியே நீட்டினாள். தான் ஆடையில்லாமலிருப்பதை அப்போது அறிந்துகொண்ட பார்வதி, அசுரர்களின் தலைகளை வெட்டி, மஹிஷாசுரனுடைய தலையையும் சேர்த்து, மாலையாக்கி, அந்த மாலையைத் தன் கழுத்திலணிந்துகொண்டாள். சிவ சொரூபமும் சக்தி சொரூபமும் சேர்ந்து, அர்த்தநாரீசுவரர் சொரூபமாய் மாறிற்று.

இந்தச் சம்பவம் நிகழ்ந்தது விஜயதசமியன்று. பார்வதிக்கு விஜயதசமியன்றைய தினம், உபவாசமிருந்து பக்தர்கள் பூஜை செய்து, வேண்டிய வரங்களைப் பெறுவார்கள். தருமமும் சக்தியும் ஒன்றாகக் கலந்த அந்தத் தினத்தைச் சுபதினமான பெரிய பண்டிகையாக உலக மாந்தர் கொண்டாடுகின்றனர்.

13. சோம்பேறித்தனத்தால் நேர்ந்த மரணம்

கேலு, நேப்பன் என்னும் பெயருடைய இரண்டு முழுச் சோம்பேறிகள் இருந்தார்கள். அவர்கள் பகற் பொழுதில் வேலை செய்து பிழைக்கும் கூலியாட்கள். பல கூலியாட்களுடன் அவர்கள் வேலைக்குச் செல்வது வழக்கம். கஷ்டமான வேலைகளை அவர்கள் எப்பொழுதும் செய்யவே மாட்டார்கள். எப்பொழுது பார்த்தாலும் அவர்கள் வீண் வம்பு பேசிக்கொண்டு காலத்தைக் கழிப்பார்கள்; அடிக்கடி தலையைச் சொறிந்துகொண்டும், ஆயுதங்களைத் தீட்டிக்கொண்டும் வீண் பொழுது போக்குவார்கள்; அரைமணி நேரத்திற்கொருமுறை தாகமெடுத்தாலும் சரி, எடாவிட்டாலும் சரி, தண்ணீர் குடித்துக்கொண்டே இருப்பார்கள். காலத்தைக் கழிப்பதற்கு அவர்களுக்கு அஃது ஒரு வழியாய் இருந்தது.

அவ்விருவரும் பெருஞ்சோம்பேறிகள் என்பதை அனைவரும் அறிந்துகொண்டனர். அதனால், அவர்களுக்கு ஒருவரும் வேலை கொடுக்கவில்லை. பட்டினி கிடக்க வேண்டிய நிலைமை வந்துவிடவே, அருகிலிருந்த தயாள குணமுள்ள ஒருவரிடம் அவர்கள் சென்று, 'நாங்கள் சாப்பிடுவதற்கு ஆகாரமில்லாமல் சாகும் நிலைமையிலிருக்கிறோம்,' என்று சொன்னார்கள். அவர்கள் படும் கஷ்டத்தைக் கண்டு மனம் வருந்திய அப்பெரிய மனிதர், பின் வருமாறு சொன்னார்:

'சோம்பேறித்தனம் என்னும் நோய் முடிவில் மரணத்தை உண்டுபண்ணும் என்பதில் சந்தேகமில்லை. முன்னொரு காலத்தில் ஒட்டகம் ஒன்றிருந்தது. தீனிக்காக அதிக தூரம் அலைந்து திரியவேண்டியிருக்கிற

தென்று நினைத்து, அந்த ஒட்டகம் கடவுளை ஒரு வரம் கேட்டது. இருந்த இடத்திலிருந்தபடியே தீனியைத் தின்பதற்கு அனுகூலமாக இருக்கும்படி தனக்கு ஒரு மைல் நீளமுள்ள கழுத்தைக் கொடுக்க வேண்டுமென்பதே அவ்வரம். கடவுளும் ஒட்டகம் கேட்ட வரத்தைக்கொடுத்தார். ஒட்டகம் சோம்பேறியாய் வேலையே செய்யாமல், இருந்த இடத்திலிருந்துகொண்டே தீனியைத் தின்று காலம் கழித்து வந்தது. சில நாட்கள் கழிந்த பின் அது முழுச் சோம்பேறியாய் மாறிவிட்டது. அக்காட்டிலிருந்த நரிகள் சில அந்த ஒட்டகத்தையும், அதன் நீண்ட கழுத்தையும் கவனித்து வந்தன. அவை சிறிது சிறிதாக அந்த ஒட்டகத்தின் கழுத்தைக் கடிக்கத் தொடங்கின. நாளடைவில் அந்த ஒட்டகத்தின் கழுத்துக் கத்தரிக்கப்பட்டுத் தலை வேறு, உடல் வேறு ஆய்விட்டன. அதனால், தனது சோம்பேறித்தனமே மரணத்திற்குக் காரணம் என்று நினைத்துக்கொண்டே அந்த ஒட்டகம் இறந்து போயிற்று.'

இந்தக் கதையைக் கேட்ட கேலுவுக்கும் நேப்பனுக்கும் நல்ல புத்தி வந்தது. தங்கள் சோம்பேறித்தனத்தைவிட்டு அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்துச் செல்வவான்களாகிச் சௌக்கியமாய் வாழ்ந்தார்கள்.

14. கழுதையின் சாமர்த்தியம்

மலையாளத்திலிருந்த பெரிய கிராமமொன்றில் **ரேக்கப்பன்** என்னும் பெயருடைய ஒரு வண்ணான் இருந்தான். அவனிடத்தில் பலம்பொருந்திய முரட்டுச் சுபாவமுள்ள புத்திசாலிக் கழுதை ஒன்று இருந்தது.

அந்தக் கழுதையைக் கண்டு அவ்வூரிலிருந்த குடியான வர் பயந்தனர். துணிகளைக் கிழிப்பதில் வண்ணன் எவ்வளவு சாமர்த்தியசாலியாயிருந்தானே, அவ்வளவு வயல்களின் வேலிகளை முறித்து எறிவதில் அந்தக் கழுதை சாமர்த்தியசாலியாயிருந்தது.

பகல் முழுவதும் அந்தக் கழுதை வண்ணனுடைய அழுக்குத் துணிகளையும், சலவை செய்த துணிகளையும் சுமந்து செல்லும். விறகுச் சுள்ளிகளையும் அது காட்டி லிருந்து சுமந்து செல்லும். இராத்திரிக் காலங்களில் வண்ணன் அந்தக் கழுதையை அவிழ்த்து விட்டுவிடு வது வழக்கம். கிராமத்திற்கருகிலிருக்கும் வயல்களில் நுழைந்து அந்தக் கழுதை பயிர் பச்சைகளை நன்ருக மேய்ந்துவிடும். வீட்டிற்குப் பின்புறத்தில் வளர்க்கப் பட்டிருக்கும் செடிகளையும், பூசனிக்காய், வெள்ளரிக் காய் முதலிய காய்கறிகளையும் அது வயிருரத் தின்று தன் வயிற்றை நிரப்பிக்கொள்ளும். நெற்பயிர் முத லியவைகளை அது மேய்ந்துவிடும். அதனுல், அது நன்ருகக் கொழுத்து வளர்ந்திருந்தது.

அக்கிராம வாசிகளுள் சாமர்த்தியமாகப் பேசும் திறமை வாய்ந்த ஒருவன், அக்கிராமத்து வயல்களி லுள்ள நல்ல காய்கறிப் பயிர்களெல்லாம் அந்தக் கழு தையின் வயிற்றிலேயே இருக்கும் என்று சொல்வது வழக்கம். அக்கழுதைக்குத் திருப்தி என்பதே இல்லை யென்பதும், பச்சைப் பயிர்களின்மீதே இஷ்டம் என் பதும் சுற்றுப்புறங்களிலுள்ள அனைவருக்கும் தெரிந் திருந்தன.

ரேக்கப்பன் அதற்குப் புல் போடுவதே இல்லை. குடிப்பதற்குத் தண்ணீர் மாத்திரம் அவன் அந்தக்

கழுதைக்கு வைப்பது வழக்கம். இராத்திரியெல்லாம் வயிறுர மேய்ந்துவிட்டு, அதிகாலேயில் அந்தக் கழுதை ரேக்கப்பன் வீட்டுக்குத் திரும்பிச்சென்று, மிகவும் நல்ல கழுதைபோல மூட்டையைச் சுமக்கத் தயாரா யிருக்கும். ரேக்கப்பனுக்குத் தன் கழுதையின் சுபா வம் தெரியும். அந்தக் கழுதைக்கும் ரேக்கப்பனுடைய தன்மை தெரியும். பெருமையுடன் ரேக்கப்பன் தன் கழுதையின் வயிற்றைத் தட்டிக் கொடுப்பான். 'இந்தக் குடியானவர்களுக்குத் தெரியாமல் நீ மேய்ந்து விடும் பயிர்களில் நாலில் ஒரு பாகத்தைக்கூட இவர் கள் மனமார வேருெருவருக்குக் கொடுக்கமாட்டார் கள்,' என்று ரேக்கப்பன் கழுதையிடம் சொல்வது வழக்கம்.

இராத்திரி வேளேகளில் அக்கழுதை செய்யும் அட்டூழியங்களேப் பொறுத்துக்கொண்டிருக்க முடி யாமல், குடியானவர்கள் மனம் வருந்திஞர்கள். கொடுத்து வைத்ததுபோலத் தைரியத்துடன் புகுந்து பயிர்களே மேய்ந்து அழிக்கும் அந்தக் கழுதையின்மீது அவர்களுக்கு மிகுந்த கோபம் வந்தது. அவர்கள் ரேக்கப்பனிடம் சென்று கழுதை செய்யும் அக்கிரமங் களே எடுத்துச் சொன்ஞர்கள்.

'நான் என்ன செய்வது! கழுதை எப்போதும் கழுதைதான். நீங்கள் உங்கள் இஷ்டம்போல அந்தக் கழுதையைப் பிடித்து என்ன வேண்டுமாஞலும் செய்யுங்கள்,' என்று ரேக்கப்பன் அவர்களிடம் சொல்லிவிட்டான்.

குடியானவர்கள் அதிக சந்தோஷத்துடன் வீடு திரும்பிஞர்கள். அவர்களுள் பத்துப்பேர் சேர்ந்து

கொண்டு கையில் குண்டாந்தடியுடன் கழுதையை வயல்களில் துரத்தி அடித்தனர். பலர் அதே மாதிரி யாக அந்தக் கழுதையை மடக்கினர். ஆனல், அதைப் பிடிக்க ஒருவராலும் முடியவில்லே. அந்தக் குடியான வர்களுக்கோ, தங்களுக்குரிய வயல்கள் மாத்திரம் தெரியும். கழுதைக்கோ, எல்லா வயல்களும் தெரியும். வயல்களில் இருக்கும் மேடு பள்ளங்கள், தங்குமிடங் கள், தாவுவதற்கு வசதியுள்ள இடங்களெல்லாம் தினம் சுற்றித் திரியும் அந்தக் கழுதைக்கு நன்ருகத் தெரிந்திருந்தன. இராத்திரி வேளைகளில் வழக்கத்தி ஞல், அதற்குக் கண்களும் நன்ருகத் தெரிந்தன. ஒரு மணி நேரம் துரத்திப் பார்த்தும் கழுதையை அவர் களால் பிடிக்க முடியவில்லே. தன்னைப் பிடிக்க வரு கிருர்கள் என்று தெரிந்துகொண்ட கழுதை, வேண்டு மென்றே நிற்பதுபோலப் பாசாங்கு செய்யும். அவர் கள் அருகில் வந்தவுடன் கைக்கெட்டாமல் ஓடிப்போய் விடும். தங்களே ஏமாற்றும் கழுதையின்மீது குடியா னவர்களுக்கு மிகுந்த கோபம் வந்தது. அன்றிரவு முழுவதும் கஷ்டப்பட்டும் அவர்களால் அந்தக் கழுதை யைப் பிடிக்க முடியவில்லே. மறு நாள் வேறு சில குடியானவர் கூட்டமாய்ச் சேர்ந்துகொண்டு அந்தக் கழுதையைப் பிடிக்க முயன்றனர். அவர்களும் பிடிக்க முடியாமல் வருத்தத்துடன் வீடு திரும்பினர் கள். மூன்ரும் நாள் பின்னும் சிலர் கஷ்டப்பட்டுப் பார்த்தும், கழுதை அவர்கள் கையில் சிக்கவில்லே. முடிவில் அவர்கள் அந்தக் கழுதையை அதன் வழியே விட்டுவிட்டார்கள். இயற்கையில், பஞ்சம், வெள்ளம், துரைத்தனம் முதலியவைகளிஞல் எதிர் பாராத நஷ்டம் ஏற்படுவதுபோல, அந்தக் கழுதையிஞல் ஏற்

படும் நஷ்டத்தையும் அவர்கள் கருதிச் சும்மா இருந்து விட்டார்கள்.

15. கழுதைப் பால் குடித்த கழுதை

ஒரு நாள் கிராமத் தலையாரியின் குழந்தைக்கு உடம்பு சௌக்கியமில்லாமலிருந்தது. அக்குழந்தைக்குக் கழுதைப்பால் கொடுத்தால்தான் வியாதி தீரும் என்று அவ்வூர் நாட்டு வைத்தியன் குழந்தையைப் பரீக்ஷித்துச் சொன்னான். ரேக்கப்பனுடைய கழுதையைத் தவிர வேறு கழுதை அவ்வூரில் இல்லை. அந்தக் கழுதையின் குட்டி இரண்டு நாளைக்கு முன்பு இறந்துவிட்டபடியால், அந்தக் கழுதையிடம் சிறிது பால் இருந்தது. முரட்டுச் சுபாவம் வாய்ந்த அந்தக் கழுதையினிடமிருந்து பாலை எப்படிக் கறப்பதென்பதுதான் யோசனைக்கிடமான விஷயமாயிருந்தது. அந்தத் தலையாரி ரேக்கப்பனிடம் சென்று கழுதைப்பால் கொடுக்கும்படி கேட்டான்.

'இதுவரையில் நான் பால் கறந்ததில்லை. உன்னால் கறந்துகொள்ள முடியுமானால் தாராளமாகக் கறந்து கொள்,' என்று ரேக்கப்பன் தலையாரியிடம் சொல்லி விட்டான்.

தலையாரி ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு பால் கறக்கக் கழுதையிடம் சென்று, தண்ணீரை எடுத்துக் கழுதையின் மடியைக் கழுவினான். பச்சைத் தண்ணீர் பட்டதும், கழுதை விலுக்கென்று உதைத்தது. அந்த உதையினால் தலையாரியின் இட முழங்கால் உடைந்துபோய்விடும்போலாகிவிட்டது. வலி

பொறுக்கமாட்டாமல் முழங்காலைத் தடவிக் கொடுத்துக்கொண்டே தலையாரி அந்தக் கழுதையைக் கோபத்துடன் திட்டினுன்.

அது கழுதையிலும் கழுதை, பெண் கழுதை அல்லவா?

'கழுதை உதைக்குமென்பது உனக்குத் தெரியாதா?' என்று ரேக்கப்பன் கேட்டான்.

அந்தக் கழுதை தன்னை உதைத்ததற்காக அதை நன்ருகப் புடைத்துவிட வேண்டுமென்று தலையாரி தீர்மானித்தான். தன் தடியை எடுத்துக்கொண்டு தலையாரி அந்தக் கழுதையின் பின் ஓடினுன். தன்னைப் பிடிக்க ராத்திரி வேளைகளில் துரத்திய குடியானவர்களை அந்தக் கழுதை என்ன பாடு படுத்தியதோ, அதே மாதிரி அந்தத் தலையாரியையும் அது ஆட்டி வைத்துக் கூத்துப் பார்த்தது. தன்னுலான வரையில் கஷ்டப்பட்டு அந்தக் கழுதையை எப்படியாவது பிடித்துவிட வேண்டுமென்று அவன் எண்ணினுன். அக்கிராமத்திலுள்ளவர் அவனைக் கண்டு சிரித்தனர். 'அந்த இரண்டு கழுதைகளையும் பார்த்தீர்களா?' என்று கிராமவாசி ஒருவன் மற்றவர்களிடம் சொல்வதைத் தலையாரி கேட்டான். உடனே அவன் தனது மடத்தனத்தை அறிந்துகொண்டு, கழுதையைப் பின் தொடராமல் நின்றுவிட்டான்.

மறுபடியும் அந்தக் கழுதையிடம் செல்லத் தலையாரிக்கு இஷ்டமில்லை. 'எப்படியாவது கழுதைப் பாலைக் கொண்டு வந்து கொடுத்தால்தான் குழந்தையின் வியாதி குணமடையும்,' என்று வைத்தியன் கண்டிப்பாகக் கூறினுன். ஆகவே, தலையாரி கிராமத்

துத் தோட்டிகள் இரண்டு பேரைக் கூப்பிட்டு, எப்படியாவது கழுதைப்பாலைக் கொண்டு வரும்படி சொன்னான். அவர்களுக்குத் தலைக்கு ஒரு ரூபாய் வெகுமதி அளிப்பதாகவும் தலையாரி வாக்களித்தான். அவர்கள் காலையில் ரேக்கப்பனிடம் சென்றார்கள். அந்தக் கழுதையைக் கட்டிவிட்டு, அதனுடைய பின்னங்கால்களையும் கட்டிவிடும்படி அவர்கள் ரேக்கப்பனிடம் சொன்னார்கள். ரேக்கப்பன் அந்தக் கழுதையின் பின்னங்கால்களை அவர்களுடைய சகாயத்தைக் கொண்டு நன்றாகக் கட்டிவிட்டான். பிறகு ஒரு தோட்டி, தடி ஒன்றை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, கழுதையின் முன்பு நின்றுகொண்டான். மற்றொரு தோட்டி அந்தக் கழுதையின் மடியைக் கழுவாமலே, அகலமான ஒரு பாத்திரத்தில் கழுதைப் பாலைக் கறக்க ஆரம்பித்தான். பால் சுரக்காமல் தடுக்கப்பார்த்தது கழுதை; காலால் உதைக்கவும் முயன்றது. ஆனால், அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அரை மணி நேரம் கஷ்டப்பட்டு அந்தத் தோட்டி மூன்று அவுன்ஸ் பால் கறந்தான். அவர்கள் எழுந்திருந்தவுடன், ரேக்கப்பன் கழுதையின் கால்களை அவிழ்த்துவிட்டான். பால் வைத்திருந்த பாத்திரத்தை அச்சமயம் அஜாக்கிரதையாக வைத்திருந்தான். ஒரு துளிப் பால்கூட விடாமல் உடனே அந்தக் கழுதை பாலையெல்லாம் குடித்துவிட்டு, ஓட்டமெடுத்தது. 'கழுதைக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது,' என்று ரேக்கப்பன் சொன்னான். 'அல்லது நாம் பயித்தியக்காரர்களாயிருக்கவேண்டும்,' என்று தோட்டிகள் பதில் கூறினார்கள்.

16. குடி வெறியால் கொண்டாட்டம்

தலையாரியின் குழந்தைக்கு உடம்பு சௌக்கிய மாகிவிட்டபடியால், கழுதைப் பாலைக் குறித்த கவலை தலையாரியை விட்டது. கிராம வாசிகள் தன்னையும் தோட்டிகளையும் பார்த்துச் சிரிக்கும்படிசெய்த அந்தக் கழுதையின்மீது தலையாரிக்கு இருந்த கோபம் என்னவோ அடங்கினபாடில்லை. ஆகவே, ஒரு தினம் காலையில் ரேக்கப்பன் வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்த கழுதையை, தலையாரியும் தோட்டிகளும்சேர்ந்து பிடித்துக்கொண்டு போய், அது தங்களுடைய தோட்டத்திலிருந்த பூசனிக்காய்களை நாசப்படுத்தியதென்று சொல்லி, பவுண்டில் அடைத்துவிட்டார்கள். ரேக்கப்பன் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு, கட்டணத்தைச் செலுத்திவிட்டு, கழுதையை வீட்டுக்குக் கொண்டு போவான் என்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால், ரேக்கப்பனோ, அவர்கள் நினைத்தபடி செய்யவில்லை. ரேக்கப்பனுக்குப் புத்தி வரும் என்று அவர்கள் நினைத்தது பொய்யாயிற்று. கழுதையில்லாமல் போனதைக் குறித்து அவன் வருத்தப்பட்டதாகவே தெரியவில்லை. அந்தக் கழுதைக்குத் தீனிபோடத் தலையாரிக்கு இஷ்டமில்லை. தீனியில்லாமல் அது பவுண்டில் இறந்துபோனால், சர்க்காருக்குப் பதில் சொல்ல வேண்டுமே என்னும் பயமும் தலையாரிக்கு இருந்தது. மூன்றுவது நாள் கழுதையைப் பவுண்டிலிருந்து வெளியே விட்டுவிட்டு, அது தப்பியோடிவிட்டதாகச் சொல்லி விட்டான்.

மூன்று தினங்களாகத் தீனியில்லாமல் பசியுடனிருந்த அந்தக் கழுதை, அதிக ஆத்திரத்துடன் தீனி

யைத் தேடத் தொடங்கிற்று. குடிப்பதற்குத் தண்ணீ ராவது கிடைக்குமா என்று அது தாகத்துடன் இங் கும் அங்கும் அலைந்துகொண்டிருந்த போது, ஒரு பெரிய பானையில் பனங்கள் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டது. அந்தப் பானையில் கள்ளை வைத்துவிட்டுச் சாணர்கள், அருகிலிருந்த பனை மரங்களின்மீது ஏறிக் கள்ளிறக்கிக்கொண்டிருந்தார்கள். அதற்கு முன்பு கழுதை கள் குடித்ததேயில்லை. அந்தப் பெரிய பானை யிலிருந்த வஸ்து இன்னதென்பதையே கழுதையினுல் அறிந்துகொள்ள முடியவில்லை. தாகம் பொறுக்கமாட் டாமல், கள்ளைத் தண்ணீர் என்று நினைத்துக் கழுதை குடிக்கத் தொடங்கிற்று. அது ருசியாய் இருந்தது. பானையிலிருந்த கள்ளையெல்லாம் கழுதை குடித்துத் தீர்த்துவிட்டது. கழுதையின் தலை கிறுகிறென்று சுழல ஆரம்பித்தது. அது கள் வெறியால் பல்லைக் காட்டிக் கத்திக்கொண்டு அலையத் தொடங்கிற்று.

சாணர்கள் மரங்களிலிருந்து கீழே இறங்கி வந் ததும், கழுதை செய்திருக்கும் அட்டூழியத்தைக்கண்டு அதிக கோபம் கொண்டார்கள். கள் நிறைந்திருந்த குடங்களைக் கீழே வைத்துவிட்டு, அவர்கள் கழுதை யைத் துரத்தத் தொடங்கினுர்கள். கழுதையைப் பிடிக்க முடியாமல் போகவே, தடிகளையும் கற்களையும் சாணர்கள் கழுதையின்மீது வீசியெறிந்தார்கள். கழுதையின்மீது எறியப்பட்ட கல் ஒன்று, அந்த வழி யாகப் போய்க்கொண்டிருந்த தச்சன் ஒருவன்மீது பட்டது. தச்சனுடைய முகத்தில் விழுந்த அந்தக் கல், அவனுடைய இரண்டு பற்களைத் தட்டிவிட்டது. வலி பொறுக்க மாட்டாமல் வருந்திக்கொண்டிருந்த தச் சனைக் கண்டு பயப்பட்டுச் சாணர்கள் தப்பியோடி

விட்டார்கள். அடுத்த நிமிஷம் அந்தக் கழுதை தச்சனருகில் ஓடிற்று. தன்மீது கல் விழுந்ததன் காரணத்தை அப்போதுதான் தச்சன் அறிந்துகொண்டான்.

கழுதையோ, வழி தவறிப் பள்ளத்திலிருந்து வயலில் நாற்று நட்டுக்கொண்டிருந்த ஒரு குடியானவனுடைய தலையின்மீது காலை வைக்க நேரிட்டது. கழுதையும் மனிதனும் ஒருவர்மீது ஒருவராய் விழுந்து புரண்டனர். குடியானவனுக்குப் பத்துப் பன்னிரண்டு இரத்தக் காயங்கள் உண்டாயின. அவன் கலப்பையைக் கையிலெடுத்துக்கொண்டு கழுதையைத் துரத்தினன். மற்றொரு குடியானவனும் அவனுக்குச் சகாயமாக வந்தான். அவன் கழுதையின் வாலைப் பிடித்துக்கொண்டான். கழுதை தன் பின்னங்கால்களால் அவனை உதைத்தது. அவனுடைய முழங்கால்களில் சரியான உதை படவே, அவன் கீழே குப்புற விழுந்து மண்ணைக் கவ்வினன்; வலி தாளமுடியாமல் அலறினன்.

கழுதை தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டதை அறிந்துகொண்ட ரேக்கப்பன் ஆச்சரியப்பட்டான். அது தன் வீட்டிற்குத் திரும்பி வாராததால், அவன் அதைத் தேடத் தொடங்கினன். குடியானவர்களும் கழுதையும் இருக்குமிடத்தை ரேக்கப்பன் அடைந்தான். தன் கழுதை சந்தோஷத்துடன் கத்திக்கொண்டிருப்பதை அவன் கண்டு சந்தோஷமடைந்தான். ஒருவரிடமும் சிக்கிக்கொள்ளாமல், எல்லாரையும் ஏமாற்றியதைக் கண்டு தான் சந்தோஷப்படுவதாகக் காண்பித்துக்கொள்ள, ரேக்கப்பன் தன் கழுதையைத் தட்டிக்கொடுத்தான். கழுதை அதிக

அமைதியுடன் ரேக்கப்பன் பக்கத்தில் நின்றுகொண் டிருப்பதைக் கண்ட குடியானவர்களும் தச்சனும் அத னருகில் சென்று, பழி தீர்த்துக்கொள்ள அதைத் தங் கள் தடியால் அடிக்கத் தொடங்கினுர்கள்.

'இதை அடிக்காதீர்கள். பாவம்! இது மூன்று தினங்களாகப் பட்டினியாயிருக்கிறது,' என்று ரேக் கப்பன் தடுத்தான்.

'என்னுடைய பற்கள் போனதற்குக் காரணமா யிருந்த இந்தக் கழுதையின் எலும்புகள் நொறுங்கிப் போகும்படி நான் அடிக்கப்போகிறேன்!' என்று தச்சன் கோபத்துடன் சொன்னுன்.

'இது என் கழுத்தின்மீது குதித்ததனுல் எனக்குப் பத்துப் பன்னிரண்டு காயங்கள் ஏற்பட்டன. இதன் கழுத்தை முறித்துவிட்டுத்தான் நான் வேறு வேலை பார்க்கப் போகிறேன்!' என்ருன் குடியானவன்.

'என்னுடைய முழங்காலை முறித்த இந்தக் கழு தையின் முழங்கால்களை நான் முதலில் முறித்தால் தான் என் கோபம் தீரும்!' என்று குடியானவ னுடைய தோழன் வீரம் பேசினுன். கழுதையின் வாலை முறுக்கிவிட்டு, 'சீ, போ,' என்று சொல்லி ரேக்கப்பன் தன் கழுதையைத் துரத்திவிட்டான். நாலுகால் பாய்ச்சலில் கழுதை ஓடத் தொடங்கிற்று. ரேக்கப்பனும் அதைத் தொடர்ந்து ஓடினுன்.

17. நீதி ஸ்தலத்தில் கழுதையின் அட்டகாசம்

கள் இறக்குபவர்கள் கழுதை செய்த அட்டகாசத் தைக் குறித்துத் தங்கள் எஜமானனிடம் சொன்னுர் கள். கள்ளுக்கடைக்காரன் கிராமப் பஞ்சாயத்தா

ரிடம் கழுதையின்மீது வழக்குத் தொடுத்தான். தச்சன், பயிர்த் தொழில் செய்பவன், கூலி வேலை செய்பவன் முதலிய எல்லாரும் கழுதையின்மீது வழக்குத் தொடுத்தனர்.

கிராமப் பஞ்சாயத்தின் தலைவரான சுப்பையருக்கும், மற்றப் பஞ்சாயத்தார்களுக்கும் அடக்கமுடியாத சிரிப்பு வந்தது. மற்றவர்கள் படும் கஷ்டத்தைக் கண்டு சிரிப்பது மனித வர்க்கத்தின் வழக்கமல்லவா? பரீக்ஷையில் தவறிய ஒருவன் தன்னைவிடக் கெட்டிக்காரனை வேறொருவன் தவறியதைக் கண்டு சந்தோஷப்படுவது இயற்கையல்லவா? இருப்பினும், அந்தக் கிராமப் பஞ்சாயத்தார்கள் வழக்குகளை நன்றாக விசாரிப்பவர்கள் என்று பெயர் பெற்றிருந்தார்கள். தலைவரோ, கடினமான சிக்ஷை விதிக்காமலிருக்க மாட்டார்.

ரேக்கப்பனும் அவன் கழுதையும் கோர்ட்டார் முன் ஆஜராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கிராமப் போலீஸார் எளிதில் ரேக்கப்பனைப் பிடித்துக்கொண்டு வந்து கோர்ட்டார் முன் நிறுத்திவிட்டனர். ரேக்கப்பன் நடுங்கிக்கொண்டு நின்றான். காடு, மலை, வனம், வனாந்தரங்களிலெல்லாம் துரத்தித் திரிந்து பார்த்தும் கழுதையைப் பிடிக்க முடியவில்லை. ஓடி அலைந்ததால் அலுப்படைந்த போலீஸார்கள் தங்களால் கழுதையைப் பிடிக்க முடியவில்லையென்று சுப்பையரிடம் சொன்னார்கள்.

'நாங்கள் இரண்டு மணி நேரம் கழுதைக்காகக் காத்துக்கொண்டிருந்தாய்விட்டது. இனிமேல் காத்துக்கொண்டிருக்க முடியாது. உடனே கழுதையை

இங்கே கொண்டுவந்து நிறுத்துங்கள். உத்தரவுப் பிரகாரம் நீங்கள் நடந்தே தீரவேண்டும்,' என்றார் சுப்பையர்.

'கழுதைக்கு உத்தரவை மீறக் கூடாதென்பது எப்படித்தெரியும்? கழுதை எப்பொழுதும் கழுதையே அல்லவா ?' என்றான் போலீஸ்காரன்.

'உத்தரவுப் பிரகாரம் நடவாமற்போனால் என்ன நேரிடுமென்பது தெரியாத கழுதையா நீ!' என்று சுப்பையர் கோபத்துடன் கேட்டார்.

'ஐயா, தயவுசெய்து கழுதையைப் பிடிக்கும் வழி ஒன்று சொல்லுங்கள். நான் உடனே பிடித்துக் கொண்டுவந்து கழுதையைத் தங்கள் முன் நிறுத்துகிறேன்,' என்று போலீஸ்காரன் சொன்னான்.

கிராமத்தார் எல்லாரும் சகாயம் செய்து பார்த்தும் அந்தக் கழுதையைப் பிடிக்க முடியவில்லையென்று அந்தப் போலீஸ்காரன் எடுத்துரைத்தான். சுப்பையர், 'இந்த அயோக்கியனாகிய ரேக்கப்பனைத் தவிர வேறு ஒருவராலும் அந்தக் கழுதையைப் பிடிக்க முடியாது. அந்தக் கழுதை தினந்தோறும் காலையில் இந்த ரேக்கப்பன் வீட்டிற்கு வருகிறதென்றும், இவன் சொற்படி நடக்கிறதென்றும் பிராதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவனைக் கண்டால் அது பசுப்போல இருக்கிறதாம். நீங்கள் இவனை உங்களுடன் கூட்டிக்கொண்டு போங்கள். இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் அந்தக் கழுதையை இந்தக் கோர்ட்டார் முன்பு கொண்டுவந்து நிறுத்தத் தவறினால், கோர்ட்டார் உத்தரவுப்படி நடக்காத குற்றத்திற்காக இவனைக் கைது செய்து, ஜெயிலில் அடைத்துவிடுங்கள்,' என்றார்.

அதைக் கேட்டுப் போலீஸ்காரன் சந்தோஷ மடைந்தான்; ரேக்கப்பனைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். 'இனிமேல் விளையாடுவதில் பயனில்லை. உன்னை ஜெயிலிலடைத்து, உனக்கு அபராதம் விதித்து, உன் வாழ்க்கையைச் சுப்பையர் நாசப்படுத்தி விடுவாரென்பதை மறந்துவிடாதே! இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் உன் கழுதையைப் பிடித்துக் கொடாவிட்டால், அதைச் சுட்டுக் கொன்றுவிடு வார்கள்,' என்று போலீஸ்காரன் ரேக்கப்பனிடம் சொன்னான்.

ரேக்கப்பன் வீட்டின் முன் பக்கத்தில், ஒரு சுவ ரோரத்தில் கழுதை நின்றுகொண்டிருந்தது. பலர் அதன் பின் நின்றுகொண்டிருந்தனர். 'வா, வா' என்று சொல்லிக்கொண்டே, ரேக்கப்பன் அந்தக் கழுதை யிடம் சென்றான். கழுதையும் அவனிடம் வந்தது. அவன் கழுதையைத் தட்டிக்கொடுத்தான். அப் பொழுது போலீஸ்காரர்கள், அந்தக் கழுதையின் கழுத்தில் கயிற்றைப்போட்டுக் கட்டினார்கள்.

'என்னுடைய கழுதையை நானே பிடித்துக் கொடுத்துவிட்டேன். இனிமேல் எனக்கென்ன சுகம்?' என்று சொல்லி ரேக்கப்பன் வருத்தப்பட்டான்.

'இந்தக் கழுதை இறந்துபோனால் நீ சுகமடை வாய். இஃது இருக்கும் வரையில் உனக்குக் கஷ்டமே யொழியச் சுகமில்லையென்பதை நம்பு,' என்று போலீஸ் காரன் சொன்னான்.

அவன் கூறியது உண்மையென்பதைக் காட்ட, ஓர் ஓணான் கத்திற்று. 'ஓணான் கத்தினால், நல்ல சகு னம், இலாபமுண்டாகும்,' என்று அங்கிருந்தவர் கருதி

னர். அந்தச் சகுனத்தைக் குறித்துப் போலீஸ்காரன் சொல்ல, கழுதை விஷயத்தில் அஃது உண்மை யாகுமோ என்னவோ என்று ரேக்கப்பன் சந்தேகப் பட்டான்.

'கண்டிப்பாகக் கழுதைகளின் விஷயத்திலுங் கூடச் சகுனங்கள் பலிக்கும். ஏனெனில், மனிதர்களுக் கும் கழுதைகளுக்கும் அதிக வித்தியாசமில்லை,' என்று போலீஸ்காரன் எடுத்துச் சொன்னான்.

நியாய ஸ்தலத்திற்குப் போலீஸ்காரன் அந்தக் கழுதையை இழுத்துச் சென்றான். ரேக்கப்பன், தலை யாரி, கிராமத்தார் முதலியவர் கூட்டமாக அந்தக் கழுதையின் பின் சென்றனர். நியாய ஸ்தலத்தில் என்றுமில்லாத கூட்டம் கூடியிருந்தது. வழக்கத் திற்கு விரோதமாகச் சுப்பையர் வாயிற்படியண்டை சென்று கழுதையை வரவேற்கவேண்டியதாயிற்று. அதற்கு முன் வேறு எந்தக் கைதிக்கும் அத்தகைய பாக்கியம் கிடைத்ததில்லை.

'நீ இக்கழுதையைப் பிடித்துக்கொண்டு வந்த தைக் குறித்து நாங்கள் அதிக சந்தோஷமடைகிறோம். பார்ப்பதற்கு இது குறும்புத்தனமுள்ள கழுதையாய்க் காணப்படவில்லையே!' என்று சுப்பையர் போலீஸ் காரனைப் பார்த்துச் சொன்னார்.

'ரேக்கப்பன் இதை விட்டுவிட்டால் அப்போது இதனுடைய குறும்புத்தனம் தெரியும்,' என்று போலீஸ்காரன் சொன்னான்.

'ரேக்கப்பா, உன் கழுதையை விட்டுவிடு; பார்க்க லாம். என் நீதி ஸ்தலத்தில் தைரியத்துடன் இது குறும்புத்தனம் செய்கிறதா பார்க்கலாம்,' என்று சுப்பையர் சொன்னார்.

ரேக்கப்பன் அதன் கழுத்திலிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டுவிட்டான். நியாய ஸ்தலத்தில் அதிகக் கூட்டம் இருந்ததால், கழுதை வெளியே செல்வது கஷ்டமாயிருந்தது. வெளியே செல்ல, அது முன்னே தாவிக் குதித்தது. அங்கிருந்த வக்கீல் **கோமன் நாயருக்கு** இடக்காலில் பலத்த காயம்பட்டது. அதனிடமிருந்து தப்பித்துக்கொள்ள எண்ணிய இரண்டு பெண்டாட்டிக்காரராகிய வக்கீல் **மல்லிநாதய்யர்**, தம் நாற்காலியிலிருந்து கீழே விழுந்துவிட்டார். அவர் கீழே விழுந்த சமயத்தில், அவருடைய தலை மயிரைப் புல் என்று எண்ணிக்கொண்டு கழுதை வாயால் கவ்விப் பிடித்து இழுத்தது. அதைத் தின்ன முடியாமல் போகவே, அந்தக் கழுதை, கீழே துப்பிவிட்டு, பஞ்சாயத்துத் தலைவர் அமரும் பீடத்தின்மீது பாய்ந்தது. சுப்பையர் தமது கௌரவத்தையும் மறந்து, தம்முடைய அறைக்குள் புகுந்துகொண்டார். மற்றப் பஞ்சாயத்தார்களும் அந்த அறைக்குள் ஒளிந்துகொண்டிருந்தார்கள். தலைவரின் மேஜைமீதிருந்த காகிதக் கட்டுகளையெல்லாம் கடித்துத் தின்று பார்த்து, அவை ருசியற்றனவாய் இருக்கவே, கழுதை அவைகளைத் துப்பிவிட்டுச் சென்றது. நியாய ஸ்தலத்தின் பின் பக்கத்திலிருந்து வாயிலின் வழியாக அது வெளியே ஓடிவிட்டது. அது நியாய ஸ்தலத்தில் செய்த அட்டகாசங்களைக் கண்டு அங்கிருந்தவர் ஆரவாரம் செய்தனர்.

கழுதை வெளியே போய்விட்டதென்பதை விசாரித்து அறிந்துகொண்டு, மெதுவாகச் சுப்பையர் தமது அறையை விட்டு வெளியே வந்தார். மற்றப் பஞ்சாயத்தார்களும் அவருடன் வெளியே வந்தார்கள். 'இப்

பொழுது கோர்ட்டாரின் உத்தரவு என்னவோ?" என்று சந்தோஷத்துடன் போலீஸ்காரன் கேட்டான்.

'அந்தக் கழுதையைச் சுட்டுக் கொன்றுவிட வேண்டும். அதற்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென் பதில் சந்தேகமில்லை. இருந்த போதிலும், நான் ஒரு முறை சட்டப் புத்தகங்களைப் புரட்டிப்பார்க்க வேண் டும். நாம் சட்ட விரோதமாக ஒன்றும் செய்யக் கூடாது,' என்று சுப்பையர் சொன்னார். அத்துடன் அன்றைய தினம் கோர்ட்டுக் கலைந்தது.

18. ரேக்கப்பனுக்கு வெகுமதி

அன்று சாயந்திரம் அந்தக் கிராமத்துப் போலீஸ் காரனுக்கு ஜில்லாச் சூப்பிரெண்டிடமிருந்து ஒரு கடி தம் வந்தது. **ஹாஜியர்** என்னும் ஒரு பெரிய கொள் ளைக்காரன் அந்தக் கிராமத்திலிருந்த பாழடைந்த வீடொன்றில் ஒளிந்துகொண்டிருப்பதாகவும், அவனை உயிருடன் பிடித்துவிட வேண்டும்; அல்லது கொன்று விட வேண்டுமென்றும் அந்தக் கடிதத்தில் எழுதப்பட் டிருந்தது. தான் இருக்குமிடத்தைப் போலீசார்கள் அறிந்துகொண்டிருக்கிறார்கள் என்பது அவனுக்குத் தெரிவதற்கு முன்னமே, அவனைப் பிடித்துவிட வேண்டுமென்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட் டிருந்தது.

'குறி பார்த்துச் சுடுவதில் அவன் மிகவும் கெட் டிக்காரன். அவன் ஒருவர் கையிலும் அகப்படமாட் டான். ஆகவே, நீங்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அவனை உயிருடன் பிடித்தாலும் சரி; அல்லது கொன்றுவிட்டாலும் சரி; ஆயிர ரூபாய்

இனும் கொடுக்கப்படும் ; நாளைய தினம் ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டருடன் பன்னிரண்டு போலீஸ் சேவகர்கள் வருவார்கள். அவர்களுக்கு வேண்டிய சகாயத்தைச் செய்யுங்கள் !' என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

அந்தப் போலீஸ்காரன் அக்கடிதத்தை எடுத்துக் கொண்டுபோய்ச் சுப்பையரிடம் காட்டினன். 'எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது! உடனே ரேக்கப்பனைக் கூப்பிடுங்கள்,' என்ருர் சுப்பையர். போலீஸ்காரன் ரேக்கப்பனைக் கூட்டிக்கொண்டு வந்தான். சுப்பையர், ரேக்கப்பன், போலீஸ்காரன், தலையாரி, தோட்டிகள், கள்ளுக்கடைக்காரன், தச்சன், பயிர்த்தொழில் செய்பவன், கூலி வேலை செய்பவன் முதலியவர் சேர்ந்து ஆலோசித்து ஒரு முடிவிற்கு வந்தனர்.

அன்றிரவு நாலு காலன் கள்ளையும், ஆறு திரான் சாராயத்தையும், சிறிது கஞ்சாவையும் கழுதைக்குக் கொடுத்தனர். குடி வெறியால் அக்கழுதை ஒருவராலும் பிடிபடாமல் குதித்தோடத் தொடங்கிற்று. பிறகு அவர்கள் அக்கழுதையைப் பாழடைந்த வீட்டிற்குள் விட்டுக் கதவை வெளியே சார்த்தி மூடிவிட்டார்கள். அதனல், ஹாஜியருக்கு உள்ளே வெளிச்சமே இல்லாமல் போய்விட்டது. ஒரு பெரிய கூட்டத்தில் ஜனங்கள் பேசுவது போல அவனுக்குக் கேட்டது. கதவு திறக்கப்படுவது போன்ற சத்தம் அவனுக்குக் கேட்டது. தன்னைக் கைது செய்யவே மனிதர்கள் வருகிருர்களென்றெண்ணிக்கொண்டு, அவன் அடுத்தடுத்துத் தன் கைத்துப்பாக்கியினல் ஆறு தரம் கதவின் பக்கம் பார்த்துச் சுட்டான். ஜனங்களின் ஆரவாரம்வெளியே அதிகரிப்பதைக் கண்டு, உயிருடன், ஏழாவது குண்டி

ளுல் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்தான். சுப்பையர் அதிக ஜாக்கிரதையுடன் பல தீவர்த்திக ளுடனும், போலீஸ்காரர்கள், தோட்டிகள், தலையாரி, மற்றக் கிராமவாசிகள் கூடிய பெருங்கூட்டத்துடனும் அந்த வீட்டிற்குள் நுழைந்தார். சுமார் நூறு மனிதர் கள் அந்த வீட்டிற்குள் சென்றார்கள். ஹாஜியரும் கழுதையும் செத்துக் கிடப்பதையும், ஹாஜியருக்கு அருகில் கைத்துப்பாக்கி ஒன்று விழுந்து கிடப்பதை யும் கண்டு அவர்கள் சந்தோஷப்பட்டார்கள். ஆறு துப்பாக்கிக் குண்டுகள் கழுதையின் உடம்பில் பாய்ந் திருந்த போதிலும், அந்தக் கழுதை கத்தாமலே இறந்துபோய்விட்டது.

கிராமவாசிகள் அதிக சந்தோஷமடைந்தார்கள். கொள்ளைக்காரன் பிடிபட்ட விஷயத்தைத் தந்திமூலம் சுப்பையர் ஜில்லா சூப்பிரெண்டுக்கு அறிவித்தார். அவரும் அதற்கடுத்த நாள் அந்தக் கிராமத்திற்கு வந்து, ஹாஜியர் இறந்து போனது வாஸ்தவமென் பதை அறிந்துகொண்டார். சுப்பையர், போலீஸ் காரன், தலையாரி, இரண்டு தோட்டிகள், தச்சன், பயிர்த்தொழில் செய்பவன், கூலியாள், ரேக்கப்பன் ஆகிய அனைவரும் அந்த ஆயிர ரூபாய்களைத் தலைக்கு நூறு ரூபாய் விகிதம் பங்கிட்டுக்கொண்டனர்; மிகுந் திருந்த நூறு ரூபாய்களை அந்தக் கழுதையின் சவத்தை ஊர்வலமாகத் தீவர்த்தி மத்தாப்புகளுடன் எடுத்துச் செல்வதற்குச் செலவு செய்தனர். அதற்கு முன்பு எத் தகைய கழுதைக்கும், இப்படி ஓர் ஊர் வலம் நடந் திராது.

'அஃது கழுதையாய் இருந்த போதிலும் நான் அதை என்னுடைய மகன் என்றே நினைத்து அன்

டுடன் வளர்த்து வந்தேன் !' என்று ரேக்கப்பன் கண்களில் நீர் பெருகச் சொல்லி அழுதான்.

'ஓணான் கத்தும் சகுனத்தின் பலன், கழுதை விஷயத்திலும் உண்மையாகின்றதென்பது இப்போது தெரிகின்றதா ?' என்று போலீஸ்காரன் ரேக்கப்பனைக் கேட்டான்.

19. ஜானகியின் வெள்ளித் தட்டு

ஒரு குடும்பத்தில் ஐந்து மருமகளிர் இருந்தனர். அவருள் நால்வர் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர். ஐந்தாம் மருமகளான **ஜானகியோ,** ஒரு நீதிபதி மகள். மாமியும், நாத்தியும், அக்கம்பக்கத்தில் வசித்து வந்தவரும் அவளைப் பெருமையுடன் நடத்தி வந்தனர்.

பெரும்பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தி, ஒரு நாள் அவர்கள் வீட்டிற்கு வந்தாள். வழக்கப்படி அவளுக்கு வெற்றிலை பாக்குக் கொண்டு வந்து கொடுத்தனர். வெற்றிலை, பாக்கு, சுண்ணம்பு, இலவங்கம் முதலியவைகளை ஏழைகளின் வீடுகளில் சாதாரணமாகப் பிரப்பந்தட்டுகளில் வைத்துக்கொடுப்பார்கள். சாதாரண அந்தஸ்துடையவர்களின் வீடுகளில் பித்தளைத் தாம்பாளங்களில் வெற்றிலை பாக்கு வைத்துக் கொடுப்பார்கள். பணக்காரர்களின் வீடுகளில் வெள்ளித் தட்டுகளிலும், அதிக செல்வந்தர்களின் வீடுகளில் தங்கத் தட்டுகளிலும் வெற்றிலை பாக்குக் கொடுத்து உபசரிப்பார்கள். அந்தப் பணக்கார மாது கூடத்தில் அன்றைய தினம் உட்கார்ந்துகொண்டதும், ஜானகியின் வெள்ளித் தட்டைத் தேட அனைவரும் அங்கும் இங்கும் அலைந்தனர். மாமியும் மருமக

ளிரும் மூலை முடுக்குகளிலெல்லாம் தேடினர். அந்தத் தட்டுக் கிடைக்கவில்லை. வீடெங்கும் தேடிப்பார்த்தும் பயனற்றுப் போயிற்று. வீடு பெருக்குபவளை விசாரித்துப் பார்த்தார்கள். அவள் தனக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டாள்.

அந்த வீட்டிற்கு வந்தவளோ, தனக்குள் ஏதோ ஆலோசித்துக்கொண்டு சும்மா உட்கார்ந்திருந்தாள். தனக்காக வெள்ளித் தட்டைத் தேட வேண்டா என்றும், தனக்குச் சாதாரணப் பித்தளைத் தட்டுப் போதும் என்றும், அவள் சொல்லிப் பார்த்தாள்.

"என்ன! பித்தளைத் தட்டிலா உங்களுக்கு வெற்றிலை பாக்குக் கொடுப்பது! நன்றாயிருக்கிறது! உங்களுடைய அந்தஸ்து உங்களுக்குத் தெரியாமற்போனாலும், எங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டாவா?' என்று அந்த வீட்டின் தலைவி கூறினாள். அவள் பித்தளை உலோகத்தைக் குறித்து மிகக் கேவலமாகப் பேசினாள். அந்த உலோகத்திற்கு உயிரிருந்து, கண்ணுமிருந்தால், அஃது அழுதேயிருக்கும்.

வீட்டுக்கு வந்தவள் பேசாமல் பத்துப் பதினைந்து நிமிஷங்கள் சும்மா உட்கார்ந்திருந்து, பத்துப் பன்னிரண்டு தடவை கொட்டாவி விட்டுவிட்டு, முடிவில் மாமியாரிடம் சென்று, 'அதைக் கை தவறி எங்கேயாவது மறந்துபோய் வைத்திருக்க வேண்டும். அதைக் குறித்து ஏன் இப்போது இவ்வளவு கவலைப்பட வேண்டும்? வெற்றிலை பாக்கை ஒரு பித்தளைத் தட்டில் கொண்டுவரச் சொல்லுங்கள். நாம் சிறிது நேரம் வேடிக்கையாகப் பேசிக் காலம் கழிக்கலாம்,' என்று சொன்னாள்.

'நீங்கள் சொல்வது சரி. ஆனால், அந்தத் தட்டை யாராவது திருடிக்கொண்டு போயிருந்தால், என்ன செய்வது!' என்று சொல்லி மாமி மிரள மிரள விழித்தாள்.

'அந்தத் தட்டில் செய்யப்பட்டிருந்த பூ வேலை மிகவும் நன்றாய் இருந்ததே!' என்று முதல் மருமகள் சொன்னாள்.

'சித்திரங்கள் எவ்வளவு நன்றாய் இருந்தன!' என்று இரண்டாம் மருமகள் கூறினாள்.

'அவ்வளவு மெருகுடனும் பளபளப்புடனுமிருந்த தட்டை நான் இதுவரையில் கண்டதேயில்லை!' என்று மூன்றாம் மாட்டுப்பெண் சொல்லி வருத்தப் பட்டாள்.

'அதைப் போல நல்ல வேலைப்பாடமைந்த நேர்த்தி யான தட்டுக் கிடைப்பதரிது!' என்று நான்காம் மருகி நவின்றாள்.

'அதன் விலை நூறு ரூபாய்க்குக் குறைவில்லாமல் இருக்கும். அவளுக்கென்ன! அவள் தகப்பனார் நீதிபதி வேலையிலிருக்கிறார். அவளுக்கு இஃது ஒரு பிரமாதமா!' என்று வந்தவள் கூறினாள்.

ஜானகி ஒன்றும் பேசாமலிருந்தாள். தனது தட்டைக்குறித்துத் தானே பேசுவது அழகன்றென்று நினைத்து, அவள் சும்மா இருப்பதாக வந்தவள் நினைத் துக்கொண்டாள். தட்டுக் காணமற்போய்விட்டதனால் வந்தவள் பதினைந்து நிமிஷம் காத்திருக்க வேண்டி நேர்ந்தது. ஒன்றும் பேசாமல், சும்மா உட்கார்ந்திருக்க முடியாமல், அவள் வீட்டு மாமியிடம் சென்று, 'உங்கள் வீட்டிலிருக்கும் சாமான்களில் எங்கேயாவது

அந்தத் தட்டுக் கலந்திருந்தாலும் இருக்கும்; நிதானமாகத் தேடிப் பாருங்கள்; இதற்குள் அதை ஒருவரும் திருடிக்கொண்டு போயிருக்கமாட்டார்,' என்று சமாதானம் கூறினாள்.

'நானும் அப்படித்தான் நினைக்கிறேன். நாங்கள் அதிக ஜாக்கிரதையாகவே இருக்கிறோம்; வீட்டு வேலைக்காரியும் நல்லவள்,' என்று மாமியும் ஒத்துப் பேசினாள்.

'அதைத் திருடுவதற்கு ஒருவருக்கும் தைரியம் இராது. ஜானகியின் தகப்பனார் ஒரு நீதிபதி என்பது தெரிந்திருந்தும், அதைத் தைரியத்துடன் திருட யாராவது முன் வருவரா?' என்று சீதை என்னும் முதல் மாட்டுப்பெண் சொன்னாள்.

'அதை ஒருவரும் திருடிக்கொண்டு போகவில்லை,' என்று ஜானகி உரைத்தாள்.

'அப்படியானால், ஒரு பித்தளைத் தட்டில் வெற்றிலை பாக்கைக் கொண்டு வாருங்கள். நாம் வெற்றிலை போட்டுக்கொண்டு சிறிது நேரம் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கலாம்,' என்று வந்தவள் சொன்னாள். 'அப்படித் திருடப்பட்டிருந்தபோதிலும், ஜானகியின் தகப்பனருக்கு வேறொரு தட்டு வாங்கிக் கொடுப்பது கஷ்டமான காரியமன்று,' என்று அவள் சமாதானம் சொன்னாள்.

மாமியின் மனம் ஒருவாறு சமாதானமடைந்தது. ஒரு பித்தளைத் தட்டில் வெற்றிலையையும் பாக்கையும் கொண்டு வந்து வைத்தனர். அனைவரும் வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டு, இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தனர். சீக்கிரத்தில் வெள்ளித்

[stamp]

தட்டும் அகப்பட்டுவிடுமென்று சொல்லிவிட்டு, வந்தவள் தன் வீடு திரும்பினாள். மாமியும் சிறிது சந்தோஷத்துடனிருந்தாள்.

அதற்கு அடுத்த வாரம், பணக்காரியின் வீட்டிற்குச் சீதை என்னும் முதல் மாட்டுப்பெண் சென்றாள். மாமி போக முடியாததால், சீதையை அனுப்பினாள். 'வெள்ளித் தட்டுக் கிடைத்துவிட்டதா?' என்று முதன்முதல் அந்தப் பணக்காரி சீதையைக் கேட்டாள்.

'இல்லை; இன்னும் ஒரு மாதத்தில் கிடைக்குமென்று நம்புகிறோம்!' என்று சீதை கூறினாள்.

'ஏன்? அதை எவரேனும் திருடிக்கொண்டு போய்விட்டனரா?' என்று பணக்காரி இரக்கத்துடன் கேட்டாள்.

'இல்லை,' என்று சீதை சொல்ல, 'அப்படியானால், அந்தத் தட்டு என்னவாயிற்று?' என்று பணக்காரி ஆத்திரத்துடன் கேட்டாள்.

'தட்டு இருந்தால்தானே கெட்டுப்போவதற்கு?' என்று சீதை சொன்னாள்.

'தட்டே இல்லாமற் போனால், நீங்கள் ஏன் அங்கும் இங்கும் அலைந்து தேடினீர்கள்? ஏன் அந்தத் தட்டின் பளபளப்பு முதலியவைகளைக் குறித்துச் சிலாகித்துப் பேசினீர்கள்? தட்டு எப்படி இன்னும் ஒரு மாதத்திற்குள் கிடைக்கும்?' என்று பணக்காரி கேட்டாள்.

சீதை, 'ஒரு நீதிபதியின் பெண்ணினிடம் ஒரு வெள்ளித் தட்டுக்கூட இல்லையென்று சொல்லிக் கொள்ள எங்களுக்கு வெட்கமாயிருந்தது. அவள்

தகப்பனுர் ஒரு வெள்ளித் தட்டுக்கூடக் கொடுக்க வில்லையாதலால், எங்கள் மாமி ஒரு வெள்ளித் தட்டை உண்டுபண்ணும்படி எங்களிடம் சொல்லவே, நாங்கள் ஒரு தட்டு இருப்பதுபோல நடிக்கவேண்டி நேர்ந்தது. நாங்கள் தேடிப் பார்த்ததும், அதைப் பற்றி நினைத்து வருத்தப்பட்டதும், தட்டு ஒன்று இருக்கிறதென்று உங்களை நம்பும்படி செய்வதற்கே யாகும். எத்தகைய வெள்ளித் தட்டை ஜானகியின் தகப்பனுர் செய்து கொடுக்க வேண்டுமென்பதையும் நாங்கள் எங்களுடைய வருணனையில் குறிப்பிட்டு விட்டோம். ஒரு வெள்ளித் தட்டுச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி ஜானகியும் தன் தகப்பனுருக்கு எழுதிவிட்டாள். வெள்ளித் தட்டும் தயாராகிக்கொண்டிருக்கிறதாகக் கேள்வி. இன்னும் ஒரு மாதத்திற்குள் வந்து சேர்ந்துவிடும். உங்களுடைய வருகையினுல் எங்களுக்கு இந்த இலாபம் உண்டாகும்படி எங்கள் மாமியார் இந்தத் தந்திரத்தைச் செய்தார்,' என்று உண்மையை உரைத்தாள்.

20. பணக்காரனுக்கு நேர்ந்த பரிபவம்

கர்வமும் கோபமும் வாய்ந்த பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் தன் மகள் கலியாணத்தைச் சிறப்பாக நடத்த எண்ணினுன். அவனுக்கு ஒரே மகள் இருந்தபடியால், யாதொரு குறைவுமில்லாமல் கலியாணத்தை நடத்த வேண்டும் என்பது அவனுடைய எண்ணம். ஆனுலும், சகல ஏற்பாடுகளையும் தானே செய்ய அவனுக்கு இஷ்டமில்லை. அவ்வாறு செய்தல் தன் அந்தஸ்திற்கு அழகாயிராதென்று

எண்ணி, வேலைக்காரர்கள் மூலமாகவே சகல ஏற்பாடு களையும் செய்ய அவன் தீர்மானித்தான். வேலைக் காரர்களை அவன் அடிக்கடி காலால் உதைத்தும், திட்டியும், அடித்தும், வேலையை விட்டு நீக்கியும் துன்பப்படுத்துவது வழக்கம். ஆகவே, சந்தோஷத் துடன் அவனிடம் ஒருவரும் வேலை செய்ததேயில்லை. பட்டினி கிடக்கவேண்டிய நிலைமை வந்தால், விதியில் லாமல் சிலர் அவனிடம் வேலைக்கு அமருவர். வேலைக் காரர்களை மேற்பார்வை பார்ப்பதற்கும், வரவு செலவுக் கணக்கு எழுதுவதற்கும் ஒரு குமாஸ்தா நியமிக்கப் பட்டிருந்தான். அவனையும் அந்தப் பணக்காரன் கொடுமையாகவே நடத்தி வந்தான். அதிகமாக உதையும் அடியும்பட்டவன் அவனேயென்று சொல்ல லாம். ஏனெனில், அதிகாரியிடம் அடிக்கடி சென்று பேசும் சந்தர்ப்பங்கள் அவனுக்கே அதிகமாய் இருந்து வந்தன. இரண்டு வருஷங்களுள் பதினேழு குமாஸ் தாக்கள் அந்தப் பணக்காரனால் வேலையிலிருந்து நீக்கப் பட்டார்கள். மிகச் சிறிய குற்றம் செய்த போதிலும், அவன் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவது வழக்கம். யார் என்ன உபதேசம் செய்தும் அவன் திருந்தவில்லை.

பதினெட்டாம் குமாஸ்தாவாக நியமிக்கப்பட்ட இராமன் என்பவன், மற்றவர்களைவிடச் சாமர்த்திய சாலியாய் இருந்தான். ஆகவே, அவன் ஆறு மாத காலம் உத்தியோகத்திலிருந்து வந்தான். கலியாணத் திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, பணக்காரன், கணக் கெழுதியதில் காணப்பட்ட தப்பிதத்தைத் திருத்து மாறு இராமனிடம் சொன்னான். இராமன் அதைத் திருத்தினான்; திருத்தியது சரியாய் இல்லையென்று

சொல்லி, அதிகாரி இராமன் மீது காரியுமிழ்ந்து, அவனைத் திட்டினான். இராமனுக்கு அதிகாரியின் மீது கோபம் உண்டாயிற்று. சமயம் வரும்போது பழி தீர்த்துக்கொள்ள இராமன் எண்ணினான். ஆனால், அவன் ஒன்றும் பேசவில்லை. பேசினால், தன் காரியம் கெட்டுவிடும் என்று அவன் நினைத்தான். தன்னை உடனே வேலையை விட்டு அதிகாரி நீக்கிவிடுவானென்பது அவனுக்குத் தெரிந்திருந்ததால், அவன் ஒன்றும் பேசாமல் இருந்தான்.

அந்தக் கொடிய அதிகாரிக்குச் சந்தேகமே தோன்றவில்லை. கலியாணத்திற்கு மூன்று நாள் முன்னதாக அவன் இராமனைக் கூப்பிட்டுப் பின் வருமாறு சொன்னான் :

'என் மகள் கலியாணம் திங்கட்கிழமைக் காலை ஏழு மணிக்கு நடக்கப்போகிறது. நான் கலியாணத்தை மிக்க ஆடம்பரத்துடன் செய்ய உத்தேசித்திருக்கிறேன். நான் சரியாகக் காலை ஏழு மணிக்கு முகூர்த்த சமயத்திலேதான் கலியாணப் பந்தலுக்கு வருவேன். கலியாணத்திற்குரிய சகல வஸ்துக்களையும் நீ தயாராக வைத்திருக்க வேண்டும். மணமகனுக்கும் மணமகளுக்கும் அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையாயிருக்கும் ஒவ்வொரு வஸ்துவும் மணப்பந்தலில் நான் வரும்போது தயாராக வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏதாவது ஒரு வஸ்து குறைவாயிருந்தால், நான் அப்பந்தலிலேயே உன்னைப் பந்தை உதைப்பது போலக் காலால் உதைத்துத் தள்ளிவிடுவேன்! ஆகையால், அதிக ஜாக்கிரதையுடன் உன் வேலையை நீ கவனிக்க வேண்டும்!'

'அப்படியானால், தயவு செய்து உங்களுக்குத் தேவையான வஸ்துக்களின் பட்டி ஒன்று கொடுத்து விடுங்கள்,' என்று இராமன் கேட்டான்.

'என்ன! பட்டியா? நான் உனக்கு எதற்காகக் கொழுத்த சம்பளம் கொடுத்து வருகிறேன்? மடத்தனமாகப் பேசாதே! ஏதாவதொரு வஸ்து மாத்திரம் குறைவாய் இருந்தால், நன்றாக உன்னை நான் உதைத்துவிடுவேனென்பதை மாத்திரம் மறந்து விடாதே!' என்று கோபத்துடன் அதிகாரி சொன்னான்.

இராமன் தலை வணங்கி அவ்விடத்தை விட்டுச் சென்றான். அவனுக்கு ஒரு யுத்தி தோன்றிற்று:

திங்கட்கிழமைக் காலை ஏழு மணிக்கு, பந்துக்கள் கூடியிருந்த கலியாணப் பந்தலுள் பணக்காரன் அதிக சந்தோஷத்துடன் வந்தான்; தவறு ஏற்படின் இராமனுக்கு உதை கொடுக்கலாமென்றும் எண்ணினான். கலியாணப் பந்தலில் இருக்க வேண்டிய கலகலப்பும், குதூகலமும் அங்குக் காணப்படவில்லை. பந்தலில் எங்குப் பார்த்தாலும் சுற்றத்தார் நிரம்பியிருந்தனர். அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை. கவலை குடிகொண்டிருந்தது. எங்கும் நிசப்தமாயிருந்தது.

அவர்கள் குசுகுசுவென்று தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். மணப்பீடத்திற்கு எதிரில், கலியாணப் பந்தலுக்கு மத்தியில், இரண்டு பாடைகள் கட்டப்பட்டுத் தயாராய் வைக்கப்பட்டிருந்தன. முதலில் அவைகளே அந்தப் பணக்கார அதிகாரியின் கண்களில் பட்டன. அவனுக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. மிகுந்த கோபத்துடன்

அவன் இராமனைக் கூப்பிட்டான்; 'துரோகி, இவற்றை யார் இங்கே வைத்தவன்?' என்று கோபத்துடன் கூவினன்.

'உங்களுடைய உத்தரவின்படியே இவை இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. மணமகனுக்கும் மணமகளுக்கும் எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய சகல வஸ்துக்களையும் சேகரித்து மணப் பந்தலில் வைக்கும்படி நீங்கள் உத்தரவிட்டீர்கள்; ஒரு வஸ்து இல்லாமற் போனால் என்னை உதைத்துவிடுவதாகவும் பயமுறுத்தினீர்கள். இந்தப் பாடைகளும் கண்டிப்பாக, ஏதாவதொரு நாள் மணமகனுக்கும் மணமகளுக்கும் தேவையாக இருக்குமென்பதை உத்தேசித்தே எதிர் காலத் தேவைக்காக இவைகளை இங்கே நான் சித்தமாக வைத்திருக்கிறேன்,' என்று இராமன் சொன்னன். அவ்வாறு சொல்லிவிட்டு, இராமன் ஒரே ஓட்டமாக மணப் பந்தலிலிருந்து ஓடிவிட்டான். மணப்பந்தலிலிருந்தவர்கள் இராமன் கூறியதைக் கேட்டு விலாப் புடைக்க நகைத்தார்கள். பணக்காரனுக்குத் தாங்க முடியாத அவமானமேற்பட்டது; அடக்க முடியாத கோபமும் வந்தது. ஆனல், என்ன செய்வது!

21. சாதுரியமான பதில்

முன்னெரு காலத்தில், இந்து தேசத்தைச் சேர்ந்த ராஜ்யங்களுள் ஒன்றில் பிரதம மந்திரி அரசனுடைய வேலைகளையெல்லாம் தானே செய்து வந்தான். அரசாங்கத்தைச் சேர்ந்த கோவிலில் கடவுளைத் துதிக்கும் ஒரே வேலையைத்தான் பிரதம மந்திரி அரசனுக்குக் கொடுத்திருந்தான். மற்ற அரசாங்க அலுவல்களனைத்தையும் அவனே கவனித்து வந்தான். அர

சனே, பெரிய தவ சிரேஷ்டனல்லன். ஆகையால், அரசனுக்குச் சதா கோவிலில் ஜபம் செய்துகொண்டிருக்கும் தொழில் பிடிக்கவில்லை. அதிக செல்வாக்குள்ள பிரதம மந்திரியின் இஷ்டத்திற்கு விரோதமாக நடக்க அரசனால் முடியவில்லை.

ஒரு நாள் அரசன் தனது அரசாங்க மதக் குருவைப் பிரதம மந்திரியிடம் அனுப்பித் தனது விருப்பத்தைத் தெரிவிக்கும்படி கூறினான். பிரதம மந்திரி அரசனுடைய அலுவல்களையெல்லாம் அரசனுக்குக் கொடாமல், தானே கவனித்து வருவது தவறென்று எடுத்துக் கூறும்படி அரசன் மதக்குருவினிடம் சொன்னான். அரசன் அளித்த வெகுமதியைப் பெற்றுக் கொண்டு மதக்குரு பிரதம மந்திரியிடம் சென்றார்.

பிரதம மந்திரி மதக்குருவை வந்தனோபசாரங்களுடன் வரவேற்றான். இருவரும் யோக க்ஷேமங்களை விசாரித்த பிறகு மதக்குரு பிரதம மந்திரியைப் பார்த்து, 'சாஸ்திரங்களை நன்றாகக் கற்றறிந்திருக்கும் உங்களுக்கு நான் என்ன சொல்வதற்கிருக்கிறது! கடவுளைத் துதிக்கும் வேலையொன்றைத் தவிர, மற்ற வேலைகளையெல்லாம் அரசனிடமிருந்து கைப்பற்றிக் கொண்டு நீங்கள் செய்து வருவது நியாயமாகுமா?' என்று கேட்டார்.

'தெய்வத்தன்மை வாய்ந்த பெரியாரே, மனிதர்கள் வேலை முக்கியமானதா, கடவுளின் வேலை முக்கியமானதா? தயவு செய்து பதில் சொல்லுங்கள்,' என்று பிரதம மந்திரி கேட்க, 'சந்தேகமென்ன? தெய்வத்தின் வேலைதான் முக்கியம்,' என்று மதக்குரு எடுத்துச் சொன்னார்.

'அரசன் மேலானவனு, பிரதம மந்திரி மேலானவனு? தயவு செய்து சொல்லுங்கள்; பார்க்கலாம்,' என்று பிரதம மந்திரி கேட்க, 'இதிலென்ன சந்தேகம்? அரசனே மேலானவன்,' என்று சந்தோஷத்துடன் மதக்குரு பதிலளித்தார்.

'அப்படியானல் சரி. உங்கள் உத்தேசப்படியே நானும் நடந்திருக்கிறேன். புண்ணிய புருஷராகிய நீங்கள் குறை கூறுவதற்கிடமில்லையே! முக்கியமானவரும், மேலான அந்தஸ்துடையவருமான அரசரையே, நான் மிகவும் முக்கியமான கடவுளின் அலுவல்களை நேராகக் கவனித்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். அழியும் தன்மையுடைய, ஊழல்கள் நிரம்பிய, சாதாரண அரசாங்க விவகாரங்களினுல் ஏற்படும் தொல்லையிலிருந்து நான் அரசரை விடுவித்து, கடவுளுக்குத் தொண்டு புரியுமாறு செய்திருக்கிறேன். அரசருடைய உண்மைச் சேவகனுகிய நான் மற்றச் சிக்குள்ள சில்லறை விவகாரங்களைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன்,' என்று பிரதம மந்திரி கூறினுன். மதக்குரு, பதிலளிக்க வகையின்றித் திரும்பிச் சென்றுர்.

22. கீழ்ப்படியாமையின் காரணம்

சத்திரத்துச் சாப்பாட்டையே சாப்பிட்டுக் காலம் கழித்து வந்த அப்பு என்பவன், அதிக சோம்பேறியாயிருந்தான். ஒவ்வொரு நாளும் அவனும் அவனுடைய குழந்தைகளும் சத்திரத்திற்குச் சென்று சாப்பிட்டு வருவது வழக்கம். தன்னுடைய குழந்தைகளைப் பற்றிய கவலையே அவனுக்கில்லாமலிருந்தது. அவன் தன் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி

யதே இல்லை. அவர்களைத் தன்னுடன் அவன் சத்தி ரத்திற்குக்கூடக் கூட்டிக்கொண்டு போக மாட்டான். அவன் சத்திரத்திற்குத் தனியே செல்வான். அவனு டைய குழந்தைகள் தனியாகச் செல்வார்கள்.

ஒரு நாள் அவன் தனக்குத் தெரிந்த ஒரு நண் பனைக் கூட்டிக்கொண்டு வரும்படி தன் மூத்த குமாரனை ஏவினான். அந்தப் பையன் அவ்வாறு செய்ய மறுத்தான். 'என்னடா! நான் சொல்லு கிறபடி நடக்க மறுக்கிறாயா!' என்று கோபத்துடன் கூறி, அவன் தன் மகனை அடித்தான். பையன் தன் தகப்பனைத் திருப்பி அடித்தான். 'சத்திரத்துச் சோறு தின்று வீண் காலம் கழிக்கும் பிச்சைக்காரனே! எனக்கு நீ சாப்பாடு போட்டு வஸ்திரம் கொடுத்துக் காப்பாற்றுகிறாயா, என்ன? நான் ஏன் நீ சொன்ன படி கேட்க வேண்டும்?' என்று அந்தப் பையன் சொன்னான்.

தன் மகனுடன் சண்டைசெய்து அவனைத் தோற் கடிக்கும் சக்தி தனக்கில்லையென்பதை நன்றாக அறிந் திருந்த அப்பு, ஒரு வேதாந்தியிடம் சென்று, கண் களில் நீர் பெருக, தன் மகன் தன்னை அவமானப் படுத்தியதைக் கூறி மனவருத்தப்பட்டான்.

வேதாந்தி பின் வருமாறு சமாதானம் கூறினான்:

'நீர் சொல்லியபடி உம் மகன் கேட்காமற் போனது தில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தகப்பன் சொற்படி மகன் கேட்பதற்கும், கணவன் சொற்படி மனைவி கேட்பதற்கும் காரணம் என்னவென்றால், தகப்பன் மகனுக்கு வேண்டியவற்றைக் கொடுத்துக் காப் பாற்றுவதும், கணவன் மனைவிக்கு வேண்டியவைகளை

அளித்து ஆதரிப்பதுமேயல்லவா? மாணுக்கனுக்கு உபாத்தியாயர் சொல்லிக்கொடுக்கும் கல்வியல்லவா, மாணுக்கனைக் கீழ்ப்படிந்து நடக்கும்படி செய்கிறது? தேசத்திற்கும், சமூகத்திற்கும் சேவை செய்து தியாக புத்தியைக் காட்டுபவர்களையே சாதாரண மனிதர்கள் தலைவராகக் கருதி அவர்கள் சொற்படி கேட்கின்றுர்கள். நீர் உம் மகனுக்கு அன்னமளித்துக் காப்பாற்றுகிறீரா என்ன! அவனுக்குக் கல்வி கற்பிக்கிறீரா என்ன! நீர் உமது தேசத்தின் நன்மைக்காவது, ஜன சமூகத்தின் முன்னேற்றத்திற்காவது பாடுபடுகிறீரா? ஆதலால், உம் மகன் நீர் சொல்வதை ஏன் கேட்க வேண்டும்? மகன் உமக்குப் பிறந்த தோஷம் தவிர, வேறொன்றும் இதில் சொல்லுவதற்கில்லை; போய்ச் சேரும்!'

23. சந்தேகம் நீங்குதல்

ஒரு மனிதன் இறந்த பிறகு, பன்னிரண்டாவது தினத்தில், **சபிண்டி** என்னும் ஒரு கிரியை செய்வது வழக்கம். இவ்வழக்கத்தைத் தென்னிந்திய பிராமணர் அனுசரித்து வருகின்றனர். கேவலமான நிலைமையிலுள்ள பிராமணர்களுக்கு அத்தினத்தில் வயிருரப் பக்ஷண பலகாரங்களுடன் சாப்பாடு போடுவது வழக்கம். இறந்து போன மனிதனுடைய பிரேதத்திற்குப் பதிலாக அவர்கள் சாப்பிடுகிருர்கள் என்பது கருத்து. ஆகையால், அவர்களைப் பிரேதங்களின் பிரதிநிதிகள் என்றே சொல்லலாம். அவர்களைச் சாதாரணமாகச் **'சபிண்டிக் கொத்தர்கள்'** என்று கூறுவது வழக்கம். அவர்கள் ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொண்டு, தங்களுடைய வருமானத்தையெல்

லாம் சேர்த்து வைத்துவிடுகின்றார்கள். சபிண்டி சாப்பிடுபவர்களுக்கிருக்கும் பேராசைக்கு அளவே இல்லை. மூட நம்பிக்கையுள்ள மக்களை அவர்கள் பிடுங்கித் தின்றுவிடுவார்கள். சபிண்டி சாப்பிடுபவர்கள் திருப்தியுடன் சாப்பிட்டுவிட்டு, 'நான் திருப்தி அடைந்தேன்! நீ கவலையற்று வாழ்வாயாக!' என்று சொல்ல வேண்டும். திரும்பிப் போகும்போது ஒரு பலகை, ஒரு கைப்பிரம்பு, ஒரு ஜதைப் பாதக்குறடு, ஒரு குடை, பிரேதத்திற்கு வேண்டிய அரிசி, காய்கறி முதலிய வஸ்துக்களை அவர்கள் எடுத்துச்செல்லவேண்டும். இல்லையேல், அந்த வீட்டை விட்டு இறந்து போன மனிதனுடைய பிரேதம் போகாதென்றும், அந்த வீட்டைச் சுற்றித் திரிந்துகொண்டிருக்குமென்றும், அந்த வீட்டிலிருப்பவர்களுக்கு எப்போதும் தொந்தரவு கொடுத்துக்கொண்டேயிருக்குமென்றும் அனைவரும் நம்பியிருந்தனர். கிரியைகளைச் செய்யும் மனிதனுடைய அந்தஸ்திற்குத் தகுந்தபடி அவர்கள் தங்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் கேட்பார்கள். பழைய காலத்தில் அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதுகூட வெட்கம் மானம் இல்லாமல் தங்களுக்குச் சேரவேண்டிய தொகையை உயர்த்திக் கொண்டே போய், கடைசியில், 'நாங்கள் திருப்தியடைந்தோம்! நீ கவலையற்றிருப்பாயாக!' என்று சொல்வதற்கு முன் எவ்வளவு அதிகப்படுத்தக் கூடுமோ, அவ்வளவு அதிகப்படுத்திக் கேட்பார்களென்று சொல்வதுண்டு.

ஒரு சிறிய கிராமத்தில் **கங்காதரன்** என்னும் பெயருடைய ஒரு பணக்காரன் இருந்தான். அவனுக்குக் கடன் அதிகமாயிருந்தது. அவன் தாய் இறந்து

போகவே, சபிண்டிக் கொத்தர்களிடம் பேசி அவர்களுக்கு ஐம்பது ரூபாய் கொடுப்பதாக ஏற்பாடுசெய்து கொண்டான். அந்த ஐம்பது ரூபாயே அதிகமென்று சொல்லவேண்டும். சபிண்டிக் கொத்தருள் ஒருவன் அவன் தாயையும், மற்றொருவன் அவனுடைய பிதுர்க்களையும் குறிப்பிடுபவர்களாகக் கருதப்பட்டுப் பன்னிரண்டாவது நாள் அவர்களுக்கு அறுசுவை உண்டி படைக்கப்பட்டது. நெய்யும் தயிரும் பெரிய பாத்திரங்களில் வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் அதிக நெய் சாப்பிடுவது வழக்கம். முப்பது வருஷகாலம் சபிண்டி சாப்பிட்டு வந்த ஒருவன், தான் இறந்த பிறகு நெய்யிலேயே ஊறியிருக்கும் தன் பிரேதத்தைக் கொளுத்த விறகு அவசியமில்லையென்றும் ஒரு நெருப்புக் குச்சியைப் பற்றவைத்துப் பிரேதத்திற்கு வைத்துவிடுவது போதுமென்றும் சொல்வது வழக்கமாம். ஏனெனில், அவன் உடம்பில் முப்பது வருஷங்கள் ஊறியிருக்கும் நெய்யே அவனை எரிக்கப் போதுமானதென்று அவனே சொல்லிக்கொள்வானும்.

நமது கதையை மேலே கவனிப்போம்; பரிமாறி வைக்கப்பட்ட சாப்பாட்டைத் தொடுவதற்கு முன்பு அவர்கள் தங்களுக்கு நூறு ரூபாய் வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் அவ்வாறு தொகையை அதிகப்படுத்திக் கேட்பது வழக்கமென்பதை அறிந்திருந்த கங்காதரன், வேண்டா வெறுப்புடன் அவர்கள் விருப்பப்படி கொடுப்பதாகச் சொன்னான். சபிண்டிக் கொத்தர்கள் கொஞ்சம் சாப்பிட்ட பிறகு நெய்யைச் சாப்பிடத் தங்களுக்கு நூற்றைம்பது ரூபாய் கொடுத்தே தீர வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். தன்னால் கொடுக்க முடியா

தென்று சொல்லிக் கங்காதரன் அழுதான்; அவர்களுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினன்; எப்படியாவது கஷ்டப்பட்டுத் தான் நூறு ரூபாய் கொடுத்துவிடுவதாகவும், அதைப் பெற்றுக்கொண்டு திருப்தியடைய வேண்டுமென்றும் கங்காதரன் அவர்களை வேண்டிக்கொண்டான். அவர்களோ, அவன் வேண்டுகோளுக்கிசையவில்லை. அவர்கள் திருப்தியடையாமற்போனல், இறந்து போனவரின் பிசாசு வீட்டை விட்டுப் போகாதென்பதில் நம்பிக்கை கொண்டிருந்த கங்காதரன், முடிவில் வேறு வழியின்றி, அவர்கள் கேட்ட தொகையைக் கொடுப்பதாகச் சொன்னன்.

தித்திப்புப் பக்ஷணங்களைத் தின்ன வேண்டிய சமயம் வந்த போது, பின்னும் ஐம்பது ரூபாய் கொடுத்தே தீரவேண்டுமென்று சபிண்டிக் கொத்தர் கேட்டனர். கங்காதரன் மறுபடியும் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்; தன்னிடம் பணம் இல்லை என்றும் தன்னல் கொடுக்க முடியாதென்றும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். 'இப்பொழுதே இருநூறு ரூபாய் கொடுக்கிறேனென்று சொல். அல்லாவிடில், சாப்பிடாமல் இப்பொழுதே எழுந்து போய்விடுவோம்!' என்று சபிண்டிக் கொத்தர்கள் சொல்லிப் பயமுறுத்தினர்கள். அவர்கள் முழுவதையும் சாப்பிட்டே தீரவேண்டும். அல்லாவிடில், பிசாசு வீட்டை விட்டு நீங்காது. கங்காதரனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவன் மனக்கிலேசமடைந்தான். தன் தாய் அதிக செட்டாகக் குடித்தனம் செய்து வந்தது அவனுக்குத் தெரியும். அவள் பிசாசு ஒரு போதும் அதிகச் செலவு செய்வதற்கு இஷ்டப்

படாதென்பதும் கங்காதரனுக்குத் தெரியும். விறகு வாங்குவதனுல் செலவு அதிகமாகுமென்று கருதி, மாட்டின் சாணத்திலுல் வறட்டி தட்டி அடுப் பெரித்து வந்த தன் தாய் ஒரு போதும் வீண் செலவு செய்வதற்கு இசைய மாட்டாளென்பதைக் கங்கா தரன் அச்சமயம் நினைத்துக்கொண்டான். தன் தாயின் பிசாசு தன் வீட்டைச் சுற்றித் திரிவதனுல் தனது குடும்பத்திற்கு யாதொரு கெடுதலும் நேரிடா தென்பதையும் அவன் அறிந்திருந்தான். திருடர்கள் வீட்டிற்கருகில் வாராதபடி அந்தப் பிசாசு காத்துக் கொள்ளும். ஆனல், கங்காதரனுக்குத் தன் தாயிடம் மிகுந்த பிரியம் இருந்தது. தன் தாய் மன அமைதி யுடனிருக்க வேண்டுமென்றும் அவன் எண்ணினுன். தன் தாயின் பிசாசு அலைந்து திரியாமல் சௌக்கிய மாய் இருக்க வேண்டுமென்பதும் அவன் விருப்பம். இராக் காலங்களில் ஓரிடத்தில் தங்கியிராமல், அங்கும் இங்கும் தன் தாயின் பிசாசு அலைந்து திரியும்படிவிட அவனுக்கு மனம் வரவில்லை. அவன், சிறிது ஆலோசித் துப் பார்த்தான். பிறகு ஒருவாறு தன் மனத்தைத் தேற்றிக்கொண்டு, அவர்கள் கேட்ட பெரிய தொகை யைக் கொடுக்க ஒப்புக்கொண்டான்.

சபிண்டிக் கொத்தர்கள் சந்தோஷத்துடன் தித் திப்புப் பக்ஷணங்களைச் சாப்பிட்டார்கள். தயிர் குடிக்க வேண்டிய சமயம் வந்த போது, நூறு ரூபாய் கொடுத்தே தீரவேண்டுமென்று அவர்கள் பிடிவாதம் செய்தார்கள். கங்காதரன் வெளியே சென்று மறு படியும் உள்ளே வந்தான் ; அவர்கள் இஷ்டப்படியே கொடுப்பதாகச் சொன்னுன். அவன் அதிக சந்தோ ஷத்துடனிருந்தான். அதைக் கண்ட சபிண்டிக்

கொத்தர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், அதைக் குறித்து அவர்கள் கவலை கொள்ளவில்லை.

சாப்பிட்ட பிறகு மிகவும் முக்கியமான வார்த்தைகளைச் சொல்ல, அவர்கள் நூறு ரூபாய் வேண்டுமென்று கேட்டார்கள். கங்காதரன் உடனே கொடுப்பதாகச் சொன்னான். சபிண்டிக் கொத்தர்களுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. கங்காதரன் பணத்தைக் கொண்டு வந்து, எண்ணி, அவர்கள் கையில் கொடுத்தான். 'இன்னும் நூறு ரூபாய் சேர்த்துச் சரியாக ஐந்நூறு ரூபாய் கொடுத்துவிடு,' என்று சபிண்டிக் கொத்தர்கள் சொன்னார்கள். ஒன்றும் பேசாமல், நூறு ரூபாயையும் கங்காதரன் கொடுத்துவிட்டான். சபிண்டிக் கொத்தர்கள் திருப்தியடைந்தார்கள். ஐந்நூறு ரூபாயையும் வாங்கிப் பத்திரமாக வைத்துக் கொண்டு, 'நாங்கள் திருப்தியடைந்தோம்! இனிமேல் கவலையில்லாமல் நீ சௌக்கியமாக வாழ்வாயாக!' என்று அவர்கள் ஆசிர்வதித்தார்கள். பிறகு பலகைகள், பாதக் குறடுகள், கைத்தடிகள், குடைகள், காய் கறி முதலியவைகளை எடுத்துக்கொண்டு, அந்தச் சபிண்டிக் கொத்தர் எமலோகம் இருக்கும் தென் திசையை நோக்கிச் சென்றனர்.

தெருவில் ஜன நடமாட்டமில்லாதிருந்தது. அக்கம் பக்க வீட்டுக் குழந்தைகள் அவர்களைப் பார்த்தால் கெடுதல் சம்பவிக்குமென்று நினைத்து, குழந்தைகளைப் பெற்றோர் தம் வீடுகளில் பத்திரமாக வைத்துக்கொண்டிருந்தனர். சபிண்டிக் கொத்தர்கள் வெளியே வந்ததும், கிராம வாசிகளுள் ஒருவன், உரத்த குரலில், 'சபிண்டிக் கொத்தர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்,' என்று கத்தினான். உடனே கிராம வாசிகள் மறைந்து

கொண்டார்கள். 'என்ன அசட்டுத்தனம்! நன்றாகச் சாப்பிடுவதற்கு நமக்கு இவர்கள் ஐந்நூறு ரூபாய் கொடுக்கத் தயாராயிருக்கின்றார்கள். ஆனால், இவர்கள் நம்முடன் உட்கார்ந்து சாப்பிடமாட்டார்கள்; நம்மைப் பார்க்கவும் மாட்டார்கள். இதனால், நமக்கென்ன நஷ்டம்? எனக்கு ஐம்பது ரூபாயில் முப்பத்திரண்டில் ஒரு பாகமும் நானூற்றைம்பது ரூபாயில் நாலில் ஒரு பங்கும் கிடைக்கும். நியாயப்படி நமக்குப் பாதி கிடைக்க வேண்டுமல்லவா? என்னுடைய தாசி, **நாணி**, நாற்றுப்பதினைன்கு ரூபாயையும் ஓர் அணாவையும் கண்டு ஆனந்தப்படமாட்டாளா? இனிமேல் அவள் என்னைத் தவிர வேறு ஒருவரையும் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கமாட்டாள். ஆனால், ஏன் கங்காதரன் மாத்திரம் கடைசியில் தங்கு தடையில்லாமல் நாம் கேட்டதைக் கொடுத்துவிட்டானென்பது தெரியவில்லை. ஒரு வேளை வேறு வழியில்லையென்று கண்டுகொண்டு கொடுத்துவிட்டானோ என்னவோ! ஐயோ! பாவம்! மூட நம்பிக்கை கொண்டிருந்த கங்காதரன், அநியாயமாக ஐந்நூறு ரூபாய், பூமியை அடைமானம் வைத்துக் கடன் வாங்கி, நமக்குக் கொடுக்க வேண்டி வந்தது. சரி, நமக்கு வருமானம் கிடைப்பதே போதும். கடன் வாங்கிக் கஷ்டப்படும் கங்காதரனைக் குறித்து நாம் ஏன் வருத்தப்பட வேண்டும்?' என்று ஒருவன் மற்றொரு சபிண்டிக் கொத்தனிடம் சொன்னான். மற்றொருவனும் அந்தச் சபிண்டிக் கொத்தன் கூறிய வார்த்தைகள் உண்மையென்று ஆமோதித்தான்.

இவ்வாறு பேசிக்கொண்டே, அவர்கள் கிராமத்தின் எல்லையைத் தாண்டி, மனித சஞ்சாரமற்ற

வெட்ட வெளியை அடைந்தார்கள். திடீரென்று நான்கு முகம்மதியர் அவர்களைத் தாக்கி, அவர்களிட மிருந்த ஐந்நூறு ரூபாயையும் பிடுங்கிக்கொண்டனர். 'திருடர்கள்! திருடர்கள்!' என்று சபிண்டிக் கொத்தர் உரக்கக் கூவினர். 'நாங்கள் திருடர்களல்ல. வெட்கம் மானமில்லாமல் கங்காதரனிடமிருந்து பேராசையுடன் நீங்கள் பிடுங்கிக்கொண்ட ஐந்நூறு ரூபாயை அடித்துப் பிடுங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட கங்காதரனுடைய ஆட்களே நாங்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்,' என்று அவர்கள் தலைவன் பதிலளித்தான்.

'கங்காதரனா உன்னை அனுப்பினன்!' என்று திடுக்கிட்டுச் சபிண்டிக்கொத்தர் கேட்டனர்.

'ஆம்; கங்காதரன்தான் எங்களை அனுப்பினன். நீங்கள் இருநூறு ரூபாய் கேட்ட வரையில் உங்களுக்கு எப்படியாவது கஷ்டப்பட்டுக் கொடுத்துவிடக் கங்காதரன் எண்ணினன். அதனல், அவன் மனம் வருந்தி உங்கள் இஷ்டப்படி செய்ய ஒப்புக்கொண்டான். பேராசை பிடித்த நீங்கள் முந்நூறு ரூபாய் கேட்க ஆரம்பிக்கவே, உங்களிடம் அவனுக்குத் துவேஷம் பிறந்து, எங்களுக்குத் தலைக்கு இரண்டரை ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி, ஏற்பாடு செய்தான். இந்த ஏற்பாட்டின்படி கங்காதரனுக்கு நானூற்றுத் தொண்ணூறு ரூபாய் இலாபம் உண்டாகிறது,' என்று தலைவன் சொன்னன்.

'ஆனல், அவனுடைய தாய்ப் பிசாசு அவன் வீட்டை விட்டுச் செல்லாமல் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்குமே!' என்று தாயின் ஸ்தானத்தை வகித்த சபிண்டிக்கொத்தன் சொன்னன்.

'அவன் தாய்ப் பிசாசு, நீங்கள் 'திருப்தி அடைந்தோம்,' என்று சொன்ன போதே போய்விட்டதல்லவா ? நீதான் அந்தப் பிசாசு. மறுபடியும் கங்காதரனுடைய வீட்டிற்குள் நீ அடியெடுத்து வைத்தாயானால், உன் எலும்புகளை முறித்துவிடுவேன் ; ஜாக்கிரதை !' என்று சொல்லித் தலைவன் பயமுறுத்தினான்.

'நாங்கள் இனிமேல் அந்த வீட்டுப்பக்கம் போகவே மாட்டோம்! எங்களை ஒன்றும் செய்யாமல் விட்டு விடுங்கள் !' என்று சபிண்டிக்கொத்தர்கள் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு, தங்களிடமிருந்தவைகளையெல்லாம் அவ்விடத்திலேயே எறிந்துவிட்டார்கள்.

'பலகைகள், கைத்தடிகள், பாதக் குறடுகள், குடைகள், பதார்த்தங்கள் முதலியவைகளை உடனே எடுத்துச் செல்லுங்கள். இறந்து போன தாயின் ஆன்மா திருப்தியடையட்டும். இல்லையேல், உங்களை இவ்விடத்திலேயே குழி வெட்டிப் புதைத்துவிடுவோம்,' என்று தலைவன் பயமுறுத்த, சபிண்டிக் கொத்தர்கள் அவைகளை எடுத்துக்கொண்டார்கள்.

'இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் எவரிடமேனும் சொன்னால், உங்கள் உயிரை வாங்கிவிடுவோம்! ஜாக்கிரதை ! நீங்கள் இறந்த பிறகு உங்கள் பிசாசுகள் திருப்தியடையச் சபிண்டி சாப்பிட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய நீங்கள் சித்தமாயிருக்க வேண்டி நேரிடும்,' என்று தலைவன் எச்சரிக்கை செய்தான்.

'நாங்கள் இதைக் குறித்து மூச்சுக்கூட விடுவதில்லை,' என்று சொல்லிச் சபிண்டிக்கொத்தர்கள் கங்காதரன் கவலையற்றிருந்ததன் காரணத்தை அப்பொழுதுதான் அறிந்துகொண்டார்கள்.

24. பகுத்தறிவுள்ள சோம்பேறி

ஒரு காலத்தில் புத்திசாலித்தனமும் பலமும் நிறைந்த ஒரு பிராமணன் இருந்தான். திட சரீரத்தைப் பெற்றிருந்தும், அவன் வேலையே செய்யாமல், சத்திரம் சத்திரமாகச்சென்று சாப்பிட்டுத் தன் காலத்தைக் கழித்து வந்தான். தருமாத்துமாக்கள் விருந்து படைத்தால் அவன் நன்ருகச் சாப்பிடுவது வழக்கம்.

ஒரு பெரிய கம்பெனியின் முதலாளர், ஒரு நாள் அவனைப் பார்த்து, 'நீ ஏன் இப்படி வீண் பொழுது போக்கிக்கொண்டு சோம்பேறியாய்த் திரிகின்ருய்? ஏதாவது தொழில் செய்யக் கூடாதா?' என்று கேட்டார். அந்தப் பிராமணன் பின் வருமாறு பதிலளித்தான்;

'நான் ஏன் கஷ்டப்பட வேண்டும்? எனக்குப் பெண்டாட்டியுமில்லை; பிள்ளையுமில்லை. கலியாணம் செய்துகொண்டால் ஓரிடத்திலேயே இருந்து கஷ்டப்பட வேண்டி வருமேயென்று நினைத்துத்தான், நான் கலியாணமே செய்துகொள்ளாமலிருந்துவிட்டேன். 'கலியாணம் கால் கட்டு,' என்று பெரியோர் தெரியாமலா சொல்லியிருக்கின்றனர்? 'குழந்தை பிறந்தால், பெற்ரோர்க்கு வாயடைத்துப் போகும்,' என்று முதியவர் மொழிந்தது உண்மையல்லவா? என்னுடைய முன் ஜாக்கிரதையினுல் நான் மகத்தான கஷ்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டேன். நான் இது வரையில் கஷ்டப்பட்டு வேலை செய்ததே இல்லை; ஒருவேளை கூடத் தவருமல் நன்ருகச் சாப்பிட்டு வருகிறேன். நான் அதிர்ஷ்டசாலியென்று பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன். யோசித்துப் பார்க்கும்போது பசி

தீர உண்பதற்காகவல்லவா ஒருவன் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருக்கிறது? தன்னையும் தன் மனைவி மக்களையும் காப்பாற்றவே ஒருவன் பாடுபட வேண்டியிருக்கிறதென்பதில் சந்தேகமென்ன இருக்கிறது? உற்றார், உறவினர், பெண்டு பிள்ளைகளுள் ஒருவருமில்லாத என்னையோ, பொது மக்கள் காப்பாற்றுகின்றார்கள். ஆதலால், நான் ஏன் கவலைப்பட வேண்டும்?'

'தொழில் தெய்வத் தன்மை வாய்ந்தது. கஷ்டப்பட்டு உழைப்பதனால் கண்ணியமும் கௌரவமும் ஏற்படுகின்றன அல்லவா?' என்று செல்வர் குறுக்கிட்டுச் சொன்னார்.

'எனதன்புள்ள சிநேகிதரே, வேலை செய்வதனால் கௌரவம் ஏற்படுகிறதென்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. உழைப்பில் மனிதத்தன்மையும் மிருகத்தன்மையுந்தான் காணப்படுகின்றன. குப்பை எடுத்துச் செல்லும் தோட்டி செய்யும் தொழிலில் தெய்வத் தன்மையாவது கௌரவமாவது இருக்கின்றதா? மற்வர்கள் அவ்வாறு நினைத்தாலும் அந்தத் தோட்டிக்கு அவ்வாறு தோன்றுமா? வயிற்றுப் பிழைப்புக்காக ஒருவன் செய்யும் தொழிலில் கௌரவமாவது, சந்தோஷமாவது இல்லையென்று நான் கண்டிப்பாகச் சொல்கிறேன். ஆசை பிடித்த பங்குக்காரர்களின் திரவியத்தையும் உதவியற்ற ஏழைத் தொழிலாளிகளின் பணத்தையும் கைப்பற்றிக்கொள்ளும் கம்பெனி முதலாளிகளின் தொழிலில் மாத்திரம் மரியாதையும் பெருந்தன்மையும் இலாபமும் இருக்கின்றனவென்று நான் எண்ணுகிறேன். அதே மாதிரியாகக் கேட்காமலிருப்பவர்களிடம் தாமாகவே சென்று சிலர் ஹிதோப

தேசம் செய்கின்றனர். அத்தகையவர் பரோபகார மாகச் செய்யும் காரியம் தெய்வத் தன்மை வாய்ந்த தென்றும், பெருந்தன்மையுடையதென்றும் எண்ணக் கூடும்,' என்று அந்தப் பிராமணன் சூட்டோடு சூடாக எடுத்துரைத்தான்.

'அஃதிருக்கட்டும்; நீ ஏன் உன் காலத்தை வீணைக் கழிக்க வேண்டும்? இந்த மாதிரி ஒருவருக் கும் பிரயோஜனமில்லாமல் வாழ்வதில் என்ன சுக மிருக்கிறது?' என்று கம்பெனி முதலாளர் உபதேசம் செய்யத் தொடங்கினர்.

'பிரயோஜனம் இருக்கிறதா இல்லையா என்று எப்படிச் சொல்வது? அநேக பாபாத்துமாக்கள் புண் ணியமடையும்படி செய்பவன் உபகாரியா அல்லவா என்பதைத் தயவு செய்து சொல்லுங்கள் பார்க்க லாம்!' என்று பிராமணன் கேட்டான்.

'நீ சொல்வது போலப் பாபாத்துமாக்களுக்கு உப காரம் செய்பவனைப் பரோபகாரி என்றுதான் கருத வேண்டும். துரதிர்ஷ்டசாலிகளுக்கும் ஏழைகளுக் கும் உதவி செய்பவனை மகாத்துமாவென்றே நினைக்க வேண்டும். இவ்வுலக வாழ்க்கையைச் சுகம் பெறச் செய்பவர்களுக்கே 'கோடி புண்ணியமுண்டென்று சொல்லும்போது, பாபாத்துமாக்கள் முத்தியடைந்து சுவர்க்க லோகத்தை அடையும்படி செய்பவர்களைக் குறித்துச் சொல்லவும் வேண்டுமா? அவர்களுக்கு அனந்தகோடி புண்ணியமுண்டென்பதில் சந்தேகமே இல்லை,' என்று முதலாளர் தம்முடைய மரியாதை யைக் காப்பாற்றிக்கொள்ள, எடுத்துச் சொன்னர்.

'அப்படியானால் என்னைப்போல மனித சமூகத் திற்கே பேருதவி செய்தவர் இருப்பதரிது. பரோப

காரிகளுள் நான் சிறந்தவனென்பதில் சந்தேகமே இல்லை. பாபாத்துமாக்களினுல் அளிக்கப்படும் தான தருமங்களைப் பெற்று நான் ஆயிரக்கணக்கான பாபாத்துமாக்கள் சுவர்க்கலோகம் செல்லும்படி உதவி செய்திருக்கிறேன்!' என்று சிரித்துக்கொண்டே அந்தப் பிராமணன் சொன்னுன்.

25. புது மாதிரி மணியார்டர்

கிருஷ்ணய்ய சாஸ்திரியார் என்பவர் சாஸ்திரோக்தமாக நடந்து வந்த ஒரு சம்ஸ்கிருத வித்துவான். ஒரு பெரிய உயர்தரக் கலாசாலையில் அவர் சம்ஸ்கிருத பண்டிதராய் இருந்தார். ஆங்கில பாஷையிலும் சிறிது திறமை அவருக்கிருந்தது. அதனுல், பண்டைக் காலத்துப் பழக்க வழக்கங்களையும் ஆசாரங்களையும், இக்காலத்துவழக்கங்களைக்கொண்டே நியாயமானவை என்று எடுத்துச் சொல்வதில் அவருக்கு அதிக விருப்பமுண்டு. உதாரணங்களையும், உவமான உவமேயங்களையுமே அவர் அதிகமாகக் கையாளுவது வழக்கம்.

ஹிந்து சாஸ்திரங்களில் அதிக நம்பிக்கையில்லாத ஒருவன், பண்டிதரிடம் ஒரு சந்தேகம் கேட்டான்: 'தேவதைகளுக்கும், இறந்து போனவர்களுக்கும், இவ்வுலகில் நெருப்பில் விடப்படும் நெய் எவ்வாறுபோய்ச் சேருகிறது?' என்று அவன் பண்டிதரைக் கேட்டான். அதைப் பண்டிதர் எவ்வாறு நம்புகிருர் என்றும் அவன் கேட்டான்.

அப்போதே பதிலளிக்கப் பண்டிதரால் முடியவில்லை. சாஸ்திரோக்தமான அந்த வழக்கத்திற்குத் தகுந்த சமாதானம் மூன்று தினங்களுள் சொல்வதாக சம்ஸ்கிருத பண்டிதர் அவனிடம் சொல்லியனுப்பிவிட்

டார். கவலை தேங்கிய முகத்துடன் அவர் அன்று தம் வீடு திரும்பினார். அவர் மனத்தில் பெரிய குழப்ப மேற்பட்டிருந்தது. அன்றிரவு அவர் நன்றாகச் சாப் பிடவில்லை. ஒரு செம்பு நிறைய இருந்த நெய்யை அவர் அன்று நெருப்பில் விட்டுவிட்டார். வயது முதிர்ந்த குழந்தைகள் மாத்திரம் இராமல் போயிருந் தால், அன்றைய தினம் அவ்வளவு நெய்யை நெருப் பில் கொட்டியதற்கு அவர் மனைவி அவரை இலேசில் விட்டிருக்கமாட்டாள். அன்றிரவு பண்டிதருக்குத் தூக்கமே பிடிக்கவில்லை; தம் மனத்தில் ஏதோ ஆலோ சித்துக்கொண்டேயிருந்தார். அநியாயமாகக் குடும்ப விசாரங்களைத் தெரியாமல் அவ்வளவு நெய்யைக் கண் மூடித்தனமாக நெருப்பில் கொட்டிவிட்டதைக் குறித்து அவர் மனைவி, அன்றிரவு அவரைப் பலவாறு தொந்தரவு செய்துகொண்டிருந்தாள்.

'இன்னும் பதினைந்து நாட்களுக்குக் குழந்தை களுக்கு நன்றாக நான் அந்த நெய்யை வார்த்திருப் பேனே! ஆனால், குழந்தைகள் எப்படிப் போனா லென்ன? உங்களுக்கு என்ன கவலை? உங்களுக்குக் கஷ்டம் தெரிந்திருந்தால், நெய்யை அப்படியே கொட்டிவிடுவீர்களா?' என்று அவர் மனைவி ஏதேதோ பிதற்றிக்கொண்டேயிருந்தாள்.

பண்டிதரோ, தீர்க்காலோசனையில் மூழ்கியிருந் தார். அவர் மனைவியோ, வாய்க்கு வந்தபடி பிதற்றிக் கொண்டிருந்தாள். அர்த்த ஜாமமான பிறகும், அவள் வாயை மூடியபாடில்லை. 'அடுத்த மாதம் என்னுடைய புடைவைக்காக இருபத்தைந்து ரூபாய் மணியார்டர் செய்யவேண்டும். நீங்கள் இந்த மாதிரி காசைக் கரியாக்கிக்கொண்டிருந்தால், நாம் எப்படிப் பணம்

அனுப்பப் போகிறோம்?' என்று பண்டிதர் மனைவி சொன்னாள்.

கிருஷ்ணய்ய சாஸ்திரியார் படுக்கையை விட்டுத் திடீரெனக் குதித்தெழுந்தார். தம் மனைவி ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே பைத்தியம் பிடித்தவர் போல, அவர் வீட்டை விட்டு வெளியே ஓடினார். தன் கணவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்றே அவள் தீர்மானித்துவிட்டாள். இல்லையேல், எவனாவது ஒரு செம்புநெய்யையும் திடீரென்று நெருப்பில் கொட்டுவானா? தன் ஏழு குழந்தைகளையும் தன்னையும் தவிக்க விட்டுத் தன் கணவர் தற்கொலை செய்துகொள்வதற்காகவே வீட்டை விட்டு ஓடியதாக அவள் நினைத்தாள். வயதில் பெரிய குழந்தைகளைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு அவள் தன் கணவரைக் கண்டு பிடிக்க ஓடினாள்.

சந்தேகம் கேட்ட அந்த மனிதன் வீட்டிற்குப் பண்டிதர் சென்று, தாளிடப்பட்டிருந்த கதவைப் பலமாகத் தட்டினார். அந்த மனிதன் திருடர்கள் வந்துவிட்டார்களோ என்னவோவென்று நினைத்துக் கதவண்டை வந்து, 'யார் கதவைத் தட்டுகிறது?' என்று நடுக்கத்துடன் கேட்டான்.

'நான்தான், கிருஷ்ணய்ய சாஸ்திரி; உடனே கதவைத் திற,' என்று பண்டிதர் கதவிற்கு வெளியேயிருந்து சொன்னார். அவன் கதவைத் திறந்து, 'ஏன்? என்ன விசேஷம்?' என்று கேட்டான்.

'நீ தபாலாபீஸ் மூலம் ஒருவருக்கு மணியார்டரில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணம், நீ கொடுத்திருக்கும் விலாசத்திற்கு எப்படிப் போய்ச் சேருகிறது? நீ

கொடுக்கும் பணத்தை இவ்விடத்திலேயே வைத்துக் கொண்டு அதற்கு ஈடான பணத்தை அந்த ஊரில் கொடுத்துவிடுகிறார்களல்லவா? நீ அனுப்புவது தந்தி மணியார்டர் என்று வைத்துக்கொள். அப்போது விஷயம் உனக்கு நன்றாக விளங்கும். அதே மாதிரியாக அக்கினி பகவான், நாம் இவ்வுலகில் அவருக்கு அளிக்கும் நெய்யைத் தம்மிடம் வைத்துக்கொள்கிறார்; பிறகு நாம் கோரும் தெய்வங்களுக்கும், இறந்து போனவர்களுக்கும் நிறையிலும் மணத்திலும் சிறிதேனும் வித்தியாசமில்லாத நெய்யை அளித்துவிடுகிறார்,' என்று சொல்லிவிட்டு ஆச்சரியத்துடன் வாயைப் பிளந்துகொண்டு கேட்டுக்கொண்டிருந்த அந்த மனிதனை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு, கிருஷ்ணய்ய சாஸ்திரியார் வெற்றியுடன் வீடு திரும்பினார். போகும் வழியில் அழுதுகொண்டே தம்மைத் தேடிவரும் தம் மனைவியையும் மக்களையும் அவர் கண்டார்.

'நீங்கள் தற்கொலை செய்துகொள்ள வீட்டை விட்டு ஓடிப்போய்விட்டீர்கள் என்று நாங்கள் நினைத்தோம்,' என்று அவர் மனைவி பண்டிதரிடம் சொன்னாள்.

'என்ன! மஹா பாபகரமான அச்செய்கையை நானா செய்பவன்? என்ன அசட்டுத்தனம்! சந்தேகப் பேயாகிய அந்த மனிதனுடைய சந்தேகத்தைத் தீர்த்து வைக்க நான் இப்போது சென்றேன். இப்போது அவனுடைய வாயை என்னுடைய சாமர்த்தியத்தினால் அடக்கிவிட்டேன். என் கண்ணே, அவனுடைய சந்தேகத்தைப் போக்கத் தகுந்த நியாயத்தை நீயே எனக்குச் சமயத்தில் எடுத்துக் கூறினாய்! மணியார்டர் என்று நீ கூறிய வார்த்தை, தெய்வ சங்கற்பத்தி

ஞலேதான் அச்சமயம் உன் வாயிலிருந்து வந்திருக்க வேண்டும்,' என்று சொல்லிக்கொண்டே, நன்றியறித லுக்கடையாளமாகச் சாஸ்திரியார் தம் குழந்தைக ளிருப்பதையும் மறந்தவராய்த் தம் மனைவியை இறு கத் தழுவி முத்தமிட்டார்.

26. படிப்படியாக மனமாறுதல்
[வேதாந்திகளின் தர்க்கம் - I]

சில வருஷங்களுக்கு முன் தீண்டாமை, திட்டு, திருஷ்டி தோஷம் முதலியவைகளை ஒழிப்பதற்கான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பலர் கூட்டம் கூடிப் பெரிய கிளர்ச்சி செய்தனர். உயர்ந்த ஜாதியார் தாழ்ந்த ஜாதியாரைத் தொடக்கூடாதென்றும், சில ஜாதியார் அருகில் செல்லக்கூடாதென்றும், சில ஜாதி யாரைக் கண்ணுல் பார்க்கவும் கூடாதென்றும் கட்டுப் பாடுகள் இருந்து வந்தன. அத்தகைய கொடிய பழக் கத்தை வேருடன் பிடுங்கியெறியப் பலர் எண்ணினர். ஆகவே, சீர்திருத்தத்தை விரும்புகிறவர்களுக்கும், பழைய ஆசாரங்களில் பற்றுள்ளவர்களுக்கும் பெரிய வாக்கு வாதம் ஆரம்பித்தது. மேற்கூறிய கிளர்ச்சியும், சச்சரவும், ஓர் ஊருடன் மாத்திரம் நில்லாமல், அந்த சம்ஸ்தானம் முழுவதும் பரவின. காமக்குரோதாதிகளை அடக்கிய சாத்துவிகர்களான வேதாந்திகள்கூட அந் தக் கிளர்ச்சியில் தலையிட்டுக்கொண்டு, தங்கள் அபிப் பிராயங்களைச் சொல்லி வந்தார்கள். **ஆனந்தன், முகுந்தன்** என்னும் இரண்டு வேதாந்திகள், தீண்டா மையைக் குறித்து வாதிக்கத் தொடங்கினுர்கள்.

'தீண்டாமை, திருஷ்டி தோஷம் முதலியவைகளை ஒழிக்கச் செய்யப்படும் இக்கிளர்ச்சியை இப்போது

ஆரம்பித்ததைக் குறித்து உன் அபிப்பிராயமென்ன?' என்று ஒரு நாள் சாயந்திரம் ஆனந்தன் முகுந்தனைக் கேட்டான்.

'இந்தக் கிளர்ச்சியை இப்போது ஆரம்பித்தது சரியன்று. சீர்திருத்தத்தைச் சிறிது சிறிதாகச் செய்ய வேண்டும். ஒரே சமயத்தில் சீர்திருத்தத்தைச் செய்தல் என்பது முடியாத காரியம். இந்தக் கிளர்ச்சியினால் சாசுவதமான நன்மையேற்பட வேண்டுமானால், அதிக ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டும். அநேக நூற்றாண்டுகளாகத் தீண்டாத ஜாதியென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஒரு வகுப்பினர் விஷயத்தில் சீர்திருத்தத்தைச் சிறிது சிறிதாகச் செய்யவேண்டும்,' என்று முகுந்தன் பதிலளித்தான்.

'நீ சொல்வதுபோல, சிறிது சிறிதாக இந்த முன்னேற்றத்தைக் கொண்டு வருவது நியாயமன்றென்று நான் கருதுகிறேன். இந்தச் சீர்திருத்தத்தைத் தாமதமில்லாமல் உடனே செய்து தீரவேண்டும். அவர்களை உடனே கோவில்களுக்குள் செல்லும்படி விட்டுவிட வேண்டும்,' என்று ஆனந்தன் சொன்னான்.

'என்ன அசட்டுத்தனம்! பல ஆண்டுகளாக வழக்கத்திலிருக்கும் இவ்விஷயத்தைச் சிறிது சிறிதாக மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் சொல்வது உன் காதில் விழவில்லையா? இந்த வழக்கம் நியாயத்திற்கு விரோதமானதென்பதை நான் நன்றாக அறிவேன். உனக்கு இதனால் ஏற்பட்டிருக்கும் மன வருத்தத்தைக்காட்டிலும் எனக்கு அதிகமாக ஏற்பட்டிருக்கிறதென்பதை நீ அறிந்துகொள்ள வேண்டும். ஆனால், இதை ஒழிக்க நான் கூறும் மார்க்கத்திற்கும், நீ சொல்லும் வழிக்கும் வித்தியாசம் இருக்கிறது' என்று முகுந்தன் எடுத்துரைத்தான்.

'நீ சொல்லுவது போலச் செய்தால், இந்த வழக்கம் ஒழிய ஒரு யுகம் பிடிக்கும்,' என்று ஆத்திரத்துடன் ஆனந்தன் கூறினன்.

'நிதானமாக இந்தச் சீர்திருத்தம் கொண்டு வரப் படவேண்டுமென்பதே என் கருத்து,' என்று முகுந்தன் சொன்னன்.

'இந்த விஷயம் வேறு மனிதர்களைப்பற்றியதால் நிதானமாக நடக்கட்டும் என்று சொல்கிருய் போல இருக்கிறது!' என்று ஆனந்தன் சொன்னன்.

'அப்படி ஒரு போதும் இல்லை. என்னைப்பற்றிய விஷயமாயினும், நான் இதே அபிப்பிராயத்தையே கொண்டிருப்பேன். நான் படித்த வேதாந்தத்தின் சாரமே என் அபிப்பிராயம் என்பதைத் தயவு செய்து அறிந்துகொள்,' என்று முகுந்தன் எடுத்துச் சொன்னன்.

'நீ சொல்வது முற்றிலும் தவறென்பதை நான் காட்டுகிறேன்,' என்று ஆனந்தன் சொல்ல, அப்படியே செய்யும்படி முகுந்தன் கேட்டுக்கொண்டான். அத்துடன் அவர்கள் தர்க்கம் அன்று முடிந்தது.

பல தினங்கள் கழிந்த பிறகு ஒரு துவாதசியன்று, முகுந்தனை ஆனந்தன் தன் வீட்டிற்குப் பாரணைக்கு அழைத்தான். வழக்கப்படி அதற்கு முன் தினமாகிய ஏகாதசியன்று இரண்டு பேரும் பட்டினி கிடந்தனர். துவாதசியன்று நல்ல சாப்பாடு கிடைக்கும் என்று முகுந்தன் நினைத்தான். ஆகவே, அதிகாலையில் ஸ்நானம் செய்துவிட்டு, ஜபதபங்களை முடித்துக்கொண்டு மிக்க பசியுடன் முகுந்தன் ஆனந்தன் வீட்டிற்குச் சென்ருன்.

ஆனந்தன் வீட்டிலிருந்த பெரிய கூடத்தில் தயாராகப் போட்டிருந்த இரண்டு பெரிய வாழையிலைகளின் முன் அவர்கள் உட்கார்ந்தார்கள். போஜன பதார்த்தங்கள் சமைக்கப்பட்டுத் தயாராக வைக்கப்பட்டிருந்தன. வாசனை கமகமவென்று வீசிக்கொண்டிருந்தது. முகுந்தனுடைய நாக்கில் ஜலம் ஊறிற்று. அன்னம், கறி, பலகாரங்கள் முதலியவைகளைச் சாப்பிட முகுந்தன் சித்தமாயிருந்தான். ஆனந்தனுடைய மனைவி இலையில் ஒரு சோற்றுப் பருக்கையை வைத்ததைக் கண்டு முகுந்தன் வியப்புற்முன். ஒரு துண்டு கறியும் இலையில் பரிமாறப்பட்டது. முகுந்தனுக்குக் கோபம் பொங்கிற்று. தனக்கும் ஆனந்தனுக்கும் தீண்டாமை விஷயத்தில் நடந்த தர்க்கத்தை முகுந்தன் அறவே மறந்துவிட்டான். தன்னை ஏன் அவ்வாறு அவமானப்படுத்த வேண்டுமென்று அதிகக் கோபத்துடன் முகுந்தன் ஆனந்தனைக் கேட்டான். முகுந்தனை அவமானப்படுத்த வேண்டுமென்னும் நோக்கத்துடன் அவ்வாறு செய்யப்படவில்லையென்றும், அரைமணி நேரங்கழித்து வேருெரு பருக்கைச் சாதமும் துண்டுக்கறியும் பரிமாறப்படுமென்றும் ஆனந்தன் சிரித்துக்கொண்டே பதிலளித்தான்.

'அதுவரையில் எந்தப் பிசாசு காத்துக்கொண்டிருக்கமுடியும்? என்னை ஏன் சாப்பாட்டிற்கழைத்து இப்படி அவமானத்திற்குள்ளாக்குகிருய்?' என்று ஆனந்தனுடைய அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளாமல் முகுந்தன் பதட்டத்துடன் சொன்னுன்.

'சிறிது சிறிதாகவேஎதையும் செய்வதில் உனக்கு அதிக நம்பிக்கையிருக்கிறதென்று நினைத்து, பருக்கை பருக்கையாய்த் துண்டந்துண்டமாய்ப் பரிமாறும்படி

செய்தேன். நீ நேற்றைய தினம் பட்டினி கிடந்திருப்பாயென்று தெரிந்துகொண்டே இப்படிச் செய்யும்படி உத்தரவிட்டேன்,' என்று சிரித்துக்கொண்டே ஆனந்தன் பதிலளித்தான்.

தான் வலையிலகப்பட்டுக்கொண்டதாக முகுந்தன் தீர்மானித்துத் தன் முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டான். 'அது கிடக்கட்டும்; நான் ஒரே தடவையில் எக்காரியத்தையும் செய்தாக வேண்டுமென்னும் கொள்கையை அனுசரிப்பவனாதலால், நாம் இப்போது நன்றாகச் சாப்பிடலாம். நீயும் உன் அபிப்பிராயத்தை இப்போது திருத்திக்கொண்டிருப்பாயென்று நம்புகிறேன்,' என்று ஆனந்தன் சொன்னான்.

ஆனந்தன் மனைவியும் வயிறாரச் சிரித்துவிட்டு, வழக்கம் போலப் பரிமாறினாள். சாப்பாடு முடிந்தவுடன், திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள கோவில்களெல்லாம் எல்லா ஜாதியார்களுக்கும் திறந்துவிடப்பட வேண்டுமென்னும் உத்தரவைத் திருவாங்கூர் மஹாராஜா பிறப்பித்துவிட்டார் என்னும் சந்தோஷ சமாசாரம் அவர்கள் செவிகளில் விழுந்தது. 'மிகவும் போற்றத் தகுந்த சமாசாரம்! மஹாராஜா சொல்வது போல, இனிமேல் இந்துக்களின் அன்பு குடிகொண்டிருக்கும் மனக் கோவிலைத் திறக்க வேண்டுவதுதான் நமது கடமை,' என்று ஆனந்தன் சொன்னான்.

'நீ சற்று முன்புதான் ஒரு மனிதனுடைய மனக் கோவிலைத் திறக்கும் புண்ணியத்தைச் செய்தாய்,' என்றான் முகுந்தன்.

[வேதாந்திகளின் தர்க்கம் - II]

'இந்த உலகத்தில் நன்மையே ஏற்படும் என்று எண்ணிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இந்த உல

கம் துக்கம் நிரம்பிய பள்ளத்தாக்கு; துக்கத்திற்கு உறைவிடம்; துக்க சாகரம்,' என்று அதம பாவனைக் காரன் உத்தம பாவனைக்காரனிடம் சொன்னான். 'ஆதலால், துக்கம் நிரம்பிய இவ்வுலக வாழ்க்கையில் பற்றற்று எப்பொழுது மரணம் சம்பவிக்கும் என்று புத்திசாலிகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்,' என்று அதம பாவனைக்காரன் எடுத்துச் சொன்னான்.

'உலக வாழ்க்கை துன்பம் நிறைந்ததென்று மனம் வருந்துவதனால் பயனென்ன? நீ எப்பொழுதும் இறந்து போக வேண்டுமென்றே சொல்லிக் கொண்டிருக்கிறாய். நான் சாகாமல் உயிருடன் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இவ்வுலக வாழ்க்கை சந்தோஷகரமானதென்று நான் கருதுகிறேன். இந்த வாழ்க்கையையே நான் விரும்புகிறேன். நீயோ, எப்போது மரணம் சம்பவிக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாய். மரணமடைவதனாலே தான் சந்தோஷமேற்படுமென்பது உனது அபிப்பிராயம். உன் அபிப்பிராயத்தை நான் கூறியது போலத் தெளிவாகக் கூறினால், என் கக்ஷியைப் பெரும்பாலார் விரும்புவர் என்பதில் சந்தேகமே இல்லை,' என்று உத்தம பாவனைக்காரன் எடுத்துச் சொன்னான்.

'நீ சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. இவ்வுலகத்தில் வாழ்வதில் பிரயோஜனமில்லையென்றும் இறப்பதே மேலென்றும் கோடிக்கணக்கான மனிதர்கள் எண்ணுவார்கள். எனக்கு என்னவோ இறந்து போவதே மேல் என்று கண்டிப்பாகத் தோன்றுகிறது,' என்று அதம பாவனைக்காரன் தனது அபிப்பிராயத்தைக் கூறினான்.

'அப்படியானால், நீ ஏன் முன்னமே இறந்து போயிருக்கக்கூடாது? மனித சமூகத்திற்குத் தீங்கிழைக்கக் கூடிய உன் அபிப்பிராயங்களைக் கேட்காமல் இவ்வுலகிலுள்ளவர் சுகமடைவர். நீ இப்பொழுதாவது இறந்து போய் இவ்வுலகம் க்ஷேமமடையும்படி செய்,' என்று உத்தம பாவனைக்காரன் இடித்துக் கூறினான்.

அதம பாவனைக்காரன் தன் உதட்டைக் கடித்துக் கொண்டு ஒன்றும் பேசாமலிருந்தான். பேசினானே ஒழிய, 'உயிரை விடு,' என்றால், விட அவனுக்கு மனம் வரவில்லை.

27. பிச்சைக்காரரின் துரதிர்ஷ்டம்

[எல்லாம் ஏழைகளுக்கே!]

ஒரு சிறிய ராஜதானியின் பெரிய துறைமுகப்பட்டினமொன்றில் பணக்கார வியாபாரி ஒருவன் இறந்து போகும் தருணத்திலிருந்தான். ஏழைகள் அவன் வீட்டருகில் ஏராளமாய்க் கூடியிருந்தார்கள். சிறிது பிச்சை கிடைக்குமென்றெண்ணி அவர்கள் அவ்வாறு கூடியிருந்தார்கள். பெரிய வியாபாரி, அந்தப் பிச்சைக்காரர்களையெல்லாம் தன்னருகில் வரவழைத்துக் கண்களில் நீர் பெருக, நாக்குத் தடுமாற, பின் வருமாறு சொன்னான்:

'சிநேகிதர்களே, எனது வாழ்க்கை முழுவதும் நான் அநேக பாவங்களைச் செய்திருக்கிறேன். கடவுளையும் ஏழைகளையும் நான் அறவே மறந்துவிட்டேன். ஆதலால், என் ஆஸ்தி முழுவதையும் ஏழைகளுக்கே கொடுத்துவிட நான் தீர்மானித்திருக்கிறேன்!'

அங்குக் கூடியிருந்த ஏழைகளெல்லாம் இதைக் கேட்டுச் சந்தோஷத்தினால் மெய்ம்மறந்து ஆரவாரம் செய்தார்கள். தங்களுடைய தந்தையின் தீர்மானத்தைக் கேட்ட அந்த வியாபாரியின் நான்கு புத்திரர்களும், மனவருத்தங்கொண்டு ஓலமிட்டழுதார்கள். அந்த வியாபாரி தன் புத்திரர்களை அழவேண்டா என்று தேறுதல் கூறினான். 'நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? அழவேண்டா. எல்லாம் நன்மைக்கே என்று கருதி அழாமலிருங்கள். என் ஆஸ்தியை ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டதனால் உங்கள் அந்தஸ்து என்னவோ ஒரு போதும் குறைந்து போகப் போவதில்லை. நான் வாழ்க்கை ஆரம்பிக்கும்போது ஒன்றுமில்லாமலேதான் ஆரம்பித்தேன். என் வாழ்நாள் முழுவதும் நான் அதிக ஆடம்பரத்துடனேயே வாழ்ந்தேன். அதே மாதிரியாக நீங்களும் உங்களுடைய வாழ்க்கையை ஆரம்பித்து, சௌக்கியமாக வாழுங்கள்,' என்று அந்த வியாபாரி புத்திரர்களுக்கு உபதேசம் செய்தான்.

அந்த வியாபாரி நன்கொடையாக ஆஸ்தி முழுவதையும் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்ட விஷயம் ஊரெங்கும் ஒரு நொடியில் பரவிற்று.

மூவாயிரம் ஏழைப் பிச்சைக்காரர்கள் அரண்மனைக்குச் சென்று, தங்களை அந்த வியாபாரியின் சொத்துக்கு வாரிசுகளாக ஏற்றுக்கொள்ளும்படி அரசனை வேண்டிக்கொண்டார்கள். 'அந்த வியாபாரி தன் ஆஸ்தி முழுவதையும் எங்களுக்குக் கொடுத்துவிட்டதனால் எல்லாம் எங்களையே சேரவேண்டும்,' என்று பிச்சைக்காரர்கள் சாதித்தார்கள். வியாபாரியின் புத்திரர்கள் தங்களுக்கும் ஆஸ்தியில் பங்கு உண்

டென்று வாதித்தார்கள். ஆனால், வியாபாரியின் ஆஸ்தி முழுவதும் சுயார்ஜிதமாகச் சம்பாதிக்கப்பட்டதாகையால், வியாபாரியின் இஷ்டப்பிரகாரம் ஆஸ்தி பிச்சைக்காரர்களையே சேருமென்றும், புத்திரர்களைச் சேராதென்றும் நியாயம் கூறப்பட்டது. ஆகவே, வியாபாரியின் ஆஸ்தியும் கடனும் அந்த மூவாயிரம் பிச்சைக்காரர்களையே சேரும் என்று அரசன் உத்தரவளித்தான். ஆஸ்தியை மூவாயிரம் சம பாகங்களாகப் பங்கிட்டு அந்தப் பிச்சைக்காரர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசன் தீர்ப்பளித்தான். தரித்திரப் பிணியினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த அந்த ஏழைகள் அதிக சந்தோஷமடைந்தார்கள். வியாபாரி சீக்கிரம் இறந்து சுவர்க்க லோகம் சேர வேண்டுமென்று அவர்கள் வியாபாரியை மனமார வாழ்த்தினார்கள்.

தீர்ப்புச் சொன்ன பிறகு மூன்று மணி நேரம் உயிருடனிருந்துவிட்டு அந்த வியாபாரி இறந்து போனான். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அந்த வியாபாரியின் கணக்குப் புத்தகங்களைப் பார்வையிட்டார்கள். கணக்கெடுத்த போது, 30000 ரூபாய் வருமானமும், **1**,50,000 ரூபாய் கடனும் அந்த வியாபாரிக்கு இருந்தன என்பதை உத்தியோகஸ்தர்கள் அறிந்துகொண்டார்கள். கடன் கொடுத்தவர்கள் தங்களுக்குக் சேரவேண்டிய பாக்கி முழுவதையும் கொடுத்துவிடும்படி வாரிசுதார்களைக் கேட்டார்கள். தீர்ப்புப் பிரகாரம் வியாபாரியின் **1**,20,000 ரூபாய்க் கடனைத் தீர்க்க வேண்டிய கடமை, அந்த மூவாயிரம் பிச்சைக்காரர்களுடையது என்பதை அவர்கள் அறிந்துகொண்டு, ஒவ்வொருவராக நழுவ ஆரம்பித்

தனர். அரசனே, அவர்களை விடாமல் ஒப்பந்தப்படி செய்ய நிர்ப்பந்தம் செய்தான். கடன் கொடுத்தவர்களுக்கு ஒவ்வொரு பிச்சைக்காரனும் நாற்பது ரூபாய் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. பிச்சைக்காரர்களிடம் பணமில்லாமல் போனால், கடன் தீரும்வரை அவர்கள் வேலை செய்து கடனைக் கழிக்க வேண்டுமென்று அரசன் உத்தர விட்டான். அந்த ஏழைப் பிச்சைக்காரர்களுக்கு வியாபாரி 'எல்லாம் நன்மைக்கே,' என்று கூறியதன் பொருள் அப்போதுதான் விளங்கிற்று. துரதிர்ஷ்ட சாலிகளான அந்தப் பிச்சைக்காரர்கள் வகை தெரியாமல் அகப்பட்டுக்கொண்டு விழித்தார்கள்.

28. புத்திசாலிச் சிறுவன்

ஒரு கிராமத்தில் இரண்டு சிறுவர் மூன்றுவது பாரத்தில் வாசித்து வந்தனர். இருவருக்கும் சுமார் பன்னிரண்டு வயதுதானிருக்கும். ஒரு நாள் ஒரு பையனுக்குக் கடையில் சாமான் விற்கும் குமாஸ்தா வேலையாகிவிட்டதென்றும், மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் சம்பளமென்றும், அதனால் அந்தப் பையன் படிப்பை விட்டுவிட்டானென்றும் தெரிந்துகொண்டு, அந்த ஊரார் அதிக வியப்படைந்தனர். 'என்ன புத்திசாலித்தனம்!' என்று அக்கிராமத்தார் சந்தோஷப்பட்டனர். தன் மகன் அவனுடைய சிநேகிதனைவிட அதிக புத்திசாலியென்று அந்தப் பையனுடைய தாய் பெருமை பேசிக்கொண்டாள்.

'உன் சிநேகிதனைப் பாரடா! இளமைப் பருவத்திலேயே அவன் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டான்!

நீயோ, நம் திரவியத்தையெல்லாம் செலவு செய்து கொண்டிருக்கிறாய்,' என்று மற்றவன் தாய் சொன்னாள்.

'தாயே, சற்றுப் பொறு; அவசரப் படாதே! யார் புத்திசாலியென்பது பிறகு தெரியும்,' என்று சொல்லிவிட்டு அந்தப் பையன் சும்மா இருந்தான்.

இருபது வருஷங்கள் பறந்தோடின. புத்திசாலிப் பையன் கடையில் பத்து ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய சிநேகிதனோ, எம். ஏ. பரீக்ஷையில் தேறி, பட்டம் பெற்று, மாதம் ஒன்றுக்கு இருநூற்றைம்பது ரூபாய் சம்பளமுடைய உத்தியோகஸ்தனானான்.

அந்த உத்தியோகஸ்தன் ஒரு தடவை தன் சிநேகிதனிருந்த கடை வழியாகச் செல்ல நேர்ந்தது. அவன் சிநேகிதன் கண்களில் நீர் பெருக, கடைக்குள்ளே சென்று மறைந்துகொண்டு, தனக்குள் பின் வருமாறு சொல்லிக்கொண்டான் : 'சில வருஷங்களுக்கு முன்பு என்னை இந்த ஊரெல்லாம் அதிக புத்திசாலியென்று கொண்டாடிற்று. என்னுடைய அசட்டுத்தனம் இப்போது தெரிகிறது. நான் இளம்பிராயத்தில் வாழ்க்கையில் இறங்கிவிட்டேன். இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய கல்வியறிவைப் பெறாமல் நான் சம்பாதிக்கத் தொடங்கியதன் பலனை இப்போது அனுபவிக்கிறேன்!' என்று மனம் நொந்தான். நொந்து என்ன பயன்? ஒரு நாள் புத்திசாலித்தனத்துக்கு வாழ்வு முழுவதும் கஷ்டம் பயனாயிற்று!

29. பதிலளிக்க முடியாத நிலைமை

இந்தியாவில் இலவச ஆஸ்பத்திரி ஒன்றில், ஒரு வைத்தியர் இருந்தார். நோயாளர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட மருந்தில், அவர் விஷம் அதிகமாகக் கலந்து கொடுத்துவிட்டதனால், வியாதி அதிகமாகி விட்டதென்று அவர்மீது வழக்குத் தொடுக்கப் பட்டது. சாக்ஷிகள் அந்த வழக்கில் கூறியவற்றி லிருந்து அந்த வைத்தியர் குற்றவாளியென்பது கண்டிப்பாய் விளங்கிற்று. தவறுதலாக அளவுக்கு மிஞ்சிய விஷமருந்து அந்த நோயாளருக்குக் கொடுக் கப்பட்டதென்பது மருந்து ஜாபிதாவிலிருந்து தெரிந் தது.

வைத்தியர் குற்றத்திற்காகக் கண்டிப்பாகத் தண் டிக்கப்படுவாரென்று நினைத்து, அவருடைய சிநேகி தர் மனவருத்தமடைந்தனர். ஆனால், அந்த வைத்தி யரோ, மனக்கிலேசமில்லாமல் உல்லாசமாகவேயிருந் தார். அவர்மீது சாட்டப்பட்டிருக்கும் பெரிய குற் றத்தைக் குறித்து அவருடன் பேசிய சிநேகிதர்களை அவர், 'நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? ஒருவராலும் பதில் சொல்ல முடியாத—அனைவரும் நம்பியே தீர வேண்டிய—தகுந்த காரணம் எனக்குத் தெரியும்,' என்று சொல்லிச் சமாதானப்படுத்தினர்.

வழக்கில் சம்பந்தப்பட்ட சாக்ஷிகள் விசாரணை யெல்லாம் நடந்தேறிய பிறகு, வைத்தியர் தமது வாக்கு மூலத்தைப் பின் வருமாறு சொன்னர்:

'என்னுடைய தவறுதலால் ஏற்பட்டிருக்க வேண் டிய கெடுதலை, என்னுடைய மருந்து கலக்கும் கம் பௌண்டர் நேரிடாமல் காப்பாற்றியிருக்கிறர். எந்த

மருந்தையும் நூறு பங்கு ஜலத்தில் கலக்காமல் அவர் கொடுக்கும் வழக்கமே இல்லை. அவ்வாறு நூறு மடங்கு தண்ணீரில் கலக்கப்பட்டால் சக்தியுள்ள விஷங்கூடச் சக்தியை இழந்துவிடும். ஆதலால், இந்தச் சாதாரண விஷம் தன் பலத்தை முழுவதும் கண்டிப்பாக இழந்தே இருக்க வேண்டுமென்பதில் சந்தேகமேயில்லை. இந்த விஷயத்தைக் கோர்ட்டார் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.'

வைத்தியர் கூறிய விஷயம் நியாயமாகத் தோன்றவே, வழக்குத் தொடுத்தவர்கள் வழக்கை நிறுத்திவிட உத்தரவளிக்கும்படி நியாயாதிபதியைக் கேட்டுக்கொண்டார்கள். உடனே வைத்தியர் விடுதலை அடைந்தார்.

30. அரசனும் குண தோஷ விசாரகனும்

முன்னொரு காலத்தில் கீர்த்தி வாய்ந்த அரசன் ஒருவன் இருந்தான். அதற்கு முன்பு அத்தகைய அரசன் இருந்ததேயில்லையென்று ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். அரசனுடைய ஆட்சியையும் மனப்போக்கையும் குறித்து, அந்த அரசாங்கத்திலிருந்த ஒரு குண தோஷ விசாரகன் அடிக்கடி பயமில்லாமல் தனக்குத் தோன்றியபடியெல்லாம் தூஷித்து வந்தான்.

அக்குண தோஷ விசாரகன் அவ்வாறு செய்து வந்தது அரசனுக்குச் சிறிதேனும் பிடிக்கவில்லை. அவனது அஹங்காரம் தீர அந்தக் குண தோஷ விசாரகனுக்குத் தகுந்த தண்டனை விதிக்க வேண்டுமென்று அந்த அரசன் எண்ணினான். இருபத்தைந்து வருஷங்

கள் நீதியுடன் செங்கோல் செலுத்திய பிறகு, அந்தக் குண தோஷ விசாரகனைத் தண்டிக்கக்கூடிய சக்தி தனக்கு வந்துவிட்டதென்பதை அந்த அரசன் அறிந்தான். தனது ஆட்சியின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தை அதிக சிறப்புடன் பிரஜைகள் கொண்டாடிய தினம் வெளியான பத்திரிகைகளில் தனது அரசாங்க நிருவாகத்தைக் கண்டித்து எழுதிய குற்றத்திற்காக அந்தக் குண தோஷ விசாரகனைத் தூக்கி லிடும்படி அரசன் உத்தரவளித்தான்.

அந்தக் குண தோஷ விசாரகன் தூக்கிலிடப்படுவதற்கு ஒரு நிமிஷத்திற்கு முன் அரசனைப் பேட்டி கண்டு பேசினன். அரசன் அந்தக் குண தோஷ விசாரகனிடம் சென்ருன். தனக்கு மரண தண்டனை விதிப்பதற்குக் காரணம் என்னவென்று குண தோஷ விசாரகன் அரசனைக் கேட்டான். 'நீ உன்னுடைய அரசனுக்காவது தேசத்திற்காவது என்ன நன்மையைச் செய்திருக்கிருய்? உன்னை இப்போது மரண தண்டனையிலிருந்து காப்பாற்றுவதனுல் மாத்திரம் நீ என்ன நன்மையை உன் தேசத்திற்காவது அரசனுக்காவது செய்யப் போகிருய்?' என்று அரசன் குண தோஷ விசாரகனைக் கேட்டான்.

'எனக்குத் தந்தையாரைப் போன்றவரே, என் கண்டனங்கள் உம்முடைய அரசாட்சியை மேன்மையடையச் செய்திருக்கின்றன. என் கண்டனங்களுக்குப் பயந்து, நீர் அதிக ஜாக்கிரதையுடன் அரசாங்கத்தை நடத்தி வந்திருக்கிறீர். அதனுல், தேசத்தில் அக்கிரமத்திற்கும் அநியாயத்திற்கும் இடமே இல்லாமல் போய்விட்டது. இந்த நாட்டை ஆண்டு வந்த அரசர்களுள் நீர் தலை சிறந்தவர் என்னும்

பெயரும் கீர்த்தியும் உமக்கு வந்துவிட்டன. என் அரசருக்கும் தேசத்திற்கும் நான் அழியாப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறேன். என்னை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றினால், இந்தக் கீர்த்தி என்றும் அழியாமல் இருக்கும்; அரசாங்க நிருவாகத்தில் காணப்படும் தவறுகளைப் பயமின்றி எடுத்துக் காட்டும் சக்தி வாய்ந்த ஒருவன் அரசாங்கத்தில் இருப்பான். அல்லாவிடில், அரசாங்கத்திற்குப் பெரிய நஷ்டமேற்படும். நீர் உமது மார்பின்மீது கையை வைத்து நன்ருக ஆலோசித்து, நான் இது காறும் கூறியவை முழுப்பொய் என்று சொல்லும் பக்ஷத்தில், இப்பொழுதே என்னைத் தூக்கிலிட்டுவிட லாம். அல்லாவிடில், தயை கூர்ந்து இப்பொழுதே என்னை விடுதலை செய்துவிடும்,' என்று குண தோஷ விசாரகன் எடுத்துச் சொன்ஞன்.

'இப்பொழுதே இவனை விடுதலை செய்யுங்கள். இவன் கூறியது முழுவதும் உண்மை,' என்று உத்தர விட்டு, அரசன் தன் முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டு, தான் செய்த குற்றத்தை நினைத்து மனம் வருந்திஞன்.

31. புதிய எண்ணங்கள்

[ஓர் உபாத்தியாயரின் சங்கடம்]

கோவிந்தராஜர் என்பவர் ஆரும் வகுப்பு உபாத்தியாயர். அவர் எட்டாம் வகுப்பு வரையிலும் சொல்லிக்கொடுக்கும் திறமை வாய்ந்தவராயிருந்தார். அவர் மெற்றிக்குலேஷன் வகுப்பு வரையில் படித்தும், அப் பரீக்ஷையில் தேறவில்லை. இருந்த போதிலும், எல்லாம் தமக்குத் தெரியுமென்று அவர் எண்ணியிருந்தார்.

ஒரு நாள் அவர் தம் மாணுக்கர்களுக்குக் **கலிலியோ** என்பவரைப்பற்றியும் அவருக்கு விதிக்கப்பட்ட அநியாயமான தண்டனையைக் குறித்தும் எடுத்துச் சொன்னார். 'சூரியன் அசையாமல் இருக்கிறதென்றும் சூரியனைச் சுற்றிப் பூமி செல்கிறதென்றும் கலிலியோ சொன்னார். அஃது உண்மையான விஷயம். ஆனால், முரட்டுச் சுபாவம் வாய்ந்த முழு மூடர் சிலர், புது எண்ணங்களை ஆராய்ந்தறியும் சக்தியற்றவர், கலிலியோவைப் படாத பாடு படுத்தினர்,' என்று அவர் சொன்னார்.

'ஐயா, சூரியன்கூட அசைந்து திரிவதில்லையா? சூரியன் அசையாமலிருக்கிறதென்று கலிலியோ சொன்னது தவறல்லவா?' என்று ஒரு மாணுக்கன் கேட்டான்.

'இல்லை; ஒரு போதும் கலிலியோ தவருன விஷயத்தைச் சொல்லமாட்டார். சூரியன் அசைவதே இல்லை. சூரியன் அசைகிறதென்று உனக்கு எவர் கூறினர்? இந்த மாதிரி அசட்டுப்பிசட்டென்று வாய்க்கு வந்தபடி உளருதே!' என்று கோவிந்தராஜர் பதிலுரைத்தார்.

'சூரியனும் திரிந்துகொண்டே இருக்கிறதென்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை. வான சாஸ்திரம் படித்து எம். ஏ. பரீக்ஷையில் தேறிப் பட்டம் பெற்ற என் அம்மானுர் அவ்வாறு எனக்குச் சொன்னார். என் மாமா ஒரு போதும் சந்தேகத்திற்கு இடமான விஷயங்களைச் சொல்லவே மாட்டார்,' என்று மாணுக்கன் சொன்னன்.

தமது அபிப்பிராயத்திற்கு விரோதமாகக் கூறிய மாணுக்கன்மீது கோவிந்தராஜருக்கு அதிக கோபம்

உண்டாயிற்று. மெற்றிக்குலேஷன் பரீக்ஷையில் தாம் தேருத குற்றத்தினுல், எம். ஏ. பட்டதாரி சொல்வதாகச் சொல்லித் தம்மை அவமானப்படுத்துகிருனென்று கோவிந்தராஜர் கருதினுர். இந்தக் காலத்து எம். ஏ. பட்டதாரிகள், அந்த மாணுக்கனுடைய மாமா போன்றவர்கள், தம்மைப்போன்ற மெற்றிக்குலேஷன் பரீக்ஷ பாஸ் செய்யாதவர்களைவிடக் கேவலமானவர்களென்பது கோவிந்தராஜர் கருத்து. மற்ற மாணுக்கர்கள் தம்மைப் பார்த்துச் சிரிப்பதைக் கோவிந்தராஜர் கண்டார். தம்முடைய அதிகாரத்தைச் செலுத்தாவிடில் தமக்கு அவமானம் நேரிடுமென்று கோவிந்தராஜருக்குத் தோன்றிற்று. தமது அபிப்பிராயத்திற்கு விரோதமாகக் கூறிய குற்றத்திற்காக, பெஞ்சின்மீது ஏறி நிற்கும்படி கோவிந்தராஜர் அந்த மாணுக்கனுக்குக் கட்டளையிட்டார்.

'சூரியன் திரிந்துகொண்டிருக்கிறதென்னும் தப்பபிப்பிராயத்தை நீ விட்டுவிடுகின்ருயா?' என்று கோவிந்தராஜர் அவனைக் கேட்டார்.

'சூரியன் அசைந்து செல்வது உண்மையாகையால் நான் ஒருபோதும் என் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள முடியாது,' என்று அந்த மாணுக்கன் பதிலளித்தான்.

உபாத்தியாயர் அந்தப் பையனைப் பிரம்பினுல் அடித்துப் பார்த்தும் பயனில்லாமல் போயிற்று. முடிவில் அந்த மாணுக்கனைக் கோவிந்தராஜர் வகுப்பைவிட்டு வெளியே துரத்திவிட்டுத் தலைமை உபாத்தியாயரிடம் சென்று, அந்தப் பையனைப் பள்ளிக்கூடத்தைவிட்டு விலக்கிவிடும்படி சொன்னுர். தலைமை உபாத்

தியாயர். ஒரு பி. ஏ. பட்டதாரி. ஆறும் வகுப்புப் பையன் ஒருவனுக்குச் சூரியன் அசைவது போன்ற சந்தேகத்திற்கு இடமான அபிப்பிராயங்கள் இருப்பது மிகத் தவறென்று தலைமை உபாத்தியாயரும் அந்தப் பையன்மீது கோபம் கொண்டார். உபாத்தியாயர் என்ன சொல்லியும் கேளாமல் ஒரே பிடிவாதத்துடன் அந்தப் பையன் அவருடைய உத்தரவை மீறி நடந்தது பிசகென்று தலைமை உபாத்தியாயர் கருதினர். அந்தப் பையனைப் பள்ளிக்கூடத்தை விட்டு நீக்கிவிடுவது நியாயமென்று அவர் உடனே தீர்மானித்தார். மெற்றிக்குலேஷன் பரீக்ஷையில் தவறியிருந்த அந்த உபாத்தியாயர் அதிக சந்தோஷமடைந்தார்.

'ஐயா, இந்தப் பையனுடைய அசட்டு அம்மான் ஒருவனிருக்கிறனம். அவன் எம். ஏ. படித்தவனும். இத்தகைய தப்பு அபிப்பிராயங்களை அந்த மனிதனே இந்தப் பையனுடைய மனத்தில் புகுத்தியிருக்கிறன்,' என்று கோவிந்தராஜர் சொன்னர்.

'அப்படியா சமாசாரம்! நான் அவரைக் கண்டு இவ்விஷயத்தைக் குறித்துப் பேசவேண்டும்,' என்று பட்டதாரிகளிடம் மதிப்புக்கொண்ட அந்தத் தலைமை உபாத்தியாயர் சொன்னர்.

அன்று சாயந்திரம் தலைமை உபாத்தியாயர் அந்தப் பையனுடைய அம்மானைக் கண்டு பேசினர். 'சூரியன் திரிவது உண்மையா?' என்று தலைமை உபாத்தியாயர் கேட்டார்.

'ஆம். உண்மைதான். அதே மாதிரியாக நக்ஷத்திரங்களும், துருவ நக்ஷத்திரமுட்பட அலைந்துகொண்

டேயிருக்கின்றன,' என்று அந்த எம். ஏ. பட்டதாரி தலைமை உபாத்தியாயரிடம் புதிதாக எழுதப்பட்டிருந்த வான சாஸ்திரப் புத்தகமொன்றில் எடுத்துச் சொல்லப்பட்டிருந்த பல விஷயங்களைப் படித்துக் காட்டித் தாம் கூறியது உண்மை என்று விளக்கினார். அச்சுப் புத்தகத்தில் காணப்படுவை எல்லாம் உண்மையென்று நம்பியிருந்த அந்தத் தலைமை உபாத்தியாயர், எம். ஏ. கூறியதை ஆமோதித்தார். 'உம் மருமகனை வகுப்பை விட்டு வெளியே துரத்திய கோவிந்தராஜர் சுத்த மடயராய் இருக்கவேண்டும்!' என்று சொல்லிவிட்டுத் தலைமை உபாத்தியாயர் விடை பெற்றுக்கொண்டார். 'மெற்றிக்குலேஷன் பரீக்ஷையில் பல்டியடித்த கோவிந்தராஜருக்கு என்ன தெரியப் போகிறது!' என்று உடனே அவர் எண்ணி விட்டார்.

மறு நாள் ஆறுவது வகுப்பில் மாணாக்கர் எல்லாரும் கூடிய பிறகு, தலைமை உபாத்தியாயர் அந்த வகுப்பிற்குச் சென்றார். மாணாக்கர்களின் முன்பு அவர் உபாத்தியாயரைப் பார்த்துப் பின் வருமாறு சொன்னார்:

'சூரியன் அசையாமல் இருக்கிறதென்று நீர் கொண்டிருக்கும் எண்ணம் சரியானதன்று. நீர் கூறுவது தவறு. இஃது உமது அசட்டுத்தனத்தைக் காட்டுகிறது. அந்தப் பையன் கூறியது உண்மை. அந்தப் பையனை நான் மறுபடியும் வகுப்பில் சேர்த்துக் கொள்ள உத்தரவிடுகிறேன். அவனுடைய அபார அறிவை நான் மெச்சுகிறேன்! தன் உண்மையான அபிப்பிராயத்தைத் தைரியத்துடன் எடுத்துக் கூறிய அந்தப் பையனுக்கு நான் ஒரு புத்தகத்தைப் பரிசாக

அளிக்கப் போகிறேன். இத்தகைய பழைய அபிப்பிராயங்களை விட்டுவிட்டுத் தற்காலத்தில் ஆராய்ச்சியின் பயனாகக் கண்டுபிடிக்கப்படும் புது எண்ணங்களை நீர் ஏற்றுக்கொண்டு, அவைகளை மாணாக்கர்களுக்குப் போதிக்க வேண்டும். அல்லாவிடில், உம்மை வேலையை விட்டு நீக்கிவிடும்படி நான் சிபாரிசு செய்ய வேண்டி வரும்,' என்றார் தலைமை உபாத்தியாயர்.

கோவிந்தராஜர் என்ன செய்வார் பாவம்! பிழைப்பைக் கெடுத்துக்கொள்ள முடியுமா? 'சூரியன் எப்படிப் போனால் நமக்கு என்ன?' என்று தலைமை உபாத்தியாயர் சொற்படி செய்யலானார்.

32. ஐந்து நிமிஷ மௌனம்

அத்யாத்ம வித்தியா விசாரகன் ஒருவன் இருந்தான். அவன் பெரிய பணக்காரன். ஒருவன் தூங்காமல் விழித்துக்கொண்டிருக்கும் போதே ஐந்து நிமிஷம் யாதோர் எண்ணத்திற்கும் மனத்தில் இடம் கொடாமலிருப்பானேயானால், அவனுக்கு ஐந்நூறு ரூபாய் வெகுமதியளிப்பதாக அந்த அத்யாத்ம விசாரகன் ஒரு நாள் அறிவித்தான்.

அந்த வெகுமதியைப் பெறப் பல தினங்கள் ஒருவரும் முன் வரவில்லை. கடைசியாக ஒரு மனிதன் அந்த அத்யாத்ம விசாரகன் முன் தோன்றினான். அவன் ஐந்து நிமிஷங்கள் அசையாமல் நின்றுகொண்டிருந்தான். அவன் மனத்தில் எத்தகைய எண்ணமும் இல்லையென்பது அவன் முகத்தைப் பார்க்கும்போதே தெரிந்தது. ஐந்து நிமிஷங்களான பிறகு அவன் வெகுமதியைக் கொடுக்கும்படி கேட்டான். 'உண்மை

யாக உன் மனத்தில் ஒரு வித எண்ணமும் தோன்ற வில்லையா?' என்று அத்யாத்ம விசாரகன் கேட்டான்.

'தோன்றவேயில்லை,' என்று அந்த மனிதன் கண்டிப்பாகக் கூறினன். 'இந்த வெகுமதியைப் பெறுவதற்கு, ஐந்து நிமிஷங்கள் ஒன்றும் பேசாமலிருக்க வேண்டும் என்னும் எண்ணம் உன் மனத்தில் இருக்க வில்லையா?' என்று அத்யாத்ம விசாரகன் கேட்டான்.

'ஆம். அந்த எண்ணம் மாத்திரம் இருந்தது,' என்று மன வருத்தத்துடன் சொல்லிக்கொண்டே அந்த மனிதன் தன் வழியே திரும்பிச் சென்றான்.

33. எல்லாம் விதியின்படியே நடக்கும்.

[இருவர் தர்க்கத்தின் முடிவு]

'எல்லாம் விதியின்படியே நடக்கும். விதியை வெல்லுதல் ஒருவராலும் முடியாத காரியம்,' என்று விதி என்பதில் நம்பிக்கை கொண்ட ஒருவன், விதியின் செயலில் நம்பிக்கை இல்லாத ஒருவனைப் பார்த்துச் சொன்னன். விதியின் செயலில் நம்பிக்கை இல்லாதவன், விதியை நம்பினவனை ஓர் அடி அடித்தான். அவனும் அதிக கோபத்துடன் திரும்பித் தன்னை அடித்தவனைப் பலமாக அடித்தான்.

'விதியின் செயலால் உனக்கு அடி விழுந்தது. நீ ஏன் என்னை அடித்தாய்?' என்று விதியின் செயலில் நம்பிக்கை அற்றவன் தன் சிநேகிதனைக் கேட்டான்.

'நீ ஏன் என்னை அந்தக் கேள்வி கேட்கிறாய்? அதுவும் விதியின் பிரகாரமே நடந்தது. நீ என்னை அடிக்கவேண்டுமென்றும் நான் உன்னைத் திரும்பவும் பலமாக அடிக்க வேண்டுமென்றும், பிறகு இவ்வாறு

நாம் அதைக் குறித்துப் பேசிக்கொள்ள வேண்டுமென்றும் விதி இருந்தது. எல்லாம் விதியின்படியே நடக்கும். விதியை விலக்குதல் அசாத்தியம்,' என்று விதியின் செயலில் நம்பிக்கை கொண்டவன் தன் சிநேகிதனுக்குச் சொன்னான்.

34. துன்மார்க்கியின் சமாதானம்

முன்னொரு காலத்தில் இரண்டு பெண்டாட்டிக்காரன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு பெண்டாட்டியை நீக்கி வைத்திருந்தான். கள் குடித்தல், சூதாடுதல், பிறருக்குத் தீங்கிழைத்தல், கற்பழித்தல் முதலிய துர்நடத்தைகள் அவனிடம் குடிகொண்டிருந்தன. நற்குண சம்பன்னனான ஒரு பெரிய மஹான் அவனைப் பார்த்து, 'கெட்ட நடத்தைகளினால் நீ செய்யும் கொடிய காரியங்களைக் குறித்து உனக்கு வெட்கமில்லையா?' என்று கேட்டார்.

'நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? கிருஷ்ணர் 10,008 மனைவிமார்களைக் கலியாணம் செய்துகொள்ளவில்லையா? புத்தர் தம் மனைவியைப் பரிதபிக்க விட்டுச் செல்லவில்லையா? பண்டைக் காலத்தில் முற்றுந் துறந்த முனிவர்கள் மது பானம் செய்யவில்லையா? யாகங்கள் செய்த காலத்தில் மிருகங்களை அவர்கள் பலி கொடுக்கவில்லையா? நளச் சக்கிரவர்த்தி சூதாடவில்லையா? அருச்சுனன் வீண் டம்பங் கொண்டிருக்கவில்லையா? இந்திரன் கற்பழிக்கவில்லையா? பரசுராமர் மிகக் கொடியவராய் இருக்கவில்லையா?' என்று அந்த மனிதன் கேட்டான்.

'ஆம்,' என்று மஹான் பதிலளித்தார்.

'அப்படியிருக்க, நீர் என் மீது ஏன் குற்றம் சாட்டுகிறீர்?' என்று அந்த மனிதன் கோபத்துடன் கேட்டான்.

மஹான் அமைதியுடன் பின் வருமாறு சொன்ஞர்: 'கிருஷ்ணர் எழுதித் தந்ததைப் போல நீ ஒரு பகவத் கீதையை உலகத்தாருக்குத் தரவில்லையே! உன் சகோதரர்களின் க்ஷேமத்தைக் கருதி, நீ உன் வாழ் நாட்களைப் புத்தரைப்போல உலகத்தாருக்கு அர்ப் பணம் செய்யவில்லையே! முனீஸ்வரர்கள் எடுத் துரைத்த பல நீதி சாஸ்திரங்களைப்போல நீ ஒரு விஷ யத்தையும் உலகத்திலுள்ளவர்களுக்குப் போதிக்க வில்லையே! நளமஹாராஜனைப் போல நீதியுடன் ஒரு தேசத்தைப் பரிபாலனம் செய்யும் சக்தி உனக் கில்லையே! தரும யுத்தத்தில் வீரத்துடன் அருச்சு னனைப்போலப் போர் புரியும் திறமை உனக்கில்லையே! இந்திரனைப்போல வேண்டுங் காலத்தில் மழையைச் சகல ஜீவராசிகளுக்கும் பெய்யும்படி செய்யக்கூடிய சக்தி உனக்கில்லையே! ஒரு புதுத் தேசத்தையே உண்டு பண்ணிய அபார சக்தி வாய்ந்த பரசுராம ருடைய திறமையும் உனக்கில்லையே! நீயோ, அழகிய வாசனை பொருந்திய மிருதுவான இதழ்களை இழந்த ரோஜா மலரின் முள்ளைப் போன்றவன். ஜனங்கள் உன் முகத்தில் விழிப்பதற்குக்கூடக் கூச்சப்படுவார் கள். உன்னை அனைவரும் வெறுப்பார்கள்!''

35. திருட்டு ஆஸ்தி

வேளாளன் ஒருவன் நெற்பயிரை அறுவடை செய்துகொண்டிருக்கும்போது, வயலில் காட்டெலி ஒன்று இருப்பதைக் கண்டான்.

'நான் மெய்ப்பாடு பட்டு உழைத்துப் பயிர் செய்த தானியத்தைத் திருடித் தின்ற குற்றத்திற்காக நீ மரணமடைய வேண்டுவதுதான். அதுவே உனக்குத் தகுந்த தண்டனை,' என்று சொல்லி, அவன் அதைக் கொல்லப் போனான்.

எலி, 'நான் சொல்லுவதைச் சற்றுக் கேளுங்கள்,' என்று பின் வருமாறு சொல்லிற்று:

'உலகில் காணப்படும் ஆஸ்திகள் எல்லாம் திருட்டுச் சொத்துக்களே. தேனீக்கள் கஷ்டப் பட்டுச் சேகரித்து வைக்கும் தேனைத் திருடி உப யோகித்துக்கொள்ளும் மனிதன் திருடனல்லவா? அவன் மரண தண்டனைக்குள்ளாக வேண்டாவா? தேனைத் திருடுவதற்கு மனிதன் சில சமயங்களில் தேனீக்களைக் கொல்ல நேரிடுகிறது. நானோ, மனிதர் களுடைய தானியத்தைத் திருடுகிறேனே அல்லாமல், மனிதர்களைக் கொல்வதில்லை. கஷ்டப்பட்டுச் சம்பா திக்கப்படும் சொத்திற்கும், திருட்டுத்தனமாகச் சம்பா திக்கப்படும் சொத்திற்கும் மனிதனுக்கு நன்றாக வித்தி யாசம் தெரியும். எலிகளாகிய எங்களுக்கு வித்தியா சம் தெரியாது. அப்படியிருக்க, தேனைத் திருடும் மனிதர்களைக் கொல்லாமல், என்னை மாத்திரம் ஏன் கொல்ல வேண்டும்?'

ஒரு நிமிஷம் அந்த வேளாளன் மதி கலங்கி நின்றான். 'நீ சொல்வது உண்மை! எலியே, என்

தானியத்தைத் திருடியதற்காக நான் முதலில் உன்னைக் கொன்றுவிடுகிறேன். பிறகு, தேனைத் திருடும் என்னையும், மற்ற மனிதர்களையும், தேனீக்கள் இஷ்டப்பட்டால் கொன்றுவிடட்டும்,' என்று சொல்லிக் கொண்டே, ஒரே அடியில் குடியானவன் அந்த எலியைக் கொன்றுவிட்டான்.

36. எல்லாவற்றிலும் சமம்

'மனிதர் எல்லாரும் சமம். அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வு இல்லை,' என்று ஒரு நகரத்தில், ஒரு பிரசங்கியார் மேடைமீதிருந்து பணக்காரரும் சாதாரண அந்தஸ்துடையவர்களும் நிரம்பியிருந்த கூட்டத்தைப் பார்த்துச் சொன்னார். பணக்காரர்கள் செய்யும் அக்கிரமங்களை அவர் பலவாறு கண்டித்துப் பேசினார்.

'எல்லா வகையிலும் சமமா?' என்று ஒரு சாதாரண அந்தஸ்துடையவர் கேட்டார்.

'ஆம். நற்குண நற்செய்கைகளிலும், புத்தி சாதுரியத்திலும், எல்லாவற்றிலும் ஏற்றத் தாழ்வு இல்லை,' என்று பிரசங்கியார் பதிலளித்தார்.

'அப்படியானால், மனித சமூகத்தைச் சேர்ந்தவர்களான தனவந்தர்களும் சாதாரண அந்தஸ்துடையவர்களுங்கூடப் புத்தி சாதுரியத்திலும், மற்றெல்லாவற்றிலும் ஏற்றத் தாழ்வில்லாமலிருக்க வேண்டும். அப்படியிருக்க, நீர் ஏன் அவர்களைக் கண்டித்துப் பேச வேண்டும்?' என்று சாதாரண அந்தஸ்துடையவன் கேட்டான்.

37. சுவர்க்கத்திற்கு வழி

[பணப் பைத்தியம்!]

'சுவர்க்கத்திற்குச் செல்லும் வழி கரடுமுரடானது. அந்த வழியில் செல்லுதல் மிகவும் கஷ்டம்! ஆனால், சுலபமான வழியைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆசையுள்ளவர்கள் அந்த வழியை எளிதில் தெரிந்துகொள்ளலாம்,' என்று மதப் பிரசாரகர் ஒருவர், கள்ளிக்கோட்டைக் கடற்கரையில் பிரசங்கம் செய்தார்.

'இந்த ஆகாய வெளியைத் தாண்டிச் செல்லக் குறுக்கே எங்கே வழி இருக்கின்றது?' என்று ஏளனமாக ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டே குற்றஞ் சாட்டுபவன் ஒருவன் கேட்டான். தனக்கு ஒரு வழியும் தெரியவில்லையென்று அவன் சொன்னான்.

கூட்டத்திலுள்ளவர் அதைக் கேட்டுச் சிரித்தனர்.

மதப் பிரசாரகர் கேள்வி கேட்டவனைக் கடலைப் பார்க்கும்படிக்கும், மலேயா, பம்பாய், கொழும்பு, ஏடன் முதலிய இடங்களுக்குப் போகும் கடற்பாதைகளைக் காட்டும்படிக்கும் கேட்டார். 'கடற்பாதைகளை நான் காட்ட முடியாது. ஆனால், கப்பல் தலைவர்களும், மாலுமிகளும் அப்பாதைகளைக் காட்டக்கூடும்,' என்று அவன் பதில் சொன்னான்.

'இந்த விஷயத்திலும் அதே மாதிரி என்று வைத்துக்கொள். கடற்பாதைகள் இருக்கின்றனவென்பது உனக்குக் கேள்வி; ஆனால், உனக்குத் தெரியாது. அவைகளை மாலுமிகள் அறிவார்கள் என்பது உனக்குத் தெரியும். அது போலச் சுவர்க்க லோகத்திற்கும் பாதைகள் இருக்கின்றன என்று நம்புவதில் என்ன

ஆச்சரியமிருக்கிறது? அவை உனக்குப் புலப்படா. அந்த வழியில் செல்பவர்கள் கண்களுக்கு அப்பாதைகள் நன்ருகத் தெரியும்,' என்று மதப் பிரசாரகர் போதித்தார்.

கேள்வி கேட்டவன் வெட்கித் தலை குனிந்தான். முன் அவன் கேள்வியைக் கேட்டுச் சிரித்த ஜனங்கள், இப்பொழுது இந்தப் பதிலைக் கேட்ட பின்னரும் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

38. கிழக்கும் மேற்கும்

'கிழக்கு எப்பொழுதும் கிழக்கே; மேற்கு எப்பொழுதும் மேற்கே; கிழக்கும் மேற்கும் ஒன்று சேருதல் என்பது அசாத்தியமான காரியம்,' என்று மேடைமீது பிரசங்கம் செய்யும் பிரசங்கியார் ஒருவர் கூறினர்.

'அவை அப்போதே ஒன்று சேர்ந்துவிட்டன. உலகம் உருண்டை வடிவமாயிருப்பதனுல் கிழக்குத் திசைக்குக் கிழக்கும் மேற்குத் திசைக்கு மேற்கும் ஏதோ ஓர் இடத்தில் சந்தித்துத்தானுகவேண்டும். நீங்கள் சொல்வது 'பண்டைக்காலத்துச் சமாசாரம். உலகம் தட்டையாயிருந்ததென்று கருதி வந்த நாட்களில், நீங்கள் கூறியது போலவே மனிதர்கள் எண்ணியிருக்கலாம். இரயில் வண்டித் தொடர்களும், கப்பல்களும், ஆகாய விமானங்களும், தந்திக் கம்பிகளும் கண்டு பிடிக்கப்படாத காலத்தைக் குறித்து இப்போது பேசுவது சரியாகாது. உலகம் உருண்டை வடிவானது. இரயில் வண்டித் தொடர்கள், நீராவிக் கப்பல்கள், ஆகாய விமானங்கள், தந்திக் கம்பிகள், கம்பியில்லாத் தந்திகள் முதலியவை கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, நீங்கள் இப்போது கூறிய விஷயம்

சரியானதன்று,' என்று கூட்டத்திலிருந்த ஒருவர் சொன்னார்.

பிரசங்கியார் பழம்பாட்டைப் பாடுவது பயனற்ற தாயிற்று.

39. தேச வித்தியாசம்

'அந்நிய நாட்டுச் சாமான் எதுவும் நமக்கு இவ்விடத்தில் வேண்டுவதில்லை,' என்று ஒரு தேச பக்தர் ஜாதி மத வித்தியாசமில்லாத தம் சிநேகிதரிடம் சொன்னார்.

'இவ்விஷயத்தை ஆராய்ந்து பார்த்தால், பூமியின் மையத்திலிருக்கும் பாகத்தைத் தவிர, மற்றெல்லாப் பாகங்களும் அந்நிய நாடுகளென்றே நாம் கொள்ள வேண்டும். பூமியின் மேல் பரப்புக்கூட நமக்குச் சொந்தமானதன்று. அப்படியே மிருகங்களும், மரங்களும், நீங்களுங்கூட அந்நிய வஸ்துக்களென்றே கருத வேண்டும். இயற்கையில் மாறுதல்கள் ஏற்படுவது சாதாரணம். நமக்குச் சொந்தமானவை நமக்குச் சொந்தமில்லாதவை என்பன நமது மனோபாவத்தைப் பொறுத்திருக்கின்றன. அவற்றின் அர்த்தம் அவ்வப்போது மாறிக்கொண்டேயிருக்கும்,' என்று அந்தச் சிநேகிதர் பதில் கூறினார்.

அப்படியாயின், 'இத்தகைய மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணம் என்னவோ?' என்று அந்தத் தேச பக்தர் கேட்டார்.

'மாறுதல்கள் காலத்தைப் பொறுத்திருக்கின்றன. காலத்திற்கேற்பக் கோலங்களும், மற்ற விஷயங்களும் மாறிக்கொண்டேயிருக்கும்,' என்று சிநேகிதர் பதிலளித்தார்.

40. பணப் பைத்தியம்

'ஒரு மனிதன் இவ்வுலகில் தோன்றிய பொழுதே அவனுக்குப் பணத்தின்மீது ஆசை உண்டாகி விடுகிறது. இது மனித சுபாவம்,' என்று குற்றம் கண்டுபிடிக்கும் ஒருவன் சொன்னான்.

'இல்லை. ஒரு மனிதனுக்குப் பிறந்து வளர்ந்த பிறகுதான் பணத்தின்மீது ஆசை ஏற்படுகிறது,' என்று ஒரு தத்துவ விசாரகன் கூறினான்.

'நீ சொல்வது உண்மையென்பதைத் திருஷ்டாந்தமாகக் காட்ட வேண்டும்,' என்று குறை கூறுபவன் சொன்னான்.

தத்துவ விசாரகன் அவ்வாறே செய்ய ஒப்புக் கொண்டான். அவன் ஒரு வயது நிரம்பிய ஒரு பையனைக் கூப்பிட்டு அவனுக்கு ருசியுள்ள பழத்தைக் காட்டினான். குற்றஞ்சாட்டுபவனோ, பளபளவென்று மின்னிக்கொண்டிருந்த தங்க நாணயங்களைக் குலுக்கி அந்தப் பையனுக்குக் காட்டினான். பையன் தங்க நாணயத்தையும் பழத்தையும் மாறிமாறிப் பார்த்து விட்டு யோசனை செய்யாமல் நேராகத் தத்துவ விசாரகனிடம் சென்று, பழத்தை வாங்கிக்கொண்டான். அதைக் கண்ட தத்துவ விசாரகன் வெற்றியுடனும் மகிழ்ச்சியுடனும் பின் வருமாறு சொன்னான்:

'இப்போது பார்த்தனையா? குழந்தைகளின் பிடிவாதத் தன்மையும் விருப்பு வெறுப்புக்களும் பழக்க வழக்கங்களினாலேயே ஏற்படுகின்றன. சுயேச்சையாகப் பிறக்கும்போதே ஆசை என்பது ஏற்படுவதில்லை. அதனாலேதான் நாகரிகமற்ற ஜாதியினர் பண்டைக்காலத்தில் கண்ணாடி மணிகளுக்குப் பதிலாகத் தங்கப் பொடியை அள்ளிக் கொடுத்து வந்தனர்,' என்றான்.

41. காட்டலாக்கு வியாபாரம்

[உபாத்தியாயர் யுக்தி]

மோகனூரில் ஒரு சிறு பாடசாலை இருந்தது. அந்தக் கிராமம் ஒரு மூலையில் இருந்ததால், மாணுக்கர் பல விதத்தில் கஷ்டப்பட்டனர். பரீக்ஷைக் காலங்களில் விடைகளை எழுதுவதற்குக் கொடுக்கப்படும் இலேசான காகிதங்களில், அடியில் வைத்துக்கொண்டு எழுதக் கெட்டியான அட்டையில்லாமல் எழுத முடியாது. அத்தகைய அட்டைகளைப் பாடசாலை அதிகாரிகள் கொடுக்காததனுல், மாணுக்கர் அதிக கஷ்டப்பட்டனர். பணக்கார மாணுக்கர் மாத்திரம் நல்ல அட்டைகளை விலை கொடுத்துத் தமது சொந்தச் செலவில் வாங்கி வைத்துக்கொண்டனர்.

அந்தப் பாடசாலையின் தலைமை உபாத்தியாயரும் மற்ற ஐந்து உபாத்தியாயரும் மேற்கூறிய விஷயத்தைக் குறித்து ஆலோசனை செய்தனர். ஒரு தகுந்த உபாயம் ஓர் உபாத்தியாயருக்குத் தோன்றிற்று: சென்னையிலுள்ள பல கம்பெனிகளிலிருந்து சாமான்கள் வாங்கப் போவதாகச் சொல்லி, காட்டலாக்குகளை (பெயரேட்டுப் புத்தகங்களை) வரவழைக்க வேண்டுமென்றும், அவைகளை அட்டைக்குப் பதிலாக அடியில் வைத்து எழுதுவதற்கு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அந்த உபாத்தியாயர் எடுத்துச் சொன்னுர்.

'பெரிய கம்பெனிக்காரர்கள் தபாற்செலவுகூட இல்லாமல் காட்டலாக்குகளை அனுப்புவார்கள். காட்டலாக்குகளை அனுப்பும்படி கார்டு ஒன்று எழுதிப் போடுவதற்கு நமக்கு ஒரு முக்காலணு செலவாகப்

போகிறது. அந்தக் கம்பெனிக்காரர்கள் பொது மக்களுடைய பணத்தை உறிஞ்சிக்கொண்டிருப்பதால், நாம் அவர்களிடம் இரக்கம் கொள்ள வேண்டா. ஏழைகளுக்காகப் பணக்காரர்களுக்கு இத்தகைய வரி விதிப்பதில் பாவம் ஒன்றுமில்லை,' என்று அந்த உபாத்தியாயர் சொன்னார்.

'மிகவும் நல்ல யோசனை!' என்று தலைமை உபாத்தியாயரும் மற்ற உபாத்தியாயரும் அந்த உபாத்தியாயரைப் புகழ்ந்து பேசினர்; பிறர் நன்மைக்காக அவர் கொண்டிருந்த சிரத்தையையும் பாராட்டிப் பேசினர்.

அந்த உபாத்தியாயருக்கோ, சந்தோஷம் பொங்கிற்று. அவருடைய மனத்தில் மற்றோர் எண்ணம் உதித்தது. அதாவது, தலைமை உபாத்தியாயரும் மற்ற உபாத்தியாயர்களும் கம்பெனிகளுக்குக் காட்டலாக்குகளை அனுப்பும்படி எழுதிப்போட வேண்டுமென்பதும், அவர்கள் எழுதினால்தான் கம்பெனிக்காரர்கள் அனுப்புவார்கள் என்பதுமே அந்த எண்ணம். அனைவரும் சம்மதித்தனர். கம்பெனிகளின் ஜாபிதா இருந்த புத்தகத்திலிருந்து யோசனை கூறிய உபாத்தியாயர் சென்னையிலிருந்த இருபத்து ஐந்து பெரிய கம்பெனிகளுடைய முழு விலாசங்களையும் எழுதிக்கொண்டு வந்தார். அப்பள்ளிக்கூடத்தில் சுமார் முந்நூறு மாணாக்கர் படித்து வந்தனர். அந்த ஆறு உபாத்தியாயர்களும் சேர்ந்து, ஒரே சமயத்தில் நூற்றைம்பது காட்டலாக்குகளை வரவழைக்கக்கூடும். ஆகவே, நூற்றைம்பது மாணாக்கரும் தலைக்கு ஒரு முக்காலணைக் கார்டு கொண்டுவர வேண்டுமென்று உத்தரவிடப்பட்டனர். இருபத்தைந்து மாணாக்கர் ஓர் உபாத்தியாயர் வசம் விடப்பட்டனர். முறையே ஒவ்வொரு பைய

னுக்கும் ஒவ்வொரு கம்பெனியின் விலாசம் கொடுக்கப் பட்டது. பிறகு முறையே ஒவ்வோர் உபாத்தியாயரும், இருப்பதைந்து கார்டுகளில் விலாசத்தை எழுதி, காட்டலாக்குகளை அனுப்பும்படி எழுதிக் கையொப்ப மிட்டு, தபாலில் போட்டுவிட்டனர். அதே மாதிரி யாக ஆறு உபாத்தியாயர்களும் செய்தார்கள். ஒவ் வொரு கடிதத்திலும் கீழே குறிப்பிட்டபடியே எழு தப்பட்டிருந்தது:—

கனவான்களே,

உங்களிடமிருக்கும் வஸ்துக்களில் சிலவற்றை வாங்க வேண்டுமென்னும் எண்ணம் எனக்கிருப்ப தால், தயவு செய்து மறு தபாலில், உங்கள் கம்பெனி யார் பிரசுரித்திருக்கும் காட்டலாக்கு ஒன்று அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் நம்பிக்கையுள்ள,
(கையொப்பமிடப்பட்டது)

X அவர்கள்,
தலைமை உபாத்தியாயர் (அல்லது) உபாத்தியாயர்,
போர்டு லோயர் செகண்டரிப் பாடசாலை,
மோகனூர், மோகனூர்ப் போஸ்டு.

சென்னையிலிருந்த கம்பெனிக்காரர் கடிதங்களைக் கண்டு அதிக சந்தோஷமடைந்தனர். ஏதோ ஒரு கிராமத்திலிருந்து எதிர் பாராமல் கடிதங்கள் வந்து விழுவதைக் கண்ட கம்பெனிக்காரர்கள், தங்களுக்கு வியாபாரம் செய்வதற்கு ஒரு புதிய இடம் கிடைத் ததைக் கண்டு ஆனந்தமடைந்தவர்களாய், தாமத மில்லாமல், மறு தபாலிலேயே கேட்டலாக்குகளை அனுப்பிவிட்டார்கள். அந்தக் கிராமத்திலிருந்த தபாலாபீசுக்கு வரும் காட்டலாக்குகளை உடனே வாங்

கிக்கொள்ளாவிட்டால், போஸ்டு மாஸடர் எடுத்துக் கொள்வது வழக்கமாயிருந்தது. அந்த வழக்கத்தைத் தெரிந்திருந்த உபாத்தியாயர்கள், மாணுக்கர்களைக் கூட்டமாகத் தபாலாபிசுக்கு அனுப்பினுர்கள். தபாற் பைகளைத் திறக்கும்போதே பார்த்துக்கொண்டிருக் கும்படி மாணுக்கர்களிடம் உபாத்தியாயர்கள் முன்னமே சொல்லி அனுப்பினுர்கள். சில தினங்கள் மோகனுருக்குத் தபாற்பைகளைத் தூக்கிச் செல்லும் தபாற்சேவகன் பைகளின் பாரம் சுமக்க மாட்டாமல் தவியாகத் தவித்தான். ஒவ்வொரு தபாலிலும் கேட்டலாக்குகள் வந்து விழுந்தன. ஏழு தினங்களுக் குள் நூற்றைம்பது கேட்டலாக்குகளும் உபாத்தி யாயர்கள் கையில் வந்து சேர்ந்துவிட்டன. அவர்களும் அவற்றை மாணுக்கர்களுக்குக் கொடுத்துவிட்டார் கள். மாணுக்கர்கள் அதிக கவனத்துடன் கண் குத்திப் பாம்புபோலப் பார்த்துக்கொண்டிருந்த தனுல், போஸ்டு மாஸ்டரால் ஒரு கேட்டலாக்கைக் கூட எடுத்து வைத்துக்கொள்ள முடியவில்லை. அழகிய கேட்டலாக்குகளைப் பார்த்து மாணுக்கர் அளவிலாச் சந்தோஷமடைந்தனர். சில கேட்டலாக்குகள் பார்ப்பதற்கு அழகாயும், பெரியனவாயுமிருந்தன. அவற்றைக் கண்டு சில மாணுக்கர் பொருமை கொண் டனர். ஆனுல், ஒருவரும் தம் குறைகளை வெளியே சொல்லிக்கொள்ளவில்லை. அந்தக் கிராம வாசிக ளுள் சிலர் அழகிய காட்டலாக்குகள் தபாற்செல வின்றி வருவதைக் கண்டு, ஆசைப்பட்டு, கம்பெனிக ளுக்குத் தாமும் எழுதிக் காட்டலாக்குகளை வரவழைத் துக்கொண்டனர். வியாபாரிகள் சர்க்கரை முதலிய வஸ்துக்களைக் கட்டுவதற்குக் காட்டலாக்கிலுள்ள

காகிதங்களை உபயோகித்துக்கொண்டார்கள். எழுத்தாளர்கள் அட்டையாக உபயோகித்துக்கொண்டார்கள். சிறுபிள்ளைகள் அவற்றிலுள்ள சித்திரங்களைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். நூற்றுக்கணக்கான தபாற்கடிதங்கள் அந்த இருபத்தைந்து கம்பெனிகளுக்கும் பறந்தன. ஒரே மாதிரியாகக் காட்டலாக்கு வேண்டுமென்று அக்கடிதங்களில் எழுதப்பட்டிருந்தது. கம்பெனிக்காரர்களுக்குச் சிறிது மனக்கிலேசம் ஏற்பட்டது. வருஷ ஆரம்பத்தில் முதல் இரண்டு மாதங்களுக்குள்ளேயே அச்சடித்து வைக்கப்பட்டிருந்த காட்டலாக்குச் செலவாகிவிடும்போல அவர்களுக்குத் தோன்றிற்று. மோகனூரிலிருந்த நூற்றுக்கணக்கான மனிதருள் ஒருவராவது, ஒரு குண்டூசியைக்கூட அக்கம்பெனியார்களிடம் வாங்கவில்லை. கம்பெனியார்களோ, அதிக தபாற்செலவு செய்து காட்டலாக்குகளை அந்தக் கிராமவாசிகளுக்கு அனுப்பியிருந்தார்கள். ஆகவே, காட்டலாக்குகளை அனுப்புவது அசட்டுத் தனம் என்று அவர்களுக்குத் தோன்றிற்று. அவர்களுக்குக் கோபம் வந்தது. முக்கியமாக மிகவும் அழகுள்ள பெரிய காட்டலாக்குகளை அச்சிட்டு அனுப்பியிருந்த **'பீக்காக்குக் கக்கூ அண்டு பிரதர்ஸ்'** என்னும் கம்பெனியார்களுக்கு அதிக மன வருத்தம் உண்டாயிற்று. அவர்களுடைய கம்பெனிக் காட்டலாக்குகளே அதிகம் மோகனூருக்கு அனுப்பப்பட்டனவென்று சொல்லலாம். அந்தச் சமயத்தில் புத்திசாலியான உபாத்தியாயர் ஐம்பது மாணாக்கர்களைப் 'பீக்காக்குக் கக்கூ அண்டு பிரதர்ஸ்'என்னும் கம்பெனிக்குக் காட்டலாக்குகளுக்கு எழுதும்படி சொன்னார். அவர்களும் வழக்கம்போல எழுதினார்கள்.

விஷயம் வரம்பு மீறிவிட்டது. நாலு தினங்கள் கழிந்த பிறகு காட்டலாக்குகளை எதிர் பார்த்த மாணைக்கர்கள் தபாலாபீசுக்குச் சென்று ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார்கள். ஐம்பது காட்டலாக்குகளுக்குப் பதிலாக ஒரு கடிதம் மாத்திரம் அக்கம்பெனியிலிருந்து வந்திருந்தது. அது அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயர், மற்ற உபாத்தியாயர்கள், பள்ளிக்கூடத்து மாணைக்கர்கள், மோகனூர் மகா ஜனங்கள் முதலிய எல்லாருக்கும் பொதுவாக எழுதப் பட்டிருந்தது. அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது :

சென்னை,
11—4—1926.

அன்புள்ள கனவான்களே,

எங்களிடமிருந்து உங்களுக்கு முக்கியமாக வேண்டியிருக்கும் பொருள் எங்களுடைய காட்டலாக்குத்தான் என்று தோன்றுகிறது. அதற்கு வேண்டிய தபாற்செலவுகளைக்கூட நீங்கள் செலவழிக்க முன் வரவில்லை. ஆதலால், காட்டலாக்குகளுக்கென்று உங்களிடமிருந்து வந்த கார்டுகளை நாங்கள் கிழித்துக் குப்பையில் எறிந்துவிட்டோம். இனிமேல் எங்களை ஏமாற்றும் எண்ணத்துடன் இம்மாதிரி நீங்கள் செய்வீர்களானால், நாங்கள் உங்கள்மீது நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடுக்க வேண்டி நேரிடுமென்பதை நீங்கள் கண்டிப்பாக அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் நம்பிக்கையுள்ள
குரோ கிரேன்,
பீக்காக்குக் கக்கூ அண்டு பிரதர்ஸ்

கம்பெனியின் சார்பாக—மற்றக் கம்பெனிகளுக்கும் காட்டலாக்குகளுக்கு எழுதிய போது அக்கம்பெனிகளிலிருந்தும் காட்டலாக்குகள் அனுப்பமுடியாதென்று கடிதங்கள் வந்தன. தலைமை உபாத்தியாயரும், மற்ற உபாத்தியாயர்களும் மனம் வருந்தினார்கள். ஆனால், அந்த யுக்தியைக் கூறிய உபாத்தியாயர் மாத்திரம் சந்தோஷப்பட்டார்.

'அவர்கள் என்ன வேண்டுமென்றாலும் பிதற்றிக் கொள்ளட்டும். நாம் என்னவோ நூற்றைம்பது காட்டலாக்குகளைச் செலவில்லாமல் சம்பாதித்துவிட்டோம்! நாம் செய்தது இலேசான காரியமா?' என்று அந்த உபாத்தியாயர் எடுத்துச் சொல்ல, மற்றவர் ஒருவாறு சந்தோஷமடைந்தனர்.

42. சமதருமம்

[அரசன் பெற்ற படிப்பினை]

பிடித்ததைச் சாதிக்கும் அரசன் ஒருவன் இருந்தான். தனது அரசாங்கத்தில் வித்தியாசமேயில்லாமல் எல்லாம் ஒரே மாதிரியாகத்தானிருக்க வேண்டுமென்று அவன் எண்ணினான். எல்லாரும் ஒரே மாதிரியான ஆடைகளையே அணிய வேண்டுமென்றும், ஒரே மதத்தை அனுசரிக்க வேண்டுமென்றும், ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களுடன் ஒழுக வேண்டுமென்றும், ஒரே மாதிரியான ஆட்டங்களை ஆட வேண்டுமென்றும், ஒரே மாதிரியான ஆகாரத்தைச் சாப்பிட வேண்டுமென்றும், ஒரே பாஷையைப் பேச வேண்டுமென்றும் அந்த அரசன் தன் பிரஜைகளைக் கட்டாயப்படுத்தினான்.

இதனால், பிரஜைகள் அரசன்மீது வெறுப்புக் கொள்வார்கள் என்று அரசாங்க விதூஷகன் மாத்திரம் எண்ணினான். கண் மூடித்தனமாக உத்தர வளித்த அரசன்மீது பிரஜைகளுக்குக் கோபம் உண்டாவது நிச்சயம் என்பது விதூஷகனுக்கு நன்றாகத் தெரியும். அவ்விதம் வெறுப்பு உண்டாகும்படி செய்ய அவனுக்கு இஷ்டமில்லை. அரசன் கட்டளைகள் அநியாயமானவைகளென்றும், கொடுமையானவைகளென்றும் அரசனிடம் சொல்ல ஒருவருக்கும் தைரியமில்லை. அதுவும் விதூஷகனுக்கு நன்றாகத் தெரியும். ஆதலால், அவன் தானே தைரியத்துடன் அரசனிடம் சென்று, அரசனிடும் கட்டளை அநியாயமானதென்று முறையிட்டான். ஆனால், ஒன்றும் பலிக்கவில்லை. ஐந்து விரல்களும் ஒன்றாயிராமல் வித்தியாசத்துடனிருப்பதனாலேதான் அழகுடனிருக்கின்றன என்றும், மலைத்தொடர்கள் பெரியவையும் சிறியவையுமாயிருப்பதனாலேதான் அழகுடன் விளங்குகின்றன என்றும், நதிகளின் நீளமும் அகலமும் ஒரேமாதிரியாயிராமல் வித்தியாசத்துடனிருப்பதனாலேதான் நதிகள் பார்ப்பதற்கு அழகாயிருக்கின்றனவென்றும், மிருகங்கள் அழகாயிருப்பதற்கும் காரணம் வித்தியாசமேயென்றும் விதூஷகன் எடுத்துக் கூறிய காரணங்கள் அரசன் செவிகளில் விழவேயில்லை. ஒரு நாள் விதூஷகன் அரண்மனை யானைகளுக்கிருக்கும் தந்தங்களையெல்லாம் ஒரே அளவுக்கு வெட்டிவிடும்படி உத்தரவிட்டான். வேலையாட்கள் அவ்வாறே செய்துவிட்டார்கள். தன் யானைகளின் மீதும், அவற்றின் தந்தங்களின்மீதும் அதிக ஆசை வைத்திருந்த அரசனுக்குத் தன் யானைகளைக் கண்ட

தும் கோபம் பொங்கிற்று. உடனே அவன் விதூஷகனை அழைத்து வரச் சொன்னான்.

விதூஷகன் வந்ததும் அரசன், 'மூடா, நீ ஏன் இப்படிச் செய்தாய்?' என்று கேட்டான்.

'மூடா, நீ ஏன் இப்படிச் செய்தாய்?' என்று விதூஷகன் அரசன் சொன்னதையே திருப்பிச் சொன்னான்.

'மடப்பயலே, நீ என்ன கிளிப்பிள்ளையா, சொன்னதைச் சொல்ல?' என்று அரசன் கடுங்கோபத்துடன் கேட்டான்.

'நீங்கள் வாழ்க்கையில் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று எண்ணிவிட்டதாக நான் நினைத்தேன். அதனாலேதான் நானும் யானைகளின் தந்தங்கள் ஒரே நீளமுள்ளனவாயிருக்கும்படி வெட்டச் சொன்னேன். அந்தக் காரணம்பற்றித்தான் நீங்கள் சொன்ன வார்த்தைகளையே நானும் திருப்பிச் சொன்னேன்,' என்று விதூஷகன் எடுத்துச் சொன்னான். அரசன் வெட்கிப்போய்த் தனது உத்தரவை நீக்கி விட்டான்.

43. அரசன் படையணி பார்த்தல்

பட்டாபிஷேக தினத்தன்று தங்கள் படையை மேற்பார்வையிடும் வழக்கம் அரசர்களிடம் நெடுங்காலமாய் இருந்துவருகிறது. இந்து தேசத்துப் படைகள் வீர தீர சௌரியத்துடன் இருக்கின்றனவா என்று அரசர்கள் பரிக்ஷை செய்வது வழக்கம்.

கீர்த்தி வர்மன் என்னும் அரசன் பட்டாபிஷேக தினத்தன்று புராதன வழக்கப்பிரகாரம் படையணி

வகுப்பைப் பார்த்தான். அவன் ஒரு படை வீரனைக் கூப்பிட்டு, நாற்பது அடி உயரமுள்ள மரத்தின்மீது ஏறிக் கீழே குதிக்கும்படி கட்டளையிட்டான். உடனே அப்படை வீரன் மரத்தின்மீதேறிக் கீழே குதித்தான். உடனே அவன் இறந்து போனான். இறந்து போன படை வீரனுடைய மனைவிக்கும் சுற்றத்தாருக்கும் அரசன் நல்ல உபகாரச்சம்பளம் கொடுத்து உதவினான். பெரிய போர் வீரனுக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளையெல்லாம் செய்து இறந்த போர் வீரனுடைய பிரேத தகனக் கிரியைகளைச் செய்யும்படி அரசன் உத்தரவிட்டான்; பண்டைக்காலந்தொட்டுப் படை வீரர்களுக்கு இருந்துவந்த தைரியமும் திறமையும் அந்தப் போர் வீரர்களுக்கிருக்கின்றனவென்று அரசன் சொல்லிவிட்டுப் படையணியைப் பார்த்து முடித்துவிட்டதாகக் கூறினான்.

வேறு தேசத்தானொருவன் மேற்கூறிய சம்பவத்தையும், அரசனுடைய கொடிய உத்தரவையும், அதனால் ஏற்பட்ட கோரமான மரணத்தையும் கண்டு சகியாது, அரசன் செய்தது நாகரிகத்திற்கு முற்றிலும் விரோதமான காரியம் என்று சொன்னான்.

'இது விரோதமான காரியமன்று. சண்டைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தச் சம்பவம் ஒரு போதும் நாகரிகமற்றதாகாது. உத்தரவுப்படி யுத்தத்தில் பதில் பேசாது நடந்தே தீரவேண்டும். அஞ்சா நெஞ்சும், அபார தைரியமும், ஒரு விநாடியில் இறந்து போகத் தயாராயிருக்கும் தன்மையும், யுத்தத்தில் கலந்துகொள்ளும் போர் வீரர்களுக்கு இருந்தே தீர வேண்டும். மேற்கூறிய குணங்களெல்லாம் இப்படை வீரர்களுக்கு இருக்கின்றனவா என்று ஒரு படை

வீரனைக் கூப்பிட்டு நான் பரிக்ஷை செய்து பார்த்தேன். அவனுடைய சொந்தக்காரர்களுக்கோ, தகுந்த உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டது. தங்களுடைய படை வீரர்களுக்கு யுத்தத்தில் போர் புரியும் திறமை அழிந்துவிடாமலிருக்கச் சில அரசர்கள் உயிர்ச் சேதத்தை விளைக்கும் பல வீண் சண்டைகளில் கலந்து கொள்ளும்படி தங்கள் படைகளுக்கு உத்தரவிடுவது வழக்கம். நானோ, என்னுடைய போர் வீரர்களை எப்போதும் யுத்தம் செய்வதற்குத் தயாராயிருக்கும்படி செய்வதற்கு எப்போதாவது ஒரு தடவை ஒரு போர் வீரன் மடிந்துபோகும்படி செய்கிறேன். யுத்தம் என்னும் கொடிய ராக்ஷஸன் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் வரையில் இத்தகைய கோரமான சம்பவங்கள் நிகழ்ந்தேதீரும்,' என்று அரசன் அந்தமனிதனுக்கு விளக்கிச் சொன்னான்.

44. ஸ்திரீகள் கீழ்ப்பட்டவர்களே.

'ஸ்திரீகள் எப்பொழுதும் கீழ்ப்பட்டவர்களாகவே இருப்பார்கள். அவர்களால் போராட முடியாது. வேறு விஷயங்களில் முன்னேற்றமடைந்தாலும், இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவர்கள் கீழ்ப்பட்டவர்களாய் இருக்க வேண்டியதுதான். தங்களைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய சக்தியில்லாமல் எப்போதும் ஆண் மக்களையே துணையாகக் கொண்டிருக்கும் பெண் மக்கள், ஆண் மக்களுடன் சமமான உரிமை பெற ஏன் கஷ்டப்பட வேண்டும்? தங்களை இரட்சிப்பவர்களுடன் சமவுரிமை பெறப் பெண்கள் முயலுவது நியாயமாகும்?' என்று ஒரு சாமானிய மனிதன் கேட்டான்.

'அதே நியாயப்படி, ஆடவர்களும் எப்போதும் கீழ்ப்பட்டவர்களே என்பது ஏற்படுகிறது. அவர்களால் ஒரு போதும் குழந்தைகளைப் பெற்றெடுக்க முடியாது. அவர்கள் வேறு விஷயங்களில் தங்கள் குறைகளை நீக்கிக்கொண்டாலும், தேக அமைப்பைப் பொறுத்திருக்கும் இதை மாத்திரம் அவர்களால் செய்ய முடியாது. பெண்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளை நம்பியிருக்கும் மனிதன் பெண்களுடன் சம உரிமை பெற முயலுவது நியாயமாகுமா?' என்று ஒரு சாமானிய ஸ்திரீ பதிலளித்தாள்.

45. பணமே பிரதானம்.

[கொள்கை உண்மையானதா?]

'வேதங்களைப் படிப்பதனால் உனக்கு என்ன இலாபம் ஏற்படுகிறது?' என்று தெய்வ நம்பிக்கை இல்லாத ஒருவன் சதா வேத பாராயணம் செய்து கொண்டிருக்கும் ஒரு பிராமணனைக் கேட்டான்.

'என்னுடைய ஆத்துமா திருப்தியடைகிறது,' என்று பிராமணன் பதிலளித்தான்.

'அதனால் என்ன பிரயோஜனம்? திரவியத்தைத் தவிர வேறெதுவும் இலாபமாகாதே!' என்று நாஸ்திகன் கூறினான்.

'இவ்வுலகில் திரவியத்தைவிடச் சிலாக்கியமான வஸ்து இல்லையா?' என்று பிராமணன் கேட்டான்.

'இல்லை. இவ்வுலகில் பணமே பிரதானமென்பதில் சந்தேகமேயில்லை,' என்று நாஸ்திகன் கண்டிப்பாகப் பதிலளித்தான்.

'ஆயினும், நீ உன் ஒரே மகளிடம் அன்பு வைத்திருக்கிறாய் அல்லவா? உன் திரவியத்தை இழக்கச்

சம்மதிப்பாயா அல்லது அரும்பாடு பட்டுப் பெற்றெடுத்த உன் ஒரே மகனை இழக்கச் சம்மதிப்பாயா ?' என்று பிராமணன் நாஸ்திகனைக் கேட்டான்.

'இதைக் கேட்பானேன்? என் திரவியத்தை இழக்கத்தான் நான் சம்மதிப்பேன்,' என்று நாஸ்திகன் பதிலளித்தான்.

'ஒரு மகனைக் காப்பாற்றுவதில் ஒருவனுக்கு அவ்வளவு ஆசையும் திருப்தியும் சந்தோஷமும் இருக்குமானால், உண்மையில் மெய்ப்பொருளாகிய தெய்வசொரூபத்திற்குச் சமானமான வேத பாராயணம் செய்வதில் எவ்வளவு ஆனந்தமும் திருப்தியும் இருக்கவேண்டுமென்பதை நீ ஊகித்துக்கொள்ளலாம்,' என்று பிராமணன் பதிலளித்தான்.

46. பொய்ச் சாட்சி அகப்பட்டுக்கொண்டான்.

ஓர் ஏரியைப்பற்றிய விவாதம் ஒன்று, கிராமவாசிகளுக்கும் செல்வாக்குள்ள ஒரு பிரபுவுக்கும் நடந்தது. ஏரியின் சொந்தக்காரர் யார் என்று நிர்மாணிக்க வேண்டி நேர்ந்தது. பிரபு பணக்காரனாயிருந்ததால், பணம் கொடுத்துப் பல பொய்ச் சாட்சிகளை ஏற்பாடு செய்திருந்தான். ஆகவே, பிரபுவின் கக்ஷியை ஆதரித்துப் பேசப் பல சாட்சிகள் இருந்தார்கள். அந்த ஏரி நெடுங்காலமாக அங்கு இருக்கவில்லையென்றும், அது தன் தகப்பனால் நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முன்புதான் கட்டப்பட்டதென்றும் பிரபு சொன்னான். தன் தகப்பன் சொந்தச் செலவில் அந்த ஏரியைக் கட்டியதாகப் பிரபு சாதித்தான்.

அக்காலத்தில் அரசர்களே நீதிபதிகளாய் இருந்தார்கள். ஆதலால், சட்டப்படிக்கும் முறைப்படிக்கும்

வழக்குகள் நடத்தப்படுவது வழக்கத்திலில்லாம லிருந்தது. ஏதோ ஒரு வழியில் உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டுவதையே அவர்கள் தங்கள் நோக்க மாகக் கொண்டிருந்தார்கள்.

முக்கியமான ஒரு சாட்சிக்கு அதிக திரவியம் கொடுத்து, தன் கக்ஷியின் சார்பாகச் சாட்சியம் சொல் லப் பிரபு ஏற்படுத்தியிருந்தான். அந்தச் சாட்சி சொல் வதனால் தன் கக்ஷி ஜயித்தாலும் சரி, தோல்வியடைந் தாலும் சரி என்று பிரபு கண்டிப்பாகச் சொல்லிவிட் டான். அந்தச் சாட்சி அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

'நீ பிரபுவின் கக்ஷியைச் சேர்ந்தவனல்லவா?' என்று அரசன் கேட்டான்.

'அல்ல,' என்றான் சாட்சி.

'பொய்ச் சாட்சி சொல்வதற்காக உனக்குப் பணம் கொடுத்து உன்னைப் பிரபு அமர்த்தவில்லையா?' என்று அரசன் சாட்சியைக் கேட்டான்.

'அமர்த்தவில்லை,' என்று கோபத்துடன் சாட்சி பதிலளித்தான்.

'இந்த ஏரி, ஏற்பத்தைந்து வருஷங்களுக்கு முன்பு பிரபுவின் தகப்பனால் கட்டப்பட்டதென்று நீ சொல்லப் போகின்றாயல்லவா?' என்று அரசன் கேட்டான்.

அரசன் தன் மோசத்தைக் கண்டுகொண்டா னென்றும், பொய் சொன்னால் தனக்குத் தண்டனை கிடைக்குமென்றும், தன் மானம் போய்விடுமென்றும் பயந்து, அந்தச் சாட்சி பின் வருமாறு உண்மையைச் சொன்னான்:

'நான் அப்படிச் சொல்லப்போவதில்லை. இந்த ஏரி உண்மையில் நெடுங்காலத்துக்கு முன்பு ஏற்பட்டது. எப்பொழுது ஏற்பட்டதென்பதை ஒருவராலும் சொல்ல முடியாது. எனக்கு எண்பத்தேழு வயதாகிறது. என் ஐந்தாவது வயது முதல் எனக்கு ஏரி இருந்த விஷயம் நன்றாக ஞாபகத்திலிருக்கிறது. என் தகப்பனாருடைய ஐந்தாவது வயதிலும், என் பாட்டனாரின் ஐந்தாவது வயதிலுங்கூட இந்த ஏரி இருந்ததாக அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆகவே, மஹாராஜாவே, உண்மையைக் கூறுவதற்கே இங்கு வந்தேனென்பதைத் தாங்கள் அறிந்துகொள்ளும்படி நான் தங்களை வேண்டிக்கொள்கிறேன்,' என்றான்.

'நீ இங்கு வந்த போது உண்மையைச் சொல்ல வேண்டுமென்னும் உத்தேசத்துடன் வந்தாயோ, அல்லது வேறு உத்தேசத்துடன் வந்தாயோ, நான் சொல்ல முடியாது; ஆனால், இப்போது நீ பேசியது மாத்திரம் உண்மையென்று நான் கண்டிப்பாகச் சொல்வேன்,' என்று அரசன் சிரித்துக்கொண்டே கிராம வாசிகள் சார்பாகத் தீர்ப்புக் கூறினான்.

47. சம பாவனையுள்ள முதல் சங்கம்

'முதன்முதல் ஸ்தாபிக்கப்பட்ட சமபாவனையுள்ள சங்கம் எது?' என்று ஓர் அரசன் தனது அரசாங்கத்திலிருந்த கற்றறிந்தாரைக் கேட்டான். சரியான விடையளிப்பவருக்கு நல்ல பரிசு கொடுப்பதாகவும் அரசன் சொன்னான்.

'குடும்பம் என்பதுதான் முதன்முதல் ஏற்படுத்தப்பட்ட சம பாவனையுள்ள சங்கமாகும். மனித

வர்க்கங்களில் எங்குப் பார்த்தாலும் குடும்பங்கள் இருந்து வந்திருக்கின்றன,' என்று ஒருவன் சொன்ஞன்.

'அந்த அபிப்பிராயத்தை எதிர்த்துப் பலர் பேசினர். அநேக ஜாதியினருள் குடும்ப வாழ்க்கை என்று சொல்லக் கூடியதே இல்லையென்று சிலர் கூறினர். குடும்ப வாழ்க்கை இன்னதென்பதே தெரியாத மரபினர் அநேகர் உலகில் இருக்கின்றனரென்று சிலர் கூறினர்.

குடும்பங்கள் என்று சில ஜாதியார் கருதுபவை, நமது இந்து தேசக் கொள்கைப்படி குடும்பங்களாகவே மாட்டா! இந்து தேசாசாரப்படி குடும்பங்களில் தூர பந்துக்களுங்கூட வசித்து வந்தார்கள். ஐரோப்பியர் கணவன், மனைவி, மக்கள் என்பவர்களையே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதி வந்தனர். தாய் தகப்பன்மார்களைக்கூடக் குடும்பத்தினராக ஐரோப்பியர் கருதுவதில்லை. ஆதலால், முதலிற் கூறியவனுடைய அபிப்பிராயத்தை ஒருவரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

மற்ருெரு கற்றறிந்த வித்துவான், 'விவாகம் என்பதுதான் முதலில் ஏற்பட்ட சம பாவனையுடன் கூடிய சங்கம்,' என்று சொன்ஞர். நூற்றுக் கணக்கான வித்துவான்கள் அந்த எண்ணத்தை எதிர்த்துப் பேசி, அது தவறென்று கூறிவிட்டார்கள். அநேக ஜாதியினருக்குக் கலியாணம் என்பது என்னவென்பதே தெரியாது. ஒழுங்கீனமும் குழப்பமும் நிரம்பிய பல ஜாதியார்களுக்குள் கலியாணம் என்பது இருப்பதற்கே நியாயமில்லையென்று பலர் பல காரணங்களை எடுத்துக் கூறினர்.

'கடவுளைத்தான் சம பாவனையுடைய முதற் சங்கமென்று சொல்லலாம்,' என்று வேறொரு புலவர் சொன்னார். அந்த அபிப்பிராயமும் தவறென்று எளிதில் கூற முடியாமல் கற்றறிந்தார் சிறிது ஆலோசித்தனர். பிறகு சிலர் அதுவும் நம்பத்தகுந்ததல்லவென்றும், தெய்வத்தன்மையை அறியாத பலர் உலகில் இருக்கின்றனரென்றும், தெய்வம் ஒன்று உண்டென்பதிலேயே நம்பிக்கையில்லாத அநேகர் இப்பிரபஞ்சத்தில் உளர் என்றும் தர்க்கம் செய்தனர்.

ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த அறிஞர் ஒருவர் எழுந்து நின்று, பின் வருமாறு சொன்னார்:

'குடும்பம், விவாகம், தெய்வம் முதலியவைகள் ஒரு போதும் சம உரிமைச் சங்கங்களாகமாட்டா. முதன்முதல் தோன்றிய சம பாவனையுள்ள சங்கம் பிசாசுகள் என்பதில் சந்தேகமேயில்லை. பிசாசுகளுக்கு நம்பிக்கையில்லாத தேசமோ, ஜாதியோ, கூட்டத்தினரோ இல்லை. பிசாசுகள் இருக்கின்றனவென்று அநேக வருஷங்களாக அனைவரும் சொல்லிக்கொண்டேயிருக்கின்றனர். அவற்றின் செயலைக் குறித்தும் அபிப்பிராய பேதம் இல்லை. அவை பிளவுள்ள பாதங்களையுடையவையென்றும், கொடிய செயல்களைச் செய்யும் சுபாவத்தையுடையவையென்றும், புத்திசாலித்தனம் உள்ளவையென்றும், இரத்தத்தை உறிஞ்சுவதில் பிரியமுள்ளவையென்றும், எப்பொழுதும் சுறுசுறுப்புடன் திரிந்துகொண்டிருப்பவையென்றும் எல்லாரும் சொல்லிக்கொள்கின்றனர். ஆகையால், அவற்றையே, உலகில் முதலில் தோன்றிய சம பாவனையுடைய சங்கமாக நாம் கருத வேண்டும்!'

அவர் கூறியவற்றை அனைவரும் ஆமோதித்தனர். ஆகவே, அரசன் அவருக்குப் பரிசைக் கொடுத்தான்.

48. நன்றி கெட்ட தனயன்

[தாயை அவமதித்ததற்குத் தகுந்த படிப்பினை]

சாம்பன் என்னும் பெயருடைய பையன் பரம ஏழையாயிருந்தான். அவன் ஐந்தாவது வயதில் அவனையும் அவனுடைய தாயையும் தவிக்க விட்டு அவன் தந்தை இறந்து போனான்.

தந்தை இறந்து போனதால் மகன் கஷ்டப்படக் கூடாதென்று தாய் கருதினாள். ஆகவே, அவள் கூலி வேலை செய்து, தன் மகனைப் படிக்க வைத்தாள்; அவனுக்குக் குறைவில்லாமல் அன்ன ஆகாரமளித்து வந்தாள். அதிகாலையில் எழுந்து அலைந்து திரிந்து, சாணத்தைச் சேர்த்து வறட்டி தட்டி, அவள் விற்பது வழக்கம். கிராம வாசிகள் அடுப்பெரிக்க வறட்டியை வாங்குவார்கள். அவள் ஓர் எருமையை வளர்த்து வந்தாள்; எருமைப் பால், தயிர், மோர், நெய் முதலியவைகளை விற்றுப் பணம் சம்பாதித்து வந்தாள். சமையல் செய்வதற்கும், மாவு அரைத்துக் கொடுப்பதற்கும், தின்பண்டங்கள் செய்து கொடுப்பதற்கும், இன்னும் பல சில்லறை வேலைகளைச் செய்வதற்கும் அவள் செல்வந்தர்கள் வீடுகளுக்கு அடிக்கடி சென்று பணம் சம்பாதிப்பது வழக்கம். சில சமயத்தில் அவளுக்குச் செலவின்றிச் சாப்பாடு கிடைக்கும். காலணாவோ, அரையணாவோ அவளுக்குக் கூலியும் கிடைக்கும். அதைத் தவிர அவள் ஊறுகாயும் பக்ஷணங்களும் செய்து விற்று வந்தாள். தினந்தோறும் அவள் மலைகளுக்குச் சென்று புல் அறுத்து வந்து தனது எருமைக்கும் வைத்துக்கொண்டு விற்பதும் வழக்கம். மேற்கூறிய பல வகைகளில் அவள் தன் மகனுடைய

ஆடைகளுக்கும், பள்ளிக்கூடச் செலவிற்கும், ஆகாரத்திற்கும் வேண்டிய பொருளைச் சம்பாதித்து வந்தாள்.

அந்தப் பையன் நன்றாகச் சாப்பிட்டு வந்தான்; பதினாறு வயது நிரம்பியதும், ஆறடி மூன்று அங்குலமுள்ள பெரிய மனிதனாய் வளர்ந்துவிட்டான். நாற்பத்திரண்டு அங்குலச் சுற்றளவுள்ள மார்பும், அதற்குத் தகுந்த வலிமையும் அவனுக்கிருந்தன. விலை உயர்ந்த நல்ல ஆடைகளையே அவன் உடுத்து வந்தான்.

அவன் தாய் மாத்திரம் சாதாரண ஆகாரத்தையே புசித்து வந்தாள்; கந்தல் துணிகளையே உடுத்து வந்தாள். தன் மகனுக்குக் கஷ்டத்தை உண்டுபண்ணமல் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்காக அவள் ஆயிரம் பாடு பட்டு வந்தாள். அவன் பதினாறுவது வயதில் மெற்றிக்குலேஷன் பரீக்ஷையில் கீர்த்தியுடன் தேறினன். அதைக் கேட்டு அவள் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள். தன் மகன் நல்ல வேலையில் அமர்ந்து தன்னைக் காப்பாற்றித் தன் மனத்திற்கு அமைதியை உண்டுபண்ணும் காலத்தை அவள் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் தன் தாயை எவ்வளவு அன்புடன் நடத்த வேண்டுமோ, அவ்வளவு அன்புடன் நடத்தவில்லை. அவனுக்குப் புத்தி வரவில்லையென்று நினைத்துத் தாய் சும்மா இருந்துவிட்டாள். 'வயதானல் எல்லாம் சரியாகப் போய்விடும்,' என்று நினைத்து அவள் அவனிஷ்டப்படி விட்டுவிட்டாள்.

நான்கு வருஷங்கள் பறந்தோடின. மகன் உயர்தரக் கலாசாலையில் படித்து வந்ததனல், செலவு அதிகமாகிவிட்டது. அதனல், அவன் அதிகக் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருந்தது. கடிகாரத்திற்காவது,

கழுத்திலணிந்துகொள்ளும் 'டை' என்பதற்காவது, '**காலர்**' என்னும் கழுத்துப் பட்டைக்காவது பணம் கேட்கும்போது சாம்பன் தன் தாயிடம் அதிகப் பிரியத்துடன் பேசுவான். மற்றச் சமயங்களிலோ, கடுகடுப்புடனும், மரியாதையில்லாமலும் தன்னிடம் அவன் நடந்துகொள்வதுபோல அவளுக்குத் தோன்றிற்று. நாலு வருடங்கள் கழிந்த பிறகு, சாம்பன் பி. ஏ. பரிக்ஷையில் நன்றாகத் தேறி, பட்டதாரியானான். அவன் தாய் அளவிலா ஆனந்தமடைந்தாள்.

பட்டதாரியான பிறகு ஒரு மாதம் சாம்பன் வேலையில்லாமலிருந்தான். அவ்வூரிலிருந்த பெரிய பணக்காரனொருவன் சாம்பனுடைய தோற்றம், நடை உடை, வெளிப்பகட்டு முதலியவற்றைக் கண்டு மயங்கி, அவனைத் தன் அந்தரங்கக் காரியதரிசியாக நியமித்துக்கொண்டான். அவனுக்கு மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளம் கொடுக்கப் போவதாக அந்தப் பணக்காரன் சொன்னான். அவன்மீது அந்தத் தனவானுக்கு அதிகப் பிரீதி உண்டாயிற்று. அந்தப் பையனை வீடு வரையில் சென்று விட்டுவரப் பிரபுவும் அவனுடன் சென்றான்.

வீட்டின் தாழ்வாரத்தில் கந்தைத் துணிகளைக் கட்டிக்கொண்டு சாம்பன் தாய் வறட்டி தட்டிக்கொண்டிருந்தாள். அவளுடைய உடம்பில் எலும்பும் தோலுந்தானிருந்தன. துரும்பாய் இளைத்திருந்ததால், அவளுடைய தாடைகளில் குழி விழுந்து கண்கள் ஒளியற்றிருந்தன. அல்லும் பகலும் உழைத்து வந்ததனால் அவள் சோர்வடைந்திருந்தாள். தன் மகனையும் பிரபுவையும் கண்டு அவள் எழுந்து நின்றாள். சாம்பன் எங்குப் போயிருந்தான் என்று அவள்

கேட்டாள். தான் எங்கும் போகவில்லை என்று கடு கடுப்புடன் சொல்லிவிட்டு, சாம்பன் தன் அறைக்குள் சென்றான். சாம்பன் தாய் பிச்சைக்காரியைப்போன் றிருந்தபோதிலும், சாம்பனுடைய அறை மாத்திரம் நவீன நாகரிகத்திற்கேற்ப மேஜை நாற்காலி முதலிய வைகளுடன் அழகாய் இருந்தது. அந்த ஸ்திரீ யாரென்று பிரபு கேட்டவுடன் சாம்பன் யோசனை செய்யாமல், தன் வீட்டு வேலைக்காரி என்று பதில் சொன்னான். சாணத்தில் கையை விட்டுப் பிசைந்து வறட்டி தட்டிக்கொண்டு பிச்சைக்காரிபோலக் கந்தைத்துணி கட்டியிருந்த தன் தாயைத் தாயெனச் சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டுச் சாம்பன் பிரபு விடம் அவ்வாறு சொன்னான். அந்தப் பிரபு சாம்ப னிடம் விடை பெற்றுக்கொண்டு, மறு நாள் உத்தி யோக உத்தரவை அனுப்புவதாகச் சொல்லிவிட்டுத் தன் வீடு திரும்பினான்.

போய்க்கொண்டிருக்கும்போது, பிரபு தன் சிநே கிதன் ஒருவனைச் சந்தித்தான். சாம்பன் வீட்டிற்குப் பிரபு சென்ற காரணம் என்னவோ என்று சிநேகிதன் பிரபுவைக் கேட்டான். 'அந்தப் பையனை மாதம் நூற்றைம்பது ரூபாய்ச் சம்பளத்தில் என் அந்தரங்கக் காரியதரிசியாக நியமித்துக்கொள்ள உத்தேசித்திருக் கிறேன்,' என்று பிரபு பதிலளித்தான்.

'மிகவும் நல்ல காரியம்! எனக்கு அதிக சந்தோ ஷம்! மிகக் கஷ்டப்பட்டு அவனைப் படிக்க வைத்த அவனுடைய தாய் இனிமேலாவது சந்தோஷத்துடன் வாழ்வாள்,' என்று சிநேகிதன் பிரபுவினிடம் சொன் னான்.

'அந்தப் பையன் தாய் எங்கே இருக்கிறாள்? நானும் அவளைக் காண விரும்புகிறேன்,' என்று பிரபு சொன்னான்.

'ஏன். அவள்தான் அவனுடைய தாய். வீட்டிற்கு வெளியில் சாணத்தைக்கொண்டு வறட்டி தட்டிக்கொண்டிருக்கிறாளே, அவள்தான் சாம்பன் தாய். நீர் அவளைப் பார்க்கவில்லையா?' என்று சிநேகிதன் பிரபுவைக் கேட்டான்.

'அட தெய்வமே! அவளா அந்தப் பையனுடைய தாய்? அவள் தன் வீட்டு வேலைக்காரி என்றல்லவோ அந்தப் பையன் சொன்னான்! இரக்கமில்லாத அந்தக் கல்நெஞ்சனை நான் என்னுடைய அந்தரங்கக் காரியதரிசியாக ஒரு போதும் நியமிக்கமாட்டேன்!' என்று பிரபு ஆச்சரியத்துடன் சொன்னான்.

'நீர் கூறிய விஷயத்தைக் கேட்ட பிறகு, உம்முடைய தீர்மானத்தைக் குறித்து உம்மீது குற்றங் கூறுவதில் பயனில்லை,' என்று சிநேகிதன் கூறிச் சென்றான்.

மறு நாள், உத்தியோக உத்தரவு சாம்பனிடம் கொடுக்கப்படவில்லை. ஆகவே, சாம்பன், நன்றாக க்ஷவரம் செய்துகொண்டு நல்ல உடை தரித்து, வாசனை பூசிக்கொண்டு, பிரபுவினிடம் சென்று, தனக்கு உத்தியோக உத்தரவு கிடைக்கவில்லையென்று சொன்னான்.

'தன் சொந்தத் தாயையே தாய் என்று சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டு, தனக்காகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவளை வீட்டு வேலைக்காரி என்று சொல்லிக்கொள்ளும் கல்நெஞ்சு படைத்த ஒருவனை என்னுடைய அந்தரங்கக் காரியதரிசியாக நியமிப்ப

தற்கு எனக்கு இஷ்டமில்லை. என் காரியதரிசி பொது ஜன சேவையில் எனக்கு உபயோகப்படக் கூடிய வனாய் இருக்கவேண்டுமாகையால், நீ அதற்கு லாயக் கில்லை,' என்று சொல்லிப் பிரபு சாம்பனை வெளியே கொண்டுபோய் விட்டுவிடும்படி தன் காவலாளிக்குக் கட்டளையிட்டான். சாம்பன் நல்ல படிப்பினையைப் பெற்றான். ஆனால், நல்ல உத்தியோகம் கைந்நழுவி விட்டது.

49. சகுனத் தடை

[சமர்ஸமாய் முடிந்தது.]

மலையாளத்தைச் சேர்ந்த இந்துக்கள் சகுனத்தில் அபார நம்பிக்கையுள்ளவர்கள். அவர்கள் வேறு ஊருக்குப் பிரயாணம் செய்யப் புறப்படும்போது முதன்முதல் தங்கள் எதிரில் வரும் மிருகங்களையும், மனிதர்களையும், வஸ்துக்களையும் கூர்ந்து கவனிப்பார் கள். நெருப்பு, பிராமணர் கூட்டம், பிணம், சுமங்கிலி முதலிய சகுனங்கள் சுப சகுனங்களாகக் கருதப்படும். மாமிசம், ஒற்றைப் பிராமணன், பூனை, விதவை முத லியவை கெட்ட சகுனங்களாகக் கொள்ளப்படும். போகும் காரியம் ஜயம்பெற வேண்டுமானால், புறப் படும்போது சுப சகுனங்கள் தோன்ற வேண்டும். முதன்முதல் எது வரும் என்று சொல்வது இந்த உலகில் அசாத்தியமானதால், மலையாள தேசத்தவர் காத்திருந்து நல்ல சகுனம் தோன்றும்போது புறப் படுவது வழக்கம்.

வடக்கேயிருந்து தெற்கே பரவிச் சென்ற ஒரு கிராமத்தில் இரண்டு வீடுகள் அடுத்தடுத்திருந்தன. அந்த இரண்டு வீடுகளிலும் பிராமணர்களே வசித்து

வந்தார்கள். ஒரு வீட்டில் வயதான கிழவன் ஒருவன் இருந்தான். மற்றென்றிலோ, ஒரு விதவை வசித்து வந்தாள். ஒரு நாள் காலையில் அந்த இரண்டு வீட்டுக் காரர்களும், ஒருவர் வடக்கேயும், மற்றொருவர் தெற்கேயும் போகவேண்டியிருந்தது. அந்த விதவை தன் வீட்டு வாயிற்படியண்டை வந்து நின்றுகொண்டு, சகுனம் பார்த்தாள். தனது அண்டை வீட்டுக்காரனை பிராமணக் கிழவன் தனக்கெதிரே வரத் தயாராக இருப்பதை அவள் கண்டாள். அந்தக் கெட்ட சகுனத்தைப் பார்த்ததும் அவள் வீட்டிற்குள்ளே ஓடிவிட்டாள். அதே காரணத்தைக்கொண்டு, அந்த ஒற்றைப் பிராமணனும் தன் வீட்டிற்குள் ஓடினான்.

சிறிது நேரங் கழித்து, பிராமணன் போயிருப்பானென்று நினைத்து, விதவை வாயிற்படியண்டை வந்து புறப்பட எண்ணினாள். அதே மாதிரியாகப் பிராமணனும் நினைத்துக்கொண்டு வாயிற்படியண்டை வந்து மேலே நடக்க ஆரம்பித்தான். ஒருவரை ஒருவர் பார்த்ததும் மறுபடியும் இருவரும் உள்ளே சென்றனர். சிறிது நேரம் தாமதித்துவிட்டு அந்தப் பிராமணன் தொலைந்து போன பிறகு போவதென்று விதவை தீர்மானித்தாள். அந்தப் பிராமணனும் அதே மாதிரி நினைத்துக்கொண்டு வீட்டிற்குள்ளேயே இருந்தான். பிராமணன் போயிருப்பானென்று விதவையும், விதவை போயிருப்பாளென்று பிராமணனும் நினைத்துக்கொண்டு, இரண்டு பேரும் வாயிற்படியண்டை வந்து சகுனம் பார்த்தனர். மறுபடியும் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்க நேர்ந்தது.

அந்தப் பிராமணன் மூன்றும் முறை வீட்டிற்குள் ஓடத்தொடங்கினான். அப்பொழுது விதவை அவனைக்

கூப்பிட்டு, 'அண்டை வீட்டுக்காரரே, நம் இருவருக்கும் புத்தியில்லையென்று தோன்றுகிறது. நம்மிருவரையும் சந்திப்பது கெட்ட சகுனம் என்று மூடநம்பிக்கைக்காரர் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் இப்படிச் செய்வதை நீரும் விரும்புவதில்லை; நானும் விரும்புவதில்லை. அவர்கள்மீது நமக்குக் கோபம் வருகிறது. நாமே நம்மைக் கெட்ட சகுனங்கள் என்று எண்ணிக்கொள்வது, நம்மை நாமே கேவலமாக நடத்திக்கொள்வதுபோலாகிறது. உலகத்தார் நம்மைக் கேவலமாக நடத்துவது போதாதா? மேலும், நம்முடைய அவசர காரியங்களும் இதனால் கெட்டுப் போகின்றன. நாம் இதைக் குறித்துக் கவலைப்பட வேண்டா. இனிமேல் தாமதம் செய்யாமல் நாம் நம் வேலையைக் கவனிக்கப் புறப்படுவோம்,' என்று சொன்னாள்.

அந்தப் பிராமணனும் விதவை சொன்னது வாஸ்தவம் என்று ஒப்புக்கொண்டான். பிறகு இருவரும் கெட்ட சகுனம் என்பதைக் கவனியாமலே தத்தம் வழிச் சென்றனர்.

50. ஒரு மனிதன் எவ்வளவு தூரம் பார்க்கக்கூடும்?

'ஒரு மனிதன் எவ்வளவு தூரம் பார்க்கக்கூடும்?' என்று ஒரு பிரசங்கியார் மத சம்பந்தமாகப் பேசுகையில், கூட்டத்திலிருந்தவர்களைக் கேட்டார். 'மூன்று மைல், ஐந்து மைல், பத்து மைல், இருபது மைல்' என்று பலர் பல விதமாகக் கூறினர்.

'அவன் எவ்வளவு தூரம் பார்க்கவேண்டுமென்று எண்ணுகிருனே, அவ்வளவு தூரம் பார்க்கலாம்,' என்று பிரசங்கியார் சொன்னார். 'முடியாது. இமய மலைக்கு அப்பாலுள்ளவைகளைப் பார்க்க அவனால் முடியுமா?' என்று ஒருவன் கேட்டான்.

'முடியும்; அவனுக்குப் பார்க்க வேண்டுமென்று தோன்றினால் பார்க்கக்கூடும். எத்தனையோ பேர் அவ்வாறு செய்திருக்கின்றனர்,' என்றார் பிரசங்கியார்.

'சமுத்திரத்திற்கு அப்பாலுள்ளவைகளை ஒரு மனிதனால் பார்க்க முடியுமா?' என்று அந்த மனிதன் மறுபடியும் பிரசங்கியாரைக் கேட்டான்.

'அவனுக்கிஷ்டமிருந்தால் பார்க்க முடியும். எத்தனையோ பேர் பார்த்திருக்கின்றனர்,' என்று பிரசங்கியார் சொன்னார்.

'வேறு உலகத்தை அவனால் பார்க்க முடியுமா?' என்று கடைசியில் அவன் கேட்டான்.

'முடியும்; வேண்டுமென்றால் முடியும். அநேகர் பார்த்திருக்கின்றனர். பல கருவிகளின் உதவியினால் சாதாரண ஜனங்கள் பல உலகங்களைக் கண்டுகொண்டிருக்கிறதை நாம் பார்க்கிறோமல்லவா?' என்று சாவதானமாகப் பிரசங்கியார் பதிலளித்தார்.

51. அற்புதமான விண்ணப்பம்

ஒரு சங்கத்தில் நால்வர் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தனர். 'உன்னை இதுவரையில் வேண்டிய வேண்டுகோள்களில் சிறந்தது எதுவென்பதை உன்னால் சொல்ல முடியுமா?' என்று நால்வருள் ஒருவன் கேட்டான்.

'ஒரு நாள் நன்ருகக் குடித்திருந்த படைவீரன் ஒருவன் என்னைக் கூப்பிட்டு என் உடம்பில் ஒரு துப்பாக்கிக் குண்டைச் செலுத்தப் போவதாகச் சொன்ஞன்,' என்ருன் ஒருவன்.

மாஜிஸ்டிரேட்டாயிருந்த மற்ருெருவர், 'என்னைப் பொறுத்தமட்டில் ஒரு கைதி என்னிடம் கேட்டுக்கொண்ட விண்ணப்பமே என்னை வியப்புறச் செய்தது! அவன் செய்த குற்றத்திற்காக அவனைத் தண்டித்து அபராதம் விதிக்கவேண்டியிருந்தது. அவனை ஏதாவது கேட்டுக்கொள்ள வேண்டுமாஞல் கேட்டுக்கொள்ளும்படி நான் கேட்டேன். தயவு செய்து நானே அபராதத்தை அவனுக்காகச் செலுத்த வேண்டுமென அவன் என்னை வணக்கத்துடன் கேட்டுக்கொண்டான்,' என்று சொன்ஞர்.

சிறைச்சாலை உத்தியோகத்திலிருந்த ஒருவர் பின் வருமாறு தம் அனுபவத்தைக் கூறிஞர்: 'என்னை ஒரு சமயம் ஒரு கைதி வேண்டியதுதான் சிறந்த வேண்டுகோளென்று நான் கருதுகிறேன். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, தூக்கிலிடப் போவதற்கு முன், வேண்டுவதைக் கேட்டுக்கொள்ளும்படி நான் கைதியிடம் சொன்னேன். அந்தக் கைதி, தெய்வத்தைத் திருப்தி செய்வதற்காகவாவது, அவனுக்குப் பதிலாக என்னைத் தூக்குமரத்தில் ஏறும்படி வேண்டிக்கொண்டான்.'

எனக்கு ஏற்பட்ட சிறந்த சந்தர்ப்பத்தைச் சொல்கிறேன், கேளுங்கள்: ஒருவன் '**வாட்கின்ஸ்**' என்று கையொப்பமிட்டுப் பின் வருமாறு எழுதி, நன்ருக விளம்பரம் செய்துவிட்டான்: 'பிரேதங்களை அடக்கம் செய்வதற்கு நல்ல பெட்டிகள், பிணங்

களைக் குளிர்ச்சியாகவும் சௌக்கியமாகவும் காப்பாற்றக் கூடிய சவப் பெட்டிகள், பிரேதங்களை அடக்கம் செய்யத் தகுதியான இடங்கள் தேடிக் கொடுக்கப்படும்—இந்தப் பெட்டிகளில் அடக்கம் செய்யப்படும் பிரேதங்கள் பம்பரத்தைப்போல நன்றாகத் துலங்கும். குறித்த காலம் வரும்போது தப்பட்டை அடிக்கப்படும்போது முதன்முதல் இப்பிரேதங்களே எழுந்து செல்லும். மிகவும் நன்றாகவும் சௌக்கியத்துடனும் புதைக்கப்படும்—ஒரு தரம் வந்து பாருங்கள் !' என்று நான்காம் அங்கத்தினர் தம் அனுபவத்தைக் கூறினார்.

52. கடவுள் சிருஷ்டியில் சிறந்த ஜன்மம்

ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். அவன் அதிக கர்வம் கொண்டிருந்தான். கல்வி, பிறப்பு, அந்தஸ்து முதலியவைகளை அவன் பொருட்படுத்துவதே இல்லை. அவனுக்கும் அவை இல்லை. 'கடவுள் சிருஷ்டியில் மேலானதெது ?' என்று அந்தப் பணக்காரன், அசம்பாவிதமாகப் பேசும் ஒருவனைக் கேட்டான். 'குரங்கு' என்று அவன் பதிலளித்தான்.

'என்ன ! நீ ஏன் குரங்கை மேலானதாகக் கூறினாய்? உலகில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை எத்தனையோ இருக்க, அவைகளையெல்லாம் விட்டுவிட்டு, ஏன் குரங்கைச் சிறந்ததெனக் கூறினாய் ?' என்று அந்தப் பணக்காரன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

'ஏனெனில், மனிதர்கள் சிறந்தவர்களாயிருந்தபோதிலும், பணப்பித்துப் பிடித்துத் திரிபவர்கள். அவர்கள் பணமென்றால் எதையும் செய்வார்கள். பணப்பையுடையவனைப் படித்தவனென்றும், அழ

குடையவனென்றும், சாமர்த்தியசாலியென்றும் பல வாறு புகழ்ந்து பேசுவார்கள். ஆனல், மனிதனே, பிறக்கும்போதே பணப்பையுடன் பிறப்பதில்லே. ஆயினும், பணப் பையில் அவனுக்கு ஆசை அதிகம். மற்ற மிருகங்களோ, பிறக்கும்போதும் பைகளுடன் பிறப்பதில்லே. பிறந்த பிறகும் அவை பைகளேச் சம் பாதித்துக்கொள்வதில்லே. ஆனல், ஒவ்வொரு குரங் கும் பிறக்கும்போதே வாய்க்கு அடியிலிருக்கும் இரண்டு பைகளுடன் பிறந்தும், பின்னர்ப் பணப் பைகளில் ஆசை வைப்பதில்லே. ஆகவே, அதுவே கடவுள் சிருஷ்டியில் உன்னத ஸ்தானத்தை வகிக்கத் தகுந்தது,' என்று அவன் கூறினன்.

53. இந்தியாவை விரும்பிய பசு

பல தேசங்களில் சுற்றித் திரியும் ஒரு லோக சஞ் சாரிக்குப் பசுக்களின் பரிபாஷை தெரிந்திருந்தது. 'உனக்கு இந்தியாவிலிருக்க இஷ்டமா, இங்கிலாந்தி லிருக்க இஷ்டமா?' என்று அவன் ஒரு பசுவைக் கேட்டான்.

பசு, 'எனக்கு இந்தியாவிலிருக்கத்தான் பிரியம்,' என்று சொல்லிற்று.

'ஏன்? இந்தியாவில் மாத்திரம் உன்னே நன்ருகப் போஷித்து ஆதரிக்கின்ருர்களா?' என்று அவன் கேட்டான்.

'அப்படியொன்றுமில்லே. அந்த விஷயம் உமக்குக் கூடத் தெரிந்திருக்கும். என்னிஷ்டம் போல நடக்கும் பாக்கியம் எனக்கிருந்தால், நான் இந்த இரண்டு தேசங்களிலுமிருக்கவிரும்பமாட்டேன். இங்கிலாந்தில் என்னே நன்ருகப் போஷித்து வளர்த்துக் கொன்று

விடுவார்கள். இந்தியாவிலோ, என்னைப் பட்டினி போட்டுக் கொன்றுவிடுவார்கள். இல்லையேல், அரை வயிற்றுக்குத் தீனி போட்டுக் குற்றுயிருடன் வாழும் படி விட்டுவிடுவார்கள். இதை உத்தேசித்தால், இங்கிலாந்திலேயே எனக்குச்சுகமுண்டென்பதைத் தாங்கள் அறிந்துகொள்ளக் கூடும்,' என்று பசு பதிலளித்தது.

'அப்படியிருக்க, நீ இந்தியாவை விரும்புவானேன்?' என்று அவன் கேட்டான்.

'ஒருவனுக்குச் சாப்பாடும் தீனியுமா முக்கியம்? தீனியைவிடச் சுயமரியாதையும், உணர்ச்சியும் மேலானவைகளல்லவா? இந்தியர் என்னை உயர்ந்த ஜாதியினராகிய பிராமணர்களுக்குச் சமானமாகக் கருதுகின்றனர்; எனக்குப் பயபக்தியுடன் தெய்வத்தைப் போலப் பூஜை செய்கின்றனர்; வருஷத்திற்கொரு முறை எனக்கு மாலையிட்டு, அலங்காரம் செய்கின்றனர்; என்னை ஊர்வலமாக அழைத்துச் செல்கின்றனர்; மனிதர் வேறு, நான் வேறு என்று வித்தியாசப்படுத்தி இங்கிலாந்தில் நடத்துவதைப் போல நடத்தாமல், மரியாதையுடன் நடத்துகின்றனர்,' என்று பசு சொல்லிற்று.

'ஆனால், இந்தியாவில் நீ பட்டினி கிடக்கவேண்டியிருக்கிறதே! உனக்குச் சரியான தீனி போட்டுக் காப்பாற்றுவதில்லையே!' என்று அவன் பரிதாபத்துடன் சொன்னான்.

பசு, 'வாஸ்தவம். இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் பட்டினி கிடக்கின்றார்கள். அவர்களுடன் நானும் பட்டினி கிடப்பதில் தவறொன்றுமில்லையே! சிலர் என்னை வேண்டுமென்றே பட்டினி போடுகின்றனர். என்னைக் கொடுமையுடன் நடத்துகிறார்க

ளென்று சொன்னால், இந்து தேச மாதர்கள் கூடத் தான் கொடுமையாக நடத்தப்படுகிறார்கள். மிருது வான கருவிழிகளுடன் கூடிய அன்பு ததும்பும் கண் களிலிருந்து, வாய் விட்டுக் கஷ்டங்களை வெளியே சொல்லிக்கொள்ள முடியாமல், கண்ணீரை ஆறாய்ப் பெருக்கும் இந்திய மாதர்களைக் காணும்போது, என் னுடைய துக்கம் பறந்து போய்விடுகிறது. அந்தத் துக்கத்தில் என்னுடைய துயரம் மறைந்து போகிறது. நாங்கள் ஒருவர் கண்களை ஒருவர் பார்த்துச் சமாதான மடைகிறோம். இத்தகைய அனுதாபத்தை நான் இங்கிலாந்தில் அடைய முடியுமா ?' என்றது.

54. அழுகிப்போன முலாம்பழம்

ஒருவன் மூன்று பிள்ளைகளையும், தான் கஷ்டப் பட்டுப் பயிர் செய்ததன் பலனாகக் கிடைத்த நன்றாகப் பழுத்த முலாம்பழத்தையும் விட்டுவிட்டு இறந்து போனான். மூன்று பிள்ளைகளுக்கும் தகப்பனிடம் அதிக அன்பு இருந்தது. தகப்பன்மீது அதிகப் பிரியம் கொண்டிருந்த அவர்களுக்குத் தங்கள் தகப்பன் கொடுத்துப்போன முலாம்பழம் மிகவும் நல்ல பழ மாகத் தோன்றிற்று. அதைப் போன்ற பழம் இவ்வுல கிலேயே காண்பதரிது என்று அவர்கள் சொல்லி வந் தார்கள். அவர்கள் கூறுவது நியாயமன்று என்று வேறு எவரேனும் எடுத்துச் சொன்னால், அவர்கள் அதைக் காதில் போட்டுக்கொள்ளமாட்டார்கள். தங்கள் வீட்டில் பிரத்தியேகமான ஓர் இடத்தில் அதை அனைவருக்கும் தெரியும்படி வைத்து அவர் கள் காப்பாற்றினார்கள். அப்பழம் பல நாட்கள் வரையில் வைக்கப்பட்டிருந்ததால் அழுகிப்போயிற்று. அதனால் துர்க்கந்தம் வீசத் தொடங்கிற்று. 'இதை

என்ன செய்யலாம்?' என்று மூன்று பிள்ளைகளும் ஆலோசித்தார்கள்.

'நாம் இதுவரையில் இப்பழத்தை வைத்துக் காப்பாற்றியதைப்போலவே, இது மறைந்து போகும் வரையில் காப்பாற்றலாம். கெட்ட நாற்றம் வந்தாலும் வரட்டும். அதனால், நமக்கு வியாதிகள் வந்தாலும் வரட்டும். நாம் இறந்துபோக வேண்டியிருந்தாலும் சரி; நம் பிதுரார்ஜிதமாகிய இந்த முலாம்பழத்தை நாம் காப்பாற்றியே தீரவேண்டும். நாம் இதைத் தொடவேண்டா. நம் தகப்பனார் புத்திசாலித்தனம் வாய்ந்தவர். நாம் அவரைவிடப் புத்திசாலிகளல்ல. ஆதலால், அவர் செய்த காரியத்திற்கு விரோதமாக நாம் ஒன்றும் செய்யவேண்டா,' என்று ஒரு பிள்ளை மற்றவர்களுக்குச் சொன்னான்.

'நாம் இந்த முலாம்பழத்தை எறிந்துவிட்டு, நமது அண்டை வீட்டுக்காரரிடமிருந்து வேறொரு பழத்தை வாங்கிக்கொள்ளலாம். அழுகிப்போன இந்தப் பழத்தை வைத்துக்கொண்டிருப்பது நமக்கு அழகன்று. உலகத்தார் நம்மைக் கண்டு பரிகாசம் செய்வர். இதிலிருந்து விஷக் கிருமிகள் கிளம்பி நமக்கு வியாதிகளை உண்டுபண்ணும். பிதுரார்ஜித மாக நமக்குக் கிடைத்த முலாம்பழத்தைப்போலவே ருசியுள்ள வேறு ஒரு பழம் நமக்குக் கிடைக்கும். இதைவிட நல்ல பழத்தை நாம் எளிதில் அடையலாம். ஏனெனில், மற்றப் பழங்கள் இதைப்போல அழுகிய பழங்களாக இரா,' என்று இரண்டாம் பிள்ளை சொன்னான்.

'நாம் இந்த அழுகிப்போன—உபயோகமற்ற—பழத்தை எறிந்துவிடலாம். ஆனால், இந்தப் பழத்தி

லிருக்கும் விதைகளை மாத்திரம் ஜாக்கிரதையாக எடுத்து வைத்துக்கொள்ளலாம். அந்த விதைகளை நட்டுப் பிதுரார்ஜிதமெனக் கொள்ளப்படும் பல மூலாம்பழங்களை எளிதில் அடையலாம். அவை நன்ருய் இருக்கும். இந்தப் பழத்தைப் புழுக்கள் தின்று விடும் வரையில் வைத்துக்கொண்டிருந்தால், நம்மைப் பார்த்து அக்கம் பக்கங்களிலுள்ளவர்கள் ஏளனம் செய்வார்கள். நமக்கும் ஏதாவது கொடிய வியாதி வரும். முடிவில், நமது மானத்தையும் இழக்கவேண்டி நேரிடுமென்பதில் சந்தேகமில்லை. இந்தப் பழத்தை அநியாயமாக எறிந்துவிடுதலும் நல்லதன்று. அவ்வாறு செய்வதனுல் நமது பிதுரார்ஜிதத்தை அடியோடு நாம் இழந்தவர்களாவோம். வேறு பழத்தை வாங்க நாம் பணம் செலவு செய்யவேண்டும். அப்படி விலை கொடுத்து வாங்கினுலும், அப்பழம் நமது சொந்தப் பழமாகாது. மேலும், அப்பழத்தையும் நாம் பல நாட்கள் வைத்திருந்தால் அழுகிப் போய்விடும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்ருல், புது விஷயங்கள் தோன்றிக்கொண்டேயிருக்க வேண்டும். அவ்வாறு புது விஷயங்கள் தோன்றும்படி செய்வதிலேதான் வாழ்க்கையின் சாராமிசம் இருக்கிறதென்று சொல்லவேண்டும். பழைய விதைகளிலிருந்து புதியசெடிகளை உண்டுபண்ணவேண்டும். அவைகளின் வேர் பழைய காலத்துப் பூமியில் நன்ருக இறங்க வேண்டும். அவைகளுக்குத் தற்கால முறைகளின் பிரகாரம் எருவிட்டு நல்ல பலனைத் தரும்படி நாம் செய்யலாம்,' என்று மூன்ரும் பிள்ளை சொன்னுன்.

மூன்ரும் சகோதரன் சொன்னபடியே செய்ய வேண்டுமென்று மற்ற இருவரும் கூறினர்.

55. கேவலமானவன் யார்?

[பிச்சைக்காரனுக்கும் கீழ்ப்பட்டவன்]

பிடிவாதக்காரனை ஒரு பிச்சைக்காரன் சாலையின் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு, சாலையில் போய்க்கொண்டிருக்கும் ஜனங்களைத் தருமம் செய்யும்படி தொந்தரவு செய்துகொண்டிருந்தான். அவன் ஓயாமல் பிரலாபித்துக்கொண்டும் கெஞ்சிக்கொண்டும் ஜனங்களுக்குச் சொல்ல முடியாத கஷ்டத்தை உண்டு பண்ணி வந்தான். ஒரு நாள் அவன், கூட்டமாகப் போய்க்கொண்டிருந்த தேச சஞ்சாரிகளைப் பார்த்து, 'என்னிடம் ஒன்றுமில்லையே! நான் என்ன செய்வேன்! தயவு செய்து எனக்கு ஏதாவது தருமம் கொடுக்கலாகாதா? என்னைவிடக் கேவலமானவன் இவ்வுலகிலுண்டோ?' என்று கதறினன்.

'உன்னைவிடக் கேவலமானவர் அநேகர் இருக்கின்றனர். உனக்காவது ஒன்றுமில்லை; அதாவது, வருமானமுமில்லை; கடனுமில்லை. பலர் வருமானமில்லாமல் கடன் மாத்திரம் ஏராளமாக வாங்கிக் கடன் பட்டவராய் இருக்கின்றனர். அவர்களைவிட நீ எவ்வளவோ மேல்! அவர்களைவிட நீ சந்தோஷமாய் இருந்தே தீரவேண்டும்,' என்று சேஷ்டையுடன் கூடிய ஒரு வழிப்போக்கன் அந்தப் பிச்சைக்காரனுக்குச் சொன்னன்.

56. மூளைக் கோளாறு

ஒருவனுடைய பெற்றேர் அவனை அதிக செல்வமாக நடத்தி வந்தனர். அவர்களுக்கு ஒரே பிள்ளை இருந்தமையால், அவர்களுக்குப் பிள்ளைமீதிருந்த ஆசை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது.

அந்தப் பையனே, முழு மூடனுயிருந்தான். எவ்வளவு பணம் செலவு செய்து படிப்புச் சொல்லிக் கொடுத்தும், அவனுக்குப் படிப்பு வரவேயில்லை. அந்தப் பையனும் கஷ்டப்பட்டுப் படிப்பில் தன் கவனத்தைச் செலுத்திப் பார்த்தான். என்ன செய்தும் அவனுக்குப் படிப்பு ஏருததைக் கண்ட அவன் பெற்ருேர், அந்தத் தேசத்திலிருந்த மிகவும் கெட்டிக்காரரான உபாத்தியாயரை அவனுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க நியமித்தனர். அப்பொழுதும் பலனில்லாமல் போயிற்று.

ஆறு மாதங்கள் அந்த உபாத்தியாயர் பாடம் சொல்லிக்கொடுத்த பிறகு, 100 ஐ 7 ஆல் வகுக்கும்படி தகப்பனர் பிள்ளைக்குச் சொன்னர். பிள்ளை $113\frac{2}{7}$ விடை என்று பதில் சொன்னன். அவன் பின் வருமாறு வகுத்திருந்தான் :

$$
\begin{array}{r}
7)\ 100\ (\ 113\ \frac{2}{7} \\
7 \\
\hline
93 \\
91 \\
\hline
2 \\
\hline
\end{array}
$$

'என் பையனுக்கு என்ன தேவை சொல்லுங்கள்? அவனுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க நல்ல உபாத்தியாயரை நியமித்திருக்கிறேம். நல்ல புத்தகங்களை வாங்கிக்கொடுத்திருக்கிறேம். நல்ல பிள்ளைகளுடன் சகவாசம் செய்யும்படி கவனித்துக்கொண்டிருக்கிறேம். அப்படியிருந்தும், அவன் சிறிதேனும்

அபிவிருத்தி அடையவில்லையே! நாங்கள் என்ன செய்தால் இக்குறை நீங்கும்?' என்று அந்தப் பையனுடைய தகப்பனார், உபாத்தியாயரைக் கேட்டார்.

'அவனுடைய மூளையை மாற்றினால் போதும். வேறொன்றும் செய்ய வேண்டா,' என்று உபாத்தியாயர் சுருக்கமாகப் பதிலளித்தார்.

57. படுமோசம்!

சமண மதத்தைச் சேர்ந்த சந்நியாசி ஒருவன் பட்டினி கிடந்து இறந்துபோக எண்ணிப் பட்டினி கிடந்தான். உபவாசத்துடனிருக்கும் போது, அவனுடைய மனம் வேறு உலகத்தின்மீதும், தெய்வத் தன்மையின்மீதுமே பொருந்தியிருந்தது. இருந்த போதிலும், இறந்து போவதற்கு முன்பு அவன் 'எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!' என்று சொல்லிக் கொண்டே இறந்தான்.

'இவன் இத்தனை நாள் தெய்வ பக்தியுடனும் ஆசாரத்துடனுமிருந்து பட்டினி கிடந்ததன் பலன் என்ன? இறந்து போகும் போது தனக்கு ஒன்றும் தெரியவில்லையென்று இவனே சொல்லிக்கொண்டு இறந்தான்,' என்று ஒரு நாஸ்திகன் சொன்னான்.

'உனக்கு அச்சமயத்தில் அதுகூடத் தோன்றப் போவதில்லை. நீ மோசம் போகப் போகிறாய். நீ இறந்து போகும்போது மிகக் கொடிய காட்சியைக் கண்டு பயப்படப் போகிறாய்!' என்று அந்த நாஸ்திகன் அருகில் நின்றுகொண்டிருந்த ஆஸ்திக நண்பன் துடுக்காகச் சொன்னான்.

58. சட்டங்கள் மாறுவதேன்?

'மகா முனிவரே, நான்கு யுகங்களுக்கும் வேறு வேறு சட்டங்கள் ஏன் இருக்கவேண்டும்? கிருத யுகத்தில் மனு தரும சாஸ்திரத்தையும், திரேதா யுகத்தில் கௌதமருடைய நீதி சாஸ்திரங்களையும் அனுசரிக்க வேண்டுமென்று ஏன் ஏற்பாடு செய்திருக்கின்றனர்?' என்று ஒருவன் ஒரு முனிவரைக் கேட்டான்.

'காலம் மாறுதலடைந்துகொண்டே இருக்கின்றது. காலத்தை அனுசரித்துச் சட்டங்களும் மாறிக்கொண்டே இருக்க வேண்டுமல்லவா?' என்று முனிவர் பதிலளித்தார்.

'ஏன் மாறவேண்டும்? சட்டங்கள் குற்றம் குறைகள் இல்லாமலிருக்கும் பக்ஷத்தில் எப்பொழுதும் மாறுமல் ஏன் இருக்கக் கூடாது?' என்று அவன் கேட்டான்.

'சட்டங்கள் குற்றங் குறைகளில்லாமலிருக்கின்றனவா இல்லையா என்பதைக் காலம் நிருணயிக்க வேண்டும். காலம் செல்லச் செல்லத்தான் சட்டங்களில் இருக்கும் குறைகள் காணப்படும். தரும தேவதைக்குக் கிருத யுகத்தில் நான்கு கால்களும், திரேதா யுகத்தில் மூன்று கால்களும், துவாபர யுகத்தில் இரண்டு கால்களும், கலி யுகத்தில் ஒரே காலுந்தான் இருக்குமென்று சொல்லப்படுகிறது. நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்னும் நால்வகைக் கால்களையுடைய ஒரு கட்டிலின்மீது ஒரு மனிதன் ஒரே மாதிரியாகப் படுத்துக்கொள்ள முடியுமா?' என்று முனிவர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார்.

59. இடி முழக்கத்தின் அர்த்தமென்ன?

'இடி முழக்கத்தின் அர்த்தமென்ன? நம் முன்னோர்களின் வியாக்கியானத்தைக் கேளுங்கள்: 'தா, தா, தா, தா, (தாதா); கொடு, கொடு, கொடு, கொடு (மற்றவர்களுக்கு)'. தெய்வத்தன்மைபொருந்திய இடி இவ்வாறு முழங்குகிறது. 'தா, தா, தா, தா, (தயாத்வம்) அன்புடனிருந்து பிறர் செய்யும் குற்றத்தை மன்னிப்பாயாக,' என்று சர்வ வல்லமையுள்ள இடி முழக்கம் எடுத்துச் சொல்கிறது. '(தம்யதா) ஐம்புலன்களை அடக்கி ஆள்,' என்று இடி உபதேசம் செய்கிறது,' என்று கற்றறிந்த வித்துவான் ஒருவர் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார்.

'இடி அவ்வாறு, கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகங்களில் சொல்லிக்கொண்டிருந்ததேயொழிய, இப்பொழுது கலியுகத்தில் சொல்லவில்லை. இப்போது அது என்ன சொல்கிறதென்றால், 'தா, தா, தா, தா, (தத்தா) கொடு (எனக்கு), கொடு(எனக்கு), கொடு (எனக்கு), கொடு (எனக்கு).' இதுதான் இந்த யுகத்தில் இடி முழக்கத்தின் அர்த்தம்,' என்று குறும்புத்தனம் வாய்ந்த ஒருவன் கூட்டத்திலிருந்து சொன்னான்.

ஏன்? அது சரிதானே?

60. தருமசத்திரம் செய்த அநீதி

பழைய காலத்தில் ஒரு தனவந்தனால் ஏற்படுத்தப்பட்ட சத்திரம் ஒன்றில், வழக்கமாக ஒருவன் சாப்பிட்டுத் தன் காலத்தைக் கழித்து வந்தான். அவனுக்கு அறுவது வயதானதும் பலம் குன்றிப் போய்விட்டது.

அப்போது பணம் இல்லாததால் சத்திரத்தை மூடி விட்டனர். அவனுக்குச் சம்பாதிப்பதற்கோ, சக்தி இல்லை; சம்பாதிக்கும் வழியும் தெரியாது. அவனுக்குத் தருமம் கொடுப்பவரும் இல்லாமற் போயினர். ஆகவே, அவன் பட்டினி கிடக்க நேர்ந்தது.

'தருமம் பாழாய்ப் போயிற்று! தருமம் செய்பவர்களென்றும், போஷகர்களென்றும் சொல்லிப் பெருமையடித்துக்கொள்பவரெல்லாரும் உண்மையில் ஜனசமூகத்தின் விரோதிகளே என்பதில் சந்தேகமில்லை. அவர்களால் பலர் பிழைக்க வழி தெரியாமல், இருந்த இடத்திலேயே சோம்பேறிகளாய்க்கிடந்து தமது வாழ்க்கையின் பயனை அடையாமல் இறந்து போகின்றனர். தங்களுக்குப் பெயரும், புகழும், மோக்ஷமும் சம்பாதித்துக்கொள்ள ஆசை கொண்டு அவர்கள் எங்களைப் போன்ற மனிதர்களின் வாழ்க்கையைப் பாழாக்கிவிடுகின்றார்கள். அவர்கள் எங்களைப் பலி கொடுத்துவிடுகின்றார்களென்று சொல்வதிலும் தவறில்லை. தருமத்தின் பெயரால் அவர்கள் செய்யும் செய்கைகளை மனித பலியென்றே சொல்லலாம். என்னுடைய புத்தியே மழுங்கிப்போகும்படி இந்தச் சத்திரம் செய்துவிட்டது. எனக்கு வயதாகிப் பலம் குன்றிப்போன சமயத்தில், என்னை இந்தச் சத்திரம் கைவிட்டுவிட்டது. இப்போது நான் தவிக்கிறேன். மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கிய கதைபோல என் வாழ்க்கை ஆகிவிட்டது. இந்தத் தரும சத்திரம் என்னுடைய சத்துருவாய் வந்து வாய்க்க வேண்டுமா? இந்தத் தரும சத்திரத்தை ஸ்தாபித்தவன் என் சாபத்தை ஏற்றுக்கொள்ளட்டும்!' என்று அந்த மனிதன் துக்கத்துடன் கூறினான்.

61. கஷ்டமான நிபந்தனை

கற்பு, கணவன் சொற்படி நடத்தல், எல்லையில்லா அன்பு, பொறுமை, கஷ்டப்பட்டு உழைத்தல் முதலிய மனைவிக்கிருக்க வேண்டிய நல்ல குணங்களைப்பற்றி ஒரு கணவன் தன் மனைவியிடம் பிரசங்கம் செய்து கொண்டிருந்தான்.

பிரசங்கம் முடிந்தவுடன், 'நான் இப்பொழுது கணவனுடைய கடமையைப் பற்றிச் சொல்கிறேன்; கேளுங்கள்: கணவன் முதன்மையாகத் தன் மனைவி மக்களுக்கு வேண்டிய ஆகாரம், ஆடை முதலியவை களைத் தேடிக்கொடுக்க வேண்டும்,' என்று மனைவி கூறினாள்.

'அது தெரிந்த விஷயம். அதைப்பற்றிக் கூறுவானேன்?' என்று கணவன் பதிலளித்தான்.

'கணவன் தன் மனைவியை அளவிலா அன்புடன் நடத்த வேண்டும்,' என்று மனைவி சொன்னாள்.

'அதுவும் சுலபமாகச் செய்யக் கூடிய காரியமே,' என்று கணவன் உரைத்தான்.

'கணவன் மற்றப் பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாது,' என்று மனைவி சொல்ல, 'கஷ்டப் பட்டுக் கணவன் அதையும் ஒருவாறு செய்யக்கூடும்,' என்று அவன் பதிலளித்தான்.

'கணவன் தன் மனைவியை அடிக்கக்கூடாது; வாய்க்கு வந்தபடி திட்டக் கூடாது,' என்று மனைவி சொன்னாள்.

'அது முடியாத காரியம். தன் மனைவி செய்யும் கொடிய காரியங்களையும் அக்கிரமச் செயல்களையும் கண்டு, அவளை அடிக்காமல் ஒரு கணவன் எப்படிப்

பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க முடியும்?' என்று அவன் கூறினான்.

'கணவன் செய்யும் அக்கிரமங்களையும், தவறு களையும் மாத்திரம் பார்த்துக்கொண்டு மனைவி சும்மா இருக்க முடியுமா? கணவனை மாத்திரம் அடிக்காமல் மனைவி சும்மா இருக்க முடியுமா? ஸ்திரீகளைவிட மேலானவர்கள் என்று சொல்லிக்கொண்டு திரியும் ஆண் மக்கள், உண்மையில் ஸ்திரீகளைவிட மேலான வர்களாயிருக்கும் பக்ஷத்தில், ஸ்திரீகள் செய்யும் எந்தக் காரியத்தையும் அவர்கள் செய்யக்கூடிய சக்தி வாய்ந்த வர்களாயிருக்க வேண்டும். ஒவ்வொரு வகையிலும் ஸ்திரீகளைவிடப் புருஷர்கள் மேலானவர்களென்று தாங்கள் எப்போதும் சொல்லிக்கொண்டு திரிகிறீர் களே! இந்தக் காரியத்தை மாத்திரம் ஏன் செய்ய முடியாதென்கிறீர்கள்?' என்று மனைவி சொன்னாள்.

62. திருடர் சபையில் ஒரு தருக்கம்

தம் தொழிலில் பெருமை கொண்ட திருடர் சிலர் ஒன்று கூடி ஒரு சங்கம் ஏற்படுத்த முயன்றனர். இழி வான தொழிலைக் குறித்து வெட்கமடையாமல், அவர் கள் தங்கள் தொழில் நியாயமானதென்று பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்த எண்ணினார்கள். பின் வரும் தீர்மானத்தை ஒருவன் கொண்டுவந்து, அதைக் குறித்துப் பேசினான்:

'கனவான்களே, நம் தொழிலின் மேன்மையைப் பிறர் அறிந்துகொள்ளாதபடி நாம் இரகசியமாக வைத்துக்கொண்டு, நமது தொழில் நியாயமான தென்று தெரிவித்துக்கொள்ளாமல் இருப்பதனாலே தான் நாம் இந்த நிலைமையில் இருக்கின்றோம். இப்

போது உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விளம்பரத்தில் கண்டிருக்கிறபடி, நாம் கூடிய சீக்கிரம் ஒரு சங்கத்தை ஏற்படுத்தவேண்டும்.'

திருடர்களுக்குள் சாமர்த்தியசாலியென்று கருதப்பட்ட ஒருவன், அந்தத்தீர்மானப்படி நடப்பது அசாத்தியமென்று எடுத்துக் காட்டி, தீர்மானத்தை எதிர்த்துப் பேசினுன்: 'திருடும் தொழில் நியாயமானதென்று ஒரு போதும் எடுத்துக் காட்ட முடியாது. திருடர்கள் திருடிய சொத்துக்களையே மறுபடியும் திருடிக்கொண்டு போகும்படி விடத் திருடர்களுக்கே இஷ்டமிராது. திருட்டுச் சொத்தை இழக்கத் திருடர்களே மனம் வருந்துவார்கள். கொலையாளிகள் கொலையாளிகளின் கையில் சிக்கி உயிர் விட இஷ்டப்படுவார்களா? ஒரு போதும் இஷ்டப்பட மாட்டார்கள். திருடுவது நியாயமான தொழில் என்று ஏற்படும் வரையில், ஒரு திருடனுவது தன் தொழில் திருட்டுத் தொழில் என்று வெளியே சொல்லிக்கொள்ள முன் வரமாட்டான். அவ்வாறு அவன் சொல்லிக்கொண்டால், சிறைவாசம் கிடைக்குமென்பது அவனுக்கு நன்ருகத் தெரியும்! ஆகவே, இந்தத் தீர்மானம் சரியானதன்று,' என்று அந்தப் பக்காத்திருடன் சொல்லவே, அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டது.

63. ஜகந்நாத பிராணத் தியாகி

[தன்னலத் தியாகிக்குச் சிறை]

இந்து மதத்தைத் தழுவிய பணக்காரன் ஒருவன் சென்னையிலிருந்து காசிக்கு யாத்திரை சென்ருன். அதற்கு முன்பு அவன் எந்தப் புண்ணிய க்ஷேத்திரத்

திற்கும் யாத்திரை சென்றதில்லை. ஆதலால், அவன் மனத்தில் ஒரு விதமான பீதி உண்டாயிற்று. ஆகவே, யாத்திரை செல்பவர்கள் சாதாரணமாக முன் ஜாக்கிரதையுடன் இருப்பதைப்போல, அவனும் ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு போனான். அநேக உடைகள் நிரம்பிய இரண்டு பெரிய பெட்டிகளையும் அவன் எடுத்துச் சென்றான்.

காசி ஸ்டேஷனில் ரயில் வண்டி நின்றதும், தவ வேடம் தாங்கிய ஒரு யோகி, அவன் உட்கார்ந்திருந்த வண்டிக்குள் தலையை நீட்டினான். 'காசி யாத்திரை வந்தவர்கள் போலிருக்கிறது!' என்று அந்த யோகி அவனைக் கேட்டான்.

'ஆம்; நான் எப்படி இந்த யாத்திரையை முடிப்பது என்று தெரியாமல் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன்,' என்று யாத்திரை சென்றவன் சொன்னான்.

'நீங்கள் அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டா. நானும் சென்னை மாநகரத்தைச் சேர்ந்தவனே. நீங்கள் தங்குவதற்கு வசதியான இடம், புசிப்பதற்கு நல்ல உணவு முதலியவைகளை நானே ஏற்பாடு செய்து கொடுக்கிறேன்,' என்று அந்த யோகி வேஷத்திலிருந்தவன் சொன்னான்.

'உங்களுக்கு நான் அதிக கஷ்டத்தைக் கொடுக்க வேண்டியிருக்கிறது,' என்று யாத்திரிகன் உபசாரமாகச் சொன்னான். யாத்திரிகனுடைய கவலை ஒருவாறு நீங்கிற்று.

'எனக்கு இது ஒரு சிரமமான காரியமன்று. வேத சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் விஷயம் உங்களுக்குத் தெரியாதா? கடவுள் ஏன் நமக்கு இந்த உடம்

யைக் கொடுத்திருக்கிறுர்? பிறருக்கு உபகாரம் செய்வ தற்கல்லவா கடவுள் நமக்கு இந்த மானிட ஜன்மத்தை அளித்திருக்கிறுர்? உங்களுக்கு உபகாரம் செய்வதை நான் பெரும்பாக்கியமாகக் கருதுகிறேன்,' என்று அந்த யோகி சொன்ஞன்.

'உங்களுடைய நாமதேயம் என்னவோ?' என்று யாத்திரிகன் தன் கவலை ஒழிந்துவிட்டதை நினைத்துச் சந்தோஷத்துடன் கேட்டான்.

'ஜகந்நாத பிராணத் தியாகி' என்று அந்த யோகி பதிலளித்தான்.

உடனே யோகி வாடகை மோட்டார் ஒன்றை அமர்த்தினுன்; அதில் அந்த யாத்திரிகனுடைய சாமான்களையெல்லாம் போட்டான்; அந்த யாத்திரி கனையும் மோட்டாரில் உட்கார வைத்துக்கொண்டு, அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றுன்; அவன் வீடோ, மிகப் பெரியதாயிருந்தது. அந்தப் பெரிய வீட்டிற்குள்ளிருந்த ஒரு பெரிய அறையைப் பிரத்தியேகமாக அந்த யாத்திரிகனுக்குக் கொடுத்து விட்டான். அந்த யாத்திரிகனுடைய சாமான்களெல் லாம் அந்த அறையில் பத்திரமாக வைக்கப்பட்டன.

'இதற்கு என்ன வாடகையோ!' என்று யாத் திரிகன் கேட்டான்.

'ஒன்றுமில்லை. நீங்கள் என்ன அப்படிக் கேட் கிறீர்கள்? நான் வீடு வாடகைக்குக் கொடுப்பவன் என்று நினைத்துக்கொண்டீர்களா, என்ன! உங்க ளுக்கு உபகாரம் செய்யும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததே என்று நான் சந்தோஷப்படுகிறேன்!' என்று யோகி பெருந்தன்மையுடன் கூறினுன்.

'அது போகட்டும். என் சாப்பாட்டிற்காவது நீங்கள் ஏதாவது வாங்கிக்கொள்ள வேண்டும்,' என்று ஒருவாறு சந்தோஷமடைந்த யாத்திரிகன் கேட்டுக் கொண்டான்.

'நீங்கள் சொல்வதன் அர்த்தம் எனக்கு விளங்க வில்லையே! சாப்பாட்டிற்கா பணம் வாங்கிக்கொள் ளும்படி சொல்கிறீர்கள்? நன்றாயிருக்கிறது! அதற்கு மேல், இன்னும் என்ன சொல்லப் போகிறீர்கள்?' என்று சிறிது மன வருத்தமடைந்தவன் போல யோகி கேட்டான்.

'உங்களுக்கு மன வருத்தமுண்டாகும்படி செய்த தற்கு மன்னிக்க வேண்டும்! சென்னையில் இவ்வளவு தயாள குணமுள்ளவர்களை நாம் பார்ப்பதரிது! அதற் கென்ன காரணம்?' என்று யாத்திரிகன் கேட்டான்.

'இது உங்களுக்குத் தெரியவில்லையா? புண்ணிய க்ஷேத்திரமாகிய காசியின் மகத்துவந்தான் அதற்குக் காரணம். கெட்ட எண்ணங்கள், வீண் சந்தேகங்கள் முதலியவை காசி விசுவநாதருடைய பார்வை பட்ட மாத்திரத்திலேயே பஞ்சாய்ப் பறந்து போய்விடுகின் றன,' என்று யோகி சமாதானம் கூறினான்.

'அப்படியா! அதுதான் காரணமாயிருக்க வேண் டும்!' என்று யாத்திரிகன் தனக்குள் சமாதானம் செய்துகொண்டான்.

'வேறு காரணம் இருப்பதற்கில்லை. நான் சென்னையிலிருந்த காலத்தில் பிறர்க்குதவி செய்ய வேண்டுமென்னும் எண்ணமே எனக்கு உதித்த தில்லை,' என்று சொல்லிவிட்டு, யோகி அந்த யாத்திரிக னிடம் ஒரு நல்ல பூட்டையும் இரண்டு சாவிகளையும் கொடுத்தான்.

'நான் ஏன் என் அறையைப் பூட்ட வேண்டும்? என் ஆஸ்தியைப் பிறர் அபகரித்துக்கொண்டு போய் விடுவார்கள் என்னும் கெட்ட எண்ணம் இருந்தாலல்லவோ, நான் அவ்வாறு செய்யவேண்டும்?' என்று யாத்திரிகன் கேட்டான்.

'அது சரி. இருந்த போதிலும் நீங்கள் உங்களுடைய அறையைப் பூட்டிக்கொள்ளுதலே மேல். சந்தேகம் என்னும் பேயை என்னை அணுகாமல் துரத்தி விட்டேன். அவ்வாறு செய்வதற்கு என் மனம் பரிபக்குவமடைந்திருக்கிறது. ஆசை என்பதை நான் அகற்றிவிட்டேன். எனக்குப் பொருள்களின்மீது ஆசையென்பதே இல்லை. ஆகையால், நான் கதவுகளைச் சார்த்திப் பூட்டாமல் வைத்துக்கொண்டிருக்கிறேன். உங்களிடத்தில் திரவியம் இருப்பதனால், பிறர் மீது சந்தேகம் ஏற்படுவதற்கு இடங்கொடாமல், நீங்கள் உங்கள் அறையைப் பூட்டி வைத்துக்கொள்ளுவது நலம்,' என்று யோகி சொன்னான்.

'என்னிடம் ஆயிரம் ரூபாயும், சில ஆடைகளுமே இருக்கின்றன. வேறு ஒன்றும் இல்லை. இருந்த போதிலும், நீங்கள் வீட்டைப் பூட்டாமல் வைத்திருப்பதனால், நான் என் அறையை மாத்திரம் பூட்டி வைத்துக்கொள்ளுகிறேன். ஜகந்நாதரே, பொருள்களின் மீது உங்களுக்கு ஆசையே இல்லையென்று சொன்னீர்களே! இந்த வீடு யாருடையது?' என்று யாத்திரிகன் கேட்டான்.

'ஓ! இந்த வீடு என்னுடையதுதான். பிறருக்கு உதவி செய்வதற்காக இந்த உடலை எவ்வாறு தாங்கிக்கொண்டிருக்கிறேனோ, அதே மாதிரியாக இந்த வீட்

டையும் பிறருக்கு உபயோகப்படும்படி வைத்துக் கொண்டிருக்கிறேன்,' என்று யோகி பதிலளித்தான்.

'இந்த இரண்டு சாவிகளையும் ஏன் என்னிடம் கொடுத்தீர்கள்?' என்று யாத்திரிகன் கேட்டான்.

'அந்தப் பூட்டின் சாவி இரண்டும் உங்களிடமே யிருந்தால் நீங்கள் தைரியமாயிருக்கலாம். நாம் இப் போது சாப்பிடச் செல்லலாம் வாருங்கள்,' என்று யோகி சொன்னான்.

சாப்பாடு முதல்தரமாயிருந்தது. அந்த யாத்திரிகன் திருப்தியடைந்தான். 'ஜகந்நாதரே, நீங்கள் செய்யும் பேருதவிக்கு நான் உங்களுக்கு நூறு ரூபாய் கொடுத் துத் தீரவேண்டும். இந்த ரூபாயைத் தாங்கள் பிற ருக்கு உதவி செய்ய வைத்துக்கொள்ளுங்கள்,' என்று யாத்திரிகன் சொல்ல, யோகியும் அதற்கிசைந்தான்.

சாப்பாடுமுடிந்ததும், காசிநகரைச் சுற்றிப்பார்க்க யோகி யாத்திரிகனை அழைத்துச் சென்றான். 'நாளைய தினம் கங்கா ஸ்நானம், சுவாமி தரிசனம் முதலியவை களை வைத்துக்கொள்ளலாம்' என்று யோகி யாத்திரிக னிடம் சொன்னான். யாத்திரிகனோ, தான் உடுத்திருந்த ஆடைகளையும், செலவிற்குக் கொஞ்சம் ரூபாயையும் தவிர, மற்றெல்லா வஸ்துக்களையும் தன் அறையி லேயே வைத்து நன்றாகப் பூட்டி, இரண்டு சாவிகளை யும் தன்னுடன் எடுத்துச் சென்றான். யோகி வீட் டின் கதவைப் பூட்டவில்லை.

'வீட்டிலிருக்கும் பாத்திரங்களை யார் பார்த்துக் கொள்வார்கள்? மற்றச் சாமான்கள் ஜாக்கிரதையாய் இருக்குமா? வீட்டில் ஒருவரும் இல்லையே! உங்களு டைய வேலைக்காரர்கள் எங்கே?' என்று யாத்திரிகன் கேட்டான்.

'எனக்கு வேலையாட்களே இல்லை. நானே பிறருக்கு வேலை செய்யும் ஒரு வேலைக்காரன். அடிமைக்கும் அடிமைகள் இருப்பார்களா?' என்றான் யோகி.

'யார் சமையல் செய்தது?' என்று ஆச்சரியத்துடன் யாத்திரிகன் கேட்டான்.

'நான்தான் செய்தேன்,' என்றான் யோகி.

'நீங்கள் ஒரு பெரிய மகானாயிருக்க வேண்டும்!' என்று யாத்திரிகன் சொன்னான்.

தான் அவ்வளவு பெரிய மனிதனல்லவென்று யோகி சொல்லிக்கொண்டான்.

'உங்களுடைய சொத்துக்களை யாராவது திருடிக்கொண்டு போய்விட்டால் என்ன செய்கிறது?' என்று யாத்திரிகன் கேட்டான்.

'அவை என்னுடைய சொத்துக்களாயிருந்தாலல்லவோ! அவை எல்லாம் பொது மக்களுடைய சொத்துக்கள். நான் அவைகளைப் பிறருக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். பொது ஜனங்களுடைய பாத்திரங்களைப் பொது ஜனங்களுள் ஒருவன் திருடிக்கொண்டால், நான் அதைக் களவென்று கருதமாட்டேன்,' என்று யோகி பதிலளித்தான்.

பிறகு அவ்விருவரும் காசி க்ஷேத்திரத்தைச் சுற்றிப் பார்வையிட்டனர்; பார்க்க வேண்டிய இடங்களையெல்லாம் நன்றாகப் பார்த்துவிட்டுச் சூரியன் அஸ்தமித்த பிறகு வீடு திரும்பினர். யோகி சமையல் செய்யச் சென்றான். யாத்திரிகன் தனது அறைக்குச் சென்றான். யாத்திரிகன் அதிக சந்தோஷத்துடன் தனக்குள் பாடிக்கொண்டே சென்றான். பூட்டைத் திறந்து அறையில் நுழைந்தான். பெட்டிகள்

திறக்கப்பட்டுக் கிடந்தன. ஆயிரம் ரூபாயையும், உடைகளையும் எவரோ எடுத்துக்கொண்டு போய்விட்டனர். பூட்டுப் பூட்டியபடியே இருக்க, உள்ளே சாமான்கள் களவு போயிருந்ததைக் கண்ட யாத்திரிகனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. உடனே அவன் சமையலறைக்குச் சென்று, விஷயத்தை யோகியிடம் சொன்னான்.

'ஆஹா! சமையலறையிலிருந்த பாத்திரங்களும் களவு போய்விட்டன! சமையலறையிலிருந்த மண் பாத்திரங்களை எடுத்துச்செல்ல இஷ்டமில்லாமல் திருடர்கள் அவைகளை உடைத்துவிட்டுச் சென்றிருக்கின்றார்கள்!' என்று யோகி கூறினான்.

சமையலறையில் யோகி சொன்னபடியே பாத்திரங்கள் களவாடப்பட்டு, மண் பாத்திரங்கள் உடைக்கப்பட்டுக் கிடந்ததை யாத்திரிகன் பார்த்தான். முதன்முதல் யாத்திரிகனுக்கு யோகியின்மீது சிறிது சந்தேகம் உண்டாயிற்று. சமையலறையைப் பார்த்தவுடன் அவ்வாறு சந்தேகம்கொள்வது நியாயம் அன்று என்று யாத்திரிகன் கருதினான்.

'நாம் இப்பொழுதே சென்று இவ்விஷயத்தைப் போலீசாருக்குத் தெரியப்படுத்த வேண்டும்,' என்று யாத்திரிகன் சொன்னான்.

'இந்த விஷயத்தைக் குறித்துப் போலீசாருக்குத் தெரியப்படுத்த எனக்கு இஷ்டமில்லை. அவ்வாறு செய்வது என்னுடைய கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. உங்களுக்கு இஷ்டமிருந்தால், நீங்கள் போலீசாரிடம் சென்று இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லுங்கள். ஆனால், அறையில் பூட்டப்பட்டிருந்த பூட்டு, பூட்டியபடியே இருந்ததென்று

நீங்கள் சொல்கிறீர்களே ! உங்களிடம் ஆயிரம் ரூபாய் இருந்ததென்றும், விலையுயர்ந்த ஆடைகளிருந்தன வென்றும் பிறர் எப்படி நம்பப் போகின்றனர்?' என்று யோகி கேட்டான்.

யாத்திரிகன் ஒன்றும் தோன்ருது விழித்தான். 'என்னிடம் அவை இருந்தனவென்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?' என்று யாத்திரிகன் யோகியைக் கேட்டான்.

'எனக்குத் தெரியாது. உங்களிடத்திலிருப்பதாக நீங்கள் கூறியது என்னவோ வாஸ்தவம். நான் உங்களுடைய இரண்டு பெரிய பெட்டிகளை மாத்திரம் பார்த்ததுண்டு. அப்பெட்டிகள் இப்போதும் அந்த அறையிலேயே இருக்கின்றன,' என்று யோகி கூறினன்.

'பெட்டிகளென்னவோ இருக்கின்றன. ஆனல், அவற்றில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள் காணப் படவில்லை. அந்தப் பெட்டிகளில் சில சாமான்கள் இருந்தன என்பதாவது உங்களுக்குத் தெரியுமல்லவா?' என்று யாத்திரிகன் கேட்டான்.

'ஆம். ஆனல், போலீஸார் நீங்கள் கூறுவதை நம்புவர் என்று எப்படி நினைப்பது? அவற்றுள் கற்களையும் வைக்கோலையும் வைத்துவிட்டு, பிறகு நீங்களே பெட்டிகளின் பூட்டுகளை உடைத்து அவைகளை வெளியே எறிந்துவிட்டுப் பொய் சொல்லுகிறீர்களென்று ஏன் போலீஸார் எண்ணக்கூடாது? பொய்க் குற்றம் சாட்டிய பெரிய குற்றத்திற்காக உங்களையே அவர்கள் ஒரு வேளை தண்டித்தாலும் தண்டிக்கக் கூடும்!' என்று யோகி கூறினன்.

அதைக் கேட்ட யாத்திரிகன் பயந்து நடுங்கினன். 'நான் போலீஸாரிடம் சொல்லப் போவதில்லை. ஆனால், நான் இப்போது என்ன செய்வதென்பது மாத்திரம் எனக்குத் தோன்றவில்லை,' என்று யாத்திரிகன் சொன்னன்.

'இப்போதே தந்தியடித்து ஊரிலிருந்து பணம் வரவழைத்துக்கொள்ளுங்கள். என்னைப் பொறுத்த மட்டில் நான் நீங்கள் தயை கூர்ந்து எனக்குக் கொடுப்பதாக வாக்களித்திருக்கும் நூறு ரூபாயைக்கொண்டு வேண்டிய பாத்திரம் முதலியவைகளை வாங்கிக் கொண்டு, பிறர்க்குதவி செய்யும் தொழிலை ஆரம்பித்துவிடுவேன்,' என்று யோகி சொன்னன்.

அதைக் கேட்டு யாத்திரிகன் தன் உதட்டைக் கடித்துக்கொண்டான். அந்த யோகியின்மீது அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. ஆனால், அவன் மீது எப்படிக் குற்றம் சாட்டுவதென்பது யாத்திரிகனுக்குத் தோன்றவில்லை. யோகி தன்னிடம் இரண்டு சாவிகளையும் கொடுத்துவிட்டதல்லாமல், தன்னுடனேயே ஊர் சுற்றுவதற்கு வந்துவிட்டான். வீட்டிலோ, வேறு ஒருவரும் இல்லை. மேலும், யோகியின் சொந்த வஸ்துக்களே களவாடப்பட்டிருக்கின்றன. ஆகவே, செய்வதென்னவென்று தோன்றாமல், 'எல்லாம் விதியின்படி நடக்கும்!' என்று யாத்திரிகன் தன் மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டான்; உடனே தன் ஊருக்குத் தந்தியடித்து எட்டு மணி நேரத்திற்குள் ஆயிரம் ரூபாய் வரவழைத்துக் கொண்டான்.

'இப்பொழுது நாம் புதிய பாத்திரங்களை வாங்கிக் கொண்டு சமையல் ஆரம்பிக்கவேண்டும்,' என்று எப்

போதும் போலச் சிரித்துக்கொண்டே யோகி சொன்ஞன். யாத்திரிகனும் தான் சொல்லியபடியே செய்ய உத்தேசித்து, முன் பின் யோசியாமல் நூறு ரூபாய்களை எடுத்து ஜகந்நாத பிராணத் தியாகியிடம் கொடுத்துவிட்டு, விடை பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டகன்ருன்.

யாத்திரை செல்லுமிடங்களிலெல்லாம், அந்த யாத்திரிகன் தனக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் குறித்தே சிந்தித்துக்கொண்டிருந்தான். யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும், தன் மனைவியுடனும் மக்களுடனும் முன்போல வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தான். ஜகந்நாத பிராணத் தியாகியின் விஷயத்தை அவன் நாளடைவில் மறந்து போய்விட்டான்.

மூன்று வருஷங்கள் கழிந்த பிறகு, பெரிய கொட்டை எழுத்துக்களில், சமாசாரப் பத்திரிகைகளில் பின் வருமாறு பிரசுரிக்கப்பட்டிருந்ததை அந்த யாத்திரிகன் கண்டான் :

'மாறு சாவிகள்
மூன்ருவது இரகசியச் சாவி
காசியில் பெருங்கொள்ளைக்காரர்கள்.

ஜகந்நாத பிராணத் தியாகிக்கு இரண்டு வருஷம் கடுங்காவல் சிக்ஷை விதிக்கப்பட்டது.'

இதைக்கண்டு அவன் விடாமல் சிரித்தான். தன் மனைவியிடம் சென்று, 'என் அன்பே, ஜகந்நாத பிராணத் தியாகியின் உடல் இன்னும் இரண்டு வருஷ காலம் பிறர்க்கு உதவி செய்வதற்காகப் பிரத்தியேகமாக வைக்கப்பட்டிருக்கிறது,' என்று சொல்லித் தன் நஷ்டத்தையும் மறந்து சிரித்தான்.

64. பாம்பு கடித்து மரணம்

[நாக பூஜைக்காரன் பொறுப்பு]

இந்து தேச சட்டப்படி நாக ஸர்ப்பங்களைப் பூஜை செய்பவர்களுக்குக் கடுந்தண்டனை விதிக்கப் பட்டு வந்தது. அவர்கள் பூஜை செய்யும் ஸர்ப்பங்கள் அந்த வழியே போகும் சாதாரண ஜனங்களைக்கடித்து, அதனால் ஜனங்கள் இறந்து போனால், கொடிய தண் டனை பூஜை செய்பவர்களுக்கு விதிக்கப்பட்டு வந்தது.

இப்படியிருக்கையில், ஒரு சமயம் நாக ஸர்ப்பங் களைப் பூஜை செய்து வந்த ஒரு பக்தனுடைய தோட் டத்தின் வேலிக்கருகில் ஒரு மனிதன் போய்க்கொண் டிருந்தான். அவனை ஒரு நாக ஸர்ப்பம் கடித்துவிட் டது. அந்த மனிதன் இறந்து போனான். நாக பூஜை செய்பவன் கைது செய்யப்பட்டான். அரசன் குற்றஞ் சாட்டப்பட்ட அவனுக்கு இருபத்து நான்கு கசை அடி கொடுக்கும்படி உத்தரவிட்டான்.

'தந்தையார் போன்றவரே, இது நியாயமன்று. நான் ஒரு ஸர்ப்பத்தைப் பூஜை செய்வதென்னவோ வாஸ்தவம். என் வேலிக்கருகில் இருக்கும் ஸர்ப்பம் ஒருவனைக் கடித்தால், அதற்கு என்மீது ஏன் குற்றம் சாட்ட வேண்டும்?' என்று நாக பூஜைக்காரன் கேட்டான்.

'அதற்கு நீதான் காரணம். நீ அதற்கு ஆகார மளித்துப் பூஜை செய்து உன் வீட்டில் தங்கியிருப்ப தற்கு இடங்கொடுத்ததனாலல்லவா அது ஒரு மனி தனைக் கடித்தது? அதை நீ காப்பாற்றாமலிருந்தால், ஜனங்கள் அதைக் கொன்றிருப்பார்கள். நீ அதைப் பூஜை செய்து வருவதனால், பிறர் அதைக் கொல்வ தற்கு நீ இஷ்டப்பட மாட்டாய். அது பிறரைக்

கொல்லாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவும் உன்னால் முடியாது. அதனால், நீதான் குற்றவாளி என்பதில் சந்தேகமில்லை,' என்று அரசன் கூறினான்.

'பிரபுவே, நீங்கள் சொல்வது போல நானே குற்றவாளி என்று வைத்துக்கொள்வோம். அதே மாதிரியாக எங்கும் வியாபித்திருக்கும் ஒரு தெய்வத்தை அனைவரும் வழிபடுகின்றனரல்லவா? மனிதர்களைத் தண்டிக்க, சர்வ வல்லமையுள்ள கடவுள் பிளேகு, வாந்திபேதி முதலிய கொடிய தொத்து நோய்களை உண்டாக்கி அவற்றின் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்து போகும்படி செய்கிறாரல்லவா? அத்தகைய கடவுளைப் பூஜித்து வருபவர்களைத் தொத்து வியாதி தோன்றும் காலத்துத் தண்டனைக்குள்ளாக்கவேண்டுவது நியாயம் அல்லவா? ஆனால், அவர்களை ஒருவரும் தண்டிப்பதில்லையே! அப்படியிருக்க, எனக்குமாத்திரம் ஏன் இத்தகைய அநியாய தண்டனை விதிக்கவேண்டும்?' என்று நாகபூஜை செய்பவன் கேட்டான்.

'நாங்கள் செய்வது அநியாயமல்ல. தொத்து வியாதிகளுக்கும் தெய்வத்திற்கும் சம்பந்தமிருக்கிறதென்பதை இது வரையில் ஒருவரும் சந்தேகமில்லாமல் எடுத்துக் காட்டவில்லை. அதை நம்புவதற்கில்லை. ஆனால், உன் விஷயத்தில், நீ பூஜை செய்யும் தெய்வத்தினாலேதான் அந்த மனிதன் கொல்லப்பட்டான் என்பது சந்தேகமில்லாமல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது,' என்று அரசன் பதிலளித்தான்.

'இதற்கெல்லாம் காரணம், அந்தப் பாழுந் தெய்வம் கண்ணுக்குத்தெரியாமல் இருப்பதுதான்,' என்று நாக பூஜைக்காரன் சொல்லி வருத்தப்பட்டான்.

'நீயும் இனிமேல் கண்களுக்குப் புலப்படாத ஸர்ப்பங்களையே பூஜை செய்தாயானால், உன்மீது குற்றம் சுமத்தப்படமாட்டாது,' என்று சிரித்துக் கொண்டே அரசன் சொல்லிவிட்டு, தன் ஆதி உத்தரவை நீக்க மறுத்துவிட்டான். பக்தன் வேறு வழியின்றித் தண்டனைக்குட்பட்டான்.

65. பனைமரத்தருகில் செல்லாதே!

இந்து சாஸ்திரப்பிரகாரம், சில ஜாதியினர் பனைமரத்தருகில் செல்லக்கூடாது; பனைமரம் ஏறக்கூடாது; பனைமரத்தடியில் நிற்கவும் கூடாது; பனைமரத்திலிருந்து கள் இறக்கப்படுவதால், அந்த ஜாதியார்களின்மீது சந்தேகமே ஏற்படக்கூடாது என்னும் எண்ணத்தினால் அத்தகைய விதிகள் ஏற்படுத்தப்பட்டனவென்று நாம் கருதவேண்டியிருக்கிறது. அந்த ஜாதியார் கூட்டங்கள் கூடும்போது, 'பனைமரத்தருகில் செல்லாதே!' என்னும் மந்திரத்தைத் தான் முதன்முதல் உச்சரிப்பது வழக்கம்.

அத்தகைய வருஷாந்தரக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருக்கும்போது, அவர்களுடைய பெரிய மதகுரு, 'பனைமரத்தருகில் செல்லாதே; பனைமரத்தின்மீது ஏறாதே,' என்னும் பழைய விதிகளை அழுத்தந் திருத்தமாகச் சொன்னார். கூட்டத்திலிருந்தவர்கள் பலத்த கரகோஷம் செய்தார்கள். சீர்திருத்தக்காரன் ஒருவன் அக்கூட்டத்திலிருந்தான்.

அவன் எழுந்திருந்து பின் வருமாறு சொன்னான்: 'இந்த வாக்கியங்களில் அர்த்தமேயில்லை. எல்லாம் மனிதனுடைய மனநிலையைப் பொறுத்திருக்கிறது. அடுப்பெரிக்கவும், வீட்டிற்குக் கூரை வேயவும் உப

யோகப்படும் பனை ஓலைக்காக ஒரு மனிதன் மரத்தின் மேல் ஏறக்கூடும். பனை நுங்குக்காக ஒருவன் மரத்தின்மேல் ஏறினாலும் ஏறலாம். பனை நுங்கு சாப்பிடுவதற்கு ஏற்ற நல்ல வஸ்து என்பதில் சந்தேகமுண்டா? அதே மரத்திலிருந்து கள் இறக்கப்படுவதனால், நாம் அதன் மூலம் நமக்குக் கிடைக்கும் நல்ல வஸ்துக்களை அடையாமல் ஏன் இருக்க வேண்டும்? பனங்கள் வேண்டுமென்னும் எண்ணமுள்ளவன், அதனருகில் செல்லாமலே, அந்த மரத்தைப் பாராமலே, தான் இருக்குமிடத்திற்கு வரவழைத்துக்கொள்ளுவது கஷ்டமா? கதவைப் பூட்டிக்கொண்டு தன் வீட்டிற்குள்ளேயே கிடப்பவன் திருடாமல் இருப்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? பெண்களையே பார்த்தறியாதவன் மனத்தில் கெட்ட எண்ணங்கள் தோன்றுவதற்கு நியாயமென்னவிருக்கிறது? நம் மதாசாரியர் கூறிய உபதேசங்களைச் சிறிது ஆராய்ந்து பார்த்தால், உண்மை விளங்கும். அவர் சொல்வதுபோல நாம் கால்களால் நடந்து செல்வதுங்கூடக் கெடுதலென்பது ஏற்படும். கால்கள் இருப்பதனாலல்லவா நாம் கள்ளுக்கடைக்கும், தாசிகள் வீட்டிற்கும் செல்கிறோம்? அவ்வளவு எண்ணத்திற்கு உயிருடனிருப்பதனாலல்லவா நாம் பல பாவ கிருத்தியங்களைச் செய்ய நேரிடுகிறது. ஆகவே, தற்கொலை செய்துகொண்டால், நாம் பாவமே செய்யாமலிருக்க முடியும்.'

ஜாதிப் பஞ்சாயத்துக்காரர்கள், சீர்திருத்தக்காரனுடைய வார்த்தைகள் மிகவும் உண்மையானவை என்பதை அறிந்துகொண்டு, சமூக முன்னேற்றத்திற்கு அவசியமான சில மாறுதல்களைத் தங்கள் ஜாதிக் கட்டுப்பாடுகளில் செய்தார்கள்.

66. தேக பலமே பிரதானம்.

'மனித வருக்கத்தில் தேக பலமே மிகவும் முக்கியமானது,' என்று பழைய காலத்துப் பழக்க வழக்கங்களில் அதிக நம்பிக்கையுள்ள ஒருவன், வேதாந்தியான தன் சிநேகிதனிடம் சொன்னான். 'தேக பலத்தால் ஆகாத காரியம் வேறெதனாலும் ஆகாது. தேக பலம் இல்லையானால் ஒன்றும் செய்ய முடியாது,' என்று அவன் சொன்னதைக் கேட்ட வேதாந்தி, பின் வருமாறு பதிலளித்தான் :

'நீ சொல்வது சரியன்று. சிறு குழந்தை, வயது சென்ற கிழவன், நோயாளி, ஸ்திரீ முதலியவர்களுக்குத் தேக பலம் நிரம்ப இருக்கின்றதா? தேக பலமில்லாமலிருக்கும் இவர்கள் தங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை—தேக பலத்தால் அடைய முடியாத வஸ்துக்களை—நம்மிடமிருந்து கவர்ந்துகொள்கிறார்கள் என்பது உனக்குத் தெரியாதா ?'

67. தவத்தின் பயன்

ஒருவன் பெருந்தவங்கிடந்து தெய்வத்தைத் தரிசிக்க எண்ணினான். காட்டிலிருந்த ஓர் ஏரி கரையில் உட்கார்ந்துகொண்டு அவன் கண் மூடி மௌனியாகித் தன் மனத்தைக் கடவுளிடம் இலயித்துப் போகும்படி செய்து தவஞ் செய்தான். கடவுள் அவனைப் பரிட்சிக்க எண்ணினார். அவர் ஒரு சிறு பையன் வேடம் தாங்கியவராய், ஏரியில் விழுந்து தடுமாறினார். உதவி செய்யும்படி அந்தப் பையன் கூவினான். தான் முழுகிப் போகும் தருணத்திலிருப்பதாகவும், தன்னை உடனே காப்பாற்றவேண்டுமென்றும் அந்தப் பையன்

கூக்குரலிட்டு அழுதான். அந்தப் பையன் அழுவதைத் தவஞ் செய்துகொண்டிருந்தவன் கேட்டான்; கண்ணைத் திறந்து பார்த்தான்; முழுகிக்கொண்டிருக்கும் பையனைக் கவனித்தான்; அந்தப் பையனுடைய பரிதாப நிலைமையைக் கண்டு அவனுக்கு உதவி செய்ய எண்ணினான்; ஆனால், தவஞ்செய்து சீக்கிரம் கடவுளைக் காண வேண்டுமென்னும் பேராசையினால் தூண்டப்பட்டு, மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டு தவஞ் செய்யத் தொடங்கினான். பையனோ, உதவி செய்யும்படி மேலும் மேலும் பரிதாபகரமான குரலுடன் அலறினான். பையன் கதறுவதைக் கேட்டும் தன்னிடத்தை விட்டுத் தவஞ் செய்துகொண்டிருந்தவன் அசையவில்லை. கண்ணை மூடிக்கொண்டு அந்தப் பையனைப் பாராமலே அவன் கடவுளை நினைத்துத் துதித்துக்கொண்டிருந்தான்.

'துராத்துமாவே, நீ ஒரு போதும் என்னைத் தரிசிக்க முடியாது. ஏரியில் முழுகி இறந்துபோகும் சமயத்திலிருந்த ஒரு குழந்தையைக் காப்பாற்றாத பாவியாகிய நீ, என்னைக் காண முடியாது. உனக்கு மோக்ஷமும் கிடைக்காது,' என்று ஆகாயத்திலிருந்தபடியே கடவுள் அசரீரியாகக் கூறினார்.

'அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகரே, நான் உம்மைக்குறித்தே தவம் செய்துகொண்டிருந்தேன்,' என்று அவன் துக்கத்துடன் கூறினான்.

'வெளியே நடக்கும் விஷயங்கள் தெரியாமலிருக்கும்படி நீ தவம் செய்யவில்லை. அவ்வாறு நீ செய்திருந்தால், ஒரு வேளை நான் உன்னை மன்னிக்கக் கூடும். நீயோ, அந்தப் பையன் முழுகிக்கொண்டிருப்பதைப் பார்த்தாய்; அவன் அழுகுரலைக் கேட்டாய்;

ஆனால், இருந்த இடத்தை விட்டு அசையவேயில்லை. நீ மனிதர்களுள் சுயநலத்தையே கருதும் பெரிய பாதகன். தெய்வத்தைத் தரிசிக்கவும், சுவர்க்க லோகம் செல்லவும், நீ கைக்கொண்ட முறை சரியான தன்று,' என்று அசரீரி ஆகாயத்திலிருந்து கிளம்பிற்று.

68. அதிகம் என்பது எதைப் பொறுத்தது ?

கூலி வேலை செய்பவன் ஒருவன் பரம ஏழையாயிருந்தான்; ஒரு பணக்காரன் வீட்டில் அவன் ஒரு நாள் வேலை செய்தான். வேலை செய்துவிட்டுச் சாயந்திரம் தன் வீடு திரும்பும்போது ஜன நடமாட்டம் அதிகமில்லாத ஒரு சாலையோரத்தில் பாம்புப் புற்று ஒன்று இருப்பதாகவும், அந்தப் புற்றில் அதிக திரவியம் இருப்பதாகவும் அவன் அந்தப் பணக்காரனிடம் சொன்னான். அந்த வழியே போகின்றவர்கள் புற்றில் நாணயங்களைப் போட்டுச் செல்வது வழக்கமென்றும், அந்தத் திரவியத்தை நாகப்பாம்புகள் காத்துக்கொண்டிருக்கின்றன என்றும் அவன் சொன்னான்; நாணயங்களை வழிப்போக்கர்கள் போடுவதைத் தான் கண்ணாரப் பார்த்திருப்பதாகவும் சொன்னான். பணக்காரனுக்குப் பேராசை உண்டாயிற்று. ஆயினும், அவன் சொல்வது உண்மையா அல்லவா என்பதை அந்தப் பணக்காரன் அறிந்து கொள்ள விரும்பினான்.

'அப்படியானால், நீ ஏன் அந்தப் புற்றிலிருக்கும் திரவியத்தை இதுவரையில் எடுத்துக்கொள்ளவில்லை ?' என்று பணக்காரன் கேட்டான்.

'என்ன சொல்கின்றீர்கள்? தெய்வத்தன்மை வாய்ந்த நாக ஸர்ப்பம் காத்துக்கொண்டிருக்கும்

திரவியத்தைக் கைப்பற்றுவதா ?' என்று பயத்துடன் வேலைக்காரன் பதிலளித்தான்.

செல்வன், 'என்ன மூட நம்பிக்கை! இவனுக்குத் தைரியமே இல்லை,' என்று எண்ணினான். வேலைக்காரன் கூறியது உண்மையென்பதை அவன் தெரிந்துகொண்டான். அவன் அந்தக் கூலியாளுக்கு ஐந்து ரூபாயைக் கொடுத்து, அந்தப் புற்று இருக்குமிடத்தைத் தனக்குச் சரியாகத் தெரிவிக்கும்படிக்கும், அதை வேறொருவருக்கும் சொல்லாமலிருக்கும்படிக்கும் கூறினான். தன் உத்தரவில்லாமல் வேறு எவரிடமும் அந்தப் புற்று இருக்குமிடத்தைச் சொல்லக்கூடாதென்று பணக்காரன் கூலியாளிடம் கண்டிப்பாகச் சொன்னான். அந்தப் பணக்காரன் கூலியாளின் உதவியால் புற்று இருக்குமிடத்தைச் சரியாக அறிந்துகொண்டான். வேறு ஒருவரிடமும் சொல்வதில்லையென்று கூலியாள் வாக்களித்தான்.

'பிரபுவே, ஏன் நீங்கள் எனக்கு இவ்வளவு பணம் கொடுத்துவிட்டீர்கள் ?' என்று அவன் கேட்டான்.

'இவன் சுத்த மடயனாய் இருக்கிறானே! இவனுக்கு என் சூழ்ச்சிகள் தெரியவில்லைபோல இருக்கிறது!' என்று பணக்காரன் தன் மனத்திலெண்ணிக்கொண்டான். பிறகு அவன் அந்தக் கூலியாளைப் பார்த்து, 'உன்னைப்போல் ஏழைகளுக்குக் கொடுத்து உதவுவதற்காகவே கடவுள் எங்களுக்குப் பணம் கொடுத்திருக்கிறார். நீ இனிமேல் வீட்டிற்குப் போகலாம். இந்த விஷயத்தை மாத்திரம் இரகசியமாக வைத்துக்கொண்டிரு,' என்று சொன்னான். அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு, அந்தக் கூலியாள் தன் வீடு சென்றான்.

அன்றிரவு அந்தப் பணக்காரன், நம்பிக்கையுள்ள சில கூலி ஆட்களைக் கூட்டிக்கொண்டு, பாம்புப் புற்று இருக்குமிடத்திற்குச் சென்றான்; புற்றைத் தோண்டிப் பார்க்கும்படி கூலியாட்களுக்கு உத்தர விட்டான். கூலியாட்கள் தோண்ட ஆரம்பித்த உடனே, மூன்று கொடிய நாக ஸர்ப்பங்கள், 'புஸ் புஸ்' என்று சீறிக்கொண்டு வெளியே வந்தன. ஒரு கூலிக்காரனை ஸர்ப்பம் நன்றாகக் கடித்துவிடவே, அவன் இறந்தான்.

'நீ வருத்தப்பட வேண்டா; உன் மனைவி மக்களைக் காப்பாற்ற நான் வேண்டும் திரவியம் கொடுக்கிறேன். கஷ்டப்படாமல் திரவியம் கிடைக்குமா?.' என்று பணக்காரன் இறக்கவிருந்த அந்தக் கூலியாளிடம் சொல்லிச் சமாதானம் செய்தான்.

அந்த ஸர்ப்பங்களைக் கொன்றுவிட்ட பிறகு, புற்றிலிருந்த நாணயங்களை எண்ணிப் பார்த்தபோது, 214 காலணாக் காசுகள் அதனுள்ளிருந்ததாகத் தெரிய வந்தது. அந்த ரூ. 3-5-6 ஒவ்வொரு வழிப்போக்கனும் காலணா வீதம் போட்டதால் சேர்ந்ததென்றே சொல்ல வேண்டும். அதைக் கண்ட பணக்காரனுக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. புற்றில் புதையல் இருக்கு மென்று கூறிய கூலியாளைக் கூட்டிக்கொண்டு வரும்படி பணக்காரன் சொல்லி அனுப்பினான்; மறு நாள் காலையில் கூலி ஆள் வந்ததும், 'பாதகனே, அந்தப் புற்றில் பெரிய புதையல் இருக்கிறதென்று நீ கூறினாயே! அதில் 214 காலணாக்கள்தானே இருந்தன?' என்று கோபத்துடன் பணக்காரன் கேட்டான்.

'அத்தொகை அதிகமல்லவா? பிரபுவே, ஒரு வருஷம் முழுவதும் கஷ்டப்பட்டாலும் என்னால் அந்தத் தொகையைச் சேர்த்துவைக்க முடியாதே!' என்று அந்தக் கூலியாள் சொன்னான். பணக்காரன் என்ன சொல்லுவான் பாவம்!

69. பாலை வனத்தின்மீது விருப்பம்

'தார்' என்னும் பாலை வனத்தைச் சேர்ந்த ஒரு ராஜபுத்திர வீரன் அயோத்தியில் பல வருஷங்கள் வசித்து வந்தான். ஒரு நாள் அயோத்தியைச் சேர்ந்த ஒருவன், 'தார்' என்னும் பாலை வனத்தைவிட அயோத்தியின்மேல் அவனுக்கு அதிக விருப்பம் இருக்கிறதாவென்று கேட்டான். 'இல்லை; எனக்குத் தார்ப் பாலை வனத்தின்மீதுதான் அதிக பிரியம்,' என்று அந்த ராஜபுத்திர வீரன் சொன்னான்.

'புண்ணிய நதிகள் பாய்கின்ற செழிப்புள்ள பார்ப்பதற்கு அழகான அயோத்தி எங்கே, தண்ணீரில்லாத மணல் நிரம்பிய தார்ப்பாலைவனம் எங்கே! அயோத்தியின் காலில் தார்ப்பாலைவனத்தைக் கட்டி அடிக்க முடியுமா!' என்று அயோத்தியைச் சேர்ந்தவன் உரைத்தான்.

'ஆம்,' என்றான் ராஜபுத்திர வீரன்.

'அப்படியானால், நீ ஏன் தார்ப்பாலைவனத்தை அதிகமாக விரும்புகிறாய்?' என்று அயோத்திமா நகரைச் சேர்ந்தவன் கேட்டான்.

'ஏனென்றால், அது என் தாய்நாடு. மற்றவர் தாய்மார்கள் பார்ப்பதற்கு லக்ஷணமாயும் அழகுள்ளவர்களாயும் தோன்றினாலும், நீ எப்படி உன் தாயினிடம் அதிக அன்புடன் நடந்துகொள்கிறாயோ, அதுபோன்றதே இதுவும்,' என்று ராஜபுத்திர வீரன் பதிலளித்தான்.

70. இரண்டாம் கலியாணம்

[சுயநலக்காரன் கற்ற படிப்பினை]

சுயநலப் பிரியனான ஒரு வாலிபன் இருந்தான். அவன் பெயர் சிவராமன். அவனுக்குக் கலியாணமாகி யிருந்தது. ஒரு மாதம் முழுவதும் மனைவி நோயுடன் படுத்துக்கிடந்த காரணத்தைக்கொண்டு சிவராமன் மறு விவாகம் செய்துகொள்ள நிச்சயித்தான். அவன் மனைவி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவன் ஒரே பிடிவாதமாய் வேறு கலியாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னான். 'உன்னைப் போன்ற நோயாளியை மனைவியாகக் கொண்டிருப் பதில் என்ன பயன்?' என்று அவன் மனைவியைக் கேட்டான்.

'நான் என்ன எப்பொழுதும் நோயாளியாய் இருந்தேனே? இத்தனை வருஷங்கள் நான் சௌக்கியமாய் இருக்கவில்லையா?' என்று அவள் கேட்டாள்.

'நீ சௌக்கியமாயிருந்தபோது நான் மறு விவாகம் செய்துகொள்ள எண்ணியதுண்டா?' என்று பதில் சொல்லிவிட்டு அவன் சும்மா இருந்துவிட்டான்.

அவனுடைய சிநேகிதர்கள் மறு விவாகம் செய்து கொள்ள வேண்டாவென்று எவ்வளவோ சொல்லியும், அவன் கேட்கவில்லை.

'சிவராமா, நீ ஒரு மிருகம். உன் மனைவிக்குத் தகுந்த மருந்துகள் கொடுத்துச் சிகிச்சை செய்து அவளுடம்பைக் குணப்படுத்துவதைவிட்டு, நீ அவளைக் கவனியாமல் இருக்கிறாய். அதுவுமன்றி, வேறு கலி யாணம் செய்துகொள்ளவும் எண்ணுகிறாய். உனக்கு

எந்த மனிதன் பெண் கொடுக்கப் போகிறான், பார்க்கலாம்!' என்று ஒரு வேதாந்தி சிவராமனிடம் சொன்னான்.

'பெண் கொடுக்கப் பலர் தயாராயிருக்கின்றனர். எனக்கு என் ஜாதகத்தின் நகல் எடுத்து அனுப்புவ தற்கே போதுமான அவகாசமில்லையே! நான் முந்தி, நீ முந்தி என்று சொல்லிக்கொண்டு அநேகர் காத்துக்கொண்டிருக்கின்றனர்,' என்று சிவராமன் பதிலளித்தான்.

'நீ சொல்வது உண்மை. நமது தேசம் கெட்டுப் போன மாதிரி வேறு எந்தத் தேசமும் கெட்டுப்போக வில்லை,' என்று வேதாந்தி சொல்லிவிட்டுச் சிறிது நேரம் யோசித்துப் பார்த்தான். அவன் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. உடனே அவன் சிவராமனிடம் பின் வருமாறு சொன்னான்:

'கண்டிப்பாகக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று நீ சொல்கிறபடியினால், இந்தத் தடவை அதிர்ஷ்டமுள்ள ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து நீ கலியாணம் செய்துகொள்ள வேண்டும். நானும் உன்னுடன் வருகிறேன். நாமிருவரும் தேசம் முழுவதும் சுற்றித் திரிந்து, ஒரு நல்ல பெண்ணைத் தேடிப் பார்த்து, நிச்சயம் செய்யலாம். அரோக திடகாத்திரசாலியாயும், அதிக அழகு வாய்ந்த வளாயும், அதிக செல்வம் படைத்தவளாயுமிருக்கும் ஒரு பெண்ணைத் தேடிப் பார்த்து நீ கலியாணம் செய்துகொள்ள வேண்டும்.'

சிவராமன் அதைக்கேட்டு அதிக சந்தோஷமடைந் தான். தான் கூறிய சகல இலட்சணங்களும் வாய்ந்த

மகளிர் பலர் இருந்த ஒரு கிராமத்திற்கு அந்த வேதாந்தி சிவராமனை அழைத்துச் சென்றான். அந்தக் கிராமத்திலிருந்த ஒரு வீட்டிற்கு அவர்கள் சென்று, அதிரூப சுந்தரியாய் விளங்கிய ஒரு பெண்ணைப் பார்த்தார்கள். அந்தப் பெண்ணின் பெற்றோர்களிடம் அவர்கள் கலியாண விஷயத்தைக் குறித்துப் பேசத் தொடங்கினார்கள்.

'அந்த விஷயங்களைக் குறித்து நாளைக்குப் பேசிக் கொண்டால் போகிறது! இன்று இரவு நீங்கள் எங்கள் வீட்டில் விருந்து சாப்பிட வேண்டும்,' என்று அப்பெண்ணின் பெற்றோர் கூறினர். அன்றிரவு விருந்து நடந்தது. நன்றாகப் பேதியை உண்டாக்கக் கூடிய மருந்து ஒன்று அன்றிரவு பரிமாறப்பட்ட போஜன பதார்த்தங்களுடன் சேர்க்கப்பட்டிருந்தது. அதனுடைய வேகத்தால் குறைந்தது மூன்று தினங்கள் இருக்கும். மருந்தின் வேகத்தினால் சிவராமனுக்குச் சாப்பிட்ட ஒரு மணி நேரத்திற்குப் பிறகு பேதியாகத் தொடங்கிற்று. அவனுடைய சிநேகிதனான வேதாந்தி ஏதோ ஜாதக விஷயங்களைக் கவனிக்க ஜோஸியர் வீட்டிற்குச் சென்றிருந்தான்.

'இவனை உடனே வீட்டை விட்டு வெளியே தள்ளிவிடுங்கள். வாந்தி பேதியுடன் அவஸ்தைப்படுபவன் இந்த வீட்டிலிருக்கக்கூடாது,' என்று அந்தச் சுந்தரியின் பெற்றோர் கூறினர்.

வாந்திபேதி என்னும் வார்த்தையைக் கேட்ட சிவராமனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தன் சிநேகிதன் ஜோஸியர் வீட்டிலிருந்து திரும்பி வரும் வரையில் அன்றிரவு அங்குத் தங்குவதற்கு உத்தரவளிக்கும்படி சிவராமன் அவர்களைக் கெஞ்சிக்

கேட்டுக்கொண்டான். அவர்கள் முடியாதென மறுத்தார்கள்.

'வாந்தி பேதியுடன் அவஸ்தைப்படும் ஒரு நோயாளியைக் கட்டிக்கொண்டு யாரால் அவஸ்தைப் பட முடியும்?' என்று அப்பெண்ணின் பெற்ரோர் கூறினர். பிறகு அவர்கள் வேலையாளைக் கூப்பிட்டு அவனை மனித சஞ்சாரமில்லாத வெட்ட வெளியில் கொண்டுபோய் விட்டுவிடும்படி உத்தரவிட்டார்கள்.

நள்ளிருளில், அவன் தனியாக ஒரு மைதானத்தில் கிடந்தான். அவனுக்கு அடிக்கடி பேதியாய்க்கொண்டிருந்தது. வேதாந்தியின் பெயரைச் சொல்லி, அவன் பல முறை கூப்பிட்டுப் பார்த்தான். அவனுக்குப் பதிலே கிடைக்கவில்லை. பயத்தினல் அவன் நடுங்கினன். தன் வீட்டை விட்டு வெளியே வந்ததற்கு அவன் மனம் வருந்தினன். மறு விவாகத்தை அவன் வெறுத்தான். நோயாளியான தன் மனைவியுடன் தன் வீட்டிலிருந்தால் போதுமென்று அவன் எண்ணினன். பேதியாக ஆக அவன் பலவீனமடைந்தான். பலவீனத்தால் அவன் மயக்கமடையும் சமயத்தில் வேதாந்தி அவனிடம் சென்று அவனுக்கு உற்சாகத்தை உண்டு பண்ணினன்.

'இப்பொழுது உனக்கு வியாதியின் தன்மை இன்னதென்று தெரிகிறதா? நோயாளிகளைக் கவனிக்காமல் விடுவது எவ்வளவு கொடுமையென்பது உனக்கு இப்போது விளங்குகிறதா?' என்று வேதாந்தி சிவராமனைக் கேட்டான்.

'எனக்குத் தெரிந்தது! இப்போது தெரிந்தது! என்னைக் குணப்படுத்தி எப்படியாவது என் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு. நான் இனி

மேல் என் மனைவிக்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளை யெல்லாம் செய்து நன்றாகக் காப்பாற்றுகிறேன். இது சத்தியம்! முதலில் எனக்கு உயிரளி. இனிமேல் நான் வேறு விவாகம் செய்துகொள்ள மாட்டேன்,' என்று சிவராமன் வேதாந்தியிடம் சொன்னான்.

'நீ சத்தியம் செய்யவேண்டும்,' என்று வேதாந்தி கேட்க, சிவராமன் அப்படியே சத்தியம் செய்தான். வேதாந்தி மாற்று மருந்து ஒன்று கொடுத்துப் பேதியை நிறுத்தினான். பிறகு சிவராமனை வேதாந்தி அருகிலிருந்த ஒரு குடிசைக்குத் தூக்கிச் சென்று சிறிது கஞ்சி கொடுத்தான். பேதி நின்று போகவே, சிவராமனுக்குச் சிறிது பலம் வந்தது. இரண்டு தினங்கள் கழிந்ததும் அவன் வேதாந்தியுடன் தன் வீடு திரும்பினான்.

சிவராமன் செய்த சத்தியத்தைக் குறித்து ஏற்கெனவே சிவராமன் மனைவிக்கு வேதாந்தி தெரியப் படுத்தியிருந்தான். அந்தச் சந்தோஷ சமாசாரத்தைக் கேட்ட அவன் மனைவி, அதிசீக்கிரத்தில் குணமடைந் தாள். சிவராமன் தன் மனைவியிடம் பின் வருமாறு சொன்னான்:

'என் கண்ணே, நோயின் தன்மையை நானும் இப்போது அறிந்துகொண்டேன். நான் செய்த பாவங்களுக்கு என்னை மன்னிப்பாயாக! இந்த வேதாந்தி இல்லாமற் போயிருந்தால், நான் அன்று நடுக்காட்டில் வாந்தி பேதியால் இறந்து போயிருக்க வேண்டும்.'

அதைக் கேட்டு வேதாந்தி சிரித்தான்.

71. மிருக பலி

ஒரு பிராமணன் ஓர் ஆட்டைப் பலி கொடுக்க நிச்சயித்தான். மத சீர்திருத்தக்காரன் ஒருவன் அந்தப் பிராமணனிடம் சென்று, 'தயவு செய்து, தெய்வத்தின்மேல் பாரத்தைச் சுமத்தி, அந்த ஆட்டைப் பலி கொடுக்க வேண்டா. உன்னால் சிருஷ்டி செய்ய முடியாத ஒரு பிராணியை நீ நாசமாக்காதே. உன்னால் கொடுக்க முடியாத ஒரு பொருளை நீ பிறரிடமிருந்து அபகரித்துக்கொள்ளாதே,' என்று சொன்னான்.

'நான் செய்வதில் என்ன பாவம்? பல ஆண்டுகளாகப் பெரிய தபோதனர்களும் பிராமணர்களும் இன்னும் பலரும் யாகங்கள் செய்யும்போது மிருகங்களைப் பலி கொடுக்கும் வழக்கம் இருந்து வருகிறது,' என்று பிராமணன் பதிலளித்தான்.

'ஆம்; அவர்கள் செய்து வந்தது உண்மையே. ஆனால், மிருகங்களைக் கொன்ற பிறகு அவைகளை உயிர்ப்பிக்கும் அபார சக்தியும் அவர்களுக்கு இருந்து வந்தது. நீ கொல்லும் மிருகங்களை உன்னால் உயிர்ப்பிக்க முடியுமா?' என்று சீர்திருத்தக்காரன் கேட்டான்.

'என்னால் முடியாது. எனக்கு அத்தகைய அபார சக்தி இல்லை,' என்று பிராமணன் சொன்னான்.

'அப்படியானால், அவர்கள் செய்து வந்த காரியங்களையெல்லாம் நீயும் செய்யத் துணிவது அசட்டுத்தனமல்லவா? நமக்குச் சக்தியும் போயிற்று; சுதந்திரமும் போயிற்று. ஆகையால், அந்த ஆட்டைக் கொல்லாமல் விட்டுவிடு,' என்று சீர்திருத்தக்காரன் சொல்லப் பிராமணனும் அவ்வாறே செய்தான்.

72. பிண்டாரியின் வேதாந்தம்

மராட்டியருக்கும் அவர்கள் எதிரிகளுக்கும் ஏற்பட்ட ஒரு பெரிய யுத்தத்தில், ஒரு மராட்டியனும் ஒரு பிண்டாரியும் ஒருவன் பக்கத்தில் மற்ெருருவனுக நின்றுகொண்டு சண்டை செய்துகொண்டிருந்தனர். யுத்தம் அதிக மும்முரமாய் நடந்துகொண்டிருந்த போது, பிண்டாரி வீரன் ஓடத் தொடங்கினுன்.

'உனக்கு வெட்கமில்லையா? நீ ஏன் ஓடத் தொடங்குகிருய்?' என்று பிண்டாரி வீரனுக்கருகி லிருந்த மராட்டிய வீரன் கேட்டான்.

'நான் இன்று ஓடிப்போனுல், நாளைத் தினம் யுத்தத்தில் சண்டை செய்ய முடியும். இன்றே சண்டை செய்து இறந்து போனுல், நாளைக்கு எப்படி மறுபடியும் என்னுல் சண்டை செய்ய முடியும்?' என்று பிண்டாரி வீரன் பதிலளித்தான்.

'ஆனுல், நீ சண்டை செய்வதே இல்லையே!' என்ருன் மராட்டிய வீரன்.

'இல்லை. யுத்தம் மும்முரமாய் நடவாமலிருக்கும் போது கொள்ளையடிப்பது எங்கள் வழக்கம். உயிருக்கு ஆபத்து ஒன்றும் இல்லாத சமயத்தில், நாங்கள் யுத்த களத்தில் தோன்றுவோம். அதில் கஷ்டமுமில்லை; நஷ்டமுமில்லை. அதுவே எங்களுக்குப் பேரானந்தம். பல ஆண்டுகளாகப் பிண்டாரிகள் இவ்வழக்கத்தையே கையாண்டு வந்திருக்கின்ருர்கள். கொள்ளையடிப்ப தற்கு ஒன்றும் கிடைக்காத யுத்தத்தில் கலந்து கொள்வது தருமத்திற்கு முற்றிலும் விரோதமான காரியம். யுத்தம் செய்ய வேண்டுமேயென்று கண்ணை மூடிக்கொண்டு யுத்தம் செய்வது மிருகத்தனம்,' என்று சொல்லிக்கொண்டே, அந்தப் பிண்டாரி வீரன், அதிக வேகத்துடன் ஓடிவிட்டான்.

73. அமெரிக்காவில் மிகப் பெரிய வியாபாரம்

'அமெரிக்காவில் மிகப் பெரிய வியாபாரம் எது?' என்பதைக் குறித்து, ஒரு சங்கத்தில் பெரிய வாக்கு வாதம் ஏற்பட்டது. 'இரும்பு வியாபாரம்,' என்றனர் சிலர்; 'மோட்டார் வண்டி ஏற்றுமதி,' என்றனர் சிலர்; 'மண்ணெண்ணெய் முதலிய எண்ணெய்த் தினுசுகள்,' என்று வாதித்தனர் வேறு சிலர்; 'துணி மணிகளே அதிகம்,' என்று ஆர்ப்பாட்டத்துடன் கூறினர் சிலர்; மற்றுஞ் சிலர் வேறு சில வஸ்துக் களைக் குறித்துப் பேசினர். அவர்களுக்குள் அபிப் பிராய பேதம் உண்டாயிற்று. முடிவுக்கு வருவது கஷ்டமென்பதையறிந்த ஓர் அங்கத்தினர், 'இந்த வாக்குவாதங்களை இத்துடன் நிறுத்துங்கள். அமெரிக் காவில் மிகப் பெரிய வியாபாரம் எது என்று கேட்டால், பலரறிய ஒரு விஷயத்தை விளம்பர மூலமாகப் படாடோபத்துடன் விளம்பரம் செய்தலே யாகும்,' என்று சொன்னார். அதை அனைவரும் ஆமோதித்தனர்.

74. நரகப் படுகுழியில் விழத் தயார்.

வலிமை இழந்தவர்கள், ஜாதியிலிருந்து நீக்கப் பட்டவர்கள், பிறவிக் குருடர்கள், ஊமைகள், பைத்தியக்காரர்கள், முழு மூடர்கள், அங்கவீனர்கள் முதலியவர்கள் ஆஸ்தியுள்ளவர்களாயிருந்தால், அவர் களுடைய ஆஸ்தியை அனுபவிப்பவர்கள், அப்படிப் பட்டவர்களுக்குத் தகுந்த உணவு ஆடை முதலியவை களை அளித்துக் காப்பாற்ற வேண்டுமென்று மனு தரும சாஸ்திரம் கூறுகிறது. அவ்வாறு செய்யத் தவறியவர்கள் நரகப் படுகுழியில் தள்ளப்படுவார்க

னென்றும் அச்சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலேய அரசாட்சி தொடங்கிய பிறகும் மனுதரும சாஸ்திரப்படிக்கே இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் நடந்து வந்தார்கள். இன்றும் சில சம்ஸ்தானங்களில் மனு தரும சாஸ்திரப்படியே பலர் நடந்து வருகின்றனர்.

இந்தியாவிலிருந்த பெரிய சம்ஸ்தானங்களுள் ஒன்றில், அந்தச் சம்ஸ்தானத்துக்கு வாரிசாயிருந்தவன் பிறவிக்குருடனாயிருந்தான். அவனுக்குக் குழந்தைகளே இல்லாமலிருந்ததால், அந்தச் சம்ஸ்தானம் அவனுடைய சகோதரனுக்குச் சேர்ந்துவிட்டது. மிகக் கொடியவனான அந்தச் சகோதரன், குருடனை தன் தமையனை அன்னமளித்துக் காப்பாற்ற மறுத்தான். ஆகவே, பிறவிக் குருடனாயிருந்த மூத்த சகோதரன், நீதி ஸ்தலத்தில் தன் சகோதரன் செய்கையைக் குறித்துப் பிராது செய்தான்.

சம்ஸ்தானாதிபதி நீதி ஸ்தலத்தில் தோன்றி, தான் தன் தமையனுக்கு அன்னமளித்துக் காப்பாற்ற முடியாதென்றும், மனுதரும சாஸ்திர விதிப்படி தான் நரகப் படுகுழியில் விழுவதற்குச் சித்தமாயிருப்பதாகவும் சொன்னான்.

சாமர்த்தியம் வாய்ந்த நீதிபதி, வேண்டுமென்றே நரகத்தைக் கோருபவர்களை ஜாதியிலிருந்து விலக்கிவிடவேண்டுமென்றும், அங்கவீனர்களின் ஆஸ்தியைக் கைப்பற்றிக்கொண்டு அவர்களுக்கு அன்னமிட மறுப்பவர்கள் பெரும்பாவிகளென்றும் மனுதரும சாஸ்திரம் சொல்லுகிறதென்று எடுத்துக் காட்டினார்.

பிறவிக் குருடனை சம்ஸ்தானாதிபதிக்கு அன்னமிட மறுத்த குற்றத்திற்காக, அவனுடைய

சகோதரன் சம்ஸ்தானாதிபதியாய் இருப்பது நியாய மன்று என்று கூறிப் பிறவிக் குருடனையும் அவனுக்கு அன்னமிட மறுத்த சகோதரனையும் காப்பாற்றுவதற் கிசையும் அவர்கள் தாயாதி வருக்கத்தைச் சேர்ந்த வேறொருவனை சம்ஸ்தானாதிபதியாக்கிவிடும்படி நீதிபதி தீர்ப்பளித்தார்.

75. சிறந்த அன்னை

'என்னைப்போன்ற அன்புடைய தாய் வேறு ஒருத்தியும் இருக்க முடியாது. என்னுடைய குழந்தை கேட்பவைகளையெல்லாம் நான் அதற்குக் கொடுத்து வருகிறேன்,' என்று ஒரு மாது பெருமை பாராட்டிக் கொண்டாள்.

'நீ சொல்வது உண்மையானால், நீ தாய்மார்களுள் மிகவும் இழிந்தவள். ஒரு குழந்தைக்கு எது நல்லதோ அதை மட்டுமே நல்ல தாய் அக்குழந்தைக்குக் கொடுக்க வேண்டும்; குழந்தை கேட்பதையெல்லாம் கொடுக்கக்கூடாது. குழந்தைக்கு எது நல்லது எது கெட்டது என்று தெரிந்துகொள்வது கஷ்டம். அவ்வாறு கஷ்டப்பட இஷ்டமில்லாமல், ஒன்றும் தெரியாத குழந்தைகளைத் திருப்தி செய்யச் சில தாய் மார்கள் அவை கேட்பவைகளையெல்லாம் கொடுப்பது மிகவும் விசனிக்கத்தக்க விஷயம்!' என்று சுகாதார உத்தியோகஸ்தர் ஒருவர் சொன்னார்.

76. பாம்பு கீரிகளின் சம்வாதம்

'நாம் ஏன் நமது விரோதத்தை ஒழித்து, சமாதானத்துடனும் சந்தோஷத்துடனும் ஒற்றுமை யாக வாழக்கூடாது?' என்று ஒரு பாம்பு, கீரிப் பிள்ளையைப் பார்த்துக் கேட்டது.

கீரிப்பிள்ளை பின் வருமாறு பதில் சொல்லிற்று: 'நாம் இருவரும் இறந்து போக வேண்டி வரும். நான் ஓர் உபகாரமும் செய்ய முடியாமற்போய்விடும். மனிதனுக்கு யாதோர் உபகாரமும் செய்யாமல், அவனுடைய பண்டங்களைத் தின்றுகொண்டும், அவனுடைய வீட்டில் வளைகளைத்தோண்டிக்கொண்டு மிருந்தால், அவனுக்கு எங்கள்மீது அதிக கோபம் உண்டாகும். பிறகு, நாளடைவில் எங்கள் வமிசமே இல்லாமல் நிர்மூலமாகப் போய்விடும். உலகத்தில் எங்குப் பார்த்தாலும் பாம்பு மயமாய்விடும். அப்பொழுது வேறு ஏதாவது ஒரு வழி கண்டு பிடித்து, மனிதர்கள் பாம்புகளை அடியுடன் அழித்து விடுவார்கள்.'

77. முக்கிய அமிசம் இல்லை.

இத்தாலி தேசத்தில் ஒரு பெரிய போதகன் இருந்தான். அவன் கோழி முட்டை போலவேயிருந்த ஒரு முட்டையைச் செய்தான். அதற்கும் கோழி முட்டைக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை என்று சொன்னார்கள். அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தவர்களை அந்தப் போதகன் பார்த்து 'இந்த முட்டையில் ஏதாவது குறையிருந்தால் சொல்லுங்கள்,' என்று கேட்டான்.

'அந்த முட்டையிலிருக்கும் குஞ்சை வெளிப் படுத்துங்கள்,' என்று மூலையில் இருந்த கிழவி ஒருத்தி சொன்னாள். அதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்.

'உயிரில்லாத ஒரே ஒரு குறைதான் அந்த முட்டைக்கு இருக்கிறது,' என்று சொல்லிக் கொண்டே அக்கிழவி தன் வழியே சென்றாள்.

78. குண்டு விலை ஐம்பது ரூபாய்!

[ஆங்கிலேய வேட்டைக்காரன் அனுபவம்]

ஜோன்ஸ் என்னும் பெயருடைய ஓர் ஆங்கிலேயன் முதல் முறையாக இந்தியாவிற்கு வந்தான். இந்தியாவிற்கு முதன்முதல் வரும் பல ஆங்கிலேயர்களைப் போலவே, அவனும் இந்தியாவைக் குறித்துச் சில விசித்திரமான அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தான். மிருகங்கள் கொல்லப்படாதபடி இந்தியர்கள் அவற்றைப் பாதுகாப்பார்களென்றும், எருதுகள், குரங்குகள், பசுக்கள், நாகப்பாம்புகள், முதலைகள் முதலியவைகளைத் தெய்வங்களாக இந்தியர்கள் பாவித்து வந்தார்களென்றும் ஜோன்ஸ் எண்ணியிருந்தான். அவன் வேட்டையாடுவதில் சிறந்தவன் என்னும் பெயரை அடைய விரும்பினுன். ஆகவே, நல்ல துப்பாக்கி ஒன்றை வாங்கிக்கொண்டு, ரோம் தேசத்தவர்கள் பண்டைக் காலத்தில் படகோட்டக் கற்றுக்கொண்டது போல, அவன் குறி பார்த்துச் சுடக் கற்றுக்கொண்டான்.

நன்ருகச் சுடத் தெரிந்துகொண்ட பிறகு அவன் **ஜேம்ஸ்** என்னும் ஒரு சிநேகிதனுடன் அடர்ந்த காடுகளில் வேட்டையாடச் சென்ருன். ஜேம்ஸ் என்பவனும் இந்தியாவிற்கு முதல் தடவை வந்தவன். அவ்விருவரும் புலி வேட்டையாட அடர்ந்த காடுகளுக்குச் சென்றனர்.

'காட்டு மனிதர்கள் இந்த அடர்ந்த காடுகளில் இருக்கும் நம்மைக் கண்டுகொள்ள மாட்டார்கள். மேலும், இந்நாட்டினர் புலிகளைத் தெய்வமாகப் பாவிப்பதில்லை,' என்று ஜோன்ஸ் ஜேம்ஸிடம்

சொன்னான். அவர்கள் ஒரு பெரிய மரத்தின்மீது புலி வேட்டையாடுபவர்கள் அமைப்பது போல ஒரு பரணை அமைத்துக்கொண்டார்கள். ஜோன்ஸும் ஜேம்ஸும் அந்தப் பரண்மீது உட்கார்ந்துகொண்டனர். நிலவு நன்றாகக் காய்ந்துகொண்டிருந்தது. அவர்களிருந்த இடத்திலிருந்து சுமார் முப்பதடித் தூரத்திலிருந்த ஒரு குட்டையில் தண்ணீர் குடிக்க வரும் புலியை அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இந்து தேசத்து வேடர் சிலர் அதே மரத்தின் வேறொரு கிளையில் பதுங்கிக்கொண்டிருந்தனர். ஜோன்ஸ், ஜேம்ஸ் என்னும் இருவரும் தம் துப்பாக்கிகளைத் தயாராக வைத்துக்கொண்டனர். முதன்முதல் சுடுவதற்குத் தனக்கு உத்தரவு கொடுக்கும்படிக்கு ஜோன்ஸ், ஜேம்ஸைக் கேட்டுக்கொண்டான். நடுநிசியில், இந்திய வேடன் ஒருவன் மெதுவாக ஜோன்ஸ் தோளின்மீது கையை வைத்து, 'சாஹிப், சுடுங்கள்,' என்று மெதுவாகச் சொன்னான். நன்றாகப் பிரகாசித்துக்கொண்டிருந்த வெண்ணிலவில், ஒன்பதடி நீளமுள்ள, கம்பீரத்துடன் தோன்றிய வேங்கைப் புலியை அவர்கள் கண்டார்கள். அந்தப் புலியின் கண்கள் ஜோன்ஸ் என்பவனையே பார்த்தன. அதற்கு முன்பு புலியையே சுட்டிராத ஜோன்ஸ் என்பவனுடைய மனத்தில் அந்தப் புலியின் பார்வை ஊடுருவிச் சென்றது. துப்பாக்கியின் விசையை அவன் அழுத்திப் பார்த்தும், விசை அசையவில்லை. நடுங்கிக்கொண்டிருந்த அவனுடைய கைகளிலிருந்து நழுவித் துப்பாக்கி பொத்தென்று கீழே விழுந்தது. சத்தத்தைக் கேட்ட புலி ஓடிப்போய்விட்டது.

ஜேம்ஸ் என்பவனுக்கு ஜோன்ஸ்மீது கோபம் வந்தது. ஜோன்ஸ் பெரிய பேடியென்று அவன் சொன்னான்.

'நான் பயங்கொள்ளியல்ல; ஆனால், அந்தப் புலியின் பார்வை என் புத்தியை மழுங்கிப்போகும்படி செய்துவிட்டது,' என்று ஜோன்ஸ் பதிலளித்தான்.

'அப்படியானால், துங்கபத்திரை நதியிலிருக்கும் முதலைகளைச் சுட்டுப் பார்; உனக்குத் தைரிய முண்டாகும் வரையில் அவ்வாறு செய்வது மேல். இந்தியர்களைப்போல நீயும் ஒரு பயங்கொள்ளி,' என்று ஜேம்ஸ் உரைத்தான்.

'துங்கபத்திரையில் முதலைகள் அதிகமாய் இருக்கின்றனவா? அவைகளைச் சுட்டுக் கொல்ல நான் விரும்புகிறேன்,' என்று ஜோன்ஸ் சொன்னான்.

'உப்பிட்டுலர்த்தப்பட்டுப் பிப்பாய்களில் வைக்கப்பட்டிருக்கும் மீன்களைப்போல, அவை துங்கபத்திரையில் எங்கும் இருக்கின்றன. ஆனால், இந்தியர்கள் அவைகளைக் கொல்ல அனுமதி கொடுக்க மாட்டார்கள்,' என்று ஜேம்ஸ் பதிலளித்தான்.

'அதை நான் எப்படியாவது சரிப்படுத்திக் கொள்கிறேன்,' என்று ஜோன்ஸ் சொன்னான்.

சில தினங்கள் கழிந்த பிறகு, ஜோன்ஸ் துப்பாக்கியைத் தன் தோளில் மாட்டிக்கொண்டு, பையில் துப்பாக்கிக் குண்டுகளுடன் துங்கபத்திரை நதிக்கரையில் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தான். எருமைகள் சில, கரையில் மேய்ந்துகொண்டிருந்தன. ஆற்றிலோ, சில மிருகங்கள் நீந்திக் கொண்டிருப்பதை அவன் பார்த்தான். 'இவைகளே முதலைகள். தெய்வமே! பீப்பாயில் அடுக்கப்பட்

டிருக்கும் உலர்ந்த மீன்கள் மாதிரியே கூட்டமாய் இருக்கின்றனவே! இப்போது இவற்றை நழுவவிடுவதில் பயனில்லை,' என்று சொல்லிவிட்டு, நீந்திக் கொண்டிருந்தவைகளுள் ஒன்றை நன்றாக ஜோன்ஸ் குறி பார்த்துச் சுட்டான். சில இந்தியர் கூவிய சத்தம் அவன் செவிகளில் விழுந்தது.

'மூட நம்பிக்கையுள்ள இந்தியர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் போலத் தோன்றுகிறதே! அவர்கள் வருவதற்குள் இன்னும் சில முதலைகளைச் சுட்டுத்தள்ள வேண்டும்,' என்று நினைத்துக் கொண்டே ஜோன்ஸ், 'படார்! படார்! படார்! படார்!' என்று நான்கு முறை குறி வைத்துச் சுட்டான். குண்டுகள் குறி தப்பாமல், மிதந்து கொண்டிருந்த நான்கு உருவங்களின்மீது விழுந்தன. ஜோன்ஸ் அதிக சந்தோஷமடைந்தான். ஆனால், ஜலத்திலிருந்து வெளியே கொம்புகள் கிளம்பவே, அவனுடைய சந்தோஷம் சிறிது குறைந்தது. முதலைகளுக்குக் கொம்புகள் இருப்பதாக அவன் கேள்விப்பட்டதேயில்லை. அவை உண்மையில் முதலைகளோ, கடல் யானைகளோ, கடல் குதிரைகளோ என்னும் சந்தேகம் அவனுக்கு எழுந்தது. இரண்டு கொம்புகளுடைய கடல் யானைகளோ கடல் குதிரைகளோ இந்தியாவில் இருப்பதாக எவரும் எழுதியதில்லை. ஆகவே, தான் அதுவரையில் ஒருவரும் கண்டுபிடித்திராத ஓர் அற்புத மிருகத்தைக் கண்டுபிடித்துவிட்டதாக ஜோன்ஸ் கர்வப்பட்டுக்கொண்டிருந்தான். வந்த இந்தியர்கள் அவனை அணுகி, 'ஏன் ஐயா நீர் எங்களுடைய எருமைகளைச் சுட்டுக் கொன்றீர்?' என்று கேட்டார்கள்.

உண்மையை அறிந்துகொண்டு ஜோன்ஸ் மனம் வருந்தினுன்; வெட்கப்பட்டான். எருமைகள் ஆற்றில் நீந்தக்கூடிய மிருகங்கள் என்பது அவனுக்குத் தெரியாது. அவ்விஷயம் இந்தியர்களுக்குத் தெரியும் என்பதை மட்டும் அவன் நம்பினுன். மேய்ந்து கொண்டிருந்த மற்ற எருமைகள் கத்தியது போலவே தண்ணீருள் முழுகிப் போய்க்கொண்டிருந்த மிருகங்களும் கத்தவே, அவனுக்கிருந்த சிறிது சந்தேகமும் நீங்கிவிட்டது. அவன் ஜேம்ஸ் என்னும் தன் சிநேகிதனைத் திட்டினுன்; தனது துப்பாக்கியைத் திட்டினுன்; தனக்கு அந்தச் சிறிய விஷயம் தெரியாமற்போனதைக் குறித்து மனம் வருந்தினுன்; வெட்கமடைந்தான்.

இந்தியர்களோ, தங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும்படி கேட்டுக்கொண்டிருந்தார்கள். தான் சுட்டுக் கொன்ற ஐந்து எருமைகளுக்கு ஈடாக, ஒவ்வொன்றிற்கும் ஐம்பது ரூபாய் வீதம் தன் பணப் பையிலிருந்து எடுத்து ஜோன்ஸ் சொந்தக்காரர்களிடம் கொடுத்துவிட்டான். தன் கையிலிருந்த திரவியத்தின் பெரும்பாகத்தைச் செலவு செய்து விட்டு, அவன் துங்கபத்திரை நதி தீரத்தை விட்டு, தனது இருப்பிடத்திற்குச் சென்றுன். அவன் தன் துப்பாக்கியையும் விற்றுவிட்டான்.

'நான் இனிமேல் வேட்டையாடப் போவதில்லை. என் குண்டுகள் அதிக விலையுள்ள குண்டுகள்; ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாய்க்குமேல் மதிப்புள்ளது,' என்று ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்த ஜேம்ஸ் என்னும் தன் சிநேகிதனிடம், ஜோன்ஸ் சொன்னுன்.

'எப்படி?' என்று ஜேம்ஸ் கேட்டான்.

'அஃது இரகசியமாக இருக்கவேண்டிய விஷயம். நான் சொல்வது என்னவோ உண்மை. ஒவ்வொரு குண்டுக்கும் நான் ஐம்பது ரூபாய் செலவு செய்ய வேண்டியிருந்தது,' என்று ஜோன்ஸ் பதிலளித்தான்.

79. பாலும் தண்ணீரும்

'ஒரு சாதாரண வஸ்துவுடன் நல்ல வஸ்துவைக் கலப்பதனால் இரண்டுக்கும் குறைவு ஏற்படுவதில்லை,' என்று ஒரு மனிதன் தன் சிநேகிதனிடம் சொன்னான்.

'தண்ணீரைவிடப் பால் மேலானதா?' என்று சிநேகிதன் கேட்டான்.

'ஆம்,' என்றான் அந்த மனிதன்.

'குடிப்பதற்கு நீர் சுத்தமான ஜலத்தை விரும்புவீரா, அல்லது பால் வைத்திருந்த சுத்தம் செய்யாத பாத்திரத்திலிருக்கும் தண்ணீரை விரும்புவீரா?' என்று சிநேகிதன் கேட்டான்.

'இதைக் கேட்பானேன்? சுத்தமான ஜலத்தைத் தான் நான் விரும்புவேன்,' என்று அந்த மனிதன் யோசனை செய்யாமல் கூறினான்.

'அப்படியானால், நான் வெற்றி பெற்றேன். நீர் கூறிய சித்தாந்தத்தை நீரே இப்போது மறுத்துக் கூறிவிட்டீர்,' என்று சிநேகிதன் எடுத்துக் காட்டினான்.

80. கல் கெட்டியாய் இருப்பதேன்?

ஒரு நாள் நடுப்பகலில் கல் தச்சன் ஒருவன் நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட, பெரிய கல்லைச் சிற்றுளியால் தகர்த்துக்கொண்டிருந்தான். கஷ்டம்

பொறுக்கமாட்டாமல் அவன் தனக்குள் பின் வருமாறு சொல்லிக்கொண்டான் : 'கடவுளுக்குக் கல் நஞ்சென்பதில் சந்தேகமில்லை. இந்தக் கல்லை ஏன் அவர் கெட்டியான வஸ்துவாகச் செய்திருக்க வேண்டும்? சிறிது இலேசானதும் எளிதில் உடைந்து போகக்கூடியதுமாகச் செய்திருக்கக் கூடாதா? என்னைப் போன்ற ஏழைகளைக் கஷ்டப்படுத்துவதில் அவருக்குச் சந்தோஷம் போல இருக்கிறது! புத்தியில்லாத ஜனங்களோ, கடவுளைக் கருணாசாகரரென்றும், இரக்கமுள்ளவரென்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.'

கடவுள் அவனுக்கு நல்ல புத்தி புகட்ட எண்ணினார். உடனே அவர் தம் சக்தியினால் கல்லை வெண்ணெய்போல இளகிப் போகும் தன்மையுடையதாகவும், இறகைப்போல இலேசானதாகவும் செய்து விட்டார். அதைக் கண்ட கல் தச்சன் கடவுளைப் புகழ்ந்து, தோத்திரம் செய்தான். கல்லை அதிசீக்கிரத்தில் தகர்த்துவிட்டான். எப்பொழுதும் வெட்டுவதைப் போலப் பத்து மடங்கு கற்களை வெட்டி வழக்கம் போல வியாபாரம் செய்ய ஊருக்குள் எடுத்துச் சென்றான்.

'தினந்தோறும் எனக்கு எட்டணாத்தான் கிடைக்கும். இன்றைய தினம் நான் ஐந்து ரூபாய் சம்பாதிக்கப்போகிறேன். இது நான் என் கஷ்டத்தைக் கடவுளிடம் எடுத்துச் சொல்லிக்கொண்டதன் பயன். முறையிட்டுக்கொண்டால்தான் கடவுளும் கண் திறந்து பார்க்கிறார்,' என்று தனக்குள் எண்ணிக் கொண்டே அந்தக் கல் தச்சன் ஊரில் தெருக்களின் வழியே சென்றான்.

ஊரில் அவனுடைய கற்களை அன்று ஒருவரும் வாங்கவில்லை. 'கனமில்லாத இந்தக் கல் யாருக்கு வேண்டும்? இதை நீயே வைத்துக்கொண்டு சந்தோஷப்படு,' என்று சொல்லி, அனைவரும் அவனை அனுப்பிவிட்டனர். ஆகவே, எப்பொழுதும் கிடைக்கும் எட்டணாக்கூட அன்று அவனுக்குக் கிடைக்கவில்லை. அதனால், அன்று அவனும் அவன் மனைவி மக்களும் பட்டினி கிடக்க வேண்டியிருந்தது. மறுபடியும் கல்லைக் கெட்டியாக்கும்படி அவன் கடவுளை வேண்டிக்கொண்டான்.

'ஓ தெய்வமே, ஏழை மக்களாகிய எங்களுக்கு எது நல்லதென்பது எல்லாம் வல்ல உனக்கு நன்றாகத் தெரியும். என் மூடத்தனத்திற்காக என்னை மன்னித்து, முன் போலவே கல்லைக் கெட்டியாகச் செய்துவிடு,' என்று சொல்லி அவன் பிரார்த்தித்தான்.

கடவுளும் கல்லை முன்போலவே கெட்டியான பளுவுள்ள வஸ்துவாகச் செய்தார்.

81. கருமபலன்

'ஆடுகள் தழைகளை மேய்கின்றன; கர்மானுசாரப்படி, தழையைத் தின்னும் ஆடுகளை மனிதர் தின்றுவிடுகின்றனர்,' என்று காடுகளின்மேல் அதிக பிரியம்கொண்ட ஒரு பிரசங்கியார் கூட்டத்திலிருந்தவர்களைப் பார்த்துக் கூறினார்.

மற்றொரு பிரசங்கியார், இன்னும் ஒருபடி தாண்டிச் சென்றார். 'தழைகளைத் தின்று காடுகளை அழிக்கும் குற்றத்திற்காக, மனிதர் ஆடுகளைத் தின்றுவிடுகின்றனர். மனிதர் ஆடுகளைத் தின்னும் குற்றத்திற்காக, நரகத் தீயினால் எரிக்கப்படுகின்றனர். நரகம் அவ்

வாறு செய்யும் குற்றத்திற்காக, கடவுள் நரகத்தை அந்தகாரத்தில் அமுக்கி வைத்திருக்கிறார். கடவுளுக்கோ, கர்மானுசாரத்தினால் பிசாசுஎன்னும் ஜன்ம விரோதிஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதனால், பிசாசை மதங்கள் வெறுக்கின்றன. அதனால், பிசாசுகள் எப்போதும் உலகில் சஞ்சரித்துக்கொண்டு, பல விதமான கெடுதல்களை உண்டுபண்ணிக்கொண்டே யிருக்கின்றன. இவைகளை எப்படித் தடுப்பது? ஆடுகள் காட்டிற்குள் சென்று தழைகளைத் தின்று காட்டை அழிக்காமல் செய்வதே இதற்குத் தகுந்த மார்க்கம்,' என்று அந்தப் பிரசங்கியார் விளக்கிக் கூறினார். இந்த வேதாந்தம் எப்படி?

82. நல்ல கோவில்

'நல்ல கோவில் எது?' என்பதைக் குறித்து மூன்று பண்டிதர்களுள் தர்க்கம் உண்டாயிற்று. 'சிற்ப வேலைகள் நிரம்பிய கோவில் மேலானதா, குகைக்குள் இருக்கும் கோவில் மேலானதா, கல்லையே குடைந்து செதுக்கப்பட்டிருக்கும் கோவில் மேலானதா?' என்று அவர்கள் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்கள். அவர்களுள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. முதன் முதலாகப் பேசியவர், மதுரைக் கோவிலைப்போன்ற சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பிய கோவிலே மேலான தென்று எடுத்துச் சொன்னார். 'என்ன அழகான வேலைப்பாடு! எவ்வளவு அழகிய சித்திரங்கள்! எவ்வளவு பெரிய மண்டபங்கள்! கண்ணைப்பறிக்கும் ஆயிரக்கணக்கான சம்பவங்கள்! அந்தக் கோவிலைக் கண்டு பக்தகோடிகள் பரவசமடைந்துவிடுகிறார்கள்,' என்று அவர் அடுக்கிச் சொல்லிக்கொண்டே போனார்.

குகைக் கோவில்களைச் சிலாகித்துப் பேசியவன் அமரநாத்துக் கோவிலின் சிறப்பைப்பற்றி விரிவாகக் கூறினுன்: 'ஒரு வருஷத்தில் பதினொரு மாதங்கள் பனியிலேயே உறைந்து கிடக்கும் அந்தக் கோவிலின் மகிமையை என்னவென்று சொல்வது! கடவுளின் அபார சக்தியைப் புகழ்ந்து பேசி, பல்லாயிரக் கணக்கான பக்தர் அவரைக் கண்டு தரிசித்து ஆனந்த மடைகின்றனர்; அந்தக் கோவிலை அதிக சிரமப்பட்டு அடைகின்றனர். அந்தக் கோவிலின் சிறப்பை எடுத்துக் கூறுதல் அசாத்தியமான காரியம்,' என்று அவர் சொல்லிக்கொண்டார்.

மூன்றும் பண்டிதரோ, குகையில் கல்லிலேயே செதுக்கப்பட்டிருக்கும் எல்லோராக் கோவில்களின் மேன்மையைக் குறித்துப் பேசினுர். 'எல்லோராவி லிருக்கும் கைலாச நாதர் கோவிலைப்போல வேறு எந்தக் கோவிலும் இராது. அதற்குச் சரியாக வேறெந்தக் கோவிலையும் சொல்வதற்கில்லை. ஓங்கி வளர்ந்திருக்கும் பாறையிலேயே அக்கோவில் செதுக் கப்பட்டிருக்கிறது. கல்லைக் குடைய வேலைக்காரர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டும்! பார்க்கப் பார்க்கக் கடவுளிடம் மக்களுக்கிருக்கும் அபார பக்தி யையும், அதனுல் மக்களுக்கு உண்டாகும் உற்சாகத் தையும் அந்தக் கோவில் வெளிப்படையாக எடுத்துக் காட்டுகிறது,' என்று அவர் சொன்னுர்.

ஒவ்வொருவரும் தாம் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்ததனுல், அவர்கள் தருக்கம் தீர்ந்தபாடில்லை. ஆகவே, அவர்கள் ஒரு முனிவரிடம் சென்று, தங்கள் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

'மூன்று கோவில்களும் பெரிய கோவில்களே. ஆனால், அவை மூன்றும் நல்ல கோவில்களென்று சொல்வதற்கில்லை. ஜீவன்களிடம் காணப்படும் ஆத்துமாவைப்போன்ற சிறந்த கோவிலே இல்லை. அதனுள்ளிருக்கும் பரஞ்சோதியாகிய தெய்வமே சிலாக்கியமானது. அதுவே ஒப்புயர்வில்லாத தெய்வம்,' என்று அம்முனி புங்கவர் உபதேசம் செய்தார்.

'நீங்கள் கூறும் கோவில் செலவில்லாமல் கட்டப்பட்ட கோவில். ஆனால், நாங்கள் சிலாகித்துப் பேசிய கோவில்களோ, பலர் கஷ்டப்பட்டு, அதிக செலவு செய்து கட்டப்பட்டவை. கட்டுவதற்கு அவர்கள் பல வருஷங்கள் பாடு பட்டிருக்கவேண்டும். ஆகவே, அவை கட்டியவர்களின் பக்தியைக் காட்டு கின்றன. மனிதர்களுள் பக்தியை உண்டுபண்ணும் பெரிய சாதனங்களாக அவை உபயோகப்படுகின்றன,' என்று அந்த மூன்று பண்டிதர்களும் சொன்னார்கள்.

சிரித்துக்கொண்டே அந்த முனி புங்கவர் பின் வருமாறு சொன்னார்: 'பக்தர்களுக்குக் கோவில் ஏற்பட்டதேயொழிய, கட்டுபவர்களுக்கு ஏற்பட்ட தன்று. வெளிப்பகட்டாக அதிக திரவியத்தைச் செலவு செய்து, கோவில்களினுலும், அவைகளுக்குள் ளிருக்கும் அழகமைந்த விக்கிரகங்களினுலும் ஒருவ னுக்கு ஏற்படக்கூடிய தெய்வ நம்பிக்கையையும், பக்தியையும்விட, அதிக தெய்வ நம்பிக்கையும் பக்தியும் இருந்தால்தான் கோவில் போன்ற சாத னங்கள் இல்லாமலே தெய்வ சொரூபத்தை அறிய முடியும். ஆகவே, கோவிலைக் கட்டுபவனும், கோவிலில் பூஜை செய்யும் பக்தனும் ஒருவனுகவே இருந்தால்

நல்ல பலனுண்டு. நான் கூறிய மனக்கோவிலைக் கட்டுபவனும், அதற்குள் கடவுளை வைத்துப் பிரார்த்தனை செய்பவனும் ஒருவனே. ஆதலால், ஆத்துமா என்னும் கோவிலைவிடச் சிலாக்கியமான கோவில் இல்லை!'

83. கெட்டவன் நல்லவனாக முடியுமா?

[இயற்கையின் படிப்பினை]

'என் சுபாவத்தை மாற்ற முடியாது. நான் கெட்ட நடத்தையுள்ளவனாயிருந்தேன். இப்போதும் கெட்ட நடத்தையுடையவனாயிருக்கிறேன். கெட்ட சகவாசத்தினால், எளிதில் நான் கெட்ட வழிகளில் இறங்கிவிடுகிறேன். இயற்கையிலேயே வழ வழக் கொழ கொழ என்றிருப்பவர்கள், கண்டிப்பான நடத்தையுள்ளவர்களாக மாறுவது மிகவும் கஷ்டம்,' என்று கெட்ட நடத்தையுடைய ஒருவன், உபதேசம் செய்துகொண்டிருந்த ஒரு முனிவரிடம் சொன்னான்.

அவனை எப்படியாவது நல்ல வழியில் திருப்ப வேண்டுமென்று எண்ணிய அந்த முனிவர், பின் வருமாறு உபதேசம் செய்தார்:

'சிறு சிறு களிமண் கட்டிகள், நாளடைவில் கற்களாய் மாறுகின்றன என்பதில் உனக்கு நம்பிக்கை இல்லையா? ஆனால், மண்ணாங்கட்டிகள் கற்களாக மாறப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகும். பகுத்தறிவுடன் கூடிய மனிதனால் மாறுதலை உண்டுபண்ண முடியாதென்பது நம்பத் தகுந்த விஷயமன்று. மிருதுவான களிமண்ணைக்கொண்டு குயவன் கெட்டியான சட்டிகளைச் செய்வதைக் கவனித்துப் பார். சாதாரணமான வஸ்துக்களைக்கொண்டு, மிகவும் உறுதி

யுள்ள சிமிட்டியைச் செய்கிறார்களல்லவா? அதே மாதிரி, விடாமுயற்சியுடன் வேலை செய்தால் நாம் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம். சிதைந்து போயிருக்கும் உன் நல்ல நடத்தையை நம்பிக்கை என்னும் தண்ணீரின் உதவியினால் ஒன்று சேர்த்து, நேர்மையென்னும் காறையைக் கொண்டு மறுபடியும் உடைந்து போகா வண்ணம் கட்டிவிடு. பிறகு எல்லாம் உனக்குக் கைகூடும். இனிமேல் தீய பழக்கங்களை ஒழித்து நல்ல பழக்கங்களையே கைக் கொள்.'

84. அரசன் அளித்த வெகுமதி

[அசூயையின் பயன்]

ஓர் அரசன் தன் அரண்மனையின் எதிரிலிருந்த தோட்டத்தைப் பார்த்துக்கொண்டே, உப்பரிகையி லிருந்த வெளி மண்டபத்தில வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தான். அரசனைச் சுற்றிலும் அரண்மனை உத்தியோகஸ்தர் சூழ்ந்திருந்தனர். அரண்மனை வாயிலுள் நுழைந்துகொண்டிருந்த மந்திரியின்மீது அரசன் எச்சில் தற்செயலாய் விழுந்துவிட்டது. அதைக் கண்டு அரசன் அதிக வருத்தமடைந்தான்.

தன்மீது விழுந்தது அரசன் துப்பிய எச்சில் என்பது மந்திரிக்குத் தெரியாது. ஆகவே, அதிகக் கோபத்துடனும் உடம்பு முழுவதும் எச்சிலுடனும் மந்திரி சபா மண்டபத்துள் புகுந்து, 'இப்படிச் செய்தவர் யார்?' என்று கேட்டான். அரசனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தான் செய்தது தவறு என்று எப்படிச் சொல்லிக்கொள்வது என்று அரசன் சஞ்சலப்பட்டான்.

அரசன் எச்சில் மந்திரியின்மீது விழுந்ததென்பதை அறிந்திருந்த வேறொருவன் அங்கு இருந்தான். அவன் **மாதவன்** என்னும் அரண்மனை உத்தியோகஸ்தன். அரசன் தயவை எப்படியாவது சம்பாதிக்க வேண்டுமென்றெண்ணிய மாதவன், அதுதான் தகுந்த சமயம் என்று எண்ணி, மந்திரியைப் பார்த்து, 'மந்திரியாரே, தெரியாமல் நான்தான் எச்சிலைத் துப்பினேன். தயவு செய்து என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்,' என்று சொன்னான். மந்திரிக்குக் கோபம் பொங்கியது.

தன்னைக் காப்பாற்றிய மாதவனிடம் அரசனுக்கு அதிக பிரீதி உண்டாயிற்று. ஆகவே, அரசன் மந்திரியைப் பார்த்து, 'அவன் ஏதோ தவறுதலாகச் செய்துவிட்டதாகவும், மன்னிக்கும்படியும் வேண்டிக் கொண்டான். தற்செயலாக அத்தவறு நேர்ந்திருக்க வேண்டும். இதோ என்னுடைய பிரீதிக்கு அறிகுறியான இந்தத் தங்க மோதிரத்தை வைத்துக் கொண்டு இவ்விஷயத்தை இத்துடன் மறந்துவிடுங்கள்,' என்று சொன்னான்.

மந்திரியின் கோபம் சிறிது தணிந்தது. மந்திரி ஒருவாறு திருப்தி அடைந்தவனாய், சும்மா இருந்தான். அரசன், 'எல்லாரெதிரிலும் மிகவும் கேவலமான இந்தச் செய்கையை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டதற்காக இவற்றை நீ வைத்துக் கொள்,' என்று சொல்லி, மாதவனுக்கு நூறு தங்க நாணயங்களைக் கொடுத்தான்.

அதே அரசாங்கத்தில் **வாமனன்** என்னும் ஓர் உத்தியோகஸ்தன் இருந்தான். அவனுக்கு மாதவனைக் கண்டால் பிடிக்காது. மாதவனிடம் அவனுக்குப்

பொறுமை ஏற்பட்டதனால், தானும் அதே மாதிரி வெகுமதி பெற வாமனன் எண்ணினான். மறு நாள், அனைவரும் தாம்பூலம் தரித்துக்கொண்டிருந்தனர். பிரதம மந்திரி வரும் சமயத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்த வாமனன், மந்திரிவந்ததும் எச்சிலை அவன்மீது உமிழ்ந்தான். பிரதம மந்திரி அதிக கோபத்துடன் சபைக்குச் சென்று, தன்மீது மறுபடியும் எச்சிலை உமிழ்ந்தவன் யாரென்று கேட்டான்.

'பிரதம மந்திரியாரே, நான் தெரியாமல் உமிழ்ந்து விட்டேன். பிழையை மறந்து, மன்னித்து, என்னை ரட்சிக்கவேண்டும்,' என்று வாமனன் வேண்டினான். அவ்வாறு செய்ததால் அரசன் தனக்கும் வெகுமதி அளிக்கப் போகிறான் என்று வாமனன் எதிர் பார்த்தான்.

'இந்த மடயனை உடனே வெளியே கொண்டு போய், 36 அடிகள் அடித்து அனுப்பிவிடுங்கள்! இனிமேல் இவனை நமது சபைக்குள் விடாதீர்கள்!' என்று அதிக கோபத்துடன் அரசன் உத்தரவளித்தான்.

அவனுக்குப் பிரதம மந்திரி முன்னிலையில் அடிகள் கொடுக்கப்பட்டன. வாமனன் அடிபடுவதைக் கண்ட அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கலகலவென்று நகைத்தார்கள். அடி பொறுக்கமாட்டாமல் வாமனன் கதறினான். 'பிரபுவே, நேற்றைய தினம் மாதவன் கூறியதற்காக அவனுக்கு வெகுமதியளித்தீர்கள்; இன்றைய தினம் அதே மாதிரி நான் உண்மை கூறியதற்கு எனக்குத் தண்டனை விதித்தீர்கள். ஒரே மாதிரி செய்த இரண்டு பேர்களுள் ஒருவனுக்குப் பரிசும் மற்றொருவனுக்குத் தண்டனையும் கிடைப்பதற்குக் காரணம் என்ன? இது நியாயமா?' என்று வாமனன் கேட்டான்.

'நன்ருக ஆலோசித்துப் பார். வெளி வேஷத்தைக் கண்டு ஏமாந்து போகாதே,' என்று அரசன் சொல்லிவிட்டு, அவனுக்கு நற்புத்தி கூறி, அவன் அசூயை விட்டு ஒழுங்காய் இருக்குமாறு தெரிவித்தான். அவனும் உண்மையறிந்து, தன் ஆசைக்கு வெட்கி, அன்று முதல் ஒழுங்காயிருந்தான்.

85. முடிவு ஒன்றே.

கந்தன், ஆண்டி என்னும் பெயருடைய இரு சிநேகிதர் முப்பது மைல் தூரம் நடக்க வேண்டியிருந்தது. வழியிலே காணப்பட்ட மைல் கற்களையும் பர்லாங்குக் கற்களையும் கந்தன் பார்க்காமலே வழி நடந்து சென்ருன். அவைகளைப் பார்த்தால், தன் வேகத்தைக் குறித்தும், தான் நடக்க வேண்டிய தூரத்தைக் குறித்தும் மனச் சோர்வடைய வேண்டி நேரிடுமென்று அவன் அப்படிச் செய்தான். ஆண்டியோ, ஒவ்வொரு பர்லாங்கு கல்லையும், மைல் கல்லையும் பார்த்துக்கொண்டே சென்ருன். முதலில் கந்தன் அதிக தூரம் நடந்து போய்விட்டான். முடிவில் இருவரும் ஒரே சமயத்தில் சேர வேண்டிய இடத்தை அடைந்தனர்.

ஆண்டியும் தன்னுடன் வந்து சேர்ந்ததைக் கண்டு கந்தன் ஆச்சரியப்பட்டான். 'என்னைப் போலவே நீயும் ஒரே சமயத்தில் எப்படி வந்து சேர்ந்தாய்?' என்று கந்தன் ஆண்டியைக் கேட்டான்.

ஆண்டி, 'முதன்முதல் நான் மனச்சோர்வடைந்தேன்; இன்னும் இவ்வளவு தூரம் நடக்கவேண்டுமே என்று பிரமித்துப் போனேன். ஆதலால், எனக்கு விசாரம் ஏற்பட்டுவிட்டது. நான் தளர்ந்து தளர்ந்து நடந்து உனக்குப் பின்னால் வரவேண்டியிருந்தது. பதினைந்தாவது மைல் வந்ததும், 'அரைவாசித் தூரத்

திற்கு மேல் நடந்துவிட்டோம்!' என்னும் தைரியம் எனக்கு உண்டாயிற்று; அதனால், ஒரு வித உற்சாகம் எனக்கு ஏற்பட்டது. அரை வாசிக்குக் குறைவான தூரந்தான் இனி நடக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றியதனால், நான் அதிக உற்சாகத்துடன் உன்னைவிட வேகமாக நடக்கலானேன். நீ என்னைப் போல முதலில் விசாரப்படவுமில்லை; பிறகு உற்சாக மடையவுமில்லை. ஆகையால், முதலில் நீ வேகமாகச் சென்றாய். கடைசியில் நான் வேகமாய் நடந்தேன். இவ்வளவுதான் வித்தியாசம்,' என்றான்.

86. சந்தோஷமும் துக்கமும்

'கடவுள் சுகத்தையும் துக்கத்தையும் ஏன் உண்டு பண்ணியிருக்க வேண்டும்? சந்தோஷமும் துக்கமும் இல்லாமலேயிருந்திருந்தால், உலகம் மிகவும் நல்லதாய் இருந்திருக்குமே!' என்று ஒரு விசாரகன் தன் சிநேகித னிடம் கூறினான்.

'பகலுக்கும் இரவிற்கும் பதிலாக எப்போதும் மோடமாக இருப்பதை நீ விரும்புவாயா?' என்று சிநேகிதன் கேட்டான்.

'விரும்பமாட்டேன்; ஒரு போதும் விரும்பமாட் டேன். அது மிகவும் துக்ககரமானதாயிருக்கும். எப்போதும் ஒரே மோடமாக மேகங்களுடன் இருள் சூழ்ந்திருந்தால், பயித்தியம் பிடித்தது போல இருக் குமே!' என்று விசாரகன் பதிலளித்தான்.

'அதே மாதிரியாகத்தான் சந்தோஷமும் துக்க மும் இல்லாமற்போனால் வாழ்க்கையும் இருக்கும்,' என்று சிநேகிதன் எடுத்துக் கூறினான்.

87. ஒழுங்கீனமும் இருக்க வேண்டும்.

'மனிதர்களுக்கு ஒழுங்கீனமும் இருக்கவேண்டும். பயித்தியம் பிடிக்காமலிருப்பதற்கு ஒரே மார்க்கம்,

ஒழுங்கீனம் என்பதே. அதிர்ஷ்ட வசமாய், ஒவ்வொரு மனிதருக்கும் விபரீதச் செயல் செய்யும் சுபாவம் இருக்கிறது. அதனால், சில சமயங்களில் மனிதருக்கு நன்மையே உண்டாகிறது,' என்று ஓர் அத்யாத்தும விசாரகன் சொன்னான்.

'என்னிடம் ஒழுங்கீனமே இல்லை. மற்றவர் செய்வதைப் போலவே நானும் எல்லாச் செயல்களையும் செய்து வருகிறேன். எனக்கு மாத்திரம் பிரத்தியேகமான ஒரு சுபாவம் இல்லை,' என்று ஒரு விசாரகன் பதிலளித்தான்.

'உன்னுடையதெனப் பிரத்தியேகமாகக் கூறக்கூடிய ஒரு விசேஷ சுபாவமும் உன்னிடம் இல்லையா?' என்று அத்தியாத்தும விசாரகன் கேட்க, 'இல்லவே இல்லை,' என்று விசாரகன் பதில் சொன்னான். நான் மற்றவர் செய்வதைப் பார்த்து அதன்படி செய்வது தான் வழக்கமென்று விசாரகன் சொன்னதைக் கேட்டு, 'நீ கூறுவதே ஒரு பிரத்தியேகமான சுபாவத்தைக் காட்டுகிறது,' என்று அத்யாத்தும விசாரகன் சிரித்துக்கொண்டே கூறினான்.

88. கவியரசனாவது எப்படி?

கர்வம் பிடித்த ஒருவன் கற்றறிந்தாருள் சிறந்தவனென்று தன்னைப் பாவித்துக்கொண்டிருந்தான். கவியரசனாவதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன என்று அவன் எடுத்துச் சொன்னான். 'கவியரசனைப்போல அனுபவிக்க வேண்டும்; கவியரசனைப் போல மனத்தில் பல எண்ணங்களை நினைக்கவேண்டும்; கவியரசனைப் போலக் கவிகளை எழுத வேண்டும்,' என்று மூன்று விதிகளை அவன் எடுத்துச்சொன்னான். தான் கூறியதைவிடத் தெளிவாக அவ்விஷயத்தைக் குறித்துச் சொல்ல முடியாதென்று சொல்லி அவன் பெருமை பேசிக்கொண்டான்.

'நீ சொல்வது உண்மை. ஏன் மூன்று விதிகளைக் கூறுகிறாய்? ஒன்றே போதும். ஒரு கவியரசனாகவே இருந்துவிடு,' என்று ஒரு கோமாளி பதிலளித்தான்.

89. 'என் உயிருள்ளளவும் மறவேன்.'

ஞாபக சக்தியை அபிவிருத்தி செய்வதற்கென ஒரு கழகம் இருந்தது. முப்பது ரூபாய் கொடுத்தால், மனிதனுடைய ஞாபக சக்தியை அபிவிருத்தி செய்து, விஷயங்களை எக்காலத்திலும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும்படி செய்துவிடுவதாக அக்கழகத்தினர் கூறினர். ஞாபக சக்தியை விருத்தி செய்துகொள்ள விரும்பிப் பலர் பணம் கொடுத்தனர். அப்படியே ஒரு மனிதன் முப்பது ரூபாய் கொடுத்து அந்தக் கழகத்தில் ஞாபக சக்தி முறைகளைப் பயின்று வந்தான்.

'நீ அக்கலாசாலையில் சேர்ந்து படித்ததனால் ஆயுளுள்ளளவும் ஏதேனும் ஒரு விஷயத்தையாவது மறவாமலிருக்கும்சக்தி உனக்கு உண்டாயிருக்கிறதா?' என்று அவனை ஒரு சிநேகிதன் கேட்டான்.

'உண்மையில் ஒரு விஷயத்தை மாத்திரம் நான் இந்த ஜன்மத்தில் மாத்திரமன்றி, இனிவரும் ஜன்மத்திலுங்கூட மறக்க மாட்டேன். யாதொரு பிரயோஜனமுமில்லாமல் முப்பது ரூபாயை வீணாக அந்தக் கழகத்துக்குக் கொடுத்ததை மாத்திரம் நான் எக்காலத்திலும் மறவேன்!' என்று அவன் பதிலளித்தான்.

THE MADURA TAMIL SANGAM